# தமிழ்

## ஆசிரியர் வளநூல்

## க.பொ.த உயர்தரம்

# தரம் 13

(2018ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்துவதற்கானது.)

தமிழ்மொழித்துறை
தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம
இலங்கை.
இணையத்தளம் : **www.nie.lk**
மின்னஞ்சல் : **info@nie.lk**

அச்சிடலும் விநியோகமும் - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

# தமிழ்

## ஆசிரியர் வளநூல்

## க.பொ.த உயர்தரம்

# தரம் 13

**(2018 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்துவதற்கானது.)**

தமிழ்மொழித்துறை
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம
இலங்கை.
இணையத்தளம் : **www.nie.lk**
மின்னஞ்சல் : **info@nie.lk**

அச்சிடலும் விநியோகமும் - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

தமிழ்

ஆசிரியர் வளநூல்

க.பொ.த உயர்தரம்

© தேசிய கல்வி நிறுவகம், மஹரகம.

ISBN

முதலாம் பதிப்பு : 2018

தேசிய கல்வி நிறுவகம்

தமிழ்மொழித் துறை,

மொழிகள், மானுடவியல், சமூக விஞ்ஞான பீடம்

தேசிய கல்வி நிறுவகம்

மகரகம

இலங்கை.

இணையத்தளம் : **www.nie.lk**

மின்னஞ்சல் **: info@nie.lk**

அச்சுப் பதிப்பு:

தேசிய கல்வி நிறுவகம்

# முகவுரை

உயர்தரத்தில் தமிழை ஒரு பாடமாகக் கற்கும் மாணவர்கள் அதனை விருப்பத்தோடு கற்பதற்கும் சிறந்த பெறுபேறுகளைப் பெறுவதற்கும் உதவும் வகையில் இந்த வளநூல் வடிவமைக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் காலங்களில் மொழியை ஒரு பாடமாகக் கற்கும் மாணவர்கள் வாழ்க்கையில் தாம் எதிர்கொள்ளும் சவால்களுக்கு எவ்வாறு மொழியைப் பயன்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் மொழி சார்ந்த திறன்களைப் பெற்றுக் கொள்வது அவசியமாகின்றது. எனவே, மரபு ரீதியான பாடத்தெரிவு கற்பித்தல் முறைகள், பரீட்சைகள் என்பனவற்றிலிருந்து விலகி புதிய சிந்தனைகளோடு மொழி சார்ந்த கல்வியைப் பயில்வதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படல் வேண்டும். ஒவ்வொரு பாடத்தெரிவும் மாணவன் எந்த நோக்கத்தை அடைவதற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது என்ற தெளிவான வரையறையைக் கொண்டதாக இருக்கும் போதுதான் பரீட்சையை மையமாகக் கொண்ட எதிர்பார்ப்புகளிலிருந்து விடுபட முடியும்.க.பொ.த உயர்தர வகுப்பீல் தமிழ் பாடத்திற்கான பாடப்புத்தகங்கள் பலராலும் பல்வேறு விளக்கங்களுடன் எழுதப்பட்டுப் பெருவாரியாக விற்பனையாகின்றன. இத்தகைய செயற்பாட்டினால் மாணவர்கள் பலவாறு திசைதிருப்பப்படுகின்றார்கள். பாடவிளக்கத்தில் ஒரு நேரீய போக்கைக் காண முடிவதில்லை. புத்தகங்கள் ஒரு விதமாகவும், பரீட்சை வினாக்கள். எதிர்ப்பார்க்கப்படும் விடைகள் இன்னொரு விதமாகவும், பெறுபேறுகள் வீழ்ச்சிப் போக்கைக் கொண்டதாகவும் இருப்பதனால் மாணவர்களிடம் தமிழை ஒரு பாடமாகக் கற்பதற்கான ஆர்வம் குன்றி வருகின்றது. சிறந்த பெறுபேறுகளையும் தொழில் வாய்ப்புக்களையும் நோக்கமாகக் கொண்டுள்ள மாணவர் சமூகம் அதற்குப் பொருத்தமான பாடங்களைத் தெரிவு செய்து படிப்பது தவிர்க்க முடியாததாகின்றது.

எனவே, இந்நிலையை மாற்றி நவீன தொழில் நுட்ப வளர்ச்சி மாற்றங்களைக் கவனதில் கொண்டு அறிவியல் சார்ந்தும், ஆய்வின் அடிப்படையிலும் மொழியைப் புதிய தளத்திற்கு நகர்த்தப்பட வேண்டிய தேவையைப் புரிந்து கொண்டு மாணவர்களை நெறிப்படுத்த வேண்டிய பொறுப்பு மொழி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு அவசியமாகின்றது. இதன் அடிப்படையில் இவ் வளநூல் மாணவர்களைச் சரியான திசையில் வழிநடத்த உதவும் என எதிர்ப்பார்க்கின்றேன்.

இந்த வளநூல் முழுமை பெறுவதற்குப் பல வழிகளிலும் ஒத்துழைப்பு நல்கிய பேராசியரியர்கள், விரிவுரையாளர்கள், வளவாளர்கள், கணனி தட்டச்சு, அட்டைப்படம் செய்தவர் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ராணிசீதரன்**
**சிரேஸ்ட விரிவுரையாளர்**
**தமிழ்த்துறை**

## கலைத்திட்டக் குழு

| | |
|---|---|
| **ஆலோசனையும் அனுமதியும்** | கல்விசார் அலுவல்கள் சபை,<br>தேசிய கல்வி நிறுவகம். |
| **பாட விடய ஆலோசனை** | பேராசிரியர், சி. தில்லைநாதன்<br>தகைசார் ஓய்வுநிலைப் பேராசிரியர்<br>பேராசிரியர், எஸ்.யோகராசா<br>ஓய்வு நிலைப் பேராசிரியர்<br>பேராசிரியர், கலாநிதி வ.மகேஸ்வரன்<br>பேராதனைப் பல்கலைக்கழகம்.<br>பேராசிரியர், ரமீஸ் அப்துல்லா,<br>தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.<br>கலாநிதி.க. இரகுபரன்<br>சிரேஷ்ட விரிவுரையாளர், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.<br>திருமதி. ரூபி வலன்ரினா பிரான்சிஸ்<br>சிரேஷ்ட விரிவுரையாளர், கிழக்குப் பல்கலைக்கழகம்.<br>கலாநிதி. நதீரா மரிய சந்தானம்<br>சிரேஷ்ட விரிவுரையாளர், கிழக்குப் பல்கலைக்கழகம்.<br>திரு. ஈ. குமரன்<br>சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ் பல்கலைக்கழகம்<br>கலாநிதி, ஸ்ரீ. பிரசாந்தன்<br>சிரேஷ்டவிரிவுரையாளர்,பேராதனைப் பல்கலைக்கழகம்.<br>கலாநிதி, எஸ். சந்திரசேகரம்<br>சிரேஷ்ட விரிவுரையாளர், கிழக்குப் பல்கலைக்கழகம் |
| **இணைப்பாக்கம்** | திருமதி. நா. சீதரன்<br>சிரேஷ்ட விரிவுரையாளர்,<br>தமிழ்மொழித்துறை, தேசிய கல்வி நிறுவகம்.<br>மு.தயாநிதி<br>சிரேஷ்ட விரிவுரையாளர்,<br>தமிழ்மொழித்துறை, தேசிய கல்வி நிறுவகம். |
| **எழுத்தாளர் குழு** | திருமதி. நா. சீதரன்<br>சிரேஷ்ட விரிவுரையாளர்,<br>தமிழ்மொழித் துறை, தேசிய கல்வி நிறுவகம்.<br>செல்வி. க. சந்திரிகுமாரி<br>ஆசிரியர், கொ./ விவேகானந்தா கல்லூரி<br>திருமதி. சு. சகாதேவன்<br>ஆசிரிய ஆலோசகர், வலயக்கல்வி அலுவலகம், பிலியந்தல.<br>திரு. அ. முருகதாஸ்<br>ஆசிரியர், யா./ அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம்.<br>திருமதி. கி. சந்திரசேகரம்<br>ஆசிரியர், தி/ விபுலானந்தா கல்லூரி.<br>ஜனாப். எம். எம். மஹ்ஸுர்<br>கொ/ சாகிரா கல்லூரி<br>திரு. க. குகபரன்<br>கிளி/ கிளிநொச்சி தமிழ் மகா வித்தியாலயம். |

திருமதி.அ.வளர்மதி
ஆசிரியஆலோசகர்,வலயக்கல்விஅலுவலகம், வலிகாமம்.

**வளப் பங்களிப்பு**

திரு. பாஸ்கரன் சுமன்
உதவி விரிவுரையாளர், தேசிய கல்வி நிறுவகம்.
திருமதி. எல். ஜீ. கவாஸ்கரன்
உதவி விரிவுரையாளர், தேசிய கல்வி நிறுவகம்.

**மொழிப் பதிப்பு**

திருமதி. நா. சீதரன்.

**கணினிப் பதிப்பு**

திருமதி. பாத்திமா சஜீதா ஷிப்லி

**அட்டைப்படம்**

திரு. சீ. அச்சுதன்

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 01. | முகவுரை | iii |
| 02 | எழுத்தாளர் குழு | iv - v |
| 03 | பொருளடக்கம் | vi |
| 04 | பாடநூல் | |
| | ♦ அகநானூறு | 1 - 4 |
| | ♦ புறநானூறு | 5 - 7 |
| | ♦ திருக்குறள் | 8 - 12 |
| | ♦ மணிமேகலை | 13 - 15 |
| | ♦ கம்பராமாயணம் | 16 - 21 |
| | ♦ காரணமாலை | 22 - 25 |
| | ♦ பாரதிதாசன் கவிதைகள் | 26 - 31 |
| | ♦ வித்துவான் க. வேந்தனார் | 32 - 34 |
| | ♦ கவிஞர் அபூபக்கர் | 35 - 38 |
| | ♦ மஹாகவி | 39 - 42 |
| | ♦ நீலாவணன் | 43 - 45 |
| | ♦ சிறுகதைகள் | 46 - 64 |
| | ♦ கட்டுரைகள் | 65 - 76 |
| | ♦ தமிழ் இலக்கிய வரலாறு | 77 - 115 |
| | ♦ இலக்கணம் | 116- 142 |

# பாடநூல்

# அகநானூறு

**அறிமுகம் :**

எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான அகநானூறு பதின்மூன்றடிச் சிற்றெல்லையும் முப்பத்தோரடிப் பேரெல்லையும் உடைய நானூறு பாடல்களைக் கொண்ட அகத்திணை சார்ந்ததாகும். இந்நானூறு பாடல்களும் மூன்று பிரிவினவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. 1 - 20 வரையிலான பாடல்கள் 'களிற்றியானை நிரை' என்றும் 121 - 300 வரையிலானவை 'மணிமிடை பவளம்' எனவும் 301 - 400 வரையிலானவை நித்திலக்கோவை எனவும் பெயரிடப்பட்டுள்ளன. அகநானூற்றைத் தொகுத்தவர் உபபூரி குடிகிழார் மகனார் உருத்திரசன்மர். தொகுப்பித்தவர் உக்கிரப் பெருவழிதியாவார்.

**பாடல் : (154)**

**படுமழை பொழிந்த பயம்மிகு புறவின்**
**நெடுநீர் அவல பகுவாய்த் தேரை**
**சிறுபல் இயத்தின் நெடுநெறிக் கறங்கக்**
**குறும்புதல் பிடவின் நெடுங்கால் அலரி**
**செந்நில மருங்கின் நுண் அயிர் வரிப்ப**
**வெஞ்சின அரவின் பை அணந் தன்ன**
**தண் கமழ் கோடல் தாது பிணி அவிழத்**
**திரிமருப்பு இரலை தெள்ளறல் பருகிக்**
**காமர் துணையொடு ஏமுற வதியக்**
**காடுகவின் பெற்ற தண்பதப் பெருவழி**
**ஓடு பரி மெலியாக் கொய்சுவல் புரவித்**
**தாள் தாழ் தார்மணி தயங்குபு இயம்ப**
**ஊர்மதி வலவ தேரே சீர்மிகுபு**
**நம்வயிற் புரிந்த கொள்கை**
**அம்மா அரிவையைத் துன்னுகம் விரைந்தே.**

**ஆசிரியர்** : பொதும்பிற் புல்லாளங்கண்ணியார்
**திணை** : முல்லை
**துறை** : வினை முற்றிய தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது.

**கூற்று விளக்கம் :**
கார்ப்பருவத் தொடக்கத்துத் திரும்பி வருவேன் எனக் கூறித் தலைவன் தலைவியை வினைவயிற் பிரிந்தான். வினையும் முடிந்தது. கார்ப்பருவமும் வந்தது. தலைவியைக் காணும் வேட்கை கொண்ட தலைவன் பாகனிடம் 'தேரினை விரைந்து செலுத்துக' என்று கூறியது.

**மையக்கருத்து :**
தலைவி மேல் காதல் கொண்ட தலைவன் அவளை விரைந்து சென்று சேரவேண்டும் எனத் தனது மன வேட்கையினை வெளிப்படுத்துதல்.

பொருள் :

ஒலிக்கின்ற மழை பொழிந்தமையால் பயன்மிக்க முல்லை நிலத்தே, நீரினையுடைய ஆழமான பள்ளங்களில் பிளந்த வாயினையுடைய தேரைகள், நீண்ட வழியெல்லாம் வாத்தியங்கள் பல ஒன்று சேர்ந்து ஒலிப்பன போன்று ஒலித்தன. குறும்புதராகிய பிடவஞ் செடியின் கண் மலர்ந்த நீண்ட காம்பினையுடைய மலர்கள், செம்மண் நிலத்தில் உதிர்ந்து அந்நிலத்தை அழகு செய்தன. மிக்க சினமுடைய பாம்பின் படம், மேல் நோக்கினாற் போன்று குளிர்ந்த காந்தள் பூவின் மொட்டுக்கள் மணங்கமழுமாறு கட்டவிழ்ந்து மலர்ந்தன. முறுக்குண்ட கொம்பினையுடைய ஆண்மான், விருப்பத்தையுடைய பெண்மானுடன் இனிதே தங்கியது. இவ்வாறாகக் காடு அழகு பெற்றுத் திகழ்ந்தது. அக்காட்டின்கண் அமைந்த குளிர்ந்த தன்மை வாய்ந்த பெரிய வழியிலே ஓடும் வேகத்தில் குறையாத, கொய்யப்பட்ட பிடரிமயிரினையுடைய குதிரையின் கால் அளவு தாழ்கின்ற மாலையில் பொருந்தியுள்ள மணிகள் ஒலிக்குமாறு தேரை ஓட்டுவாயாக! பெண்மைக்கான சிறப்புக்கள் யாவும் அமையப் பெற்று, நம்மிடத்து விரும்பிய கொள்கையினையுடைய அழகிய மாமை நிறத்தை உடைய நம் தலைவியை விரைந்து சென்று அடைவோம்.

அருஞ் சொற்கள் :

| | |
|---|---|
| படுமழை | - ஒலிக்கின்ற மழை |
| புறவு | - முல்லை நிலம் |
| பயம்மிகு | - பயம்மிகுந்த |
| அவல் | - பள்ளம் |
| பகுவாய் | - பிளந்த வாய் |
| பல்லியம் | - பல வாத்தியங்கள் |
| கறங்குதல் | - ஒலித்தல் |
| புதல் | - புதர் |
| பிடா | - கார்காலத்தில் மலர்வது |
| அயிர் | - நுண்மணல் |
| பை | - பாம்பின் படம் |
| கோடல் | - காந்தள் |
| இரலை | - ஆண்மான் |
| அறல் | - நீர் |
| காமர் | - விருப்பம் |
| ஏம் | - இன்பம் |
| வதிய | - தங்க |
| சுவல் | - பிடரி மயிர் |
| மா | - மாமை நிறம் (பிரிந்ததால் உண்டாகிய நிற வேறுபாடு) |
| கவின் | - அழகு |
| துன்னுகம் | - அடைவோம். |

**அணி**

உவமை அணி

- நெடுநீர் அவல பகுவாய்த்தேரை
  சிறு பல்லியத்தின் நெடுநெறிக் கறங்க
- வெம்சின அரவின் பை அணந்தன்ன
  தண் கமழ் கோடல் தாதுபிணி அவிழ.

**வினா-விடை**

1. முல்லைநிலக் கருப்பொருள் கையாள்கை பற்றி விளக்குக.
   - பள்ளங்களில் வாழும் தேரைகளின் ஒலி
   - பிடவின் காம்பையுடைய பூக்கள் செம்மண் நிலத்தில் கோலம் செய்திருத்தல்.
   - காந்தள் மலர்கள் கட்டவிழ்ந்து விரிந்திருக்கின்றமை.
   - முறுக்கிய கொம்பையுடைய கலைமான் தன் பிணைமானுடன் இன்புற்றிருத்தல்.
   - வேகமாக செல்லவல்ல மணிமாலையணிந்த பிடரிமயிரையுடைய குதிரைகள்.

2. தலைவியைக் காணவேண்டும் என்ற தலைவனின் மன வேட்கை எடுத்துரைக்கப்படுமாற்றினை விளக்குக.
   - முல்லை நிலக் காட்சியானது தலைவனது மனதிற்கு விருப்புடையதாகவும், தலைவியைச் சந்திக்க வேண்டும் என்ற ஆவலைத் தூண்டுவதாகவும் அமைதல்.
   - தலைவியின் நிலைகுறித்து எண்ணுதல்.
   - 'நம்வயிற் புரிந்த கொள்கை அம்மா அரிவை.....' என்று தேரப்பாகனிடம் கூறுவது.
   - தலைவியைச் சந்திக்க வேண்டும் என்ற விருப்பம் மேலோங்க விரைந்து தேரினைச் செலுத்துமாறு தேர்ப்பாகனிடம் கோருதல்.

3. பாடலில் வெளிப்படும் சங்ககால அகத்திணைப் பண்புகள் யாவை?
   - சுட்டி ஒருவர் பெயர் கூறாத தனிநிலைச் செய்யுள்.
   - பாத்திரக் கூற்றாக அமைதல் - (தலைவன் கூற்றாக அமைதல்)
   - முதல், கரு, உரிப் பொருள்களின் பயன்பாடு.
     முதல் - முல்லை
     கரு - தேரை, மான், காந்தள், அலரி
     உரி - இருத்தல்.
   - இயற்கை வர்ணணை.

4. தலைவியைப் பற்றிய தலைவனின் நோக்குப் பற்றி விளக்குக.
   - தலைவியைச் சிறப்பித்தல்.
     - ♦ அழகிய மாமை நிறத்தையுடையவள்.
     - ♦ நம்மிடத்து விரும்பிய கொள்கையுடையவள் தலைவி எனக் கூறுகின்ற தலைவன் தவிப்பு மேலிட எதிர்பார்த்திருக்கும் தலைவியை நோக்கி விரைதல்.

5. பாடலில் புலப்படும் சங்ககாலப் பண்பாட்டம்சங்கள் பற்றிக் கருத்துரைக்குக.

- வினை நிமித்தம் தலைவியைத் தலைவன் பிரிந்து செல்கின்றமை.
- போக்குவரத்திற்குத் தேரினைப் பயன்படுத்தல்.
- தேரைச் செலுத்துவதில் திறன் மிக்க பாகன்.
- வினை நிமித்தம் சென்ற தலைவனின் வருகையைத் தலைவியானவள் தவிப்போடு எதிர்பார்த்திருத்தல்.

6. சங்ககால புவியியல் சூழல் விபரிக்கப்பட்டிருக்குமாற்றினை விளக்குக.

- மலர்கள் - காந்தள், அலரி
  விலங்குகள் - மான், குதிரை
- செல்லும் வழிபற்றிய குறிப்பு.
  'கவின் பெற்ற தண்பதப் பெருவழி'
- விலங்குகளின் மகிழ்வான வாழ்க்கை
  'திரிமருப்பு இரலை தெள்அறல் பருகிக் காமர் துணையொடு ஏமுற வதிய'
- வாத்தியம் பற்றிய குறிப்பு
  'சிறு பல்லியத்தின் கறங்க'' எனும் உவமைச் சித்திரிப்பு.

7. தலைவனின் இயல்புகளை எடுத்துக்காட்டுக.

- தலைவி மீது தூய காதல் கொண்டவன்.
- விரைந்து சென்று தலைவியை அடைந்துவிடவேண்டுமென்ற வேட்கை கொண்டவன்.
- இயற்கையைத் தனது மன உணர்வோடு பொருத்தி நோக்கும் இயல்புடையவன்.
- தலைவியின் மனநிலையை உணரும் பாங்குடையவன்.
- தனது மனக் கருத்தினைத் தேர்ப்பாகனிடம் தெளிவுற முன்வைக்கும் பண்புமிக்கவன்.

# புறநானூறு

**அறிமுகம் :**

சங்ககால இலக்கியங்களான எட்டுத்தொகை பத்துப்பாட்டில், எட்டுத்தொகை இலக்கியங்களில் ஒன்று புறநானூறு. இது புறத்திணையைச் சார்ந்தது. புறப்பொருள் பற்றிய நானூறு பாடல்களைக் கொண்டது. கொடை, வீரம், வெற்றி, புகழ் பற்றியது.

**பாடல் : (142)**

**அறுகுளத் துருத்து மகல்வயற் பொழிந்தும்**
**உறுமிடத் துதவா துவர் நில மூட்டியும்**
**வரையா மரபின் மாரிபோலக்**
**கடா அ யானைக் கழற்காற்பேகன்**
**கொடை மடம் படுத லல்லது**
**படை மடம் படான் பிறர் படைமயக் குறினே**

| | | |
|---|---|---|
| **ஆசிரியர்** | : | பரணர் (வையாவிக் கோப்பெரும் பேகனைப் பரணர் பாடியது) |
| **திணை** | : | பாடாண் திணை |
| **துறை** | : | இயன்மொழி |
| **மையக்கருத்து** | : | பரணரின் ‘கொடைத்திறமும் வீரமும்’ வெளிப்படுத்தப்படல். |

**பொருள்:**

குறிப்பிட்ட இடத்துக்கென்று வரையறை செய்யாது எவ்விடத்தும் பெய்யும் இயல்பினையுடைய மழையானது வற்றிய குளத்திலும் பெய்தது. அகன்ற விளை நிலத்திலும் பொழிந்தது. இவ்வாறு குளத்தும் விளை நிலத்தும் பெய்யாது களர் நிலத்திலும் பெய்தது. அம்மழை போல மதமிக்க யானையையும் கழல் அணிந்த காலையும் உடைய பேகன் பிறர்க்குக் கொடை அளிக்கும் போது பேதை உடையவனாகிறான். ஆனால், பிறர் படை வந்து போர் செய்யின் அப்படையிடத்துத் தான் பேதைமைப் படமாட்டான்.

**அருஞ்சொற்கள் :**

| | | |
|---|---|---|
| அறுகுளம் | - | வற்றிய குளம் |
| உவர் நிலம் | - | களர் நிலம் |
| மடம் படுதல் | - | அறியாமை |
| மடம் படான் | - | அறியாமைப் படான் |
| கடா அயானை | - | மதம் பிடித்த யானை |
| உருத்தல் | - | சொரிதல் |

**அணி:**

உவமை அணி

- வரையா மரபின் மாரி போலக்
  கடா அ யானை கழற்காற்பேகன்

**வினா - விடை**

1. இப்பாடல் இடம்பெற்ற சந்தர்ப்பத்தினை விளக்குக.
   வையாவிற்கோப்பெரும் பேகனது கொடைச்சிறப்புப் பற்றிச் சான்றோரிடையே ஓர் உரையாடல் இடம்பெற்றபோது அவர்களுள் சிலர் மயிலுக்குப் போர்வை கொடுத்ததும் தன்னிடம் வருபவர்கள் முன் வந்தோர், பின் வந்தோர் என அறியாது வழங்குவதும் பற்றி இழிவாகக் கூறினர். அவ்வேளை பரணர் கூறிய பதிலாக இப்பாடல் அமைகின்றது.

2. பேகனின் கொடைச் சிறப்பினை விளக்குக.
   பேகன் கொடை கொடுக்கும் போது நல்லவரா, கெட்டவரா, வேண்டியவரா, வேண்டாதவரா என்றெல்லாம் பாராது கேட்டவர் எவர்க்கும் கொடுக்கும் மடைமை உடையவன் என அவனது கொடைச் சிறப்பு எடுத்துரைக்கப்படுகின்றது.

3. பேகனின் வீரம் இப்பாடலில் வெளிப்படுமாற்றை விளக்குக.
   மதமிக்க யானையுடைய பேகன், 'படை மடம் படான்' என்ற கூற்றின் மூலம் வீரரல்லாதார், புறமுதுகிட்டார், புண்பட்டார், மூத்தோர், இளையோர் மேல் போர் தொடுக்காது எதிர் நின்று பொருதும் பெரும் வீரரிடத்து மாத்திரம் போர் செய்யும் வீரமுடையவன் என்பது எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

4. இப்பாடலில் கொடைமடம் படுதல், படை மடம்படான் என்ற தொடர்கள் பயன்படுத்தப் பட்டதிலுள்ள சிறப்பினை விளக்குக.
   பேகன் பற்றி பரணர் கூறுவதன் மூலம் 'கொடை மடம் படுதலல்லாது படைமடம் படான்' அதாவது கொடை கொடுக்க வேண்டும் என்ற ஆர்வத்தினால் பாத்திரம் அறியாது (மடம் - அறியாமல்) கொடை வழங்குகின்றான். ஆனால் போர் என வரும் போது தனக்குத் தகுதியான எதிரியை அறிந்தே (மடம்படான்) போர் செய்வான்.

5. இப்பாடலில் உவமையணி கையாளப்படுமாற்றினை விளக்குக.
   பேகனின் கொடைக்கு மாரிமழை உவமிக்கப்பட்டிருக்கின்றது.
   உவமானம் : நிலப்பாகுபாடு இல்லாத எல்லா நிலங்களுக்கும் பெய்யும் மழை.
   உவமேயம் : எந்த விதமான பாகுபாடுமில்லாது எல்லோருக்கும் வாரி வழங்குதல்
   பொதுத்தன்மை : வரையாது வாரி வழங்கல்.

6. பேக மன்னனின் இயல்புகளைப் பரணர் வெளிப்படுத்தியிருக்கும் பாங்கினை விளக்குக.

- கொடை கொடுப்பதில் எவற்றைக் குறித்தும் ஆராயாது வரையாது வழங்கும் ஈர உள்ளம் படைத்தவன்.
- போராற்றல் மிக்கவன் 'கடாஅ யானைக் கழற்காற்' பேகன்.
- படை மடம் காணும் திறனுடையவன். அதாவது. தகுதியான இயல்புடைய எதிரிகளோடு பொருதும் வீரமுடையவன் என்பது வெளிப்படுகிறது.

7. பாடலில் வெளிப்படும் புறத்திணை இலக்கியப் பண்புகளைத் தெளிவுறுத்துக.

- பாடாண்திணை மரபில் பேகனின் வீரம், கொடை, புகழ் என்பன போற்றப்பட்டுள்ளன.
- புலவர் கூற்றாக அமைதல் - பரணர் பாடியுள்ளார்.
- சுருங்கக் கூறி விளங்க வைத்தல்

8. 'வரையா மரபின் மாரிபோல'" எனும் உவமை அணியின் முக்கியத்துவத்தை விளக்குக. மாரியானது வேண்டும் இடம் இது, வேண்டா இடம் இது என்ற வரையறையின்றி எல்லா இடங்களிலும் வரையாது பொழியும் இயல்புடையதாகும். அது போல பேகமன்னனும் தன்னிடத்தில் வரும் இரவலரில் நல்லவர், கெட்டவர், வேண்டியவர், வேண்டாதவர் என்றெல்லாம் ஆராயாது யாவருக்கும் வரையாது கொடை வழங்குபவன் என்பதை உவமை அணி மூலம் புலவர் தெளிவுறுத்தியுள்ளார்.

# திருக்குறள்

## அரசியல் (அதிகாரம் 11 - 14)

**அறிமுகம் :**

தமிழிலே தோன்றிய அறநூல்களுள் சிறப்பிடம் பெறும் திருக்குறள், சங்கமருவிய காலத்திலே திருவள்ளுவரால் எழுதப்பெற்றது. அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் எனும் முப்பெரும் பிரிவுகளையுடைய இந்நூல், 133 அதிகாரங்களைக் கொண்டது; அதிகாரத்துக்குப் பத்துக் குறள்கள் வீதம் 1330 குறட்பாக்களை உடையது.

**பாடப்பரப்பு :**

திருக்குறளின் இரண்டாவது பெரும்பிரிவான பொருட்பாலானது அரசியல், அங்கவியல், ஒழிபியல் எனும் மூன்று உப பிரிவுகளையுடையது. அரசியலில் 11 ஆவது அதிகாரம் முதலாக, 14 ஆவது அதிகாரம் வரையான,

11. காலம் அறிதல்
12. இடன் அறிதல்
13. தெரிந்து தெளிதல்
14. தெரிந்து வினையாடல்

அதிகாரங்கள் நான்கும் ஆண்டு 13க்கான பாடப்பரப்பினுள் அடங்குகின்றன.

**மையக்கருத்து**

பகைவரை வெல்லக் கருதிய அரசன் ஒருவன், தனதும், வினை, பகை, துணை முதலியவற்றினதும் வலிமையை அறிந்துகொண்டபின், படை நடாத்துவதற்கு ஏற்ற காலத்தை அறிந்துகொள்ள வேண்டும்; பின், வெல்லுதற்கு ஏற்ற நிலத்தை அறிந்துகொள்ள வேண்டும். தனது அங்கங்களான அமைச்சர் முதலானவர்களை ஆராய்ந்து தெளிந்துகொள்ள வேண்டும். அவ்வாறு தெளியப்பட்டவர்களை அவரவருக்கேற்ற தொழிலிலே ஈடுபடுத்தி தக்கபடி நிர்வகிக்க வேண்டும்.

**வினா-விடை**

அதிகாரம் - 11

- காலம் அறிதல்

01. ‘‘காலம் அறிதல்” என்ற அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.
    (அ) காலம் அறிதலாவது யாது?
    (ஆ) இவ்வதிகாரம் ஏன் ‘வலி அறிதல்’ அதிகாரத்தின் பின் வைக்கப்பட்டுள்ளது?

(இ) இவ்வதிகாரத்தில் விடயங்கள் வகுத்துரைக்கப்பட்டுள்ள ஒழுங்கைத் தருக.

(ஈ) இவ்வதிகாரத்தில் கையாளப்பட்டுள்ள அணிகளை எடுத்துக் கூறுக.

(அ) அதிகாரம் பற்றிய விளக்கம்

பகைவர் மேலே படைநடாத்த முடிவு செய்த அரசன் ஒருவன், அவ் வினைக்கு ஏற்ற காலத்தை அறிதல்.

(ஆ) அதிகார வைப்பு முறை

தனதும், பகையினதும், தொடங்கும் வினையினதும், துணையினதும் வலிமையை அறிந்துகொண்ட பின்பே படை நடாத்தும் முடிவு மேற்கொள்ளப்படும். எனவே, வலி அறிதலின் பின் காலம் அறிதல் வைக்கப்பட்டுள்ளது.

(இ) அதிகாரத்தில் விடயங்கள் வகுத்துரைக்கப்பட்டுள்ள ஒழுங்கு.

- முதலாவது குறள் (1) :
  காலத்தினது சிறப்புக் கூறப்பட்டுள்ளது.
- அடுத்த மூன்று குறள்களாலும் (2,3,4) :
  காலத்தை அறிதலின் பயன் கூறப்பட்டுள்ளது.
- ஐந்தாவது குறளால் (5) :
  காலம் பொருந்தி வராத வழி, என்ன செய்வது என்பது கூறப்பட்டுள்ளது. அதாவது, காலம் வராத இடத்து பகை மேற் செல்லாது இருத்தல் சொல்லப்பட்டுள்ளது.
- ஆறாவது குறளால் (6) :
  காலம் வரும்வரை பகைமேற் செல்லாது இருப்பதன் சிறப்புக் கூறப்பட்டுள்ளது.
- அடுத்த இரு குறள்களாலும் (7,8) :
  காலம் வரும்வரையான இருப்பின்போது பகைமையை வெளிக்காட்டாமல் இருக்குமாறு கூறப்பட்டுள்ளது.
- ஒன்பதாவது குறளால் (9) காலம் வந்தவிடத்து பகை மேலே விரைவாகச் செல்லுமாறு கூறப்பட்டுள்ளது.
- பத்தாவது குறளால் (10) :
  காலம் வரும்வரையான இருப்பிற்கும், காலம் வந்த பின்னான வினைக்கும் இலக்கணம் கூறப்பட்டுள்ளது.

(ஈ) கையாளப்பட்டுள்ள அணிகள்

- உவமை :
  - ♦ எடுத்துக்காட்டுவமை :
    ‘‘பகல் வெல்லும் கூகையைக் காக்கை; இகல் வெல்லும்
    வேந்தர்க்கு வேண்டும் பொழுது’’
  - ♦ வினை உவமை :
    ‘‘ஊக்கம் உடையான் ஒடுக்கம் பொருதகர்
    தாக்கற்குப் பேரும் தகைத்து’’

    ‘‘கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்று அதன்
    குத்து ஒக்க சீர்த்த இடத்து’’

அதிகாரம் - 12

- இடன் அறிதல்

01. ‘இடன் அறிதல்’ என்ற அதிகாரத்தில்,
   (அ) பகைவரின் கோட்டையைச் சூழ்ந்திருத்தலுக்கேற்ற இடன் அறிதலும்,
   (ஆ) போர் செய்தற்கேற்ற இடன் அறிதலும்,
   (இ) பகைவரைப் பொருதக்கூடாத இடத்தை அறிதலும் கூறப்பட்டுள்ளவாற்றை விளக்கி,
   (ஈ) இவற்றைக் கூறுவதற்கு எடுத்தாண்டுள்ள அணிகள் பற்றிக் கருத்துரைக்குக.

பகைவர்மீது போர் நடாத்த விழைந்த அரசன் ஒருவன், போருக்கேற்ற நிலத்தையும், பகைவர் கோட்டையைச் சூழ்தலுக்கேற்ற நிலத்தையும் அறிந்து கொள்ளலே ‘இடன் அறிதல்’ ஆகும். ஏலவே, பகைவரதும் தனதும் வலியை அறிந்து கொண்டும், போருக்கேற்ற காலத்தை அறிந்து கொண்டும் செயற்படும் அரசன், அடுத்து இவ்வாறு இடத்தை அறிவது முக்கியம் ஆகையால், வலியறிதல், காலம் அறிதல் அதிகாரங்களின் பின் இவ்வதிகாரம் வைக்கப்பட்டுள்ளது.

(அ) பகைவரைச் சிறியவர் என்று எண்ணாமல், அவர் கோட்டையைச் சூழ்ந்து முற்றுகையிடுவதற்கு ஏற்ற நிலமையைத் தெளிந்து கொண்டே போர்த்தொழிலைத் தொடங்குக அல்லது போரை ஆரம்பித்தல் ஆகாது எனும் கருத்துப்பட,

‘‘தொடங்கற்க எவ்வினையும் எள்ளற்க, முற்றும்
இடங்கண்ட பின் அல்லது’’

எனும் குறள் இவ்வதிகாரத்தின் தொடக்கத்தில் வள்ளுவரால் வைக்கப்பெற்றுள்ளது. அடுத்துக் காணப்படும்,

‘‘முரண்சேர்ந்த மொய்ம்பினவர்க்கும் அரண்சேர்ந்து ஆம்
ஆக்கம் பலவும் தரும்’’

எனும் குறள், ‘‘மாறுபாட்டோடு கூடிய வலிமையுடையவர்களுக்கும் இடனறிந்து அமைக்கப்பட்ட அரணைச் சேர்ந்து ஆகின்ற ஆக்கங்கள் பல’’ எனும் கருத்தைக் கூறுகின்றது. அதாவது, தக்க இடத்தைத் தெரிவு செய்து அரண் அமைக்கப்பட்டால், நிலை பெற்று நின்று பகைவரைத் தொடர்ச்சியாக எதிர்க்க முடியும், பகைவர் எதிர்ப்பையும் தாங்க முடியும்.

தம்மைக் காக்கவல்ல அரணை அமைத்துப் பாதுகாப்புத் தேடிக்கொண்டு போர் செய்தால், வலிமை குறைந்த அரசரும் வலியராய் வெல்வர் என, முற்றுகையிடும் இடத்தைப் பற்றி அறிவதன் முக்கியத்துவம் அடுத்துக் கூறப்பட்டுள்ளது. மேலும், தக்க இடத்தை அறிந்து சென்ற அரசர், அரணைப் பொருந்தி நின்று போர் புரிவாராயின், அவரை வெல்லக்கருதிய அரசர் தம் எண்ணத்தை இழப்பர் என்பதும் கூறப்பட்டுள்ளது. இக்கருத்துகள் முறையே,

‘‘ஆற்றாரும் ஆற்றி அடுப இடனறிந்து
போற்றார்கண் போற்றிச் செயின்’’

‘‘எண்ணியார் எண்ணம் இழப்பர் இடனறிந்து
துன்னியார் துன்னிச் செயின்’’

எனும் குறள்களில் கூறப்பெற்றுள்ளது. இவ்வாறு பகைவர் அரணை முற்றுகையிட்டுத் தங்கியிருந்து போர் புரிவதற்கேற்ற இடத்தை அறிவது பற்றி 'இடன் அறிதல்' அதிகாரத்தின் முதல் 4 குறள்களும் எடுத்துரைக்கின்றன.

(ஆ) 'இடன் அறிதல்' அதிகாரத்தின் 5, 6, 7 ஆம் குறள்கள் போர் புரிவதற்கு ஏற்ற இடத்தை அறிதலைப் பற்றிக் கூறுகின்றன.

''நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்
நீங்கின் அதனைப் பிற''

ஆழமான கடலில் முதலையாவது பிற எல்லாவற்றையும் வெல்லும். ஆனால், அவ்விடத்திலிருந்து நீங்கினால் பிற விலங்குகள் முதலையை வெல்லும். அது போல தான் வெல்லக் கூடிய இடத்தையே தெரிவு செய்து வினை நிகழ்த்தினாற்றான், போர் வெற்றி ஓர் அரசனுக்குச் சாத்தியமாகும்.

''கடல்ஓடா கால்வல் நெடுந்தேர் கடல்ஓடும்
நாவாயும் ஓடா நிலத்து''

நிலத்திலே ஓடும் பெரிய தேரானது கடலிலே ஓட மாட்டாது. கடலிற் செல்லும் படகு முதலியன நிலத்திலே செல்லும் வன்மையற்றன. இவ்வாறே, தனக்குரித்தான இடத்தைத் தெரிவு செய்தாற்றான் ஓர் அரசன் போரிலே வெல்லலாம்.

''அஞ்சாமை அல்லால் துணைவேண்டா எஞ்சாமை
எண்ணி இடத்தான் செயின்''

போர்த்திறங்களை எல்லாம் ஆராய்ந்து தக்க இடத்தைப் பொருந்திச் செய்வாராயின், ஓர் அரசர் வெல்வதற்குப் பிற துணை எதுவும் தேவையில்லை.

(இ) 'இடன் அறிதல்' அதிகாரத்தின் நிறைவுக் குறள்கள் மூன்றும், பொருத்தமற்ற இடத்தில் பகைவருடன் போர்வினை நிகழ்த்தக்கூடாது என்பதையும், அவ்வாறு நிகழ்த்தின் இழிவு ஏற்படும் என்பதையும் கூறுகின்றன.

''சிறுபடையான் செல்லிடம் சேரின் உறுபடையான்
ஊக்கம் அழிந்து விடும்''

பெரும்படையையுடைய அரசன் ஒருவன், தக்க இடத்தை அறியாது, தனக்குப் பொருத்தமற்ற இடத்தில் போர் நிகழ்த்துவானாயின், சிற்றரசனிடம் தோற்றுவிடல் கூடும்.

''சிறைநலனும் சீரும் இலரெனினும் மாந்தர்
உறைநிலத்தோடு ஒட்டல் அரிது''

அரண் சிறப்பும் பெருமையும் இல்லாத சிற்றரசர் எனினும், அவர் உறைகின்ற இடத்தின்கண் சென்று அவரை வெல்லுதல் அரிதானது.

''காலாழ் களரின் நரியடும் கண்ணஞ்சா
வேலாள் முகத்த களிறு''

வேலாள்களைக் கொம்பில் கோத்த வலிமையுடைய யானையும், சேற்று நிலமானால் நரியிடம் தோற்றுவிடும் என்ற கருத்துத் தோன்றக் கூறப்பட்டுள்ள இக்குறளின் மூலம் பெரிய அரசரும் பொருத்தமற்ற இடத்தில் போரிட்டால் சிற்றரசரிடம் தோற்றுவிடுவர் என்பது தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஈ) இவ்வதிகாரத்தில் மூன்று குறள்களில் பிறிது மொழிதல் அலங்காரம் பயன்படுத்தப் பெற்றுள்ளது.

- நெடும் புனலுள் வெல்லும் முதலை அடும் புனலின்
  நீங்கின் அதனைப் பிற (5)
- கடல் ஓடா கால்வல் நெடுந்தேர் கடல் ஓடும்
  நாவாயும் ஓடா நிலத்து (6)
- காலாழ் களரின் நரியடும் கண்ணஞ்சா
  வேலாள் முகத்த களிறு (10)

இங்கு, தரப்பட்டுள்ள குறள்களில் வெளிப்படையாகப் போர் தொடுக்கும் அரசர், எதிர்க்கும் அரசர் எவருமே சுட்டப்பெறவில்லை. மாறாக,

- கடலில் முதலை வெல்லும்; பிற இடங்களில் அதனைப் பிற வென்று விடும்.
- கடலில் படகு ஓடும், நிலத்தில் தேர் ஓடும். கடலில் தேர் ஓடாது. நிலத்தில் படகு ஓடாது.
- வலிய யானையை சேற்று நிலத்தில் நரி வெல்லும்.

போன்ற விடயங்களே கூறப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் இடன் அறிதல் அவசியமானது என்பது விளக்கப்பட்டுள்ளது. அதாவது முதலை, தேர், யானை, நரி எனப் பிற பொருட்கள் மூலமாக அரசர் இடன் அறிதல் முக்கியம் என்பது தெரிவிக்கப்பட்டுள்ளதால் இது ‘பிறிதுமொழிதல்’ அணியாகும்.

# மணிமேகலை

**அறிமுகம் :**

மணிமேகலை என்னும் காப்பியம், சீத்தலைச் சாத்தனாரால் இயற்றப்பட்டது. சங்கமருவிய காலத்து (கி.பி 300 - 600) நூலான இக் காப்பியம் சிலப்பதிகாரத்தின் கதைத் தொடர்ச்சியாக அமைந்துள்ளது. கோவலனுக்கும் மாதவிக்கும் மகளாகப் பிறந்த மணிமேகலை இக்காப்பியத்தின் நாயகி ஆவாள். இக் காப்பியம்' மணிமேகலை துறவு' எனவும் அழைக்கப்படுகிறது.

முப்பது காதைகளை உள்ளடக்கியுள்ள இக் காப்பியத்தின் ஐந்தாவது காதையாக மணிமேகலா தெய்வம் வந்து தோன்றிய காதை அமைந்துள்ளது.

மணிமேகலைமீது காதல் கொள்ளும் இளவரசனான உதயகுமாரன் அவளைக் காண ஆவல் கொண்டு இறுதியில் அவளைக் காண முடியாமல் ஏமாற்றமடைந்து உவ வனத்திலிருந்து திரும்பிச் செல்கின்றான். அவ்வேளை மாலைப் பொழுது வந்தடைகின்றது.

அம் மாலைப் பொழுதின் சிறப்பினைச் சித்திரிப்பதாக குறிப்பிட்ட பகுதி அமைந்துள்ளது.

**ஆசிரியர்** : சீத்தலைச் சாத்தனார் (மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார்)

**பாடப்பகுதி** : மணிமேகலா தெய்வம் வந்து தோன்றிய காதை (119 - 140)

**மையக்கருத்து** : மாலைப் பொழுதின் இயற்கைக் காட்சிகளைக் கவிஞர் கவித்துவத்துடன் வர்ணிக்கின்றமை.

**உள்ளடக்கம் :**

கிழக்குத் திசையிலே நாள் முதிர்ச்சியுற்ற சந்திரனும், மேற்குத் திசையிலே சென்று மறைகின்ற சூரியனும் முறையே வெள்ளியாலாகிய வெண்தோடும், பொன்னாலாகிய தோடுமாக இருபுறத்தேயும் விளங்க புகார்ப் பூங்கொடியாகிய அந்நகரம் இகழ்தலற்ற அழகிய தன் முகம் பொலிவுறுமாறு ஒளி பெற்றிருக்கின்றது.

அன்னச் சேவலானது தன்மீது அன்பு கொண்டு தன்னுடன் மெய்மறந்து விளையாடிக் கொண்டிருந்த தன் பெடையைத் தாமரை மலரானது குவிதலால் தன்னகத்தே அடக்கிக் கொள்ள அப்பூவினது இதழ்கட்டுக்கள் சிதையுறுமாறு கிழித்துத் தன் பெடையை மீட்டுக் கொண்டு உயர்ந்த பெரிய தென்னையின் வளர்ந்த மடலிலே சென்று ஏறியிருக்கவும்,அன்றில் பறவையின் பெடையானது தன் மெல்லிய குரலினாலே தன் சேவலை அழைத்து சூரியன் சென்று மறையும் அந்திப் பொழுதினைப் பற்றி எடுத்துரைக்கவும்,

பவளத்தைப் போல் செந்நிறமாய் அமைந்த கால்களையுடைய அன்னப் பறவைகள் நிறைந்த கானகத்திலேயுள்ள குவளை மலர்களை மேய்ந்தனவான திரண்ட பெரிய கண்களையும் சிவந்த நிறமுடையனவுமான பசுக்களின் முலைகளினின்றும் பொழிகின்ற இனிய பாலானது நிலத்திலிருந்து எழும் புழுதியை அடக்கும் வண்ணம் அந்நிலத்தினை நனைக்க, அப்பசுக்கள் தம் கன்றுகளை நினைத்தவாறு தொழுவங்களை நோக்கிச் செல்லத் தொடங்கவும்,

அந்தணர்கள் மாலையில் செந்தீயினை வளர்க்கத் தொடங்கவும், பசுமையான வளையல்களை அணிந்த பெண்கள் பலரும் மனை விளக்குகளை ஏற்றி வைக்கத் தொடங்கவும், யாழினை இசைப்போரான பாணர்கள் யாழின் நரம்புகளை வருடி இனிமையான மருதப் பண்ணினை எழுப்பவும், இடையர்கள் புல்லாங்குழலில் முல்லைத் தீம்பாணியினை இசைக்கவும்,

போரக்களத்திலே தன் கணவனை இழந்தவளாகித் தன் சுற்றத்தாரின் வீட்டினை நோக்கிப் போகின்ற ஒப்பற்ற ஒரு பெண்ணைப் போலத் தன் காதலனாகிய கதிரவனை வழியனுப்பி வைத்த நீங்காத அந்தத் துன்ப நினைவுடனே மாலைப் பொழுது என்னும் பசலை நோயைப் போர்த்த மேனியினை உடையவளாக மாலை என்பவள் அப்புகார் நகரினிடத்து வந்து தங்குவாளாயினாள்.

**அரும்பதங்கள் :**

| | | |
|---|---|---|
| • குணதிசை | - | கிழக்குத் திசை |
| • குடதிசை | - | மேற்குத் திசை |
| • எள்ளறு | - | இகழ்தலற்ற |
| • பூம்பொறி | - | பூவாலாகிய சிறை |
| • அறிக்குரல் | - | மெல்லிய குரல் |
| • பவளச் செங்காற் பறவை | - | அன்னப்பறவை (பவளம் போன்ற சிவந்த கால்களையுடைய பறவை) |
| • குடக்கண் | - | பெரிய கண் |
| • சேதா | - | சிவந்த பசு |
| • எழு துகள் | - | எழும் புழுதி (எழு துகள் - வினைத்தொகை) |

**வினா-விடை :**

1. இப்பாடல் பாடப்பட்ட சந்தர்ப்பம் பற்றி விளக்குக.
   மணிமேகலை மீது காதல் கொள்ளும் இளவரசனான உதயகுமாரன் அவளைக் காண்பதற்காக ஆவலோடு காத்திருக்கின்றான். மாலையாகியும் அவளைக் காணாது ஏமாற்றமடைந்து உவவனத்திலிருந்து திரும்பிச் செல்கின்றான். அம்மாலைப் பொழுதின் சிறப்பு இப்பாடலினூடாகச் சித்திரிக்கப்படுகின்றது.
2. மாலைப்பொழுதில் நிகழ்ந்த நிகழ்வுகள் வர்ணிக்கப்படுமாற்றினை விளக்குக.
   - கிழக்குத் திசையில் முதிர்ச்சியுற்ற சந்திரன் என்ற வெள்ளியாலாகிய வெண்தோடும். மேற்குத்திசையில் மறைகின்ற சூரியன் என்ற பொன்னாலாகிய தோடும் இருபுறத்தே விளங்க புகார் நகரம் என்ற பூங்கொடியின் முகம் ஒளி, பொலிவு பெற்று விளங்குகின்றமை.
   - குவியும் தாமரைக்குள் அன்னப் பெடை அகப்பட, அன்னச் சேவலானது அதனை மீட்டெடுத்து தென்னை மரத்தில் வீற்றிருக்கின்றமை.
   - அன்றில் பறவையின் பெடை தன் மெல்லிய குரலால் சேவலை அழைத்து சூரியன் மறையும் காட்சியை எடுத்துரைத்தல்.
   - பசுக்கள் பொழிகின்ற பாலானது நிலத்திற் சொரிதலால் நிலத்தினின்று எழுகின்ற புழுதி அடங்குவதோடு அப்பசுக்கள் தம் கன்றுகளை நினைத்தவாறு தொழுவங்களை நோக்கி நடக்கின்றமை.
   - அந்தணர்கள் தீ வளர்க்கின்றமை.
   - பெண்கள் விளக்குகள் ஏற்றுகின்றமை.
   - பாணர்கள் யாழ் நரம்புகளை வருடி இனிமையான மருதப்பண்ணை இசைக்கின்றமை.
   - இடையர்கள் புல்லாங்குழலை மீட்டி தீம்பாணியினை இசைக்கின்றமை.

3. புகார் நகரிருள்ள விலங்குகள், பறவைகளிடையே வெளிப்படும் அன்புணர்வு பற்றி விளக்குக.
   - அன்னச் சேவலும், அன்னப் பெடையும் மெய்ம்மறந்து அன்புடன் விளையாடுகின்றமை.
   - குவியும் தாமரைக்குள் அன்னப்பெடை அகப்பட, அன்னச் சேவலானது தாமரை மலர் கிழியுமாறு அன்னப் பெடையை மீட்கின்றமை.
   - பெடையை மீட்கவேண்டும் என்ற வேகம், அன்பு சேவலிடம் வெளிப்படுகின்றமை.

- பொழியும் பாலானது நிலத்தை நனைக்க கன்றுகளை நினைந்துருகிப் பசுக்கள் தொழுவங்களை நோக்கிச் செல்கின்றமை.
- அன்றில் பறவையின் பெடையானது தன் மெல்லிய குரலால் தன் சேவலை அழைத்து சூரியன் சென்று மறையும் அந்திப் பொழுதினை எடுத்துரைக்கின்றமை.

4. இப்பாடலில் கையாளப்பட்ட அணிகளை இனங்கண்டு விளக்குக.
   - உவமை அணி
     - ♦ சந்திரன் வெள்ளியாலாகிய தோட்டிற்கும் சூரியன் பொன்னாலாகிய தோட்டிற்கும் ஒப்பிடப்படுகின்றமை.
     - ♦ சூரியனது மறைவைப் போர்க்களத்தில் வீரமரணம் எய்தியவனுக்கும் புகார் நகரில் அந்திமாலை கவிவதனை (தங்குவதனை) கணவனை இழந்த பெண் தன் சுற்றத்தவர் இருப்பிடத்தில் புகுவதற்கும் ஒப்பிடல்.
     - ♦ பவளத்தைப்போல் செந்நிறமாய் அமைந்த கால்களையுடையஅன்னப்பறவை.
     - ♦ போர்க்களத்தில் கணவனை இழந்த பெண்ணானவள் சுற்றத்தவரின் வீடு நோக்கிச் செல்கின்றமை போல காதலனை வழியனுப்பிய துயருடன் மாலைப்பொழுது புகார் நகரில் தங்குகின்றமை.
   - உருவக அணி
     - ♦ மாலைப் பொழுது - பெண்ணாக உருவகிக்கப்படுகின்றமை.
     - ♦ புகார் நகரம் - பூங்கொடியாக உருவகிக்கப்படுகின்றமை.
     - ♦ அந்தி என்னும் பசலை நோயைப் போர்த்த மேனி.
   - தற்குறிப்பேற்ற அணி
     - ♦ ‘கதிர் ஆற்றுப் பகுத்த முதிராத் துன்பமொடு அந்தி என்னும் பசலை மெய்யாட்டி வந்திறுத் ததனால் மாநகர் மருங்கென்’
     - ♦ பகல் மங்கி இருள் கலந்து மாலைப் பொழுது வருவது இயற்கை - இங்கு காதலானாகிய கதிரவனை வழியனுப்பிய துயருடன், பசலை பீடித்து மாலைப்பெண் புகார் நகரில் தங்குகின்றதாகக் கூறப்படுகின்றமை.

5. இப்பாடலில் புகார் நகரின் சிறப்புகள் புலப்படுமாற்றினை விளக்குக.
   - சூரிய, சந்திரனால் புகார் நகரம் ஒளி, பொலிவு பெற்றுத் திகழ்கின்றமை.
   - வனப்புடையதாக இருக்கின்றமை - புகார்ப் பூங்கொடி
   - விலங்குகள், பறவைகள் அன்பு, ஒற்றுமை உணர்வுடன் வாழ்கின்றமை.
   - பெண்கள் வீட்டு விளக்குகளை ஏற்றி ஒளியை வரவேற்கின்றமை.
   - பண்ணமைந்த இசையினால் செழிப்பும், வளர்ச்சியும் ஏற்படுகின்றமை.
   - யாழினூடாக மருதப்பண் இசைக்கப்படுகின்றமை.
   - புல்லாங்குழலினூடாக தீம்பாணி இசைக்கப்டுகின்றமை.
   - மாலைப் பொழுது தன் உறவாக நினைத்துப் புகார் நகரில் தங்க விரும்புகின்றமை.

# கம்பராமாயணம்

## குகப்படலம் (44 - 72)

**அறிமுகம்** :

தமிழ்க் காப்பியங்களுள் சிறப்பிடம் பெறும் கம்பராமாயணம், சோழராட்சிக் காலத்தில், கம்பரால் எழுதப்பெற்றது. ஆறு காண்டங்களையுடைய இக்காப்பியம், வடமொழி வான்மீகி இராமாயணத்தினைத் தழுவி, புத்தாக்கமாகப் படைக்கப்பெற்றது.

**பாடப்பரப்பு** :

ஆறு காண்டங்களுள் இரண்டாவதான அயோத்தியா காண்டத்தில் குகப்படலம் அமைந்துள்ளது. கங்கைகாண் படலம் எனவும், கங்கைப்படலம் எனவும் சில பதிப்புகளிற் காணப்பெறும் இப்படலத்தின் 44 பாடல் முதலாக 72 பாடல் வரையான செய்யுள் பாடப்பரப்புள் அடங்குகின்றன.

**உள்ளடக்கம்** :

தந்தை கைகேயிக்கு வழங்கிய வரத்தின் பொருட்டுக் காடு சென்ற இராமனை மீளவும் அயோத்திக்கு அழைத்து வருதற் பொருட்டு தாயார், சுற்றத்தார் உள்ளிட்ட பெருஞ் சேனையுடன் கங்கைக் கரைக்கு பரதன் வருகிறான். தன்னை ஐயப்பட்டுத் தெளிந்த குகனிடம், தம்மை மறுகரை சேர்க்குமாறு அவன் கோருகின்றான். குகன், நாவாய்களின் உதவியுடன் அனைவரையும் மறுகரைக்கு அழைத்துச் செல்கிறான். போகும் வழியில் தாயர் மூவரையும் குகனுக்குப் பரதன் அறிமுகம் செய்து வைக்கின்றான். தென்கரையைச் சென்று சேர்ந்த பரதன் முதலாயினோர் பரத்துவாச முனிவரின் குடிசையை அடைய, இவர்களை அந்தணர்களுடன் பரத்துவாச முனிவர் எதிர்கொண்டு வரவேற்றார்.

**சம்பவப் பாங்கு** :

இப்பாடப் பரப்பை பின்வருமாறு வகைப்படுத்தி நோக்குவது இலகுவானதாகும்.

- பாடல் 44 - 46 : பரதன் கங்கையைக் கடப்பதற்கு குகனின் உதவியைக் கேட்டலும், குகன் நாவாய்களை அழைப்பித்தலும்.
- பாடல் 47 - 62 : சேனையும், முனிவர் முதலானவர்களும் கங்கையைக் கடத்தல்.
- பாடல் 63 - 69 : பரதன் கங்கையைக் கடத்தலும், தாய்மாரைக் குகனுக்கு அறிமுகம் செய்தலும்.
- பாடல் 70 - 72 : நாவாய்கள் கரையை அடைதலும், பரதன் முதலியோரைப் பரத்துவாச முனிவர் எதிர்கொள்ளலும்

**வினாவிடை**

01. பின்வரும் பாடல்களை வாசித்துக் கீழ்க்காணப்படும் வினாக்களுக்கு விடை எழுதுக.

(அ) அவ் இடை அண்ணல்தானும் அன்று அரும் பொடியின் வைகி
தெவ் இடைதர நின்று ஆர்க்கும் செறிகழல் புளிஞர் கோமா அன்
இவ் இடை கங்கை ஆற்றின் ஏற்றினை ஆயின் எம்மை
வெவ் இடர்க் கடல் நின்று ஏற்றி வேந்தன்பால் விழுந்தது என்றான்

I இப்பாடல் பாடப்பட்ட சந்தர்ப்பம் பற்றி விளக்குக.

கங்கை ஆற்றைத் தாண்டித் தென்கரைக்குத் தம்மைச் சேர்க்குமாறு பரதன் குகனிடம் கூறும் சந்தர்ப்பம்.

II குகனின் சிறப்புகள் யாவை?

- பகைவர்கள் தோற்றோடும்படி ஒலிக்கும் வீரக்கழல் அணிந்தவன்.
- வேடர்களின் அரசன்.

III பரதன், இராமன் மீது கொண்ட பாசம், மதிப்பு புலப்படுமாற்றினை விளக்குக.

பாசம் :

- இராமன் காட்டில் தங்கியிருக்கின்றபடியால் பரதனும் புழுதி படர்ந்த நிலத்திலேயே தங்கியிருக்கின்றமை.
- இராமனிடம் செல்வதன் மூலமே துன்பத்திலிருந்து விடுபட்டு, மகிழ்ச்சி அடைய முடியும் எனப் பரதன் கூறுவது.

மதிப்பு :

- ''வேந்தன்பால் விழுந்தது'' என்ற தொடர் மூலம் இராமன் காட்டிற்கு வந்தாலும் அவனை மன்னன் என்றே பரதன் கூறுவது.

IV கையாளப்பட்ட உருவக அணிப்பயன்பாட்டின் சிறப்பினை விளக்குக.

- இடர்கடல் : துன்பம் கடலாக உருவகிக்கப்படுதல்.

(ஆ) குரிசிலது ஏவலால் அக் குரகதத் தேர் வலானும்
வரிசையின் வழாமை நோக்கி மரபுளி வகையிற் ஏற்ற
கரிபரி இரதம் காலான் கணக்கு அறுகரை இல்வேலை
எரிமணி சிரையின் வீசும் கங்கையாறு ஏறிற்று அன்றே

I இப்பாடலில் பரதனுடன் வந்த படைகளின் பெருக்கம் சித்திரிக்கப்படுமாற்றினை விளக்குக.

- சேனைக் கடல் ஆறு ஏறிற்று - படை கடலாக உருவகிக்கப்பட்டு அதன் பெருக்கம் கூறப்பட்டுள்ளது.
- கணக்கு அறு என்பதன் மூலம் எண்ணிக்கையிலடங்காத சேனை என்பது உணர்த்தப்பட்டுள்ளது.

II சுமந்திரனின் சிறப்புகள் எடுத்துக்கூறப்பட்டிருக்குமாற்றினை விளக்குக.

- குதிரைகள் பூட்டிய தேரைச் செலுத்துவதில் வல்லவன்.
- நாவாயில் முன் அமர்பவர், இருப்போர், நிற்போர், தனித்து ஏற்றப்படுவோர், குழுவாக ஏற்றப்படுவோர் எனத் தகுதி பார்த்துப் படையினரை ஏற்றியமை.

III கங்கை ஆற்றின் வளம் பற்றி விளக்குக.

- ஒளி வீசும் மணிகளை அலைகளால் கரைமேல் எறிகின்ற கங்கை ஆறு.

(இ) என்றலுமே அடியின்மிசை நெடிது வீழ்ந்து அழுவானை இவன் யார்? என்று
கன்றுபிரி காராவின் துயர் உடைய கொடிவினவ கழல்கால் மைந்தன்
இன்துணைவன் இராகவனுக்கு; இலக்குவற்கும் இளையவற்கும் எனக்கும் மூத்தான்
குன்று அனைய திருநெடுந்தோள் குகன் என்பான் இந்நின்ற குரிசில் என்றான்

I இப்பாடல் பாடப்பட்ட சந்தர்ப்பம் பற்றி விளக்குக.

கோசலையின் பாதத்தில் வீழ்ந்து வணங்கிய குகனைப் பரதனானவன் கோசலைக்கு அறிமுகம் செய்கின்றமை.

II பரதன், கோசலைக்குக் குகனை எவ்வாறு அறிமுகம் செய்கின்றான்.?

- இராமனின் நண்பன்.
- இலக்குவனுக்கும், சத்துருக்கனுக்கும், தனக்கும் இனிய அண்ணன்.
- மலை போன்ற நெடுந்தோல்களை உடையவன் என அறிமுகப்படுத்துகின்றமை.

III பரதனின் உயர்ந்த மனிதப் பாங்கு இங்கு வெளிப்படுமாற்றினை விளக்குக.

குகனை இலக்குவன், சத்துருக்கனிற்கு மாத்திரமன்றித் தனக்கும் அண்ணன் என அறிமுகப்படுத்துதல்.

IV இப்பாடலில் கையாளப்பட்ட உவமை அணிப் பயன்பாட்டின் சிறப்பினை விளக்குக.

- இராமனைப் பிரிந்ததால் கோசலை அடைந்த துயர், கன்றைப் பிரிந்த காராம்பசு அடைந்த துயரோடு ஒப்பிடப்பட்டுள்ளது.
- குகனின் நெடுந்தோள் 'குன்றனைய' என, மலையோடு ஒப்பிடப்பட்டுள்ளது.

(ஈ) படர் எல்லாம் படைத்தாளை பழிவளர்க்கும் செவிலியை தன் பாழ்த்த பாவிக்
குடரிலே நெடுங்காலம் கிடந்தேற்கும் உயிர்ப் பாரம் குறைந்து தேய
உடர் எலாம் உயிர் இலா எனத் தோன்றும் உலகத்தே ஒருத்தி அன்றே
இடர் இலா முகத்தாளை அறிந்திலையேல் இந்நின்றாள் என்னை ஈன்றாள்.

I கைகேயி எவ்வாறு இழித்துரைக்கப்படுகின்றாள்?

- துன்பங்கள் எல்லாவற்றையும் உண்டாக்கியவள்.
- பழியாகிய குழந்தைக்கு வளர்ப்புத்தாய்.
- உலகமே துன்பத்தில் இருக்க இவள் மட்டும் இன்பத்தில் லயிக்கும் சுயநலம் கொண்டவள்.

II பரதன் கைகேயி மீது கொண்ட வெறுப்பு எவ்வாறு காட்டப்பட்டுள்ளது?

- தாய் வயிற்றில் தங்கியிருந்தமையை 'பாழ்ந்த பாவிக் குடத்திலே' எனக் கூறுகின்றமை.

- துன்பங்களை உண்டாக்கியவள்.
- பழிகள் யாவற்றுக்கும் காரணமானவள்.
- உலகம் துன்பத்தில் இருக்க தான் மட்டும் மகிழ்ச்சியாக இருப்பவள். என, தாயாகிய கைகேயி பற்றி எடுத்துரைக்கின்றமை. மகனின் துன்பத்தைக் கூட அறியாதவள் என்ற வெறுப்புணர்வும் குறிப்பாக காட்டப்படுகின்றது.

III இப்பாடலில் கையாளப்பட்டுள்ள அணிச் சிறப்பினை விளக்குக.

- பழி வளர்க்கும் செவிலித்தாய். பழி குழந்தையாகவும், கைகேயி செவிலித்தாயாகவும் உருவகிக்கப்பட்டுள்ளமை.

02. பரதனின் வேண்டுகோளையேற்று குகன் அழைப்பித்த நாவாய்களின் தோற்றப் பொலிவு சித்திரிக்கப்படுமாற்றினை விளக்குக.

- தற்குறிப்பேற்ற அணியைக் கையாள்தல் :
  - ♦ பல வடிவும், நிறமும், உருவமும் உடைய படகுகள், வெள்ளிமலை, பொன்மலை, புஷ்பக விமானம் எனத் தன் கருத்தை ஏற்றிக் கூறுதல்.
  - ♦ தேரைப் பிரித்துப் படகில் ஏற்றினர் அதனால் தேர்த்தண்டும் கொடியும் இங்கே பாயும், பாய்மரமும் போல் தோன்றின. சிறிய மரக்கலங்கள் பெரிய பாய்மரக்கப்பல் போலத் தோன்றின எனப் புலவர் தன் கருத்தை ஏற்றிக் கூறுதல்.
- உவமை அணிப்பயன்பாடு :
  - ♦ நாவாய்கள் செல்லல் பெண்களது நடைக்கு ஒப்பிடப்பட்டுள்ளமை.
  - ♦ ஓடங்கள் விமானங்களிற்கு உவமிக்கப்பட்டுள்ளமை.
  - ♦ மரக்கலம் கரையை அடைதல் - நண்டு ஒதுங்குவதற்கு உவமிக்கப்பட்டுள்ளமை.
  - ♦ ஓடம் - ஆகாயத்திற்கு உவமிக்கப்பட்டுள்ளமை.
  - ♦ வெண்மையான அன்னம் சிறகுகள் இல்லாமல் கரையை வந்தடைந்தது போல் மரக்கலங்கள் தென்கரைக்கு வந்து சேர்ந்தமை.
- கற்பனை :
  - ♦ அன்னமே நாணப்படுமாறு நாவாய்கள் அசைந்து செல்லல்.

03. பரதன் சேனைகள் கங்கையைக் கடக்கின்ற பகுதியை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

(அ) படைகளின் பெருக்கம் :

- யானை, குதிரை, தேர், காலாள் எனப்படும் எண்ணிக்கை அளவுக்குட்படாத சேனைகள்.
  - ♦ சேனைக் கடல் - உருவக அணி
  - ♦ நாவாயில் முன் அமர்பவர், இருப்போர், நிற்போர், தனித்து ஏற்றப்படுவோர், குழுவாக ஏற்றப்படுவோர் எனத் தகுதி பார்த்துப் படையினரை ஏற்றியமை.

- ♦ கங்கையில் நீந்திச் செல்லும் யானைகள் உலக முடிவுக் காலத்தின் இறுதியில் கடல்நீரை அடியோடு வற்றும்படி மொண்டு உண்பதற்காக நெருங்கி உள்ளவை போலக காணப்படுகின்றமை - உவமை அணி
- ♦ யானைகள் கங்கையில் நீந்திச் செல்லும் பொழுது கங்கை நீர் மிதமாகத் தள்ளப்பட்டுக் கரைக்கு மேல் பரவுதல்.
- ♦ தேர்களைப் பிரித்துப் படகுகளில் ஏற்றுகின்றமை.
- ♦ குதிரைகள் எட்டுக் கோடி எனல்.

(ஆ) மகளிரது தோற்றச் சிறப்பு

- வளையல் அணிந்த தளிர் போன்ற மென்மையான கையை உடைய மகளிர்
- வரிசையான யானைக் கொம்புகள் குத்துமாறு நெருங்கின எனத் திரண்ட முலைகள்.
- கயல் மீன் கூட்டம் போன்ற கண்கள் - அழகு, துடிப்பு

(இ) தற்குறிப்பேற்ற அணிப்பயன்பாடு

- பல்வேறு வடிவும், நிறமும், உருவமும் உடைய படகுகளை வெள்ளிமலை, பொன்மலை, புஷ்பக விமானம் எனக் கற்பனை செய்து தன்கருத்தை ஏற்றிக் கூறுதல்.
- யானைகள் கங்கையில் நீந்தித் தென்கரை செல்லும் போது கங்கை நீர் மிதமாகத் தள்ளப்பட்டு கரைக்கு மேலே பரவித் தென் கரையை அடைகின்றமையைக் கங்கையானது இராமனைக் காணும் ஆசையினால் முற்பட்டுச் செல்கின்றதாகக் கூறியுள்ளமை.
- தேரைப் பிரித்துப் படகில் ஏற்றியமை. அதனால் தேர்த்தண்டும் கொடியும் பாய்மரமாகத் தோன்றுகின்றமை.
- மகளிர் பாதம் பட்டதால் நாவாய்கள் உயிர் பெற்றமை எனல்.

04. பின்வரும் பாத்திரங்களின் குணவியல்புகளை மதிப்பிடுக.

(அ) கோசலை

- தன்னிலையில் பெருமை கொண்டிருப்பவள்.
  ♦ துறந்த பெரியாள் - பரதன் கூற்று

- வணக்கத்துக்குரிய சிறப்புக்களைப் பெற்றவள்.
- கடவுளுக்கு ஈடான இயல்புகளை உடையவள்.
  ♦ சுற்றத்தார் தேவரொடும் தொழநின்ற கோசலை - கவிக்கூற்று
- இராமன் மீது கொண்ட தாய்ப்பாசம்.
  ♦ கன்றைப் பிரிந்த காராம் பசுவின் துன்பத்தைக் கொண்டிருப்பவள்.
- ‘குகனைச் சகோதரனாகக் கொள்ளுங்கள்’ என்பதன் மூலம் தென்படும் உயர்ந்த மனப் பாங்கு.
  ♦ மாற்றாள் பிள்ளையையும் தகுதி, குலம் பாராது மகனாக ஏற்றுக் கொள்ளல்.

- தீமையிலும் நன்மையுண்டு எனக் கூறும் மனப்பாங்கு.
    - ♦ இராமன், இலக்குவன் கோசலை நாட்டை விட்டுக் காட்டிற்கு வந்ததும் நன்மையாகப் போய்விட்டது எனக் கூறுதல்.
      (குகன் சகோதரனாகக் கிடைத்தது)
- ‘நீவீர் ஐவீரும் ஒருவீர் ஆய்.......’ என்பதன் மூலம் ஒற்றுமைப் பண்பும்,
- ‘அகல் இடத்தை நெடுங்காலம் அளித்தீர்’ என்பதன் ஊடாக ஒற்றுமையையும் ஆட்சி அதிகாரத்தைப் பங்கிடுவதாகிய பரந்த மனப்பான்மையை உணர்த்துகின்றமை.

(ஆ) சுமித்திரை

- ‘அறந்தானே என்கின்ற அயல் நின்றாள்......’
  அறத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற அறப்பண்பு நிரம்பியவள்.
  (அறமாக உருவகிக்கப்படுதல் மூலம்)
- இராமனை விட்டுப் பிரியாத இலக்குவனின் தாய் சுமித்திரை என்பதன் மூலம் மகனை அறத்தோடு பண்போடு வளர்த்த பெருமைக்குரியவள் - இராமன் மீது பாசம் உடையவள்.

(இ) கைகேயி

- உறவுகளைத் துயரப்படுத்தியவள்
    - ♦ கணவன் இறத்தல்.
    - ♦ பரதன் துன்பத்தில் உழல்தல்.
    - ♦ இராமன் காடு செல்லல்.
- கொடுமையான மனம், எண்ணம் உடையவள்.
    - ♦ தன் மனத்தின்கண் தானே எண்ணிச் செயலாற்றுகின்ற கொடுமையானவள்.
    - ♦ பழியைத் தனக்குள் வளர்க்கும் அளவுக்குக் கொடுமையானவள்.
    - ♦ பழி குழந்தையாகவும் கைகேயி செவிலித்தாயாகவும் உருவகிக்கப்பட்டுள்ளமை.
- பெற்ற மகனே பழித்து வெறுக்கும் அளவுக்கு இழிவான பண்புடையவள்.
    - ♦ பாழான தீவினையுடைய வயிற்றில் நீண்ட நாள் தங்கியிருந்தேன் எனப் பரதன் கூறுதல்.
- உலக ஒத்திசைவற்ற சுயநல நோக்குக் கொண்டவள்.
    - ♦ உலகமெல்லாம் துன்பத்திலிருக்க இவளொருத்தியே துன்பம் இல்லாத முகத்தை உடையவள்.

# காரணமாலை

## திருமக்க நாட்டுச் சிறப்பு

**அறிமுகம் :**

இந்நூல் சீறா சரிதத்தை இசைத்தமிழால் பாடியது. நபிமார்களின் வாழ்வில் இடம் பெற்ற அற்புதங்களை இஸ்லாமிய மரபில் 'மு.:.ஜிஸாத்கள்' என்பர். அத்தகைய அற்புதச் செயல்களால் (காரணங்களால்) ஆன மாலை என்பதால் 'காரணமாலை' என இந்நூல் பெயர் பெறலாயிற்று.

இந்நூல், முஹம்மது நபி அவர்களின் சரித்திரத்தினையும் அவர் அவதரித்த மக்கமா நகரின் சிறப்பினையும் எடுத்துரைக்கின்றது. இந்நூலில் உள்ள 'திரு மக்க நாட்டுச் சிறப்பு' எனும் பகுதியில் உள்ள பதினைந்து பாடல்கள் பாடப்பகுதியாக தரப்பட்டுள்ளன.

''இலங்காபுரியிற் சிறந்த காலிமாநகரத்தில் சாமுநயினார் லெப்பையவர்கள் குமாரர் சேகுத்தம்பிப் புலவர்களால் செய்யப்பட்டது'' என இந்நூலாசிரியர் பற்றி நூன் முகப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், நூலின் பல இடங்களிலும் வேறு இடங்களிலும் வரும் குறிப்பின்படி இந்நூலாசிரியரின் பிறப்பிடம் யாழ்ப்பாணம் என அறியக்கிடக்கின்றது.

**பாடப்பரப்பு :**

'திரு மக்க நாட்டுச் சிறப்பு' எனும் பகுதியிலுள்ள பதினைந்து பாடல்கள்.

**மையக்கருத்து :**

மக்க நாட்டின் இயற்கை எழிலும் அருட்சிறப்பும்.

**உள்ளடக்கம் :**

- இயற்கை அழகு நிறைந்த மக்கா நாட்டின் சிறப்பினைச் சொல்லல்.
- இயற்கையழகும் வானவர்களும் வந்து கூடும் தவமிக்க நாடு.
- வானவர் குழு சூழும் மலை, மாடங்கள் அழகுமிக்க நாடு.
- சங்குகள் முத்துக்களை ஈனும் நாடு; வீடுகள் தோறும் மண முரசொலி எங்கும் கேட்கும் நாடு.
- இறையருளால் அமரர்கள் இறங்கி க.:.பா அமைத்த நாடு; மூசா நபி பொருட்டால் மாரி பொழிந்த அற்புதமிக்க நாடு.
- ஆறுலட்சம் மலக்குகள் ஆண்டு தோறும் வெற்றி பொருந்திய 'ஹஜ்'ஜினை நிறைவேற்றும் நாடு; ஆதமையும் ஹவ்வாவையும் சேர்க்கும் பெரிய நாடு.
- முத்துக்களும் தவமும் உலாவும் நாடு.
- வெள்ளம் பாய, கரும்பு செழிக்க, மார்க்கம் செழிக்க காபிர்கள் நெஞ்சம் கலங்க இயற்கையால் சிறந்த நாடு.
- வரலாற்றுப் புகழ்மிக்க பலமலைகள் நிறைந்த நாடு.
- இப்றாகிம் நபி மகனின் கழுத்தை அறுத்திடும் வேளை இறைவனின் வல்லமை விளக்கும் நாடு.
- ஹஜறுல் அஸ்வத் கல்லும், 'ஸம்ஸம்' (சமுசம்) நீர் வளமும் மிக்க நாடு; வானவர்கள் வந்து செல்லும் அற்புதங்களும் மன்னர்கள் மாடமும் நிறைந்து முஹம்மது (ஸல்) மக்களை நேர்வழிப்படுத்திய நாடு.
- புதுமைகள் சூழ்ந்த நாடு; அற்புதம் நிறைந்த இறைவனின் பொருட்டால் வந்த நபிகளாரின் புதுமைகளைப் பேசுவோம்.

**அரும்பதங்கள் :**

- கலாபம் - மயில்
- தரளங்கள் - முத்துக்கள்
- மருமலி - வாசனை மலிந்த
- திருமலி - செல்வம்
- பணை - வயல்
- மன்றல் - வாசனை
- தூபம் - புகை
- கொண்டல் - மேகம்
- முண்டகம் - தாமரை
- நரர் - மக்கள்
- வரை - மலை
- எழிலி - மேகம்
- கொங்கு - பூந்தாது / வாசனை
- நறா - தேன்
- மங்குல் - மேகம்
- மாடம் - உயர்ந்த கட்டடம்
- கேயம் - ஆறு
- ஓதை - ஓசை
- பண் - பாடல்
- கடிமணம் - திருமணம்
- அமரர் - வானவர்
- வென்றி - வெற்றி
- கொந்து - பூங்கொத்து
- கன்னல் - கரும்பு
- பூதம் - சங்கு
- சலஞ்சலம் - சங்கு
- சமுசம் - ஸம்ஸம் (புனித நீருற்று)
- தலங்கள் - பள்ளி வாசல் (புனித இடம்)

**அறபுச் சொற்கள் :**

- கஅபா (க.்.பா) - இறை ஆலயம்
- ஹச்சி (ஹஜ்) - வசதிபடைத்த முஸ்லிம்கள் புனித மக்காவுக்கு சென்று நிறைவேற்றும் கடமை.
- மலக்கு - வானவர்
- ஆதம் (அலை) - ஒரு நபி; முதல் மனிதர்.
- ஹவ்வா (அலை) - ஆதம் நபியின் மனைவி; முதல் பெண்
- குப்ர் - நிராகரித்தல்
- நபி - தூதர்
- காபிர் - நிராகரிப்பாளர்

- அறபா, ஸபாமர்வா, அபீக் குபைஸ், ஹிறா } மக்காவில் உள்ள மலைகள்
- இப்றாகிம், இஸ்மாயீல் - இறைதூதர் பெயர்கள்
- குறுபான் - இறைவனை நெருங்குதல்
- குதறத் - வல்லமை
- ஹஜ்றுல் அஸ்வத் - கறுப்புக்கல்
- கருபத் - ஆலயம்
- சமுசம் (ஸம்ஸம்) - மக்காவில் உள்ள கிணற்று நீர்; புனித நீர்.

**அறிய வேண்டிய விடயங்கள் :**

- மக்காவின் இயற்கைச் சூழல்.
- மக்கநகர் அருள் பெற்ற வழிகள் / ஆன்மீகச் சூழல்
- முஹம்மது நபி (ஸல்) அவர்களின் புகழ்.
- அணிநயம் / புலவர் எடுத்துரைக்குமாறு
- அற்புதச் செயல்கள்.

**வினாவிடை**

01. திருமக்க நாட்டின் சிறப்புக்கள் யாவை?
    - கருமேகம் தவழும் சோலை; மயில்கள் ஆடுவது;
      நதியோடும் இடங்களில் முத்து விளைவது
      வயல்வெளிகள் செழிப்புறக் காட்சி தருவது
      செவ்வண்டுகள் பாடுவது.
    - நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவதரித்த சிறப்புகள் பல பொருந்திய வளமிக்கதாக மக்கா காணப்படுகின்றமை.
    - மலக்குகள் வந்து சூழும் புனித தலமாக மக்கா காணப்படுகின்றமை.
    - மக்காவில் வானுயர்ந்த மலைகள் நிறைந்திருக்கின்றமை.
    - சிறப்புமிக்க வரலாற்றைக் கூறும் மலைகளின் முக்கியத்துவம்.
    - இறைவனின் வல்லமை விளக்கும் நாடு.
    - மக்கள் உள்ளம் துலங்கி இறைவழிபாட்டில் ஈடுபடுகின்றமை.
    - ஆதம் நபியும் ஹவ்வா (அலை) அவர்களும் சந்தித்த (அரபா) இடம் அமைந்துள்ளமை.
    - முஹம்மது நபியவர்கள் நல்லாட்சி செய்தமை.
    - மழைவளம் கொண்டுள்ளமை.
    - சங்கும், பண்ணும், முரசும், வண்டினமும் ஒலிக்கும் இனிய நாடு.
    - பல்வகைப் புதுமைகளும் கொண்டமைதல்.
02. மக்காவின் சிறப்புப் கூறப்படுமாற்றைத் தெளிவுறுத்துக.
    - கருமேகம் தவழும், மயில்கள் ஆடும், சங்கு முத்துக்களை ஈனும், வயல்களில் வண்டினம் பாடும் வளமும் அருளும் பொருந்திய மக்கா எனக் கூறுதல்.
    - தங்கத்தைப் போன்ற மலை உச்சி மீது மேகம் தழுவி மழை பொழியும் ஈரவள நாடு மக்கா எனக் கூறப்படுதல்.

- சங்கும், பண்ணும், முரசும் வண்டினமும் ஒலிக்க இனிய நாடெனக் கூறுதல்.
- அமரர்கள் கருபத்தை உருவாக்கி, ஆண்டுதோறும் 'ஹஜ்' செய்யும் நாடு.
- வரலாற்றினூடே சிறப்புப் பெறும் மலைகள் உள்ள நாடு.
- மக்கள் ஒன்று சேரும் நாடெனக் கூறுதல்.
- பலவகைப் புதுமை கொண்டதெனக் கூறுதல்.

03. பெருமானார் அவர்களின் புகழ் உரைக்கப்படுமாற்றை விளக்குக.

- நபிகளாரைத் தேடுவோரும் மக்கள் புகழ் பாடுவோரும் கூடும் பொன்னான நகரில் வள்ளல் உருவெடுத்தார்.
- குப்ர் மார்க்கம் தேய்ந்து நந்நபி தீன் மார்க்கம் செழிப்பதாக அமைவது.
- பூரண மதி வந்து நபியினைப் புகழ்ந்து போற்றும் (அபூக் குபைசு மலை)
- ஹிரா மலையில் (குகையில்) 'ஓதுவீராக' என இஸ்லாத்தைப் பெருமானாருக்கு வழங்கியமை.
- மக்காவை ஆளுகின்ற முகம்மத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அற்புதப் பொருட்டினால் அப்துல்லாவின் மகனாகப் பிறத்தல்.

04. இப்பாடல்கள் ஊடாக வெளிப்படும் ஆன்மிகக் கருத்துக்களைக் கூறுக.

- ஆறுலட்சம் மலக்குகள் கூடி 'ஹஜ்'ஜை நிறைவேற்றல்.
- மலைகளைச் சுற்றும் சிறப்பு.
- குர்பான் காட்சி.
- வானவர்கள் வந்து கூடும் தவமிக்க நாடு.
- இறைவன் அருள் பொங்கும் நாடு.
- அமரர்கள் கருபத்தில் முழங்கும் நாடு.

05 இப்பாடல்களினூடாக வெளிப்படும் வரலாற்றுச் சம்பவம் இரண்டு கூறுக.

- நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவில் அவதரித்தார்.
- ஆதிபிதா ஆதம் (அலை) அவர்களும், ஹவ்வா (அலை) அவர்களும் பூமியில் அரபா எனும் இடத்தில் சந்தித்தனர்.

06. விரிவான விடை எழுதுக.

(அ) காரணமாலையில் புலவர் கையாண்டுள்ள கவிதை வெளிப்பாட்டு முறை பற்றி விபரிக்குக.

- பல்வேறு பா வகைகளைக் கையாண்டுள்ளார்.
    - ♦ அறுசீரடியாசிரிய விருத்தம்.
    - ♦ எழுசீர்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.
    - ♦ வெண்பா
    - ♦ கொச்சகக் கலிப்பா.
- இனிமையான சொற்கையாட்சி
- இசைப்பாடல் எனும் வகையில் ஓசை நயமுள்ளமை.
- கற்பனை வளம் - வர்ணனைச் சிறப்பு.
- வாசகர் மனதில் காட்சியை உருவாக்கல்.

# பாரதிதாசன் கவிதைகள்

**அறிமுகம்**

தமிழ்நாடு புதுவையில் 29.04.1891 இல் பிறந்த இவரது இயற்பெயர் கனக சுப்புரத்தினம் என்பதாகும். தமிழ், பிரெஞ்சு ஆகிய மொழிகளில் தேர்ச்சி பெற்ற இவர் 18 வயதிலேயே ஆசிரியரானார். பின் சட்ட மன்ற உறுப்பினராகவும் விளங்கினார். கவிஞராக, நடிகராக, எழுத்தாளராக, திரைக்கதை ஆசிரியராக, அரசியல்வாதியாக பல்துறைகளில் தன் ஆற்றலை வெளிப்படுத்தியவர். எனினும், அவர் கவிஞர் என்ற வகையிலே பெரிதும் மதிக்கப்படுகிறார். ''எங்கெங்கும் காணிலும் சக்தியடா'' என்ற கவிதை மூலம் கவிதை உலகிற்குள் காலடி பதித்த சுப்புரத்தினம் பாரதியார் மீதுள்ள பற்றின் காரணமாக பாரதிதாசன் எனத் தன் பெயரை அமைத்துக் கொண்டவர். அவர் முன்வைத்த புரட்சிகரமான கருத்துக்களினால் புரட்சிக்கவி என்ற பட்டத்திற்கும் உரித்துடையவரானார். இவர் இயற்றிய 'பிசிராந்தையார்' என்ற நாடக நூலிற்காக 1970 இல் சாகித்திய அகடமி பரிசிலும் கிடைத்தது. 73 வருடங்கள் வாழ்ந்த இவர் 21.04.1964 இல் மண்ணுலக வாழ்வை நீத்தார்.

## உதய சூரியன்

**மையக்கருத்து**

- சூரிய உதயத்தால் ஏற்பட்ட ஒளியின் மூலம் உலகத்தில் விளக்கம், உத்வேகம், முன்னேற்றம் முதலானவை ஏற்படல்.
- சூரிய உதயத்தை அறிவின் படிமமாகக் கொண்டு அறிவின் மூலம் உலகில் ஏற்படும் தெளிவு, உத்வேகம், வளர்ச்சி என்பவற்றைக் கூறல்.

**உள்ளடக்கம்** :

உலகத்தில் உணர்வை ஊட்டிய வண்ணம் கிழக்குத்திசையில் கதிரவன் உதித்துவிட்டான். விண்ணெல்லாம் பொன்னொளி பரவுகிறது, கருமையான இருள் அகன்றுவிட்டது. சோர்வு நீங்கிவிட்டது.

பெருங்கடலில் ஒளி பரவுகின்றது. தூக்கத்தில் ஆழ்ந்திருந்த உலகு இயங்கத் தொடங்குகின்றது. வான், மண், மலை, சோலை, நதி என்று இயற்கை அனைத்திலும் ஒளி பரவுதல்.

மக்கள் உள்ளத்தில் மகிழ்ச்சி ஏற்படுகின்றது. கவிதைகள், கைத்தொழில்கள் விருத்தி அடைதல். மக்கள் எல்லாத் திசைகளிலுமுள்ள அறிவைப் பெற்று தெளிவு, உத்வேகம், வளர்ச்சி அடைகிறார்கள்.

**அருஞ்சொற்கள்**

- காயம் - ஆகாயம்
- மிலைதல் - ஆடுதல்
- பிரவாகம் - ஊற்றெடுத்தல்

**வினா-விடை**

01. சூரியோதய நிகழ்ச்சி சித்திரிக்கப்படுமாற்றினை விளக்குக.
    - வர்ணித்தல் - காரிருள் பறந்து வானில் பொன்னொளி பரவுதல்.
    - பெருங்கடலில் அமுதப்பிரவாகம்.
    - ஒளிமுகம் காட்டி விட்டான் - உவமை
    - கதிர்க் கோமான், இருட்கதவு - உருவக அணி

02. அணிகள் பற்றி இனங்கண்டு விளக்குக.
    - பொன்னொளி - உவமை அணி
    - இருட் கதவு, கதிர்க்கோமான், திசைமகன் - உருவக அணி

03. சூரிய உதயத்தால் உலகம் அடைந்த பயன்கள் யாவை?
    - இருள் நீங்கி ஒளிபரவுதல்.
    - தூக்கத்தில் ஆழ்ந்திருந்த உலகம் விழிப்படைதல்.
    - மலை, சோலை, நதி - அழகு பெறுதல்.
    - மக்கள் மகிழ்ச்சி அடைதல்.
    - கவிதை, கைத்தொழில்கள் ஆக்கங்கள் உருவாகுதல்.
    - இருள் அகன்று தெளிவு கொடுத்தல்.
    - அறிவு பெருகுதல்.

04. கவிஞன் கையாண்ட உத்திகள் பற்றி விளக்குக.
    - மக்களை முன்னிலைப்படுத்திக் கூறுதல்.
        - ♦ செங்கதிரோன் தகத்த காயம் பார்!
        - ♦ இயற்கை எழில்கள் பார்!

    - உணர்ச்சி வெளிப்பாடு
        - ♦ பொன்னொளியை ஏற்றுகின்றான் அடடா.
        - ♦ இயற்கை எழில்கள் பார்.
        - ♦ இருட்கதவை உடைத்தெறிந்தான் பரிதி
        - ♦ உதய சூரியன் வாழ்க.

- வர்ணனைக் கையாள்கை.
    - கீழ்த்திசையில் உதித்துவிட்டான் செங்கதிரோன்.
    - விண்ணிலெல்லாம் பொன்னொளியை ஏற்றுகின்றான்.

- நிகழ்ச்சிகள் காட்சிவயப்படும் நிலையில் கூறுகின்றமை.
    - பெருங்கடலின் அமுதப்பிரவாகம்.
    - சோலை, நதி, இயற்கை எழில்கள்.
    - திசைமகளை அறிவுலகில் தழுவுகின்றான் - அகக்காட்சி

- காரண காரியங்களை முன்னிறுத்தித் தான் சொல்லவந்த கருத்தை அழுத்தமாகக் கூறுதல்.
    - ஒளி முகத்தைக் காட்டி விட்டான் - தூக்கமதில் ஆழ்ந்திருந்த உலகை ஒளிசெய்தான்.
    - இருட்கதவை உடைத் தெறிந்தான் - திசைகளை அறிவுலகில் தழுவுகின்றான்.

## மானிட சக்தி

**மையக்கருத்து :**

உலகத்திலே மேன்மைமிக்கது மானிட சக்தியே. ஒவ்வொருவரும் மனித வல்லமையை உணர்ந்து சமத்துவ உணர்வோடும் மனிதாபிமானத்தோடும் பகுத்தறிவோடும் வாழ வேண்டும்.

**உள்ளடக்கம் :**

மானிட வல்லமையினாலே பலர் இந்த உலகத்தை ஆட்சி செய்வதைக் கண்டுள்ளோம். மனித ஆற்றலினால், பூமியில் உயரிய வாழ்வை அடைய முடியும். மனித சக்தியைக் கருவியாகக் கொண்டு எல்லையில்லா ஆற்றலை அடைந்திடலாம். முடிவும் மனித சக்தியில் கொள்கின்ற நம்பிக்கையில்லாத வாழ்க்கை செழிப்படையவும் முடியும்.

இந்த உலகத்தில் மானிடன் வாழ்ந்த அளவுக்கு, அவன் ஆற்றிய செயல்களுக்கு, மானிட ஆற்றலுக்கு அப்பால் வேறு எந்த ஆற்றலும் இருந்ததில்லை. மானிடம் உயிரற்ற பயனற்ற ஒன்றல்ல. மனிதனானவன் தொடக்க காலத்தில் தன் ஆற்றலை உணராது இயற்கைக்கு அடிமையாகி வாழ்ந்தான். பின்னர் தன் ஆற்றலை உணர்ந்து இயற்கையை வசப்படுத்திச் சாதனைகளை ஆற்றினான்.

மானிடத்தை - மனிதாபிமானத்தை - மானிட ஆற்றலைப் போற்ற மறுக்கின்ற ஒருவனை அவனது உயிரும் வெறுக்கும் மானிடத்தின் மிக உயர்ந்த நிலை ஏற்றத்தாழ்வின்றி எல்லோரையும் சமமானவர்களாகக் கருதி மனிதாபிமானத்தோடு செயற்படுவதாகும். மனிதனுக்கு இயல்பாகவே வாய்த்த பகுத்தறிவின் துணை கொண்டு எல்லாவற்றையும் ஆராய்ந்து பார்க்க வேண்டும். அதன் மூலம் வாழ்வின் ஆற்றல் மானிடத்தன்மையிலேயே தங்கியுள்ளது என்பதைத் தேர்ந்து கொள்ள வேண்டும்.

**அருஞ்சொற்கள்**

- மானிடன் - மனிதன்
- கான் - காடு
- தேர் - ஆராய்ந்துபார்

**வினாவிடை**

01. மானிட சக்தியின் வல்லமைகள் பற்றி விளக்குக.
    - வானத்தை வசப்படுத்தல்.
    - கடலை வசப்படச் செய்தல்.
    - வல்லமையுள்ள வாழ்வமைத்தல்.
    - உலகத்தை ஆட்சி செய்தல்.
    - மானிட ஆற்றலுக்கு அப்பால் வேறு எந்த ஆற்றலும் இருப்பதில்லை.
    - மனித சக்தி ஆற்றல் வாய்ந்தது.
    - சாதனைகள் ஆற்றுவதற்குக் காரணமாக அமைகின்றமை.

02. மனவியல் சார்ந்த கருத்துக்கள் புலப்படுமாற்றினை விளக்குக.
    - மனித சக்தியால் உலகில் உள்ள யாவற்றையும் பெற உதவும்.
    - மனம் சக்தியில் நம்பிக்கை கொண்டால் வாழ்வு சிறக்கும்.
    - மனித சக்தியை மறுத்துவிட்டால் உயிரை வெறுக்குமளவு வாழ்வில் உற்சாகம் இழந்துவிடல்.
    - மனித சக்தியை ஈர்த்து, வசப்படுத்த வேண்டும்.
    - தனது சக்தியைத் தானே உணர்தல் வேண்டும்.

03. இக்கவிதையில் கவிஞர் கையாண்ட அணிகள் பற்றி விளக்குக.
    - மானிடம் என்றொரு வாள்
    - மானிடம் என்ற குன்று
    - சமத்துவ உச்சி
    - பகுத்தறிவாம் விழி

04. மானிட ஆற்றலின் சிறப்பைக் கவிஞர் எவ்வாறு வலியுறுத்துகின்றார்?

- வாழ்க்கை நடைமுறைகளை முன்வைத்துக் கூறுதல்.
  - ♦ மானிடத் தன்மையைக் கொண்டவர்.
  - ♦ வையத்தை ஆள்வது நாம் கண்டதுண்டு.
- மானிடம் சக்திமிக்கது என்பதை உருவக அணியைக் கையாண்டு கூறுதல்.
  - ♦ மானிடம் என்றொருவாள்.
  - ♦ மானிடம் என்ற குன்று.
- எதிர்முகமாகக் கருத்தை வலியுறுத்துதல்.
  - ♦ மானிடம் போற்ற மறுக்கும் - ஒரு மானிடம் தன் கருத்தைத் தன் உயிரும் வெறுக்கும்.
- வினாவின் மூலம் சிந்தனையைத் தூண்டி விளக்குதல்.
  - ♦ மானிடம் என்பது புல்லோ? - அன்றி மரக்கட்டையைக் குறித்திட வந்த சொல்லோ?

05. வரலாற்று நிகழ்விற்கூடாக வலியுறுத்துதல்.

- கானிடை வாழ்ந்ததும் உண்டு - பின்பு கடலை வசப்படச் செய்ததும் அதுதான்.
- பகுத்தறிவின் துணை கொண்டு ஆராய்தல்.
  - ♦ மனித சக்தியின் மூலம் வாழ்வின் ஆற்றலை அடைய முடியும்.
- மானிட ஆற்றலை உணர்ந்து செயற்பட வலியுள்ள மானிடத் தன்மையை நம்பி அதன் வன்மையினால் புவி வாழ்வு கொள் தம்பி.

06. இக்கவிதையில் கவிஞர் கையாண்ட உத்திகள் பற்றி விளக்குக.

- ஒருவரை முன்னிலைப்படுத்தி விளிக்கும் பாங்கு.
  - ♦ நெருங்கிய உறவு சார்ந்த விளிப்பு - தம்பி
- தர்க்க ரீதியான கருத்து முன்வைப்பு.
  - ♦ மானிடத் தன்மையால் வையகத்தை ஆள்வது நாம் கண்டதுண்டு.
  - ♦ மானிடத்தன்மைக்கு வேறாய் ஒரு வல்லமை கேட்டிருந்தாய் அதைக் கூறாய்.
  - ♦ கடலை வசப்படச் செய்ததும் அதுதான்.
- அணிப்பயன்பாடு :
  - உருவக அணி :
    - ♦ மானிடம் என்றொரு வாள்
    - ♦ மானிடம் என்ற குன்று
    - ♦ சமத்துவ உச்சி
    - ♦ பகுத்தறிவாம் விழி
- வினாக்கள் ஊடாகச் சிந்தனையைத் தூண்டுதல்.
  - ♦ மானிடம் என்பது புல்லோ? - அன்றி மரக்கட்டையைக் குறித்திட வந்த சொல்லோ?

- எதிர் முகமாகக் கருத்தை வலியுறுத்துக.
    - ♦ மானிடம் என்பது புல்லோ? - அன்றி மரக்கட்டையைக் குறித்திட வந்த சொல்லோ?
    - ♦ மானிடம் போற்ற மறுக்கும் - ஒரு மானிடம் தன்னைத் தன் உயிரும் வெறுக்கும்.
- வரலாற்றுச் சம்பவங்கள் மூலம் எடுத்துரைத்தல்.
    - ♦ மானிட வல்லமையினால் பலர் இந்த உலகத்தை ஆட்சி செய்வதைக் கண்டுள்ளோம்.
    - ♦ கானிடை வாழ்ந்ததும் உண்டு - பின்பு கடலை வசப்படச் செய்ததும் அதுதான்.

07. மானிட ஆற்றல், சமத்துவம், பகுத்தறிவு ஆகிய மூன்றிற்கும் கவிஞர் எவ்வாறான முறையில் விளக்கமளிக்கின்றார்.

மானிட ஆற்றல் குன்றாக இருக்கின்றது. அதன் உச்சி சமத்துவம் ஆகும். அங்கிருந்து பகுத்தறிவு நோக்கில் உலகைப் பார்க்க வேண்டும் என மூன்றும் ஒருங்கிணையும் பொழுது வாழ்வில் வல்லமை பெற்று வாழ்ந்திட முடியும் எனக் கவிஞர் கூறுகிறார்.

# கவிஞன் (கவிதை)

## கவிஞன் - வித்துவான் க. வேந்தனார்

**அறிமுகம் :**

க. வேந்தனார் (1918 – 1966) யாழ்ப்பாணம், வேலணையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். எழுத்தாற்றலும் பேச்சுத்திறமையும் கொண்ட இவர், சிறந்த தமிழாசிரியருமாவார். இவரது இயற்பெயர் கனகசபை நாகேந்திரம்பிள்ளை என்பதாகும். சோ. இளமுருகனாரின் (சோ.பாலசுப்பிரமணியன்) வழிகாட்டலில் தனித்தமிழ் ஈடுபாடு காரணமாகத் தனது பெயரை 'வேந்தனார்' என இவர் மாற்றிக்கொண்டார்.

இந்து சமயபாடம், கம்பராமாயண உரைநூல்கள், பாரதியார் பாடல் விளக்கவுரை ஆகிய நூல்களை மாணவர்களுக்காக எழுதியுள்ளார். இவர் எழுதிய குழந்தைப் பாடல்களுள் 'அம்மாவின் அன்பு', 'பாட்டி', 'எங்கள் வீட்டுப் பூனை' முதலானவை இலங்கைப் பாடத்திட்டக் குழுவினரால் பாலர் பாடல்களாக வெளியிடப்பட்டுள்ளன.

இவர் எழுதிய,

'பாலைக் காய்ச்சி சீனிபோட்டுப்
பருகத் தந்தஅம்மா
காலைத் தூக்கிக் கண்ணில் ஒற்றிக்
கட்டிக் கொஞ்சும் அம்மா'

என்னும் சிறுவர் பாடல் பிரசித்தி பெற்றதாகும்.

தினகரன், ஈழகேசரி, சுதந்திரன், ஈழநாடு, இந்து சாதனம், வீரகேசரி ஆகிய பத்திரிகைகளில் நூற்றுக்கணக்கான கட்டுரைகளை இவர் எழுதியுள்ளார்.

இவரது கவிதைகள் 'கவிதைப் பூம்பொழில்' என்றும், 'சிறுவர் பாடல்கள்' என்றும், கட்டுரைகள் 'தன்னேர் இலாததமிழ்' என்றும் தொகுப்பு நூல்களாக வெளிவந்துள்ளன.

**மையக்கருத்து :**

'கவிஞன்' என்னும் இவரது கவிதை, சிறந்த கவிதைக்குரிய பண்புகளையும் சிறந்த கவிஞனுக்குரிய பண்புகளையும் கூறும் வகையில் அமைந்துள்ளது.

**உள்ளடக்கம் :**

- பாடல்களை எழுதுவோரெல்லோரும் கவிஞராகிவிடுவதில்லை. பாட்டு என்பது பண்டிதர்க்கு மட்டுமே உரிமையானதொன்றுமல்ல. ஓடுகின்ற பெரு வெள்ளப் பெருக்குப் போல மக்கள் மேன்மையுறும் வண்ணம் மறுமலர்ச்சிமிக்க வாழ்விற்கு வழி வகுக்கத்தக்க வகையில் சிங்கம் போல் வீறுபெற்று எழுச்சிமிக்க பாடல்களைப் பாடுபவனே கவிஞனாவான்.
- வசதியான வாழ்வு வாழ்ந்து, நூல்களைப் பார்த்துப் பாடுகின்ற கவிதைகளும், பாராளும்

அரசர்களுக்கு அஞ்சி அவர்களது ஆணைக்கு அடங்கி நின்றுபாடுகின்ற கவிதைகளும் அழியக் கூடியவை. உண்ண உணவின்றி, கந்தல் ஆடையுடன் வாழ்பவனாக இருந்தாலும் கனல் தெறிக்கத் தீயைக் கக்கும் எரிமலை போல வீறுடனும் மேலான சிந்தனைத் தெளிவுடனும் விருப்புடன் மற்றவர்க்காய் கருத்துக்களைப் படைக்கும் திறனுடையவனே கவிஞனாவான்.

- கற்கண்டு, செழுந்தேன், கனி என்பன போன்ற அலங்காரச் சொற்களைக் கொண்டு உருவாக்கப்படும் கவிதைகள், அவற்றைச் சொன்னவர்க்கும் தெரியாமல் மறைந்து போகும். வீரனின் வில்லிலிருந்துபுறப்படும் அம்பு போல புலமை வீச்சுடன் வெளிப்படும் சொற்களைக் கொண்டு கவிஞர்களால் ஆக்கப்படும் கவிதைகள் என்றும் அழிவதில்லை.
- மரபு ரீதியான அமைப்புடன் எழுதப்பட்ட அம்மானை, திருப்பள்ளிஎழுச்சி, கோவை, அந்தாதி முதலான இலக்கியங்களைப் பார்த்து, உணர்ச்சிகள் ஏதுமற்று விம்மாமல் பொருமாமல் பொய்யாக அழுது கூலிக்கு மாரடிக்கும் பெண்களைப் போல சொல்மாலை தொடுப்போர் கவிஞர் அல்லர். தன்மானம் என்னும் உணர்வினை உள்ளத்து ஒளியாகக் கொண்டு உலகைப் பாதுகாக்கும் தனியாற்றலுடையவனே சிறந்த கவிஞனாவான்.
- ‘பாட்டிற்கு ஒரு புலவன்’ என்று தமிழ்நாடே போற்றுகின்ற பாரதியினுடைய கவியாற்றல் நாடு விடுதலைபெறத் தேவையான உணர்வினை ஊட்டியதோடு தமிழுக்கும் மறுமலர்ச்சியை நல்கியது. வீட்டிற்குள் இருந்து கொண்டு கொள்கையில்லாமல் விண்ணப்பப் பதிகங்களை எழுதுவோர் ஏட்டிலே கவிஞர் எனக் குறிப்பிடப்பட்டாலும் அவர்களை உலகு அங்கீகரிக்காது. இறவாத கவிதைகளைப் படைக்கும் கவிஞர்களையே உலகம் அங்கீகரிக்கும்.

**அரும்பதங்கள் :**

- மாட்சி - மேன்மை
- கோளரி - சிங்கம்
- பஞ்சணை - பஞ்சாலான படுக்கை
- பனுவல் - நூல்
- ஆணை - கட்டளை / ஏவல்
- கந்தை - கிழிந்த ஆடை / நைந்துபோன ஆடை
- விறல் - வலிமை
- ஓம்புதல் - காத்தல்

**வினாவிடை**

01. சிறந்த கவிஞனுக்குரிய இயல்புகள் எவையென க. வேந்தனார் குறிப்பிடுகின்றார்?
    - உணர்ச்சியில் ஊற்றெடுத்த ஞானமுடையவராயிருத்தல்.
    - வாடுகின்ற மக்கள் மறுமலர்ச்சி பெறத்தக்க வகையில் குமுறும் கோளரியாக (சிங்கமாகத்) திகழ்தல்.
    - அடிப்படைத் தேவைக்கே அல்லல்பட நேரிடினும், சிந்தனையால் மேன்மைபெற்று ஏனையோர் விரும்பும் கவிதைகளை இயற்றுதல்.
    - அறிவுமிக்க, புலமை மிக்க சொல்லாற்றலைக் கொண்டிருத்தல்.
    - தன்மானத்து உள்ளொளியால் உலகை ஓம்பும் தனியாற்றல் பெற்றிருத்தல்.

ஆகியனவற்றைச் சிறந்த கவிஞனுக்குரிய இயல்புகளென க. வேந்தனார் குறிப்பிடுகின்றார்.

02. காலத்தைக் கடந்து நிலைபெற முடியாத கவிதைகளின் பண்புகளென வேந்தனார் எவற்றைக் குறிப்பிடுகின்றார்?

- பஞ்சணையிலிருந்து கொண்டு நூல் பார்த்துப் பாடப்படுபவை.
- அதிகாரத்திற்கு அஞ்சி, ஆணைக்கு அடி பணிந்து பாடப்படுபவை.
- ஒரே வகையான வாய்ப்பாட்டுத் தன்மையுடனும் சொல்லலங்காரங்களுடனும் (கற்கண்டே, செழுந்தேனே முதலானவை) பாடப்படுபவை.
- வீட்டிற்குள்ளிருந்து கொள்கையின்றி எழுதப்படுபவை.

03. வேந்தனார் இனங்காட்டும் நிலைபேறான கவிதைகளின் இயல்புகள் பற்றிக் குறிப்பிடுக.

- உணர்ச்சியில் ஊற்றெடுத்துப் பிரவாகிப்பவனாக அமைதல்.
- மக்கள் மாட்சி பெறும் வகையில் அவர்கள் மறுமலர்ச்சிப் பெருவாழ்வை வழங்கும் ஆற்றல் கொண்டிருத்தல்.
- புலமை மிக்க சொற்களால் இயற்றப்பட்டிருத்தல்.

04. வேந்தனாரது ‘கவிஞன்’ என்ற கவிதையின் சிறப்பியல்புகளைக் குறிப்பிடுக.

- உணர்வுச் செறிவுடையதாக இருத்தல்.
- எளிமையான மொழிநடை
- கவிஞன் தனது நோக்கைத் தெளிவாக வெளிப்படுத்தல், ஒப்பிட்டுக்காட்டுதல், மறுத்தல், ஏற்றல், எடுத்துக்காட்டல் முதலானவற்றைக் கையாளல்.
- ஓசைச் சுவையுடைய சொற்களைக் கையாளல்.
- பொருத்தமான உவமை கையாளல்.
- ஓடுகின்ற வெள்ளப்பெருக்குப் போல உணர்ச்சியில் ஊற்றெடுத்த ஒளிமிகு கவிதை.

05. பாரதியாரின் கவியாற்றலை வேந்தனார் எவ்வாறு அடையாளப்படுத்தியுள்ளார்?

- பாட்டினுக்கோர் புலவன் எனத் தமிழ் நாடே பாராட்டும் பெருமையுடையோன்.
- நாட்டு விடுதலைக்காக போர் உணர்வை சமூகத்தில் ஊட்டியவர்.
- நற்றமிழானது மறுமலர்ச்சி அடைய உழைத்தவர்.

என வேந்தனார் பாரதியை அடையாளப்படுத்தியுள்ளார்.

06. ‘விலைக்கு மாரடிக்கின்ற மெல்லியர்’ இத்தொடரை விளக்குக.

- கூலிக்காக எவ்வித உணர்ச்சியுமற்று விம்மாமல், பொருமாமல் கண்ணீரைப் பொய்யாக உதிர்த்து மார்பில் அடித்துக் கொண்டு ஒப்பாரி வைத்தல்.

♦ இங்கு, எவ்வித உணர்வுமற்று சொற்களைச் சேர்த்துப்பாடும் கவிஞர்களுக்கு இத்தொடரை ஒப்பிட்டுள்ளார்.

# எல்லாம் உமதே

## ஏ. எம். அபூபக்கர்

**அறிமுகம் :**

மக்களைப் பற்றிக்கவிதைப் பாடத் தொடங்கியவுடன் உழைக்கும் வர்க்கத்தையும் பற்றி பல கவிதைகள் வெளிவந்துள்ளன. அவ்வகையில் உழைப்பாளியின் முக்கியத்துவத்தையும் உழைப்பாளி சுரண்டப்படுவதையும் 'எல்லாம் உமதே' என்ற கவிதை வெளிப்படுத்துகின்றது.

இக்கவிதையை எழுதியவர், ஏ. எம். அபூபக்கர் எனும் வைத்தியர். இவர் சாய்ந்தமருதைச் சேர்ந்தவர். இவரது 'நீ' எனும் கவிதைத் தொகுப்பிலே இக்கவிதை வெளிவந்தது. அடிநிலை மக்களின் பிரச்சினைகளையும், சமூக விமர்சனத்தையும், தத்துவார்த்தக் கருத்துக்களையும் தனது கவிதைகளில் இவர் பெரிதும் வெளிப்படுத்தியுள்ளார்.

**மையக்கருத்து :**

உழைத்து வாழ்பவன் உய்ய வழியின்றி உலகில் தோற்றுப் போவதையும், மக்களைச் சுரண்டி வாழ்வோர்க்கெதிராகக் குரல் எழுப்ப வேண்டுமென்பதையும் வலியுறுத்தி இக்கதை சமூகப் புரட்சி செய்யத் தூண்டுவதாக அமைந்துள்ளது. உழைப்பவனையே இந்த உலகின் எஜமானாக இக்கவிதை சுட்டுகின்றது.

**உள்ளடக்கம் :**

- உழுது வாழ்பவன் உணவின்றி அழுது நொந்து வாழ, செல்வந்தன் உழைப்பவனின் குருதி குடித்து மகிழ்கின்றான்.
- ஆடை நெய்பவன் உடுக்கவும் துணியின்றி இருக்கச் செல்வந்தன் உண்டு மகிழ்ந்து அத்துணியில் கையைத் துடைத்து மகிழ்கின்றான்.
- சேற்றில் நின்று உழைத்து கஷ்டப்படுகின்ற உழைப்பாளி வேற்று மனிதனால் விழுங்கப்படுகின்றான்.
- சோடையுற்ற உழைப்பாளிகள் சோம்பி நிற்பதனை விட்டுப், பாடை ஏறுவதற்குமுன் செல்வச் சீமான்களுக்கு எதிராக ஒன்று திரளுங்கள்.
- நோக்கமற்ற சீமான்களையும், அவர்கள் வாழ்வையும் உழைப்பவர்களின் உள்ளங்களின் தீயாய் எழுந்து அழிக்கட்டும்.
- உழைப்பாளிகளின் கரங்களினால் சீமான்களின் பல்லை உடைத்து பயிருக்கு எருவாக்குவோம்; அவர் மனைகளைத் தீயிட்டுக் கொழுத்துவோம். உழைப்பாளிக்கே உலகு சொந்தம்; அவனே பூமியின் எஜமான்.

**அரும்பதங்கள் :**

- கவல்தல் - கவலைப்படுதல்
- குருதி - இரத்தம்
- கேடில் - குற்றமற்ற / மாசற்ற
- உண்டி - உணவு
- பாடை ஏறுதல் - இறப்பு

**அறிய வேண்டிய விடயங்கள் :**

- உழைப்பாளிகளின் அவல வாழ்வு.
- உழைப்பாளி சுரண்டப்படும் விதம்.
- சீமான்களின் வாழ்வுச் சித்திரிப்பு.
- உழைப்பவர்களைச் சீமான்களுக்கெதிராக ஒன்று திரட்டும் கருத்துக்கள்.
- கவிஞனின் முற்போக்குச் சிந்தனை.
- அணி நயம் / சொல்லாட்சி.

**வினாவிடை**

01. கவிதையூடாகக் கவிஞர் கூற விழைந்த விடயங்கள் யாவை?

- உழைப்பாளர்கள் தம்மைச் சுரண்டி ஏப்பமிடுபவர்களிடமிருந்து ‘எல்லாம் எமதே’ என்று விடுதலை பெற்று வாழ வேண்டும்.
- உழுது வாழும் விவசாயிகளும், ஆடை செய்யும் நெசவளார்களும், அழுது நெஞ்சம் கலங்கி வாழ்கின்றனர்.
- இவர்களது வாழ்க்கை துன்புற்றே அமைகிறது.
- செல்வந்தர்கள் உழைப்பாளிகளின் குருதியை உறிஞ்சுகிறார்கள்; துன்புறுத்துகிறார்கள்.
- ஏழை உழைப்பாளர்களைத் துன்புறுத்தும் செல்வந்தரின் செயல்களையும், குணங்களையும், அதிகாரங்களையும் இல்லாது செய்ய வேண்டும்.
- தொழிலாளர்கள் எழுச்சியுற்று உலகை ஆளும் எஜமானர்களாக வேண்டும்.

02. கீழ்வரும் தொடர்களில் வெளிப்படும் உணர்வுச் சித்திரிப்பை எடுத்துக்காட்டுக.

(அ) ‘உழுது வாழ்வோன் உணவின்றி
உடலம் சோர்ந்து துடிக்கின்றான்’

- இரக்கம், பரிதாபம், துயரம்
  - ♦ உழுது உழைக்கின்ற விவசாயி உணவுக்கு உரமாகிறான். ஆனால், அவனது உடலோ உணர்வின்றிச் சோர்கிறது.

(ஆ) ‘வேற்று மனிதன் அவனுயிரை
விழுங்கி ஏப்பம் விடுகிறான்’

- கோபம்
  - ♦ உழைப்பிலீடுபடாது சுரண்டி வாழும் பெருஞ் செல்வர். ஏழையுயிரை விழுங்கியே வாழ்கின்றனர்.

(இ) ‘ஆக்கம் செய்த கரங்களினால்
அழிவு செய்ய எடுங்களடா’

- ஆக்ரோஷம், விடுதலை
  - ♦ பணக்காரரின் வாழ்க்கையை உருவாக்கிய ஏழை உழைப்பாளர் கைகளாலேயே அவர்களது அநீதியை அழித்து விடுதலை பெற வேண்டும்.

03. கீழ்வரும் தொடர்களின் கவித்துவச் சிறப்பை எடுத்துக்காட்டுக.

(அ) ‘அழுது வடிந்த கண்ணீரை
அருந்தி நெஞ்சம் கவல்கின்றான்’

- ‘கண்ணீரை அருந்துதல்’ என்ற தொடர் துயரத்தின் அதீதத்தை வெளிப்படுத்துகிறது. ஏழை உழைப்பாளி தன் துயரத்தை எண்ணி எண்ணி துயருறும் நிலையை நயம்பட உணர்த்துகிறது.

(ஆ) ‘கொழுத்த செல்வன் உழைப்பவனின்
குருதி குடித்து மகிழ்கின்றான்
பழுத்த அவனின் பெருவயிறு
பானையாகச் சிரிக்கிறது.’

- செல்வம் கொழுத்தவனுடைய வயிறும் பருத்தது. உழைப்பாளியின் குருதியை குடித்து திமிர் கொள்கிறான். அவனது வயிறு பெரும் பானையாக உருவகிக்கப்படுகிறது.
- இத்தொடரில் ‘சிரிக்கிறது’ என்ற சொல் உழைக்காமல், உடல் வருந்தாமல், ‘சும்மா’ வாழ்பவனின் உடல் தோற்றம் பற்றிக் கேலியாகக் குறிப்பிடுகிறது.

(அ) ‘சோடையுற்ற சொறி நாயாய்ச்
சோம்பி நின்றது போதுமடா’

- கடின உழைப்பாளியாக இருந்தாலும், செல்வந்தனின் சுரண்டலுக்கு உட்படுவதனால் சோம்பி நிற்கிறான்.

04. உழைப்பாளியின் அவலநிலை சித்திரிக்கப்படுமாற்றைக் கூறுக.

- உணவின்றி உடல் சோர்வது.
- துன்பத்தால் அழுது நெஞ்சம் கலங்குவது.
- ஆடை நெய்யும் தொழிலாளி ஆடை அணிய முடியாதளவு வறுமையுறுதல்.
- கோடை, குளிர் தாக்கத்தால் துயருறுதல்.
- ஆன்மா நொந்து தவிப்புறுதல்.
- தொழிலாளர்களை யாரும் போற்றுவதில்லை.
- அவர்தம் உணர்வுகளை யாரும் புரிவதில்லை.

05. ‘எல்லாம் உமதே’ என்ற தலைப்பின் பொருத்தப்பாட்டைக் கூறுக.

- ‘எல்லாம் உமதே, நீரேதாம்
இந்தப் புவியின் எஜமானர்’
என்ற கவிதையின் கடைசி வரி இதன் பொருத்தப்பாட்டை உணர்த்துகின்றது.
- வாழ்வில் துயரையும், தோல்வியையும் சந்திக்கும் ஏழை உழைப்பாளிகள் தம்மைச் சுரண்டி ஏப்பமிடும் செல்வந்தர்களை எதிர்கொண்டு வாழ்வில் எழுச்சியடைய வேண்டும் என்பது வலியுறுத்தப்படல்.

06. கவிஞரின் எடுத்துரைப்பு முறையை விபரிக்குக.

- எளிமையான சொல்லாட்சி.
- ஓசை நயமிக்க சொற்பிரயோகம்.
    - ♦ உழுது - அழுது
    - ♦ கொழுத்த - பழுத்த
    - ♦ ஆடை - கோடை - மூடை
    - ♦ சேற்று - ஆற்றல் - போற்ற - வேற்று
    - ♦ சோடை - பாடை - ஆடை
    - ♦ ஆக்கம் - தாக்கம்
    - ♦ கல்லை - பல்லை - நெல்லை

    என்ற சொற்பயன்பாடு எதுகையூடாக ஓசை நயத்தை ஏற்படுத்துகின்றது.
- உணர்வினைத் தொற்ற வைத்தல்.
    - ♦ அவலம், இரக்கம், பரிதாபம், கோபம், வெறுப்பு, ஆக்ரோஷம்............
    - ♦ உருவக அணிப்பிரயோகம்
        - 'பானையாகச் சிரிக்கிறது' எனச் செல்வந்தனின் வயிறு உருவகிக்கப்படுகிறது.
        - 'சொறி நாயாக சோம்பி' எனச் சோர்ந்து நிற்கும் தொழிலாளர் உருவகிக்கப்படுகின்றனர்.
- உழைப்பாளர்களை விளித்துப் பேசுதல்.
    - ♦ போதுமடா, எழுங்களடா
- வாசகர் மனதில் புலக்காட்சியை ஏற்படுத்துவது.

# வீசாதீர்

## மஹாகவி

**அறிமுகம் :**

ஈழத்து நவீன கவிதையின் முன்னோடிகளுள் ஒருவர். 'மஹாகவி' (உருத்திரமூர்த்தி) யாழ்ப்பாணம் அளவெட்டியில் பிறந்த இவர், 19ஆவது வயதிலேயே அரச துறையில் எழுது வினைஞராகப் பணி தொடங்கிப் பின்னர் நிர்வாக உத்தியோகத்தராகவும், அரச கரும மொழித்திணைக்களத்தில் உதவி ஆணையாளராகவும் உயர் பணியாற்றியவர்.

தனது 16ஆவது வயதில் கவிதை எழுதத் தொடங்கிய மஹாகவி, பண்டிதன், மாபாடி, புதுக்கம்பன் போன்ற புனைபெயர்களிலும் தன்னை அடையாளப்படுத்தினார்.

மஹாகவி கவிதை மாத்திரமன்றி குறுங்காவியம், பா நாடகம், இசைப்பாடல் ஆகிய வடிவங்களிலும் தனது ஆளுமையை வெளிப்படுத்தினார். சாதாரண மக்களின் வாழ்வியல் மனிதாபிமானம், சமத்துவம் முதலானவற்றை தமது கவிதையில் வெளிப்படுத்தினார். வீடும் வெளியும், சாதாரண மனிதனின் சரித்திரம், முற்றிற்று, கோடை, ஆறுகுறுங்காவியம் என்பன இவரது படைப்புக்களாகும். தமிழில் குறும்பாவை அறிமுகப்படுத்தியவரும் இவரே.

மின்னல், தென்றல், இயற்கை இன்பத்தை மறவுங்கள், மீதமிருக்கும் இன்னல், உழைப்பு, ஏழ்மை ஆகியவற்றைப் பாடுங்கள் என்ற இலக்கினை தமது நவீன கவிதை ஊடாகப் பாய்ச்சினார்.

**மையக்கருத்து**

யாராக இருந்தாலும் அவர்களது பெறுமானத்தை மதித்து நடத்தல் வேண்டும்.

**உள்ளடக்கம் :**

- அவசரத்தில் பயணிக்கும் நகரத்து மக்களின் அவசரம்.
- தெருவோரப் பிச்சைக்காரரின் அவல வாழ்வு.
  - ♦ அவன் உய்யும் நிலை தெரியாதவன்.
  - ♦ கை இல்லாதவன், பசியுடையவன், வீழ்ந்துகிடக்கிறவன்.
- அவசரத்தில் பயணிக்கும் மனிதரின் மனோபாவம்.
  - ♦ சற்றேனும் நில்லாது சில்லறையைச் செருக்கோடு வீசுகின்ற இழிவான குணம்.
- மனித உதவி துன்புறுத்தலாக அமைதல் தகாது.
  - ♦ இரப்பவனின் தூக்கம் கெட்டுவிடும்.
- ஏழைகளுக்கு உதவுதல் வேண்டும்.

**அரும்பதங்கள் :**

- அவதி - அவசரம்
- ஏகுகிறீர் - செல்கிறீர்
- சுருளுதல் - வாடுதல்
- வீங்கும் - அதிகரிக்கும்
- நெகிழ்வு - இரக்கம்
- செருக்கு - ஆணவம்

**வினாவிடை**

01. பிச்சைக்காரனின் அவல நிலை சித்திரிக்கப்படுமாற்றினை விளக்குக.
    - ஆள் சுருளும் வெய்யில்.
    - நீர் போகும் வீதி நடைப்பாதை - பிச்சைக்காரனின் உறைவிடம்.
    - கை இல்லாதவன்.
    - வாழ்க்கையில் உய்யும் வகை தெரியாத நிலை.
    - மிக்கபசி
    - வீழ்ந்து கிடத்தல்.
    - குறை உயிரோ, செத்த உடலோ என்று முடிவு செய்ய முடியாத அளவுக்கு உணர்ச்சியற்றுக் கிடத்தல்.
        - ♦ கொத்தவரும் காகம்.
    - தூக்கத்தில் மட்டுமே துயரத்தை மறந்திருத்தல்.

02. மனிதாபிமானமற்ற மனிதர்களின் செயல்களை விளக்குக.
    - அவதியில் ஓடுதல்.
    - அவல நிலைக்குள்ளானவர்களை நிதானமாக நின்று பாராத சுயநலப் போக்குள்ளவர்கள்.
    - நெஞ்சில் நெகிழ்வில்லாதவர்கள்.
    - செருக்குடன் சில்லறையை வீசுதல்.
    - சுயநலப் போக்கு.
        - ♦ தம் காரியத்தில் மட்டும் கவனம் செலுத்துதல்.

03. இக்கவிதையில் பிச்சைக்காரனுக்கு காசை வீசியவரை நோக்கி வினவுவதிலும், விளிப்பதிலும் புலனாகும் எள்ளல் சுவையினைத் தெளிவுபடுத்துக. அதற்கு பின்வரும் பகுதிகளை ஆதாரமாகக் கொள்க.

- நீர்தாம் உலகு நிலைமாறிப்
  பாதாளத்
  தாழ விழாமல் அதன் வாழ்வைக் காப்பவனோ!
- வாழி
  என் தாழ்மை வணக்கங்கள்
- கடுந் தூக்கம்
  பாதியிலே
  கெட்டுவிடக் கூடும்
  கெடுக்காதீர்
- சில்லறை ஒன்றைச் செருக்கோடு
  செல்லுங்கால்
  வீசி விடுதல் விரும்பினீர்.
- மெல்லக் குனிந்து இடுக
  இல்லையெனில் உம் பாட்டில் செல்க.

04. கவிஞர் கவிதையில் கையாண்ட உத்திகள் பற்றி விளக்குக.

- சம்பவத்தினூடாக வெளிப்படுத்தல்.
- கேலி கிண்டலுடன் கருத்தை முன்வைத்தல்.
  - ♦ நீர்தான் உலகு நிலை மாறிப்
    பாதாளத்
    தாழ விழாமல் அதன் வாழ்வைக் காப்பவரோ?
- வினா எழுப்புவதன் மூலம் சிந்திக்கத் தூண்டுதல்.
  - ♦ அதன் வாழ்வைக் காப்பவரோ?
  - ♦ அவமதிக்கும் கொள்கை ஏன்?
- கட்புலச் சித்திரிப்பு.
  - ♦ ஆள் சுருளும் வெய்யில்.
  - ♦ வெய்யிலிலே நீர்போகும் வீதி நடைப்பாதை.
- பேச்சோசைப் பண்பு
  - ♦ ஏனப்பா
  - ♦ வேண்டாம்
  - ♦ கிட்டப்போய்
  - ♦ மெல்லக் குனிந்து இடுக.
  - ♦ இல்லையெனில்

- உம்பாட்டில் செல்க.
    - ஏதோ அவதியில் ஓடுகிறீர்
- முற்றுருவப் பாங்கு
    - கதைபோல் அமையும் கவிதைச் சித்திரிப்பு.
- எளிமையான சொற்பிரயோகம்.
- கட்டிறுக்கமான சொற்களைக் கையாளுதல்.
    - வீங்கும் பசி
    - ஆள்சுருளும் வெய்யில்
- உணர்ச்சி வெளிப்பாடு.
    - கோபம்
    - எள்ளல்
    - அவலம்
    - துயரம்

# சிறுகதை - தொண்டு

## நீலாவணன்

**அறிமுகம்** :

கிழக்கிலங்கையின் பெரிய நீலாவணையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் எழில் காந்தன், எறிகுண்டு கவிராயர், இராமபாணம், சின்னான், கவிராயர், மாணரபரணன் என்னும் புனை பெயர்களில் கவிதை, சிறுகதை, உருவகக் கதை, உரைநடைச்சித்திரம் விமர்சனம் ஆகிய ஆக்கங்களைப் படைத்தார். எனினும் கவிதை மூலமே இவர் புகழடைந்தார்.

ஈழத்து முன்னணிக் கவிஞர்களுள் ஒருவரான இவர் 'சந்தக் கவிதைக்கு நீலாவணன்' எனப் போற்றப்பட்டவர். 1952 இல் சுதந்திரன் பத்திரிகையில் ''ஓடிவருவதென்னேரமோ'' என்ற கவிதை மூலம் அறிமுகமானவர். இவரது இறுதிக் கவிதை 'பொய்மை பொசுங்கிற்று' என்பதாகும். இயற்கை, காதல், பெண்கள், தமிழர் உரிமை, சாதி வேறுபாடு எனப் பல பொருள் சார்ந்த கவிதைகளையும் எழுதியுள்ளார். தன்னைச் சுற்றி நடைபெறும் போலித்தனங்களையும், பொய்களையும், ஈவிரக்கமின்றி வெளிப்படுத்தி இவரால் எழுதப்பட்ட வழி, ஒத்திகை ஆகிய கவிதைத் தொகுப்புகளும் வேளாண்மை (காவியம்) மழைக்கை (பாநாடகம்) முதலியனவும் முக்கியமான நூல்களாக அமைகின்றன.

மட்டக்களப்பில் வழங்கும் கிராமியச் சொற்களைக் கவிதைகளில் பெருவாரியாக இவர் கையாண்டுள்ளார். அத்தோடு கிழக்கிலங்கைப் பண்பாடு, பழக்கவழக்கங்களையும் தம் கவிதைகளில் துல்லியமாகப் பதிவு செய்துள்ளார். பேச்சோசைப் பாங்கான அங்கதம் கலந்த கவிதைகளைச் சுவைபட எழுதுவதில் இவர் வல்லவர்.

கவிஞர் என்ற புகழைத் தனதாக்கிக் கொண்டதோடு பல இளங்கவிஞர்களையும் உருவாக்கிய பெருமை மிகுந்தவர்.

**மையக்கருத்து** :

துன்பப்படுபவர்களுக்குத் தொண்டு செய்கிறோம் என்ற போர்வையில் அவர்களிடம் சுரண்டுபவர்களின் போலித்தனம்.

**உள்ளடக்கம்** :

- கிடைத்ததை உண்டு விட்டுக் களைப்பாறிப் படுத்திருக்கும் பசு.
- பக்கத்தில் வந்து பழகும் காக்கைகள்.
  (கூடுகட்டுவதற்கான குச்சிகளை சேகரிப்பதை நோக்கமாகக் கொண்டவை)
- பசுவின் அருகில் நெருங்கிய காக்கைகள் மயிர்கோரி, வாய் ஊறிப் பேன் குத்துதல்.
- பொதுத் தொண்டில் வைத்திருக்கும் நம்பிக்கை வாழ்த்தத் தகுந்ததுவே என கவிஞரே பாராட்டுதல்.
- திடீரென்று மாடு தன் வாலால் காக்கைகளை விரட்டுதல்.
- 'தொண்டுக்கு நன்றி துளியுமற்ற மாடு' எனக் காக்கைகள் கூறுதல்.
- காக்கைகளின் வாயில் காணப்பட்ட தொண்டுக்கும் கூலியாக களவு கொண்ட பசு வால் மயிர் மூலம் சுரண்டல் வெளிப்படுதல்.

**அரும்பதங்கள் :**

- சாய்பொழுது - அந்திப்பொழுது / மாலைப்பொழுது
- கேணி - சிறிய குளம்
- சுடலை - சுடுகாடு
- வடபால் - வடதிசை

**வினாவிடை :**

01. வாழ்க்கையில் நொந்து போனவர்களிடத்தில் சுரண்ட முற்படும் போக்கு எடுத்துரைக்கப்பட்டுள்ளதை விளக்குக.

- பசுவின் நொடிந்த நிலை
  - ♦ நொடிந்து போயிருக்கும் பசு.
    - ▫ குறியீட்டு உத்தி - நொடிந்து போனவர்கள்.
- வெம்பு மணல் மிஞ்சி
  ஆழியொடும் கூட்டி விட்ட
  குச்சி நீர் ஓடை
  குறுமணலே வார்ந்திருக்கும்
  பாயும் அந்தப் பள்ளத்தில் பசு படுத்திருத்தல்.
  சாம்பிக் குருத்தையும் சருகான வெள்ளறுகையும்
  சப்பி வயிற்றைச் சரிகாட்டிச் சாய்பொழுதில்
  அப்பாடா என்று களையாறும் பசுவொன்று
  - ♦ உணவின்றி - சப்பளித்துபோன வயிறுடைய பசு.
    - ▫ குறியீட்டு உத்தி - வர்ணணை.
- சுரண்டும் காக்கைகள்.
  - ♦ கூடுகட்டும் நோக்குடனே
    குச்சுவகை சேகரிக்கப்
    பாடுகின்ற காக்கைகள்.
    - ▫ குறியீட்டு உத்தி - சுரண்டுபவர்கள்
- சுரண்டும் செயல் காகத்தின் தந்திர செயல் மூலம் எடுத்துரைக்கப்படுதல்.
  - ♦ பசுவின் மயிர்கோதி, வாய் ஊறிப் பேன் குத்துகின்ற காக்கைகள்.
    - ▫ குறியீட்டு உத்தி - தொண்டு
- தொண்டுக்குக் கூலியாக பசு வால் மயிரைக் கண்டேன்.
  - ♦ தொண்டு என்ற போர்வையில் சுரண்டுதல்.
    - ▫ குறியீட்டு உத்தி - சுரண்டல்.

02. அணிப்பயன்பாடுபற்றி விளக்குக.

- உவமை அணி
  - ♦ கட்டாதலைகின்ற காட்டெருமை போல் பேன்கள்.
- உருவக அணி
  - ♦ கொசுக்கள் படை ஹொய்ங்குழல்.
  - ♦ சாட்டை விசுக்கும் பசு வால்.

03. போலித்தொண்டு, சுரண்டல் என்பன எடுத்துரைக்கப்படும் முறையிலுள்ள சிறப்புக்களை விளக்குக.

- போலித்தொண்டு
    - ♦ குச்சுகளைச் சேகரிக்கப்பாடுபடுகின்ற அண்டக்காக்கைகள்.
    - ♦ பசுவின் மயிர் கோதி, வாய் ஊறிப் பேன் குத்துகின்ற காக்கைக் குடும்பம். (குறியீட்டு உத்தி, கதை கூறும் முறை)
    - ♦ பொதுத் தொண்டில்<br>வைத்திருக்கும் நம்பிக்கை<br>வாழ்த்தத் தடுத்தததுவே!
    - ♦ பொதுத் தொண்டின் போலித் தன்மையை<br>கவிஞர் எள்ளல் தொனியில் கூறுதல்.
- சுரண்டல்
    - ♦ வால் தூக்கி அண்டங் காக்கைகளைத் துரத்தியது பசு.
        - ▫ தொண்டின் போலியை, நொடிந்தவர்களே வெளிப்படுத்துதல்.
        - ▫ போலியை அறிந்தும் வாய்மூடி மௌனமாக இருத்தல்.
        - ▫ தொண்டுக் கூலியவை<br>கொண்ட பசு வால் மயிரைக்<br>கண்டேன்
        - ▫ பொதுத் தொண்டென்ற போர்வையில் தந்திரமாக சுரண்டுதல். (குறியீட்டு உத்தி - கதை கூறும்போக்கு, வர்ணனை)

04. கவிஞர் தனது கருத்துக்களை எடுத்துக் கூறப் பயன்படுத்திய உத்திகளை விளக்குக.

- குறியீட்டு உத்தி
    - ♦ பசு - சுரண்டலுக்கு உட்படுபவர்.
    - ♦ காகம் - தொண்டு என்ற போர்வையில் சுரண்டுபவர்.
- விலங்குகளின் யதார்த்த நடத்தைகளைப் படிமமாகக் கொண்டு, கதை கூறும் பாங்கில் சம்பவங்களை நேரே பார்த்துக் கொண்டிருந்த ஒருவரின் கூற்றாக எடுத்துரைத்தல்.
- சூழலையும் சம்பவங்களையும் காட்சிப்படுத்தல்.
- நுட்பமான வர்ணனைகளைக் கையாளுதல்.
    - ♦ சுடலையிலே வண்ணார்<br>சலவை செய்யும் கேணி<br>வடபால் விழுதூன்றி<br>வாழும் வடக்கிளையில்<br>கூடுகட்டும் நோக்குடனே<br>குச்சுவகை சேகரிக்கப்<br>பாடுபடுகின்ற அண்டங்காக்கைகள்
    - ♦ பேச்சோசைப் பாங்கு<br>தொண்டுக்கு நன்றி<br>துளியுமற்ற மாடிதென்று<br>அண்டங் காக்கைகள்<br>அறையும் அறமொழியே........
- அணிப்பயன்பாடு
    - ♦ உவமை
        - ▫ கட்டாதலைகின்ற காட்டெருமைபோல் பேன்கள்.
    - ♦ உருவகம்
        - ▫ கொசுக்கள் படை ஹொய்ங்குழல்.
        - ▫ சாட்டை விசுக்கும் பசு வால்.

# சிறுகதை - நெருக்கடி

## ந. பிச்சமூர்த்தி

**அறிமுகம்** :

ந. பிச்சமூர்த்தி (15.08.1900 - 4.12.1976) தமிழில் புதுக்கவிதை முன்னோடியாவார்.

மணிக்கொடி எழுத்தாளர்களில் புதுமைப்பித்தனுக்கு நிகரான முக்கியத்துவம் உடையவர். 1933 இல் எழுத்துலகில் நுழைந்த இவரது முதலாவது சிறுகதையான 'மோஹினி' தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளிவந்தது. அதே ஆண்டில் வெளிவந்த இன்னொரு கதை 'ஸயன்ஸிற்குப்பலி' (விஞ்ஞானத்திற்குப் பலி) ஆகும்.

இவரது கவிதைகளும் சிறுகதைகளும் பல தொகுதிகளாக வெளிவந்துள்ளன. நாடகம், கட்டுரை முதலானவற்றையும் எழுதியுள்ளார்.

**மையக்கருத்து** :

மனிதன் மனிதாபிமானத்தைப் பேண வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது. நெருக்கடிக்கு உள்ளாகிய சரவணமுத்துவின் நிலையும் அதிலிருந்து அவரை வெளிக்கொணர்வதற்கு அனுதாபத்துடன் செயலாற்றும் பாத்திரங்களின் துலங்கலும்.

**அரும்பதங்கள்** :

- ஊர்ஜிதம் - நிச்சயம்
- அபூர்வம் - அருமை
- சர்க்கார் - அரசு / அரசாங்கம்
- ஸ்தலம் - இடம்
- சீக்கு - நோய்
- சீட்டுக்கொடுத்தல் - நீக்குதல்
- தரித்திரம் - வறுமை
- தாட்சண்யம் - இரக்கம்
- உத்தரவு - கட்டளை
- அப்பீல் - மேன்முறையீடு
- ரௌத்திரம் - கோபம்
- இலாகா - திணைக்களம்
- பிசகு - பிழை / தவறு

**வினாவிடை :**

01. நெருக்கடி என்னும் சிறுகதையில் வரும்,

(அ) சரவணமுத்து

(ஆ) பங்களாக்காரர்

(இ) இன்ஸ்பெக்டர்

ஆகிய பாத்திரங்கள் குறித்துக் கருத்துரைக்குக.

(அ) சரவணமுத்து

- வறுமையான குடும்பச் சூழல்.
  - ♦ பிள்ளைகளின் உடைகளும் உடையின்மையும்.
  - ♦ இன்ஸ்பெக்டர் அமர்வதற்கு கிழிந்த பாயைக் கொடுப்பது.
  - ♦ சவுக்குப் பயிரிடுவதற்காக வழங்கிய பணத்தைக் குடும்பச் செலவிற்காகப் பயன்படுத்துவது.

- வாழ்க்கையில் சமாளிக்க முடியாத நெருக்கடிகளுக்குள்ளாதல்.
  - ♦ சவுக்குப் பயிரிடப்படாமையால் ஏற்பட்ட நெருக்கடி.
  - ♦ நெருக்கடியிலிருந்து மீள முடியாது திணறுதல்.
  - ♦ இன்ஸ்பெக்டர் உண்மையை நிருபிக்காது விட்டபோது நெருக்கடிக்குள்ளாதல்.

(ஆ) பங்களாக்காரர்

- மிகுந்த முயற்சியுடைவர்.
  - ♦ ''பங்களாச் சொந்தக்காரரின் பங்களாவை விட தோட்டம் அழகாக இருக்கும்.......'' வருஷம் முந்நூற்று அறுபத்தைந்து நாட்களும் ஏதாவது காய்கறி கிடைக்காமல் போகாது. நாள் தவறினாலும் தோட்டத்தில் புஷ்பம் தவறாது.

- முகக் குறிப்பினால் ஒருவரை எடைபோடும் ஆற்றலுடையவர்.
  - ♦ சரவணமுத்து மனக்குழப்பத்துடன் இருந்த வேளை ''எப்பொழுதும் போல் இல்லையே என்ன விசேஷம்?'' எனக் கேட்டமை.
- உதவி செய்யும் மனப்பாங்குடையவர்.
  - ♦ சரவணமுத்துவை நெருக்கடியில் இருந்து மீட்க முனைந்தமை.
  - ♦ பயிர்செய்ய பணம் சரவணமுத்துவிடம் இல்லாத போது, ''கவலைப்படாதேயும், நான் செலவழித்துச் செய்து விடுகிறேன் எனக் கூறியமை.

- புத்திசாதுரியம் மிக்கவர்.
    - ♦ சரவணமுத்துவை நெருக்கடியிலிருந்து காப்பாற்றுவதற்காக, விஞ்ஞான ரீதியில் பயிர் செய்தமை.

- துணிச்சல் மிக்கவர்.
    - ♦ இன்ஸ்பெக்டர் மனுக்கொடுத்த பின்னர் அப்பீலைத் துணிச்சலுடன் அனுப்பியது மட்டுமன்றி நிரூபித்தும் காட்டியவர்.

(இ) இன்ஸ்பெக்டர்

- நேர்மையானவர்.
    - ♦ சரவணமுத்து பயிர்செய்யாத போதும் கால அவகாசம் வழங்கி பின்னர் மனுத்தாக்கல் செய்தமை.

- அனுதாபம் கொண்டவர்.
    - ♦ சவுக்குப் பயிரிடப்படவில்லை என அறிக்கை சமர்ப்பித்து உண்மையே என்பதை நிரூபித்தால் வறுமையில் திண்டாடும் சரவணமுத்துவின் குழந்தைகளும் பாதிக்கப்படுவார்கள். தான் ஓய்வு பெறும் கால எல்லை, தனக்குக் குழந்தைகள் இல்லாமை என்பவற்றைக் கருத்திற் கொண்டு உண்மையை நிரூபிக்காது விட்டமை.

02. நெருக்கடி என்னும் சிறுகதையில் ஆசிரியர் வலியுறுத்த முற்படும் விடயம் யாது?

மனிதன் மனிதாபிமானத்தைப் பேணவேண்டும் என்பதை வலியுறுத்துகின்றார். அதனை வலியுறுத்த நெருக்கடிக்குள்ளான சரவணமுத்துவின் நிலையும் அதிலிருந்து அவரை வெளிக்கொணர்வதற்காக, அனுதாபத்துடன் செயலாற்றும் பாத்திரங்களையும் படைத்துள்ளார். நெருக்கடிக்குள்ளான சரவணமுத்து வறுமை காரணமாகக் குற்றம் இழைத்திருந்தாலும் அவரை நெருக்கடியிலிருந்து மீட்கப் பாடுபட்ட இன்ஸ்பெக்டர் நெருக்கடியைச் சந்திக்கின்றார். எனினும், சரவணமுத்துவின் வறுமைநிலை, அவரின் குழந்தைகள் என்பவற்றையும் தன் ஓய்வுகாலம், பிள்ளைகள் இல்லாத நிலை என்பவற்றையும் எண்ணிச் சரவணமுத்துவிற்காக நேர்மனப்பாங்குடன் முடிவெடுப்பதனூடாக மனிதாபிமானத்தின் உச்சம் வலியுறுத்தப்படுகின்றது.

03. சரவணமுத்துவின் வறுமைநிலை எவ்வாறு சித்திரிக்கப்படுகின்றது?

- குழந்தைகளின் உடையும், உடையின்மையும் அவர்களின் மெலிந்த தோற்றமும்.
- இன்ஸ்பெக்டர் இருப்பதற்காக கிழிந்த பாயை எடுத்துப் போட்டமை.
- கூடத்தில் ஒரு கிழிந்த துணியில் ஒரு குழந்தை படுத்திருந்தமை.
- நீங்கள் காப்பாற்றினாற்றான் உண்டு இல்லாவிட்டால் பிழைப்பே இதோடு முடிந்து விடும் என்று சரவணமுத்து கூறுகின்றமை.
- சவுக்குப் பயிரிடுவதற்காகக் கொடுத்த பணத்தைக் குடும்ப வறுமை காரணமாகச் சொந்தச் செலவிற்குப் பயன்படுத்தியமை என்பவற்றின் மூலம் சரவணமுத்துவின் வறுமைநிலை சித்திரிக்கப்படுகின்றது.

04. மனிதனின் எண்ணங்களையும் நடைத்தைகளையும் விவரிப்பதற்கு விலங்குகளும் தாவரங்களும் கையாளப்பட்டிருக்கும் திறத்தை விளக்குக.

- நாரத்தை மரத்தின் கிளையிலிருந்த 'தேன் சிட்டுக்கூடு' சரவணமுத்துவின் சிந்தனையைத் தூண்டுவதாக காட்டப்பட்டுள்ளது.

- சிட்டுக்குருவிகள் தமது குஞ்சுகளுக்காக உணவு தேடுவதும் ஊட்டுவதும் மாறிமாறிப் பல தடவைகள் நடந்தமையைப் பார்த்த சரவணமுத்து ''குருவிகளாய் இருந்தால் கவலைகள் இல்லாமல் இருக்குமே'' என எண்ணுவது.

- பயிர் செய்யப்பட்ட கொடி ஒன்று மரம் ஒன்றைச் சுற்றிப் படர்ந்திருந்தது. ஆனால், மலைப்பாம்பு சுற்றிக் கொள்வதைப் போன்று சீந்தில் கொடி ஒன்றும் அதைச் சுற்றிக் கொண்டிருந்தது. மனக்குழப்பத்தில் இருந்த சரவணமுத்துவிற்கு ''உலகத்தில் பிழைக்க முயலும் போது சீந்தில் கொடியைப் போல் தரித்திரமும் கூட வந்து கழுத்தை நெறிக்காமல் இருக்காது போல் இருக்கிறது என்ற எண்ணம் மிதந்தெழுந்தது''

- அவநம்பிக்கையுடன் இருந்த சரவணமுத்துவின் எதிரே கொழுகொம்பின் தயவுடன் படர்ந்து கொண்டிருந்த அவரைக்கொடி தென்பட்டதும், அது செயற்கையின் உதவியைக் கொண்டுதான் இயற்கை கூட ஊன்றிக்கொள்ள முடியும் என்ற அலைகளைத் தோற்றுவிக்க ''அப்பீலை நாளைக்கே கொடுப்பதற்கு தயாராகும் நிலைமை.

# கூத்து

## சி. ஆறுமுகம் (நவம்)

**அறிமுகம்** :

மட்டக்களப்பு ஆரையம்பதி என்ற இடத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட நவம் ஆசிரியராகப் பணி புரிந்தவர். நாடகம், பயண இலக்கியம், நகைச்சுவைக் கட்டுரை போன்றவற்றை எழுதுவதில் ஈடுபாடு கொண்டவர். 'கல்கி' 1961 இல் இலங்கை எழுத்தாளர்களுக்கான சிறுகதைப் போட்டியை நடத்திய போது ''நந்தாவதி'' என்ற இவரது சிறுகதை முதற்பரிசைப் பெற்றது.

**மையக்கருத்து** :

கலைகளுடன் தொடர்புடையவனான கலைஞன். மென்மைத்தன்மை மிக்கவன். நுண்ணிய உணர்வின் அடிமையாக காணப்படுபவன். நல்லுணர்ச்சியை வெளிக்காட்டக் கூடியவன். ஆனால், சந்தர்ப்ப சூழ்நிலையால் வன்மைத்தன்மை கொண்டவனாக மாறிவிடுகிறான். குரூர உணர்ச்சிக்குள்ளாகிறான். குரூர உணர்ச்சி துன்பத்தைத்தரும் என்பதனை வலியுறுத்துவதாகக் 'கூத்து' க் கதை அமைகிறது.

**உள்ளடக்கம்** :

சரவணமுத்து, நாகாத்தை இருவரும் மனமொத்த காதலர்கள் நாகாத்தையைத் தகாதமுறையில் அடைய முற்படும் நாகண்டப் போடி சரவணமுத்துவால் கொலை செய்யப்படுகிறான். இறுதியில் அனைவரும் துன்பத்தையே அனுபவிக்கிறார்கள். (உணர்ச்சி வசப்பட்ட நடவடிக்கைகளின் பயன் துன்பமே என்பது கதையூடு வலியுறுத்தப்படுகிறது)

கலைகளுடன் தொடர்புடையவனான கலைஞன் மென்மைத்தன்மை மிக்கவன். நுண்ணிய உணர்வின் அடிமையாகக் காணப்படுபவன் நல்லுணர்ச்சியை வெளிக்காட்டக் கூடியவன். ஆனால், சந்தர்ப்ப சூழ்நிலையால் வன்மைத்தன்மை கொண்டவனாக மாறிவிடுகிறான். குரூர உணர்ச்சிக்குள்ளாகிறான். 'குரூர உணர்ச்சி துன்பத்தையே தரும்' என்பதனை வலியுறுத்துவதாகக் 'கூத்து' க் கதை அமைகிறது. கூத்துக் களரியினூடாக கதை நகர்வதால் 'கூத்து' என்கிற தலைப்புப் பொருத்தமுற அமைகிறது.

- தன் காதலி நாகாத்தையை வயற்காட்டில் சந்தித்து அவளுடன் உரையாடி அவளுடைய அழகில் மயங்கி கிறங்கிப்போன சரவணமுத்துவின் தெம்மாங்குப்பாடலுடன் தொடங்குதல்.
- கூத்துக்களம் நினைவுபடுத்தப்பட்டு சுபத்திரை கல்யாணத்தில் வேடனாக வரும் வில்லத்தனமுடைய நாகாண்டப்போடி பற்றிய விபரிப்பு.
- நாகாத்தை அவலக்குரல் எழுப்புவதும் அதற்கான காரணத்தையும் சித்திரித்தல்.
- உச்சக்கட்டமான உந்துக்களத்தில் அர்ச்சுனன் (சரவணமுத்து) வேடனான (நாகாண்டப் போடிகள்) கொலை செய்வதாகக் கதையை முடித்தல்.

**அரும்பதங்கள் :**

- தலகாணி - தலையணை
- சீரிச்சோ - சீறியதோ
- சும்மாடு - தலைச்சுமையை தாங்க உபயோகிக்கும் துணியால் ஆனது.
- மொக்காடு - முக்காடு
- தண்ணிச்சோறு - பழையசோறு
- தெம்பு - பலம்
- வயற்சுழி - வயல் சேறு
- களரி - கூத்துமேடை
- போடி - நில உடைமையாளன்
- புறக்கி - பொறுக்கி (ஒழுக்கமில்லாதவன்)
- ஒய்யாரம் - அழகு
- நிறகலை - அதிக மது பாவனையால் ஏற்பட்ட நிலை.
- கட்டுப்பெட்டி - பழைமை
- சாலுங்கரி - சாட்சி

**வினாவிடை**

01. கதையில் கையாளப்பட்ட உத்திகள் யாவை?
   - குதூகலமாகக் கதையைத் தொடங்கி, அழகியல் சார்ந்த சித்திரிப்புகள் ஊடாகக் கதையை நகர்த்திச் சென்று, அவலத்தோடு கதை நிறைவுறுகிறது. நாடகபாணியில் கதையை நகர்த்துதல்.
   - களச் சித்திரிப்பு.
     - ♦ வயற்காட்டின் சித்திரிப்பு.
     - ♦ கூத்துக்களரியின் சித்திரிப்பு.
   - கூத்து என்ற தலைப்பின் பொருத்தப்பாடு.
   - நேரடிப் பொருளில் கூத்து என்ற கலைவடிவத்தினூடாகச் ‘சுபத்திரை கல்யாணம்’ விவரிக்கப்படும் அதேவேளை கூத்தாக அமையும் நடைமுறை வாழ்க்கையையும் மறைமுகமாக இணைத்துக் கதை கூறும் உத்தி.
   - கூத்து என்பது நடைமுறையில் கலைவடிவம் என்ற கருத்தைத் தாண்டி அபத்தம், அவலம், அசாதாரணம், ஆகிய கருத்துக்களையும் உடையது. (ஊதிக்கூத்து, ஆரியர் கூத்து, சரியான கூத்துத்தான்) இந்தக் கதையின் முடிவும் கூத்தாக (அவலமாக) முடிவதை மறைமுகமாகக் கூறல். (கதை முடிவில் ஆசிரியர் கூற்று)
   - சித்திரிப்புத்திறன்
     - ♦ நாட்டார் பாடலூடாகக் கதையை ஆரம்பித்தல். (பேச்சுமொழி)
     - ♦ நாகாத்தை வயற்களத்திற்கு வந்து சென்ற காட்சியை நினைப்பது (அழகியல்)
     - ♦ கதை சொல்லியாக வரும் போது தராதரத் தமிழ் நடைப் பிரயோகம்.
     - ♦ உரையாடலில் மட்டக்களப்புப் பேச்சுத் தமிழ்ப் பிரயோகம்.

02. கதையில் ஆசிரியரது இடையீடு வெளிப்படுமாற்றைத் தருக.

- இடையீடு (1)
  - ♦ கதையின் ஆரம்பம் 'தன்னை மறத்தல்' என்பது பெரிய சங்கதிதான். தன்னை மறந்த நிலையில் ஒருவர் செய்கின்ற செயலும் பெரிய சங்கதிதான். (வ.வே.சு. ஐயரின் 'சூசிகை' போல ஆரம்பம்)
    உதாரணம் : மங்கையர்க்கரசியின் காதல்.
- இடையீடு (2)
  - ♦ இறுதிக் கூற்று
    நாகாண்டப் போடி உலக மேடையில்.......................
- மகாபாரதக் கதையில் வரும் கீசகன் வதை போலவே இக்கதையும் அமைந்துள்ளது.

03. 'கூத்து' கதைக்கும் தலைப்பிற்குமிடையிலான பொருத்தப்பாட்டை விளக்குக.

- கதை கூத்துக் கலைஞர்களோடும், கூத்துக் களரியோடும், கூத்தாட்டத்தோடும் சம்பந்தப்பட்ட வகையில் அமைதல்.
- கூத்து மேடையில் கூத்தர்கள் வேறுவேறு நாடகங்களில் வேறுவேறு பாத்திரங்களை ஏற்பார்கள். வேறுவேறு ஒப்பனை செய்வார்கள்.
- வாழ்க்கை எனும் மேடையாலும் மனிதர்கள் தங்கள் ஆசாபாசங்களாலும் அவற்றின் காரணமான நடவடிக்கைகளாலும் வேறுவேறு நிலமைகளுக்கு ஆளாக நேரிடுகிறது. ''நாடகமே உலகு'' என்ற அறிஞர் வாக்கு நிதர்சனமாகிறது.
- இனிமையான வைகறைப்பொழுது.
- வயற்சுழி
- வளர்ந்துவரும் கதிர் பறியா வேளாண்மைப் பயிர் தலையசைத்தல்.
- சற்றுத்தள்ளி பற்றைக்காட்டின் மத்தியில் ஒரு கூட்டம் தென்னைமரங்கள்.
- வயல் நீரில் தத்தித் திரிந்த 'பனையான்' விரால் மீன்களைக் கொத்தித் தின்ன எத்தனிக்கும் கொக்குக் கூட்டம்.
- கூத்துக் களரியின் சித்திரிப்பு
  - ♦ கோவில் வீதியின் மத்தியில் குடைவிரித்து நின்றது கூத்துக்களரி.
  - ♦ புதுமை புலப்படுத்தல்.
    - பழைய காலம் போல் - ''களரி''யைச் சுற்றி, வாழைக்குற்றியில் பந்தம் எரியவில்லை. - டியூப் 'பல்ப்பு'கள் தாம் 'எரிந்து' கொண்டிருந்தன.
  - ♦ கூத்துக் கலை வடிவத்திற்கான வரவேற்பு
    - களரியைச் சுற்றி மணல் தெரியாத அளவிற்கு ரசிக சோடிகள் குழுமியிருந்தனர்.

04. சரவணமுத்து நாகாத்தை ஆகிய இருவருக்குமிடையிலான காதல் உணர்வு வெளிப்படுத்தப்படுமாற்றினை விளக்குக.

- நாகாத்தையின் நினைவில் தன்னை மறந்த உணர்ச்சியோடு சரவணமுத்து பாடியமை. ‘‘வரம்போ தலைகாணி.............’’
- இவ்வுணர்ச்சி வெளிப்பாடு ‘‘இனிமையான வைகறைப் பொழுதாலோ வயிற்றைக் குழுமையாக நிறைத்திருந்த ‘தண்ணீர் சோற்றாலோ, வலுவோடு வேலை செய்ததால் ஏற்பட்ட தெம்பாலோ மட்டும் அவனுக்கு இருந்த உற்சாகம் ஜனிக்கவில்லை.’’ அது நாகாத்தை சற்று நேரத்துக்கு முன்னர்தான் சங்கீதத்தை அவன் செவிகளில் ‘‘பெய்து விட்டு கெண்டைக்கால் வயற்சுழியில் புதையப் புதைய லாவக நடைபோட்டுச் சென்றிருந்தாள் எனக் குறிப்பிடப்படுவது.
- நாகாண்டப் போடி - நாகாத்தை மீது காதல் கொள்ளும் விவகாரத்திற்கு ஒரு முற்றுப்புள்ளி போட வேண்டும் எனும் எண்ணம்.
- நாகாண்டப்போடியின் விவகாரத்தை நினைவுபடுத்தி விரைவில் அதற்கு முடிவு கட்ட வேண்டுமென நாகாத்தை சரவணமுத்துவைக் கேட்டுக்கொள்ளல்.
- வயற்காட்டிலிருந்து திரும்பிவரும் நாகாத்தையின் செயற்பாடுகள்.
    - ♦ சரவணமுத்து பாடிய தெம்மாங்கில் தன் மனதைப் பறிகொடுத்தாள்.
    - ♦ இடையிடையே தன் வாய்க்குள் ‘‘தெம்மாங்கின் அடிகளை முணுமுணுத்தமை’’
- சரவணமுத்து நாகாத்தைக்காக - நாகாண்டப்போடியைக் கூத்துக்களரியைச் சாதகமாக்கிக் கொள்ளுவது.

05. ‘கூத்து’ கதையூடாக அறியவரும் அக்காலக் கூத்தாட்ட நடைமுறைகளை விவரிக்குக.

- ஊரிலுள்ள எல்லோரும் கூத்து நிகழ்வினைப் பார்ப்பதற்காகச் செல்லுதல்.
    - ♦ களரியைச் சுற்றி மணல் தெரியாத அளவுக்கு ரசிக சோடிகள் குழுமியிருந்தமை.
- கூத்துக்களரியை அண்ணாவியரும் அவரது கோஷ்டியாளரும் உறங்காமல் வைத்திருத்தல்.
- கூத்து ஆரம்பிக்கும் நிகழ்வுகள்.
    - ♦ மத்தாப்பு கொழுத்துவது.
    - ♦ சீன வெடி கொழுத்துவது.
    - ♦ கட்டியக்காரன் வரவு முதலில் இடம் பெறுவது.
    - ♦ பாத்திரங்கள் தம்மைத் தாமே அறிமுகம் செய்வது.
- கூத்தாடுபவர்களுக்கு கடதாசி மாலைகளையும், சால்வைகளையும் பரிசாகப் போட்டு மகிழ்தல்.
- கூத்தாடும் போது, நண்பர்கள் அம்பானர் விசேட மதுபானத்தினை ஊற்றிக் கொடுத்துக் கூத்துக் கலைஞர்களை உஷார்ப்படுத்துவது.

06. இச்சிறுகதையில் அணிகள் கையாளப்பட்டிருக்குமாற்றிலுள்ள சிறப்பினை விளக்குக.

- உவமையணி
  - ♦ கவசம்போல் காத்து நின்ற முக்காடு....
    - கொண்டையை மூடிநின்ற முக்காடு. அதனைக் காக்கும் கவசம் போன்றதாக உவமிக்கப்படுதல்.
  - ♦ தளிர் மேனி
    - நாகாத்தையின் உடல் வர்ணனை தளிர் போன்ற மேனி எனப்படுதல்.
- உருவகம்
  - ♦ மனவயல்
    - மனமாகிய வயல் - மனதை வயலுக்கு உருவகித்துள்ளார்.
  - ♦ நெஞ்சுக்களரி
    - நெஞ்சிற்கு களரியை உருவகித்துள்ளார்.
      (களரி - கூத்து அரங்கு)

07. கூத்து சிறுகதையில் இடம்பெறும் பின்வரும் பாத்திரங்களின் குணவியல்புகளை விளக்குக.

(அ) நாகாத்தை
(ஆ) சரவணமுத்து
(இ) நாகாண்டப் போடி

(அ) நாகாத்தை

- சரவணமுத்துவை தன் வாழ்க்கைத் துணையாக்க விரும்புபவள்.
- அவனது அன்பிற்குப் பாத்திரமானவள்.
- நாகாண்டப் போடியின் தகாத நடத்தைகளை வெறுப்பவள்.
- விரும்பத்தகாத நாகாண்டப் போடியை எதிர்க்கும் துணிவுடையவள்.

(ஆ) சரவணமுத்து

- நாகாத்தையை அதிகமாய் நேசிப்பவன்.
- இனிமையாகப் பாடுதல், வயல் வேலையில் ஈடுபட்டு உழைத்தல், கூத்துக் கலையில் வல்லமை ஆகிய பண்புகளை உடையவன்.
- நாகாண்டப்போடி நாகாத்தையை விரும்புவதை அறிந்து அவனை வெறுப்பவன்.
- நாகாண்டப்போடி நாகாத்தையிடம் வரம்பு மீறும்போது அவனைக் கொலை செய்யத்துணிந்தவன்.
- சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துபவன்.

(இ) நாகாண்டப்போடி

- கூத்துக் கலையில் ஈடுபாடுள்ளவன்.
- நாகாத்தையை விரும்புபவன்.
- மதுவில் நாட்டமுடையவன்.

# எனக்கு வயது பதின்மூன்று

**அறிமுகம்** :

ஈழத்தில் தமிழ் பேசும் இந்துக்கள், இஸ்லாமியர், கிறிஸ்தவர், பிரதேச ரீதியாக வேறுபட்ட மலையகத்தகம் என எல்லோரும் தமிழ் இலக்கியத்துக்குப் பணி செய்துள்ளனர். அவ்வகையில், கிழக்கு மாகாண முஸ்லிம்களை கதாபாத்திரமாகவும், கதை நிகழிடமாகவும் கொண்டு 'எனக்கு வயது பதின்மூன்று' எனும் கதையை அ. ஸ. அப்துஸ்ஸமது எழுதினார்.

அ. ஸ. அப்துஸ்ஸமது கிழக்கிலங்கையின் மூத்த படைப்பாளிகளுள் ஒருவர். இவரது சொந்த ஊர் அக்கரைப்பற்று. மாணவப் பருவத்தில் இருந்தே எழுதத் தொடங்கிய இவர் ஒரு சிறுகதைத் தொகுதியையும் மூன்று நாவல்களையும் பல இலக்கிய நூல்களையும் வெளியிட்டுள்ளார். இவரது சிறுகதைத் தொகுதியான 'எனக்கு வயது பதின்மூன்று' இலே இக்கதையும் உள்ளடங்கியுள்ளது. இத்தொகுதி 1977இல் சாகித்திய மண்டலப் பரிசினைப் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

**மையக்கருத்து** :

கிழக்கு மாகாண சமூகக் கட்டமைப்பில் உள்ள 'போடியார்' வீட்டில் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள பதின்மூன்று வயதுச் சிறுமியின் மனோநிலை இக்கதையில் சித்திரிக்கப்பட்டுள்ளது. அதே வயதையொத்த போடியாரின் மகளை ஒப்பிட்டு எல்லா வழிகளிலும் ஒடுக்கப்படுகின்ற சிறுமியான வேலைக்காரியின் துன்பமும், அவள் அவ்வீட்டை விட்டு வெளியேறியவுடன் சொந்தமாக வாழத்துணிவதும் இக்கதையில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

**உள்ளடக்கம்** :

- சிக்கந்தர் போடியாரின் வீட்டு வேலைக்காரியின் மனவோட்டமாக இக்கதை சித்திரிக்கப்பட்டுள்ளது.
- வேலைக்காரியின் மாதாந்தக் காசைப் பெற தாயார் வந்து செல்வதும்; அவ்வாறு வரும் தாயும் பல வேலைகளை ஆற்ற வேண்டிய நிர்ப்பந்தமும்.
- சிக்கந்தர் போடியார் மகள் ஸரீனாவின் விபரமும் அதனூடாக வெளிப்படும் வேலைக்காரியின் மனோநிலையும் தானும் பெரிய பிள்ளையானால் - முஸ்லிம் பெண்ணாக பெரியவளானால் வரும் பண்பாட்டுச் சித்திரிப்பு.
- போடியாரின் ஆண் மகனுக்கும் வேலைக்காரி ஸல்மாவுக்குமான தொடர்புகள்.
- அந்தத் தொடர்புகளின் மன அவசத்தினால் உருவாகும் போடியார் தம்பதிகளின் உரையாடல்.
- எல்லோரும் சமமானவர் என்கிற இஸ்லாமிய கோட்பாடும் வேலைக்காரியின் மனோநிலையும்.
- இந்தச் சிந்தனைகளின் விளைவால் ஸல்மா போடியாரின் வீட்டில் இருந்து விலகி நெசவு வேலைக்கு செல்கிறாள்.
- மேற்படி, விபரிப்புகளினூடாக 'பதின்மூன்று' வயதை எட்டிய ஸல்மா, வேலைக்காரி என்னும் நிலையில் இருந்து விடுபட்டு ஒரு குமரியாக நெசவு வேலைக்கு செல்வதும் - ஏழையானாலும் தான் தன்மானத்தோடு வாழ வேண்டும் என்ற எதிர்ப்பார்ப்போடு - எதிர்காலத்தின் மீது நம்பிக்கையோடு செல்வதும் கதையின் முடிவாகின்றது.

**அரும்பதங்கள் :**

(பேச்சுமொழிச் சொற்கள்)

| | | |
|---|---|---|
| • பெத்தவ | - | பெற்றவள் |
| • ஊடு | - | வீடு |
| • ஆசியா | | |
| • ஸல்மா - ஸம்மா | - | முஸ்லிம் பெண்களின் பெயர்கள் |
| • ஸரீனா | | |
| • பொறந்த | - | பிறந்த |
| • குத்திவிப்பா | - | குற்றி விற்பான் |
| • ஹஜ்ஜுப் பெருநாள் | - | முஸ்லிம்களின் இரு பெருநாட்களில் ஒன்று |
| • அறிஞ்சா | - | அறிந்தால் |
| • பொடவ சீல | - | புடைவை, சேலை |
| • ஸுபஹு | - | முஸ்லிம்களின் காலை நேரத் தொழுகை |
| • தாஹா | | |
| • சிக்கந்தர் | - | முஸ்லிம் ஆண்களின் பெயர்கள் |
| • கணக்காகப் பழகுதல் | - | தேவையான அளவு / அளவோடு பழகுதல் |
| • வக்து | - | வேளை (ஐந்து வேளைத் தொழுகை) |
| • நோன்பு | - | விரதம் |
| • தறாவீஹ் | - | நோன்பு காலத்தில் தொழும் இரவு நேரத்தொழுகை |
| • ஹலால் | - | அனுமதிக்கப்பட்டது / ஆகுமானது |
| • ஹறாம் | - | ஆகாதது / தடுக்கப்பட்டது |
| • பெண்சாதி | - | மனைவி |
| • தேயிலைக்கு தண்ணீ வைத்தல் | - | தேநீர் தயாரிப்பதற்கு நீரைக் கொதிக்க வைத்தல். |

**அறிய வேண்டிய விடயங்கள் :**

- கதை நகர்த்தப்படும் விதம்.
- வேலைக்காரச் சிறுமி பற்றிய சித்திரிப்புக்கள் (உணவு, உடை, படுக்கை)
- சமூக விமர்சனம்.
- சிறுமியின் பாத்திரமும் - ஏனைய பாத்திரங்களின் உறவும்.
- அணிகள், மொழிநடை
- வேலைக்காரி தவிர்ந்த ஏனைய பாத்திரங்களின் குணநலன்.

**வினாக்கள்**

1. கதை சொல்லும் விதம் குறித்துக் கருத்துரைக்குக.
    - வேலைக்காரப் பெண் ஒருத்தியின் மனவோட்டமாக இக்கதை நகர்கின்றது.
    - பணக்கார வீடொன்றில் வேலை செய்யும் பெண் பிள்ளையின் அன்றாடச் செயற்பாடுகளை விபரிப்பதனூடாகக் கதை பின்னப்பட்டுள்ளது. (போடியார்,

போடியாரின் மனைவி, மகன், மகள் ஆகியோருடனான அவளது ஊடாட்டத்தின் மூலம் கதை நகர்த்தப்படுகிறது)

- போடியாரின் பரிவு, போடியார் மனைவியின் சுயநல நடத்தை, மகனின் பாலியல் வன்மம், மகளின் ஆடம்பரம் அந்தச் சிறுமியை பாதிக்கின்ற வகையில் கதை பின்னப்பட்டுள்ளது.
- கதை இலட்சியக்கனவு நிறைவேற்றத்துடன் சுருக்கமாக முடிவடைகிறது.

2. கதையினூடாக சமூக விமர்சனம் முன்வைக்கப்படுமாற்றை விளக்குக.

- 'யார் பெத்தா என்ன? யார் வளர்த்தால் என்ன? இந்தப் பூமிக்கு நாம் வந்திற்றம். கூடவே வயிறென்ற ஒன்றையும் மனம் என்ற இன்னொன்றையும் கொண்டு வந்திற்றம். அதுக்காக ஆடித்தொலைக்க வேண்டியதுதானே....'
- நான் ஏழை வயித்திலை பிறந்தவள், ஸரீனாவின் தகுதிக்கு நான் எப்படி ஈடு கொடுக்க முடியும். ஆண்டவன் தான் எங்களை இப்பிடி வித்தியாசம் வித்தியாசமாகப் படைச்சிற்றானா அல்ல இப்படியான அந்தஸ்து பாகுபாடுகளை நாங்கள் தான் உண்டாக்கிக் கொண்டோமா?
- நான் எவ்வளவு நல்லவளாகவும் அழகியாகவும் இருந்தாலும் நான் ஏழை அவங்க பணக்காரர் நான் தண்ணி, அவங்க எண்ணெய் ஒரு போத்தலுக்க இரண்டு இருந்தாலும் ஒன்று சேரவா போகிறது.
- தின்பதில் குடிப்பதில் கூட நான் ஒரு வேலைக்காரியாகத் தான் நடத்தப்படுகின்றேன். எனக்குச் சோறு தின்ன ஒரு பீங்கான், தேநீர் குடிக்க ஒரு கோப்பை, படுக்க ஒரு தனிப்பாய். அதற்குத் தலையணையே கிடையாது.... வேலைகள் செய்வதெல்லாம் நான் உண்ணும் போதும் குடிக்கும் போதும் மட்டும் நான் இழிந்த சாதியாக எப்படி மாறுகிறேன்.
- முஸ்லிம்களெல்லாம் சமமானவர்கள். சகோதரர்கள் என்று சொல்கிறார்கள் நான் மட்டும் இந்தச் சகோதரர் வரிசையில் சேரவில்லையா?
- என் உம்மா ஐந்து 'வக்தும்' ஒழுங்காத் தொழா விட்டாலும் நோன்பு முப்பதும் பிடிப்பா. தறாவீஹ் தொழப் போவா. ஹறாம் ஹலாலுக்குப் பயந்து நடப்பா. அவ வயித்திலைப் பிறந்து ஸல்மா என்ற பெயரும் வைத்துக் கொண்ட நான் வேலைக்காரியான காரணத்தினால் தானே இழிந்தவளானேன். என் ஆசையின்படி உடுக்க முடியவில்லை. என் எண்ணத்தின்படி நடக்க முடியவில்லை.

03. 'எனக்கு வயது பதின்மூன்று' சிறுகதையில் வேலைக்காரச் சிறுமியைப் போடியார் வீட்டார் இழிவாக நடத்துவது,

(அ) உணவு

(ஆ) உடை

(இ) படுக்கை

(ஈ) உரையாடும் முறை என்பவற்றினூடு புலப்படுமாற்றை விளக்குக.

(அ) உணவு : வேலைக்காரச் சிறுமிக்குத் தேநீர் குடிக்க தனியாக ஒரு கோப்பை வழங்குவதும், உணவு உண்பதற்கு அவளுக்காக ஒரு பீங்கான் ஒதுக்குவதும் படுப்பதற்குத் தனியான பாய், அதற்குத் தலையணை வழங்கப்படாமை போன்றவற்றினூடாகவும் எல்லோரும் சாப்பிட்டபின்

தனக்கான பீங்கானைக் கழுவிச் சோத்தை வாங்கி உண்பதும், எல்லோரும் தேநீர் குடித்த பின் தனது கோப்பையைக் கழுவித் தேநீர் வாங்கிக் குடிப்பதும் அவளை போடியார் வீட்டார் உணவு நடைமுறைகளில் இழிவாக நடத்துவது புலப்படுத்தப்படுகின்றது.

(ஆ) உடை : போடியாரின் பெண்பிள்ளைக்கு வேலைக்காரச் சிறுமியை விட இருவயது அதிகம். அவள் பாய்களிசானும், கௌனும், தாவணியும் அழகாக அணிந்து கொள்வதும், வேறு எங்கேனும் போகும் போது மடிப்புக் குலையாத கட்டைப்பாவாடையும், சேட்டும் போட்டுக் கொள்வதும், வேலைக்காரச் சிறுமிக்குக் கூப்பன் கடையில் சீத்தை வாங்கி நீட்டப்பாவாடையும் சட்டையும் தைச்சுக் கொடுப்பதும், அவள் தன் மார்பை மூடிக்கொண்டு கூச்சமில்லாமல் திரிவதற்காக மேலாக்காவது வேண்டித்தருமாறு கேட்டபோது போடியார் பெண்சாதி மறுப்பதும் வேலைக்காரச் சிறுமி உடை விடயத்தில் இழிவாக நடத்தப்படுவதை புலப்படுத்துகின்றன.

(இ) படுக்கை: படுப்பதற்குப் பாய்வழங்குவதும், அதற்கு தலையணை வழங்கப்படாமை.

(ஈ) உரையாடும் முறை:

வேலைக்காரச் சிறுமி மேலாக்காவது வேண்டித்தருமாறு கேட்ட போது, போடியார் மனைவி ‘‘இப்ப பொடவ சீல விக்கிற வெலக்கி இதெல்லாம் கட்டுமாடி’’ எனக் கேட்டது.

போடியாரின் மூத்த மகனுடன் கதைப்பது பற்றியோ, அவருக்கு வேலை செய்வது பற்றியோ பிடிக்காத போடியாரின் மனைவி கண்டிப்பது. ‘‘வளர்ந்த ஆண் பிள்ளையோட கணக்காப் படிக்கணும்டி’’ இவ்வாறான உரையாடல்களினூடாகச் சிறுமி இழிவாக நடத்தப்படுவது புலப்படுகின்றது.

04. (அ) ‘எனக்கு வயது பதின்மூன்று’ சிறுகதை மூலம் ஆசிரியர் கூற முற்படுவது யாது?

வறுமை காரணமாகப் பெண் பிள்ளைகள் பணக்கார வீடுகளில் வேலைக்கமர்த்தப்படும் போது அவர்கள் எதிர்கொள்ளும் பல்வேறுபட்ட பிரச்சினைகளையும், அவர்கள் வெறுமனே வேலை செய்யும் இயந்திரங்கள் அல்ல அவர்களுக்கும் மனம் உண்டு, எண்ணிறைந்த இலட்சியங்கள், ஆசைகள் கனவுகள் உண்டு என்பதனையும் நிறைவான வாழ்வு வாழ்வதற்காக எதிர் நீச்சல் அடிக்கத் துணிய வேண்டும் என்பதையும் இச்சிறுகதை ஆசிரியர் கூற முற்படுகின்றார்.

(ஆ) இச்சிறுகதையில் வரும் வேலைக்காரச் சிறுமிக்கும் ஏனைய பாத்திரங்களுக்குமிடையிலான ஊடாட்டம் எத்தகையது?

- போடியார்:
  - ♦ பரிவு மிக்க ஊடாட்டம்.
  - ♦ போடியாரின் மனைவி, ‘‘வேற சின்னப்பிள்ளை ஒண்டு பாப்பம்’’ என்ற போது, இவளைப் போல பழகின பிள்ளையெண்டு இலேசில் கிடைக்குமா என்பதும்
  - ♦ வேலைக்காரச் சிறுமி வீட்டை விட்டுப் போகும் போது போடியார் நூறு ரூபா கொடுப்பது.

- போடியார் மனைவி:
    - ♦ சுயநல ஊடாட்டம்.
    - ♦ உணவு வழங்குவதில், தேநீர் கொடுப்பதில் பாகுபாடு காட்டுதல்.
    - ♦ உடை வாங்குவதில் தனது பிள்ளைகளுக்கும் - அவளுக்கும் வேறுபாடு காட்டுதல்.
    - ♦ பாய்க்கு தலையணை வழங்காமை.
    - ♦ அவள் செய்கின்ற வேலைக்கேற்ற ஊதியம் வழங்காமை.
- போடியார் மகன்:
    - ♦ பாலியல் வன்மம்.
    - ♦ கையில பிடித்து இழுத்துக் கன்னத்தில் அடித்தமை.
    - ♦ தனக்கான வேலைகள் எல்லாவற்றையும் சிறுமியைக் கொண்டே செய்விப்பது.
- போடியார் மகள்:
    - ♦ ஆடம்பரம்
    - ♦ கிட்டத்தட்ட தன்னையொத்த வயதினளாகச் சிறுமி காணப்பட்ட போதும், அவளுடன் நெருங்கிப் பழகாமை.
    - ♦ தான் ஆடம்பரமான ஆடை அணிந்திருந்தும், சிறுமிக்கு அவ்வாறான ஆடை அணிவதில் விருப்பம் இருக்குமே என்பதை உணர்ந்து செயற்படாமை.

இவ்வாறாக வேலைக்காரிக்கும் அக்குடும்ப உறுப்பினர்களுக்குமிடையிலான ஊடாட்டம் சிறுமியின் இழிநிலைப்படுத்துவதாகவே அமைந்துள்ளது.

(இ) அத்தகைய ஊடாட்டத்தைச் சித்திரிப்பதன் மூலம் ஆசிரியர் எவற்றை உணர்த்த முற்படுகின்றார்.

- ஏழை - பணக்காரர் உறவு நிலையின் இடைவெளி.
    - ♦ ‘‘எவ்வளவு நல்லவளாகவும் அழகியாகவும் இருந்தாலும் நான் ஏழை. அவங்க பணக்காரர். நான் தண்ணி அவங்க எண்ணெய் ஒரு போத்தலுக்க இரண்டும் இருந்தாலும் ஒன்று சேரவா போகிறது?’’ என்ற சிறுமியின் நினைப்பு.
    - ♦ சிறுமியின் உணவு, உடை, படுக்கை, உரையாடல் நடைமுறைகளில் காட்டப்படும் பாகுபாடு.
    - ♦ வேலைக்கேற்ற கூலி வழங்காத பணக்கார வீட்டு எஜமானிய வாழ்க்கை முறையியல்.
    - ♦ போடியாரின் மனைவி கூடுதலான வேலைகளை வாங்கி விட்டு மிகக் குறைந்த பணத்தை சிறுமிக்கு வழங்குவது.
    - ♦ வேலைக்கமர்த்தப்படும் பெண்கள் எதிர்நோக்கும் பாலியல் துன்புறுத்தல்கள்.
      (போடியாரின் மகனின் செய்கை - கன்னத்தில் செல்லமாக அடித்தமை)

- ♦ பிரச்சினைகளுக்கு அஞ்சி ஓடாமல் பிரச்சினைகளை எதிர் கொள்ளும் மனத்தைரியத்தைப் பெறுதல்.
- ♦ சிறுமியின் மௌனப் போராட்டம் அவள் வீட்டை விட்டு வெளியேறுதவனுடன் முடிவடைகின்றது.

05. ஸல்மா என்னும் பாத்திரத்தின் மனவுணர்வுகள் வெளிப்படும் விதத்தை விபரிக்குக.

- போடியாரின் வீட்டையே உலகமாகக் கருதுவது.
- வாழ்க்கை மீதான விரக்தியும் சலிப்பும் கொண்டிருத்தல்.
- தாய் - மகள் உறவு பற்றி அவள் தனக்குள் எண்ணுவது.
- தாய்ப்பாசத்தை எண்ணி வருந்துவது.
- குடும்ப வறுமையை நினைத்துத் துன்புறுவது, தன்னைத்தான் நொந்து கொள்வது.
- தன் விதியை நோவது; கோபமுறுவது.
- போடியாரின் மகள் ஸரீனாவுக்கு வாய்த்த மகிழ்ச்சியான வாழ்வை எண்ணி மகிழ்வது.
- அழகுணர்வு கொண்டிருப்பது.
- வெட்க உணர்வை வெளிப்படுத்துவது.
- ஆண்டவன் ஏழை, பணக்காரர் என வித்தியாசமாகப் படைத்ததாக ஐயுறுவது.
- மனிதன் உருவாக்கிய அந்தஸ்து பாகுபாடுகளை நினைத்துக் கோபமுறுவது.
- தனது வேலையைச் செம்மையாகச் செய்து முடிக்க வேண்டுமென்று அக்கறை கொள்வது.
- தாஹா மீது பாசம் கொள்வது.
- அன்புக்கும் ஆதரவுக்கும் ஏங்குவது.
- தான் விடுதலை பெற்றுச் சுதந்திரமாக வாழ விரும்புவது.

06. கையாளப்பட்டுள்ள மொழிநடையின் பொருத்தப்பாட்டை விளக்குக.

- கதையின் கருத்து வெளிப்பாட்டிற்குப் பொருத்தமான இலகுவான மொழிநடைப் பிரயோகம்.
- பேச்சு மொழிச் சொற்களின் பிரயோகம்.

  (உ-ம்): பெத்தவ, கெடக்கு, அவிச்சிக்காய வையேன், வளர்த்தா, அவவுக்கு
- பிரதேசவழக்குச் சொற்கள் கையாளப்பட்டுள்ளன.

  (உ-ம்) : மரைக்கால், உம்மா

வேலைக்கமர்த்தப்படும் முஸ்லிம் பெண்களின் வேலைத்தளப் பிரச்சினைகளை மையமாகக் கொண்டு எழுதப்பட்ட இச்சிறுகதை போடியார் வீட்டுப் பாத்திரங்களின் ஊடாட்டங்களினூடாகவும் சிறுமியின் மௌனப்போராட்டத்தினூடாகவும் வெளிப்படுத்தப்படுகின்றது. உரையாடல் வடிவங்களை இடையிடையே கொண்டமைத்து முஸ்லிம் பிரதேச வழக்குச் சொற்களையும் கையாளப்பட்டுள்ளமை கதைக்கருத்து வெளிப்பாட்டிற்குரிய பொருத்தப்பாடாகவே உள்ளது.

07. போடியாரின் மனைவி எனும் பாத்திரம் கதையோட்டத்தில் பெறும் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுக.

- கதையில் பிரதான பாத்திரமாக வரும் ஸல்மா என்ற சிறுமியின் வறுமை, அவலம்,

தனிமை, ஏக்கம் என்பவற்றை வெளிக்காட்டும் இக்கதையில் போடியாரின் மனைவி கதையோட்டத்தில் முக்கியமாகிறாள்.

- ஸல்மாவின் தாயிடமும் வேலைவாங்குவதன் மூலம் அவளது அதிகாரம் வெளிப்படுதல்.
- தனது மகள் ஸரீனாவுக்கு அதிக வசதி வாய்ப்புக்களை வழங்குவதோடு ஸல்மாவை மாற்றான் மனப்பாங்கோடு பார்ப்பதன் மூலம் ஸல்மாவின் துயரத்தை மேலும் வெளிக்காட்டுவது.
- ஸல்மா மீது ஓரவஞ்சனை காட்டுவதன் மூலம் ஒப்பீட்டு நோக்க - கதையோட்டத்தை செழுமைப் படுத்துவது.
- வீட்டுக்கு வருபவர்களிடம் ஸல்மாவைப் பற்றி புழுகுவதன் மூலம் அவளிடம் வேலை வாங்குவது.
- ஸல்மா மீது சந்தேகம் கொள்வதன் மூலமும் - தனது மகன் தாஹா மீது அக்கறை காட்டுவதன் மூலமும் வேறுபாட்டை உணர்த்துவது.
- கதையில் ஏற்றத்தாழ்வு, பணக்காரர் - ஏழை என வேறுபாட்டை அழுத்தமாக வெளிப்படுத்தும் பாத்திரமாகத் தொழிற்படுவது.

08. போடியாரின் குணவியல்புகள் யாவை?

- குறைந்த சம்பளத்தில் ஸல்மாவிடம் நிறைய வேலை வாங்க எண்ணுவது.
- பிள்ளையின் பகட்டான வாழ்வை அங்கீகரித்தல்.
- மனைவியின் செயல்களை ஏற்றுக்கொள்வது.
- மகிழ்ச்சியாக வாழ விரும்புவது.
- ஏழை, பணக்காரர் பேதங்களைக் கடைப்பிடித்தல்.
- ஸல்மாவுக்கு வெறும் ரூபாய் 100ஐ அன்பளிப்பாகக் கொடுப்பதன் மூலம் கஞ்சத்தனத்தை வெளிப்படுத்துவது.

09. 'ஆசியா' என்ற பாத்திரம் மூலம் வறுமை சித்திரிக்கப்படுமாற்றைத் துலக்குக.

- தனது மகள் ஸல்மாவை சிக்கந்தர் போடியார் வீட்டில் வேலைக்கு அமர்த்துவது.
- ஏனைய பிள்ளைகளையும் வேறு வேறு வீடுகளில் தானம் செய்துள்ளமை.
- பொருளாதார ரீதியாக ஆதரவற்ற நிலை.
- போடியார் வீட்டுக்குச் சம்பளம் வாங்க வரும் தினங்களில் தானும் அங்கு வேலை செய்வது.
- மூத்த மகள் பருவமடைந்தும் இன்னும் திருமணம் முடித்துக் கொடுக்காமை.
- நெல்குற்றி விற்பது போன்ற செயல்கள் மூலம் வறுமை சித்திரிக்கப்படுகிறது.

10. 'ஸல்மா' என்ற பாத்திரத்தின் மூலம் வறுமை எடுத்துக்காட்டப்படுமாற்றை விளக்குக.

- போடியாரின் வீடே உலகமென்று ஐந்து வருடங்களாக அங்கு வேலைக்காரியாக வாழ்வது.
- தன்னைத்தான் எண்ணி நொந்து கொள்ளும் மனோபாவத்தின் மூலம்.
- தான் பூமியில் பிறந்ததை எண்ணித் துயருறுவது.
- ஸரீனாவுடன் ஒப்பிட்டு தன் ஏழ்மைக்காக வருந்துவது (ஆடை அணிதல், உணவு உண்ணுதல், நாகரிகமாக நடத்தல் போன்ற சம்பவங்கள் ஊடாக................)

- மாடாய் உழைப்பது.
  - ♦ தேயிலைக்குத் தண்ணீர் வைப்பது.
  - ♦ வீடுவாசல் கூட்டுவது.
  - ♦ அரிசி கழுவுவது.
  - ♦ மீன் வெட்டுவது.
  - ♦ மரக்கறி வெட்டுவது போன்ற வேலைகளில் ஈடுபடுவது.
- தாஹாவுடனான புழக்கத்தில் போடியார் மனைவி சந்தேகம் கொள்வதால் ஏற்படும் சங்கடம்.

11. கதையில் வெளிப்படும் வாழ்வியல் அம்சங்களை எடுத்துக்காட்டுக.
- குடும்ப வாழ்வியல் முறை.
- சரீர ஏற்றத்தாழ்வு.
- குடும்பத்தலைவரான போடியாரின் அணுகுமுறை.
- குடும்பத்தலைவியான போடியார் மனைவியின் குணவியல்புகள் - செயற்பாடுகள்.
- ஏழைகள் வறுமை காரணமாக பணக்கார வீடுகளில் வயிற்றுப் பசி போக்க வேலை செய்வது.
- ஏழைக்குமர்கள் திருமணம் முடிக்க இயலாது போவது.
- கைத்தொழிலில் ஈடுபடுவது.

12. ‘ஸல்மா’ என்ற பாத்திர வார்ப்பை மதிப்பிடுக.
- பிரதான பாத்திரமாக அமைவது.
- தானே கதை சொல்லியாக அமைவது.
- கதையின் கருவை வெளிப்படுத்தும் வகையில் கதையோட்டத்தில் மையம் கொள்வது.
- துணைப்பாத்திரங்களை - ஸல்மா பாத்திரத்துடன் கதைப்பின்னலில் இணைப்பது.
- வறுமை, பொறுமை, நாகரிகம், ஏற்றத்தாழ்வு, சமூகப்பிரிவினைகளை எடுத்துக்காட்டுவது.

13. கதாசிரியரின் கதை கூறும் பாங்கினை மதிப்பிடுக.
- பிரதான பாத்திரம் (ஸல்மா) கதை கூறுவதாக கதையோட்டம் அமைவது.
- கதையின் இறுதிப் பகுதி திருப்புமுனையாக வெளிப்படுவது.
- கதையின் இறுதிப் பகுதியில் கதாசிரியரே கதை சொல்லியாக அமைவது.
- இடையிடையே பாத்திரங்களுக்குப் பொருத்தமான பேச்சு மொழியைக் கையாள்வது.
- சொல்லாடல்களினூடாக உணர்வுகளை வெளிக்காட்டுவது.
- எளிமையான சொல்லாடல் பிரயோகத்தைக் கையாள்வது.
- முரண்பட்ட பாத்திரங்களைக் கதையோட்டத்தில் இணைப்பது.
- சமூக கலாசாரப் பண்பாட்டுப் பின்புலத்தைக் கொண்டிருப்பது.
- வாசகரைத் தூண்டக் கூடிய கதைப்பாணியைக் கையாள்வது.

13\. இக்கதையின் முடிவு குறித்துக் கருத்துரைக்குக.

- இக்கதையின் முடிவு மௌனப் புரட்சியாக அமைவது.

- கதையின் திருப்பு முனையாக அமைவது ஸல்மா என்ற பாத்திரத்தின் விடுதலையுணர்வும் சுதந்திரத்தாகமுமேயாகும்.
- சிக்கந்தர் வீட்டு வேலைக்காரியான ஸல்மா 'வீட்டு வேலை' செய்தல் என்ற நிலையிலிருந்து விடுபட்டு நெசவு நிலையத்தில் வேலை பழகச் செய்வது.
- இதன் மூலம் வீட்டு வேலைக்காரியை விடச் சுயதொழிலில் ஈடுபடுவது சிறந்தது என்பது வலியுறுத்தப்படுகிறது.
- வீட்டு வேலைக்காரியை விட தன் தாய் வீட்டில் இன்ப துன்பங்களில் பங்கு கொள்ளும் நிறைவான வாழ்வை வரவேற்பது.
- சுதந்திர உணர்வை, இலக்கிய உணர்வை வலியுறுத்துவது.

# இலக்கிய விமர்சனம்

**அறிமுகம் :**

பேராசிரியர் அ. சீனிவாசராகவன் (23.10.1905 - 05.01.1975) ஆங்கிலப் பேராசிரியர், கவிஞர், பேச்சாளர், ஆய்வாளர், மொழி பெயர்ப்பாளர் எனப் பலதுறைகளிற் பணியாற்றியவர். முதன் முதலிலே தமிழ்க்கவிதைக்கான சாகித்திய அகடமி விருதைப் பெற்றவர். மேல்காற்று, இலக்கிய மலர்கள், புதுமெருகு, ஒரு நூற்றாண்டுத் தமிழ்க்கவிதை முதலிய பல நூல்களை எழுதியுள்ளார்.

**மையக்கருத்து :**
இலக்கிய விமர்சனம் என்றால் என்ன? அதன் முக்கியத்துவம் யாது? அதன் வகைகள் யாவை? முதலான விடயங்கள் பற்றிய விளக்கம்.

**எடுத்துரைப்பு முறை :**
தமிழிலக்கியப் பரிச்சயமுள்ளவர்களுக்குச் சாதாரணமாகத் தெரிந்த நக்கீரன் கதையைக் கூறி, நக்கீரருடைய போக்கில் இலக்கியத்தைப் பார்ப்பதோ அதுபோன்ற பிறவோ அல்ல இலக்கிய விமர்சனம் என்பதன் முன்னுரையைக் கூறி உண்மையான இலக்கிய விமர்சனம் என்றால் என்ன என்பதை விளக்குவதாயும் உண்மையான இலக்கிய விமர்சனத்தின் அவசியத்தை வலியுறுத்துவதாகவும் விமர்சன முறைகளை வகைப்படுத்திக் கூறுவதாகவும் கட்டுரையை அமைத்தல்.

**கவனிக்க வேண்டிய விடயங்கள் :**
- இலக்கிய விமர்சனம் என்று பொதுவாகக் கருதப்படுபவற்றை அவை உண்மையான விமர்சனம் அல்ல என்று விலக்குதல்.
- ‘கொங்கு தேர் வாழ்க்கை’ என்னும் பாட்டில் புலனாகும் காதலன் ஒருவனின் அன்பின் வேகத்தை உணராமல் கூந்தலுக்கு இயற்கை மணம் இல்லை என்று மறுதலிக்கும் நக்கீரனது அணுகுமுறை.
- வண்டு மல்லிகை மலரைச் சங்காக ஊதிற்று என்று புகழேந்தி வர்ணித்ததை சங்காகக் கொண்டு ஊதுவதென்றால் காம்பில் அல்லவோ ஊதவேண்டும் என்று தடையெழுப்புதல்.
- காற்றுகவிகள் ஒரு நூலின் பெருமையைப் பொதுப்படக் கூறுகின்றனவேயல்லாமல் விமர்சனமாகக் கருத்தை முன்வைக்கவில்லை.
- பழைய உரையாசிரியர்கள் இலக்கியத்தின் மொழியில் அதிக கவனம் எடுக்கின்றனரே அல்லாமல் இலக்கியத்தை மறைத்துவிடுகிறார்கள்.

**வினாவிடை**

1. இலக்கிய விமர்சனம் தொடர்பில் தமிழிலக்கண நூல்களை ஆசிரியர் எவ்வாறு இணைத்து நோக்குகிறார்?
    - தமிழிலக்கண ஆசிரியர்களின் கொள்கையில் மூன்று அருமையான அம்சங்கள் உள்ளன.
        1. இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்புவது.
        2. பழையன கழிதலும் புதியன புகுதலும்.
        3. இலக்கிய வழக்கு புற நிகழ்ச்சிகளைப் பொறுத்தவரையில் உலக நடைமுறையினின்றும் மாறுபடுவது பொதுவாகத் தவறாகாது.

- பிற்காலத்தில் இலக்கண விதிகளை ஒட்டி இலக்கியங்கள் தொடர்பான தடை விடுப்பதும் அவற்றுக்கு விடை கொடுப்பதுமே விமர்சனம் என்ற மனப்பாங்கு வளர்ந்தது.
  உ-ம் : புகழேந்தியின் மல்லிகையே வெண்சங்காய் வண்டுத என்ற பாட்டுத் தொடர்பாய் எழுந்தவையும் அதற்கு வழங்கிய விடையும்.
- இலக்கிய வகைகளை நூலின் வெளிப்படையான சில அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு பரணி, உலா, பிள்ளைத் தமிழ் என்று வகைப்படுத்துகின்றோமே அல்லாமல் இலக்கியத்தின் அடிப்படைப் பண்பைக் கவனத்திற் கொள்வதில்லை.
- இலக்கணம் நூலுக்கு பத்துக் குற்றம் பத்து அழகு முப்பத்திரண்டு உத்தி என்றவாறாகப் பகுத்துப் பேசுகின்றன. ஆனால், அவை இலக்கிய நூல்களுக்கு மாத்திரம் உரியன அல்ல. எனவே, ஏனையவற்றிலிருந்து இலக்கியம் எவ்வாறு வேறுபடுகின்றது என்பதை இலக்கண நூல்கள் கூறவில்லை.
- சாற்றுகவிகள், உரைகள் முதலானவற்றை இலக்கிய விமர்சனத்தோடு தொடர்புறுத்தி நோக்கும் ஆசிரியர் முன்வைக்கும் விடயங்கள் யாவை?
- சாற்றுகவிகள் வெறும் உபகார வார்த்தைகள் என்ற அளவில் அல்லாது அவையும் நுட்பமான சில கருத்துக்களை முன்வைக்கின்றன. எனினும், அவை நூலின் பெருமையைப் பொதுப்படக் கூறுகின்றனவே அல்லாமல் இலக்கிய விமர்சனமாக அமைவதில்லை.
- சாற்றுகவிகள் இலக்கியங்கள் சிறந்தன என்று பாராட்டுகின்றன. ஆனால் ஏன், எவ்வாறு சிறந்தன என்று கூறுவதில்லை.
- உரையாசிரியர்கள் சொல்லின் பொருளையும், யாப்பையும் அணிகளையும் பேசிக்கொண்டு இலக்கியத்தை மறந்து விடுகிறார்கள்; இலக்கியத்துக்குக் கருவியான மொழிபற்றிப் பேசுவதோடு நின்று விடுகிறார்கள். தத்துவரீதியில் இலக்கியத்தைப் பற்றி அவர்கள் பேசுவதில்லை. இலக்கிய விசாரத்தை அவர்கள் வெளிப்படையாக, விரிவாக மேற்கொள்ளவில்லை.

02. இலக்கிய விமர்சனம் என்றால் என்ன? அது எத்தகையாதாக இருக்க வேண்டும்?

- இலக்கிய விமர்சனம் என்பது ஒரு கலை.
- இலக்கியம் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் இலக்கிய விமர்சனம்.
- இலக்கிய வளர்ச்சிக்கு முக்கியமான சாதனமாக இலக்கிய விமர்சனம் அமைகிறது.
- உண்மையும் தீரமும் உறுதியும் உடையதாக இலக்கிய விமர்சனம் அமைதல் வேண்டும்.
- இலக்கிய விமர்சனமானது இலக்கிய அனுபவம் எவ்வாறு ஏற்பட்டது என்பதைத் தெளிந்து சஹ்ருதயன் உள்ளத்தில் இந்த அனுபவம் தான் ஏற்படும் என்பதற்கும் அவர்கள் இலக்கிய தத்துவ உணர்வோடு தர்க்க ரீதியாக மற்ற இலக்கியங்களோடு தாங்கள் விமர்சனம் செய்யும் இலக்கியத்தையும் ஒப்பிட்டுக் காரணம் காட்ட வேண்டும்.

03. ஆசிரியர் இலக்கிய விமர்சனத்தை வகைப்படுத்தி விளக்குமாற்றினைத் தெளிவுறுத்துக.

- நான்கு வகையான இலக்கிய விமர்சன முறைகளை முன்வைக்கிறார்.
  1. மொழியின் பண்பைப் பற்றிய ஆராய்ச்சியை அடிப்படையாகக் கொண்டு செய்யும் இலக்கிய விமர்சனமே தத்துவரீதியான இலக்கிய விமர்சனம்.

2. இலக்கியத்தின் வரலாற்றுத் தொடர்ச்சியைச் சரியான முறையில் இனங்கண்டு கூறும் திறனாய்வு சரித்திர ரீதியான இலக்கிய விமர்சனம்.

3. இலக்கிய ஆசிரியனுக்கும் அவன் வாழும் சமுதாயத்துக்கும் அவனோடு தொடர்புபட்ட மற்றவர்களுக்கும் உள்ள உறவு அவருடைய வாழ்க்கை வரலாறு என்பவற்றை அறிந்து அந்த அறிவைப் பயன்படுத்தி இலக்கியத்தை விமர்சனம் செய்வது வாழ்க்கைச் சரித ரீதியிலமைந்த இலக்கிய விமர்சனம்.

4. ஒரு புலவனுக்கும் இன்னொரு புலவனுக்கும் உள்ள இலக்கியப் பண்பைப் பொறுத்தவரையில் என்ன ஒற்றுமை வேற்றுமைகள் என்று ஆராய்வது ஒப்புமை ரீதியான இலக்கிய விமர்சனம்.

04. இலக்கிய விமர்சனம் என்றால் என்ன? அது எவ்வாறானதாக இருக்க வேண்டும்?

- இலக்கிய விமர்சனம் என்பது கலை; இலக்கியம் எவ்வளவு முக்கியமானதோ அவ்வளவு முக்கியமானது விமர்சனம்; இலக்கிய வளர்ச்சிக்கு அது இன்றியமையாதது.
- இலக்கியப் பொருள்களின் தன்மையை மேல் நாட்டில் அரிஸ்டோட்டில் காலத்திலிருந்து இன்று வரை ஆராய்ந்தது போல் ஆராயவேண்டும்.
- தனித்தனி இலக்கிய வடிவங்கள் பற்றிய ஆராய்ச்சி போக, இலக்கியங்கள் யாவுக்கும் பொதுவான இலக்கியத்துவம் ஒன்றைச் சிருஷ்டிக்க வேண்டும்.
- இலக்கிய அனுபவத்தை ஆராய்ந்து அது எவ்வாறு ஏற்பட்டது என்பதைத் தெளிந்து சஹ்ருதயன் உள்ளத்தில் இந்த அனுபவந்தான் ஏற்படும் என்பதற்கு அவர்கள் இலக்கிய தத்துவ உணர்வோடு தர்க்கரீதியாக மற்ற இலக்கியங்களோடு தாங்கள் விமர்சனஞ் செய்யும் இலக்கியத்தையும் ஒப்பிட்டுக் காரணம் காட்ட வேண்டும்.
- இலக்கியத்தின் பெருமையை உணர்வதற்கும் இலக்கியத்தை அனுபவிப்பதற்கும் விமர்சனம் வழிகாட்ட வேண்டும்.
- இலக்கியத்தில் உள்ள அனுபவத்தைத் தெளிவாக்கி அது எவ்வாறு சொல்லிலே தேங்குகிறது என்பதைக் காட்டி, இந்த அனுபவம் சொல்லிலே தேங்கும் போது ஏன் எவ்வாறு கலையாகிறது என்பதைத் தத்துவ ரீதியில் ஆராய்ந்து, கலானுபவத்தின் எல்லை நிலமான ஆனந்தத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டும்.

05. பேராசிரியர் அ. சீனிவாசராகவனின் ‘இலக்கிய விமர்சனம்’ என்ற கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு மேல்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

அ) இலக்கிய விமர்சனம் பற்றி விவரிப்பதற்கு ஆசிரியர் நக்கீரர் கதையை எவ்வாறு உடன்பாடாகவும் நேர்மறையாகவும் கையாள்கிறார்?

ஆ) இலக்கிய விமர்சனம் தொடர்பில் தமிழிலக்கண நூல்களை ஆசிரியர் எவ்வாறு இணைத்து நோக்குகிறார்?

இ) சாற்றுகவிகள், உரைகள் முதலானவற்றை இலக்கிய விமர்சனத்தோடு தொடர்புறுத்தி நோக்கும் ஆசிரியர் முன்வைக்கும் விடயங்கள் யாவை?

ஈ) ஆசிரியர் இலக்கிய விமர்சனம் என்றால் என்ன என்பதை விளக்குமாற்றினையும் இலக்கிய விமர்சனத்தை வகைப்படுத்தி விளக்குமாற்றினைத் தெளிவுறுத்துக.

06. நக்கீரரின் விமர்சனம் பற்றி இக்கட்டுரையாசிரியரின் நிலைப்பாடு யாது?

- உடன்பாடான நிலைப்பாடு :
    - ♦ இலக்கிய வளர்ச்சிக்கு விமர்சனம் அத்தியவசியமானது. நக்கீரர் ஏதோ வகையில் இலக்கியத்தை விமர்சிக்க முற்படுகிறார். ஆகையால், நக்கீரர்கள் வேண்டும்.

- நேர்மறையான நிலைப்பாடு :
    - ♦ 'கொங்குதேர் வாழ்க்கை.....' என்று தொடங்கும் பாட்டில் காதலன் வண்டிடம் கேட்கும் கேள்வியில் அவனது அன்பின் வேகமே வெளிவந்தது.
    - ♦ அவனுக்கு இயற்கை மணமா செயற்கைமணமா என்ற ஆராய்ச்சி நோக்கம் இல்லை.
    - ♦ ஆனால், நக்கீரர் கூந்தலுக்கு இயற்கை மணம் இல்லை என்று பாட்டை குறை கூறினார்.
    - ♦ எனவே, நக்கீரர் ஆழ்ந்திருக்கும் கவியுள்ளம் காணவில்லை.
    - ♦ இலக்கியம் எதைப்பற்றிப் பேசினாலும் உண்மையில் அது பேசுவது மனித அனுபவத்தையே
    - ♦ காட்சிப் பொருளைக் காட்சிப் பொருளாக அல்லாமல் கருத்தை எழுப்பும் கருவியாகவே இலக்கியம் பேசும்.
    - ♦ அந்த உண்மையை நக்கீரர் உணரவில்லை.
    - ♦ ஆகையால், நக்கீரரது விமர்சனம் உண்மையான இலக்கிய விமர்சனமாகாது.

# சம்பாஷணை ஒரு கலை

**அறிமுகம் :**

வ.ரா. எனப்படும் வ. ராமசாமி அய்யங்கார் (1889 - 1951) தஞ்சாவூரிலுள்ள திருப்பழனம் என்ற ஊரிலே பிறந்தவர். சாதிஒழிப்பு, பெண்கள் முன்னேற்றம், விதவைத்திருமணம், பெண்கல்வி முதலான கருத்துக்களை எடுத்துக் கூறும் நாவல்களை எழுதியுள்ளார். அத்துடன் சிறுகதைகள், கட்டுரைகள் ஆகியவற்றை எழுதியுள்ளதோடு தமிழில் நடைச்சித்திரம் எழுதிய முன்னோடியாகவும் திகழ்ந்தார். பத்திரிகையாசிரியராகப் பணி புரிந்ததோடு மாத்திரமன்றி வர்த்த மித்திரன், மணிக்கொடி ஆகிய பத்திரிகைகள், சஞ்சிகைகள் மூலம் புதிய எழுத்தாளர்களையும் உருவாக்கியவர்.

**மையக்கருத்து :**

சம்பாஷணை உரையாடல் என்பது இருவருக்கு இடையேயான கருத்துப் பரிமாற்றக் கலையாகும். அந்த உரையாடல் கலை அழகு, இனிமை நிறைந்ததாக இருத்தல் வேண்டும்.

**அரும்பதங்கள் :**

- அசட்டாளன் - அசடு, கருத்தில்லாத பேச்சாளன், அறிவிலி
- புளித்த காடி - புளித்தள், நொதித்த மதுசாரத்திரவம்
- பிரதான்யம் - நிறைவேறுதல்
- பதார்த்தம் - சொல்லின் பொருள்

**வினாவிடை**

1. சம்பாஷணை ஒரு கலை என்ற கட்டுரையின் அடிப்படையில் மேல்வரும் வினாக்களுக்கு விடை தருக.

(அ) சம்பாஷணை ஒரு கலை என்ற தலைப்புக்கும் கட்டுரையின் முன்னுரைப்பகுதிக்கும் இடையிலான பொருத்தப்பாட்டை விளக்குக.

- சம்பாஷணை என்பது கலை உணர்வுடன், ரஸபாவத்தை வெளிப்படுத்துவதாக இருக்க வேண்டும். அக்கருத்தைப் புலப்படுத்துவதாக அமைந்த கட்டுரைக்கும் நடைமுறை வாழ்வியலிலிருந்தான ஒரு சம்பவம் முன்னுரைப்பகுதியாக அமைந்துள்ளது. அதாவது, அழுகின்ற போதும் ரஸபாவம் வெளிப்பட வேண்டும் என்னும் கருத்தானது சம்பாஷணை எவ்வாறு கலையுணர்வுடன் வெளிப்பட வேண்டும் என்பதைக் கோடிட்டுக் காட்டுவதாக உள்ளது.

(ஆ) காந்தி சம்பாஷணைக் கலையில் வல்லவர் என்பது கட்டுரை ஆசிரியரால் எவ்வெவ்வகையில் எடுத்துரைக்கப்படுகின்றது?

- காந்தியும், வைஸ்ராய் இர்வினும் விடியற்காலை மூன்று மணி வரைக்கும் பேசிக்கொண்டிருந்தமை.
    - ♦ அர்த்தம், ரஸம், பாவம், விஷயம், நிறைந்த பேச்சு
- காந்தியுடன், வைஸ்ராய் வில்லிங்டன் பேசுவதற்குப் பயப்படுவது.
    - ♦ குதர்க்கம் நிறைந்த பேச்சாளர்களை மகாத்மா தனது சாது வலையில் அகப்படுத்துதல்.

- தெனாலிராமனின் விகடப்பேச்சினைப்போல பேசுபவரை ஏய்க்கப் பார்க்கும் ராஜ தந்திர நிபுணர்கள் கணப்பொழுதில் மகாத்மாவிடம் மாட்டுவது.
    - ♦ தலை மறைவாய் இரு என்பதை தவறாகப் புரிந்த தெனாலிராமன் தலையில் சட்டியைக் கவிழ்ந்து வருதல்.
- காந்தி பேசினாலும் எழுதினாலும் சுவாரஸ்யமிருக்கிறது என்குறிப்பிடுவது.
    - ♦ சொல்லப்போகும் விடயத்தை மனதில் தெளிவுபடுத்திக்கொண்டு பேசுதல்.
- காந்தி சம்பாஷணையின் போது பலாப்பழத்தில் ஈ மொய்ப்பது மாதிரிக் கூட்டம் கூடிக்கொள்வது.

(இ) குதர்க்கம் என்றால் என்ன என்பதை ஆசிரியர் எவ்வகையில் விளக்குகிறார்?

- ஒரு கட்டளைக்கு உண்மையும், இயற்கையுமான அர்த்தம் இருக்க, விகடமாகவும் விபரீதமாகவும் அர்த்தம் கொண்டு பிறரை ஏய்க்கப்பார்ப்பது குதர்க்கம் இதற்குத் தென்னாலிராமனின் சம்பவம் ஒன்றினை உதாரணம் காட்டி விளக்குகின்றார்.
    - ♦ ராயர் சமஸ்தானத்தில், ராயர் தென்னாலிராமனின் சிறிதுகாலம் தலைமறைவாய் இருக்கும்படி கூறியதற்கு ராமன் தலையிலே சட்டியைக் கவிழ்த்து வந்தமை.

(ஈ) நேர் அர்த்தத்தில் பேசவேண்டும் என்ற உண்மை எவ்வாறெல்லாம் வலியுறுத்தப்படுகின்றது?

- தெனாலிராமன் - ராயர் கட்டளையூடாக - சில நாட்களுக்குத் தலைகாட்டக்கூடாது.
- சில பெரியார்கள் தமது போலிப் புலமையைக் காண்பிப்பதற்காகப் பொருத்தமற்ற பெரிய சொற்களைப் பாவித்தல்.
- சர்வாதிகாரத் தோரணையில் பேசுவது.
    - ♦ உனக்குத் தெரியாது.
- அழகான பாஷை இருக்க 'உனக்குப் புரியாது' என்று சொல்வது மதியீனமும் மோசமும் கலந்த 'புளித்தகாடி' போன்றது எனக்குறிப்பிடுவது.
- குறிப்பிட்ட சொல்லின் பொருளை மற்றவர்கள் எளிதில் புரிந்து கொள்ளும் படி பேசவேண்டும்.
- பிறரை அவமானப்படுத்தும்படி பேசக்கூடாது.
    - ♦ நீங்கள் பேசுவது மடத்தனமாயிருக்கே
- எதையும் யோசிக்காமல் 'வெடு வெடு' என்று வார்த்தைகளைக் கொட்டி விடக்கூடாது.
    - ♦ ஸ்பிலாஷ் - என்ற சொல்லினைத் தவறாக மொழி பெயர்த்ததால் வந்த விளைவு.
- சபையில் ஒரு மனிதன் கூட வெட்கப்பட்டுத் தலைகுனியும் படியாகப் பேசுதல் கூடாது.

02. சிறப்பற்ற சம்பாஷணை முறைகள் என்று ஆசிரியர் எவற்றைக் கருதுகிறார் அவற்றை எவ்வாறு விளக்குகிறார்?

- காலம், இடம், ரஸபாவம், பொருள் அனுபவிப்பற்ற உரையாடல்.

- ♦ வினாவிடை, உதாரணங்கள் மூலம் விளக்குதல்.
- குதர்க்கம் நிறைந்ததாக அமைதல்.
    - ♦ காந்தியின் உரையாடல் வழக்கதை எடுத்துக்காட்டி விளக்குதல்.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமில்லாது கடின சொற்களைப் பிரயோகித்து பிறரைப் பயமுறுத்திப் பேசுதல்.
    - ♦ வினாவிடை மூலம் எடுத்துக்காட்டுதல்.
- சர்வாதிகாரத் தோரணையில் பேசுதல்.
    - ♦ சாதாரண உரையாடலை எடுத்துக்காட்டுதல்.
- விடயத்தை விளக்கமின்றியும் தெளிவின்றியும் பேசுதல்.
    - ♦ உதாரணம், அணி மூலம் விளக்குதல்.
- பிறரை அவமானப்படுத்திப் பேசுதல்.
    - ♦ வினாவிடை மூலம் விளக்குதல்.
- வார்த்தைகளை அளவின்றிப் பிரயோகித்தல்.
    - ♦ உதாரணம் மூலம் விளக்குதல்.

03. கட்டுரையாசிரியர் கட்டுரைக் கருத்தை விளக்க கையாண்ட உத்திகளை விளக்குக.

- நேரடியாக வாசகரை உள்ளீர்க்கும் உத்தி
    - ♦ வாசகனை முன்னிறுத்தி உரையாடலாகவே கட்டுரையை ஆரம்பித்தல்.
- பேச்சு வழக்கிலுள்ள நடைமுறை உதாரணங்களை எடுத்துக்காட்டி வாசகரை உள்ளீர்த்தல்.
    - ♦ அவனோட என்னடா பேச்சு!.............. அவள் வெறும் கூச்சல் போடுவாள்.
- சிறப்பான உரையாடல்கள் பற்றியும், தவறான புரிதல் பற்றியும் உதாரணந்தருதல்.
    - ♦ காந்தியின் உரையாடல் பற்றிய சிறப்பைப் பலபட விபரித்தல்.
- உரையாடலை ஒரு கலையாக நிகழ்த்துவது பற்றியும் அவ்வாறு அமையாத விடத்து அதன் விபரீதத்தையும் பட்டியலிடல்.
- அணிகளைப் பயன்படுத்தியமை - உவமை
    - ♦ காந்தி சம்பாஷணையில் பேசும் போது பலாப்பழத்தில் ஈ மொய்ப்பது மாதிரிக் கூடிக்கொள்ளுவார்கள்.
    - ♦ புளித்தகாடியை ஒப்பிட்டுக்காட்டுதல் - (விடய விளக்கமின்றிப் பேசுதல்)
- நூற்கருத்துக்களை எடுத்துக்காட்டுதல்.
    - ♦ பைபிள் கருத்து
- வினாக்கள் மூலம் சிந்திக்கத் தூண்டுதல்
    - ♦ இந்தக் கட்டளையைத் தெனாலிராமன் எப்படி நிறைவேற்றினான் தெரியுமா?
    - ♦ ‘மடையன்’ என்ற நற்சாட்சிப் பத்திரம் கொடுப்பதற்கு, மற்றவன் சர்வகலாசாலையா?
- வட சொற்களைப் பொருத்தமாகக் கையாளுதல்.
    - ♦ சம்பாஷணை, பதார்த்தம், ரஸமாயிருக்கும், ஷணப்பொழுது, பாஷை
- வரலாற்றுச் சம்பவங்களை உதாரணம் காட்டுதல்.
    - ♦ காந்தி - இர்வின் ஒப்பந்தம்
- கவிஞர், அறிஞர்களின் கருத்துக்களை எடுத்தாளல்.
    - ♦ பாரதியார், லெனின் கருத்துக்கள்.

# இலங்கையாற்றுப்படை

**அறிமுகம் :**

சு. நடேசபிள்ளை (இலக்கிய கலாநிதி) 1895 - 1965 சுன்னாகத்தை சேர்ந்த மருதனார் மடத்தில் வசித்தவர். சேர். பொன். இராமநாதனின் மருகர். அவரால் தாபிக்கப்பட்ட யாழ். பரமேஸ்வராக் கல்லூரி ஆசிரியராகவும் அவரால் நிறுவப்பட்ட கல்வி நிலையங்களுக்கு மேற்பார்வையாளராகவும் விளங்கினார். இலங்கைப் பாராளுமன்றத்தில் தபால் தந்தி வானொலி அமைச்சராகவும் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் உயர்சபை (Council) அங்கத்தினராகவும் திகழ்ந்தார். ஆராய்ச்சிக் கட்டுரைகள் சில எழுதியுள்ளார். கவித்துவமும் வாய்ந்தவர். சகுந்தலை வெண்பா என்பது இவரால் இயற்றப்பட்ட சிறு காவியம் ஆகும்.

இராமாயணத்தில் குறிப்பிடப்படும் இலங்கை என்பது உண்மையில் இலங்கை நாட்டைக் குறிக்கிறது; அல்ல வேறு ஒரு இடத்தைக் குறிக்கின்றது என்ற கருத்து வேறுபாட்டுக்கு முற்றுப்புள்ளி வைப்பதாக இக்கட்டுரையை ஆசிரியர் எழுதியுள்ளார். இராமாயணத்தில் குறிப்பிடப்படும் இலங்கை, நமது இலங்கை நாடே என்பதைத் தர்க்க ரீதியாகச் சான்றாதாரங்களை எடுத்துக்காட்டி நிறுவியிருக்கின்றார்.

**மையக்கருத்து :**

இராமாயணத்திற் குறிப்பிடப்படும் இலங்கை வேறு எந்த இடத்தையும் அல்லாது இன்றைய இலங்கை நாட்டையே குறிக்கிறது.

**எடுத்துரைக்கப்படும் விதம் :**

- வெளிநாட்டவர் குறிப்புகள்.
  ஜக்கோபி, பார்ஜிட்டர் முதலிய பிற நாட்டறிஞர் கருத்துக்களை ஆதாரமாகக் கொள்ளுதல்.
- இலக்கியச்சான்றுகள்.
  மகாவம்சம் வான்மீகி இராமாயணம், கம்பராமாயணம், அகநானூறு, சிலப்பதிகாரம், முதலியவற்றின் இலக்கியக்கருத்துக்களை மேற்கோள் காட்டுதல்.
- தொல்லியற் சான்று காட்டுதல்.
  வீரபாண்டியன் சாசனம்
- இலங்கையில் உள்ள வேறு இடப்பெயர்களை இராமாயணத்தோடு தொடர்புபடுத்தி ஆதாரங்காட்டுதல்.
  (ஹக்கல, சீதாதலாவ, பகலுகம, வெலிமடை, துரும்வெலா, இராவண எல்லா, அரிஷ்ட பர்வதம்)
- சேது என்ற மணற்திட்டை இராமர் அணை என்று கூறி நிறுவுதல்.

**அரும்பதங்கள் :**

- அணித்தாயுள்ள - அருகேயுள்ள
- பர்வதம் - மலை
- இலச்சினை - அடையாளம்
- ஐதீகம் - பழ மரபுக்கதை
- மருட்கை - மயக்கம்
- பொற் கபாடம் - பொன்னாலான கதவு.
- தேஜஸ் - ஒளி

- பூர்விகம் - தொன்மை
- அதிசயோத்தி அலங்காரம் - உயர்வு நவிற்சி அணி

**வினாவிடை**

1. இராமாயணக்கதை தொடர்பாக மேலைத்தேயத்தவர் முன்வைக்கும் வியாக்கியானங்கள் எவை?
    - ஜேர்மன் பாஷையில் ஓர் ஆராய்ச்சி நூல் எழுதிய ஜக்கோபி (Jakobi)
        - ♦ சீதை என்ற சொல் உழவு சால் எனப்பொருள்படும். எனவே, இராமாயணம் உழவுத் தொழிலை உருவகப்படுத்துவதற்கு எழுந்த காவியம் எனக் கூறுகின்றார்.
    - பார்ஜிப்டர்
        - ♦ இராமாயணத்திற் கூறப்பட்ட செய்திகளில் ஓரளவு உண்மையுண்டென்ற கொள்கையுடையவர்.
        - ♦ இன்றைய இலங்கை நாடே இராமாயணத்திற் கூறப்பட்ட இலங்கை என்ற கருத்தை வெளிப்படுத்தியவர்.

2. இராமாயணத்திற் கூறப்படும் இலங்கை எது? என்பது பற்றி ஆராய்ச்சியாளர்களிடம் நிலவும் வேறுபட்ட கருத்துக்கள் யாவை?
    - பார்ஜிப்டர் - தென்னிந்தியாவிற்கு அண்மையிலுள்ள இலங்கையே இராமாயணத்திற் கூறப்பட்ட இலங்கை எனக் கருதுகிறார்.
    - ஒருசாரார் - இராமாயணத்திற் கூறப்பட்ட இலங்கை இந்தியாவுக்கப்பால் மிகத் தூரத்திலுள்ள ஜாவா, சுமாத்திரா பிரதேசம் என்பர்.
    - வேறுசிலர் - சர்தார் கீவே என்பவரைப் பின்பற்றி இந்தியாவின் மத்திய பிரதேசத்தில் இலங்கை இருந்ததாகக் கருதுவர்.

3. இவற்றுள் எக்கருத்துக்களை ஆசிரியர் நிராகரிக்கின்றார்? எவ்வாறு நிராகரிக்கின்றார்?
    - இராமாயணத்தில் கூறப்பட்ட இலங்கை இந்தியாவுக்கப்பால் வெகு தூரத்திலுள்ள ஜாவா. சுமாத்திரா பிரதேசம் ஆகும் என்ற கருத்தை நிராகரிக்கிறார்.
        - ♦ வான்மீகி முனிவரது கூற்றுக்களை எடுத்துக்காட்டி நிராகரிக்கின்றமை.
        - ♦ ஜாவா முற்காலத்தில் யவத்வீபம் என வட மொழியில் வழங்கப்பட்டுள்ளது.
        - ♦ வான்மீகி முனிவர் கிஷ்கிந்தா காண்டத்தில் யவத்வீபத்தை இலங்கையினின்று வேறுபட்ட பிரதேசமாக எடுத்துக்காட்டியுள்ளமை.
        - ♦ சுக்ரீவன் கிழக்குத் திசையிலுள்ள நாடுகளைக் கூறுகின்ற பொழுது யவத்வீபத்தையும் தெற்குத் திசையிலுள்ள நாடுகளைக் குறிப்பிடும் பொழுது இலங்கையையும் குறிப்பிட்டுக் கூறுகின்றமை.
          (இலங்கை யவத்வீபம் ஆனதென்று கட்டுரையாசிரியர் நிராகரிக்கின்றார்.)
        - ♦ இலங்கை சமுத்திர மத்தியில் உள்ளதென்று வான்மீகி முனிவர் பன்முறையும் கூறுகின்றமை.
          (சமுத்திரமல்லாத இடத்தில் இலங்கை இருந்ததாகச் சர்தார் கீபே எண்ணுவது தவறு என ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.)

4. இராமாயணத்திற் கூறப்படும் இலங்கை எது என்று ஆசிரியர் கருதுகின்றார்? தனது கருத்தை நிறுவுவதற்கு அவர் முன்வைக்கும் சான்றுகள் எவை?

- இலங்கை என்று இப்பொழுது வழங்கப்படுகின்ற நாடே இராமாயணத்தில் கூறப்பட்ட இலங்கை எனக் கட்டுரையாசிரியர் கருதுகிறார்.
  - ♦ வெளிநாட்டவர் கருத்து
    பார்ஜிப்டர் கருத்து - தென்னிந்தியாவிற்கு அண்மையிலுள்ள இலங்கையே இராமாயணத்திற் கூறப்பட்ட இலங்கையாகும்.
  - ♦ வரலாற்றுச் சான்றுகளை எடுத்துக்காட்டல்.
  - ♦ இலங்கை என்று வழங்கப்படுகின்ற தீவே பலநூற்றாண்டுகளாக இப்பெயருடன் விளங்கி வருகின்றமை.
  - ♦ சிலப்பதிகாரம்
    - கடல் சூழிலங்கைக் கயபாகு...
  - ♦ மகாவம்சம்
    - ஆதிமுதல் அந்தம் வரை இலங்கை என்றே வழங்கப்படுகின்றமை.
    - இலங்கையின் மலைப்பிரதேசத்தில் யக்ஷர்களின் தலைநகராகிய இலங்காபுரி இருக்கின்றமை.
  - ♦ வீரபாண்டியன் பற்றிக் குறிப்பிடும் சாசனம்
    - இலங்கையை வென்ற வீரபாண்டியன் வெற்றிக்கு அடையாளமாக பாண்டிய அரசின் மீன் இலட்சினையை திருகோணமலையிலும் திரிகூட பர்வதத்திலும் பொறித்ததாகச் சாசனம் குறிப்பிடுகின்றது.
  - ♦ இலங்கையின் ஐதிகங்கள், பிரதேச அமைப்பு, இடப்பெயர்களை எடுத்துக்காட்டி விளக்குதல்.
    - ஐதிகங்கள் - சீதாப்பிராட்டி சிறைவாசம் இருந்தமை.
    - ஹக்கல என்ற இடம் இது சீதாதலாவ என்று அழைக்கப்படுகின்றமை.
  - ♦ ஹக்கல என்ற இடத்திற்கு சிறிது தூரத்தில் பாலுகம என்ற இடம் அமைந்துள்ளது.
    பாலுகம - அனுமனால் எரியுண்ட இடமாகக் கருதப்படுகின்றமை.
  - ♦ ஹக்கலயிலிருந்து ஹப்புத்தலை என்ற இடத்திற்குச் செல்கிற வழியில் வெளிமட என்னும் கிராமத்தின் பக்கத்தில் இராமலங்கா என்ற இடம் அமைந்துள்ளது.
  - ♦ இராமலங்கா
    - இராவணன் போர் செய்து மடிந்த இடமாகக் கூறப்படுகின்றமை.
  - ♦ இராமலங்கா என்ற இடத்திற்கருகில் துரும்வெலா பன்சாலா என்ற இடம் அமைந்துள்ளது.
  - ♦ துரும் வெலா பன்சாலா
    - சீதா பிராட்டி தான் கற்புநிலையினில் தவறவில்லை என்று இராமன் முன்னிலையில் சத்தியம் செய்த இடமாகக் குறிப்பிடப்படுகின்றமை.
      (மேஜர் போர்ப்ஸ் 1840 ஆம் ஆண்டில் வெளியிட்ட ''இலங்கையிற் பதினோராண்டுகளில்'' என்ற புத்தகத்தில் இச் செய்தியைக் கூறியுள்ளார்.)
- ஹக்கல என்ற இடத்தினின்று ஹப்புத்தலை என்னும் இடம் வரையிலுள்ள மலைப்பிரதேசக்காட்சியும் இராமாயணத்தில் இலங்கையைப் பற்றிய வர்ணனைகளும் ஒத்திருப்பதால் இப்பகுதிதான் திரிகூட பர்வதமென்று கூறலாம் எனக் கட்டுரையாசிரியர்

குறிப்பிடுகின்றமை.

- இராவணனது தலைநகரமாகிய இலங்காபுரி ஆகாயத்தில் மிதப்பதுபோல் அனுமானிற்குத் தோன்றிற்று என்று இராமாயணம் கூறுகின்றது.
  - ♦ இப்பிரதேசத்தில் உள்ள பண்டாரவெல, தியத்தலாவ என்ற நகரங்கள் ஆகாயத்தில் மிதப்பன போல் காட்சி தருகின்றமை.
  - ♦ பண்டாரவெல, தியத்தலாவ பிரதேசத்தின் தெற்கெல்லையாகிய ஹப்புத்தலையினின்றும் பகற்பொழுதில் தென்சமுத்திரத்தையும், அதன் பக்கத்தில் அம்பாந்தோட்டையையும் உப்பளத்தையும் பார்க்கலாம்.
  - ♦ இராமர் சேனை தென் சமுத்திரக் கரையோரமாக வருவதை இராவணன் தலை நகரிலிருந்து பார்த்தான் என இராமாயணம் கூறுகின்றமை.
  - ♦ இராமருடைய சேனை தென் சமுத்திரக்கரையிலுள்ள டொண்ட்ரா என்ற இடத்திலிருந்து மலைப்பிரதேசத்திலுள்ள அலுத்நுவர என்னும் இடத்தின் வழியாக அணிவகுத்துச் சென்றதாக ஹெக்தார கோறளையைப் பற்றிய சாசனம் கூறுகின்றமை.
  - ♦ விபீஷணனிடமிருந்து உளவறிந்து இராமர் சேனை இவ்வழியாக வந்தமை.
- இலக்கியச் சான்றுகளை எடுத்துக்காட்டி விளக்குதல்.
  - ♦ இலங்கை சமுத்திரமத்தியில் உள்ளதாக பன்முறையும் வான்மீகி முனிவர் கூறுகின்றமை.
  - ♦ அனுமான் அரிஷ்ட பர்வதத்தில் சிறிது நேரம் தங்கியதாக வான்மீகி முனிவர் கூறுகின்றமை.
    (தேவநம்பிய தீசன் கட்டிய விகாரைகளில் அரிட்ட விகாரமும் ஒன்றென மகாவம்சம் கூறுகின்றன)
  - ♦ இராவணன் வாழ்ந்த இடம் பாண்டிய நாட்டிற்கு எதிரில் இருந்ததாகச் சுக்கிரீவன் தன் சேனை வீரர்களிற்குக் குறிப்பிடப்பட்டமை.
  - ♦ கம்பராமாயணம் - ''தென்தமிழ் நாட்டகன்....''
  - ♦ கம்பராமாயணம் - இலங்கையை 'சிங்ஹளத் தீபம்' எனக் குறிப்பிட்டமை.
  - ♦ அகநானூறு ஆம் செய்யுள் - இராமர் சேனை பாண்டி நாட்டைச் சேர்ந்த சேதுவழியாகச் சென்றமை பற்றிக் குறிப்பிடுகின்றமை.
  - ♦ மாணிக்க வாசகசுவாமிகள் - மகேந்திர மலை சேது ''மன்னுமா மலை...'' நாட்டில் அமைந்திருந்ததாகக் குறிப்பிடுகின்றமை.
  - ♦ திருஞான சம்பந்தர் பதிகம்
    - இராமேஸ்வரத்தில் இராமர் சிவபெருமானை வழிபட்டமை.

5. இராவணன் வாழ்ந்த திரிகூட பர்வதம் எது என்பதை நிர்ணயிப்பதற்கு ஆசிரியர் ஊர்களையும் ஊர்ப் பெயர்களையும் எவ்வாறு தொடர்புபடுத்துகிறார்?

- ஹக்கல என்னும் இடத்தினின்று ஹப்புத்தலை என்னும் இடம் வரையிலுள்ள பகுதி மலைப்பிரதேசமாக அமைந்துள்ளமை.
- மூன்று பக்கங்களையுடைய அகன்ற பிரதேசமாக உள்ளமை.
- இதன் மத்தியில் இராவணன் போர் செய்து வீழ்ந்த இராமலங்கா என்ற இடம் காணப்படுகின்றமை.
- இதன் எல்லைப்புறத்தில் அனுமானால் எரியூட்டப்பட்ட பாலுகம என்ற இடம் காணப்படுகின்றமை.

- மலைப்பிரதேசக் காட்சி, அமைப்பு, இராமாயணத்தில் இலங்கையைப் பற்றிய வர்ணனையுடன் ஒத்திருக்கின்றமை.
- திரிகூட பர்வதத்தின் உச்சியில் இராவணன் தலைநகரமான இலங்காபுரி விளங்கியமையும் இந்நகரம் நிலவில் ஆகாயத்தில் மிதப்பது போல் அனுமானுக்குத் தோன்றியதாக இராமாயணம் கூறுகின்றமை.
    - பண்டாரவல, தியதலாவ என்ற நகரங்கள் இரவில் ஆகாயத்தில் மிதப்பனபோன்ற அழகிய காட்சிகளைத் தருகின்றமை.
- இப்பிரதேசத்தில் தெற்கெல்லையாகிய ஹப்புத்தலையில் பகற் பொழுதில் தென் சமுத்திரத்தையும், அதன் பக்கத்தில் அம்பாந்தோட்டையிலுள்ள உப்பளத்தையும் பார்க்கலாம்.
    - இராமருடைய சேனை தென் சமுத்திரத்தின் கரையோரமாக வருவதை இராவணன் தன் தலை நகரிலிருந்து பார்த்தான் என இராமாயணம் கூறுகின்றன.
    - இராமரது சேனை தென் சமுத்திரக் கரையிலுள்ள டொண்ட்ரா என்ற இடத்திலிருந்து மலைப்பிரதேசத்திலுள்ள அலுத்நுவர என்னும் இடத்திற்கு அணிவகுத்துச் சென்ற சாசன மூலமான ஐதிகம் காணப்படுகின்றமை.

6. இராவணன் வாழ்ந்த இடத்தை நிர்ணயிப்பதற்கு ஆசிரியர் துணைக்கொள்ளும் இலக்கியச் சான்றுகளைத் தொகுத்து நோக்குக.
    - வான்மீகி இராமாயணம் :
      இராவணன் வாழ்ந்த இடம் பாண்டிய நாட்டிற்கு எதிரில் இருந்தமை. அக்கீசன் சேனை வீரர்களுக்கு குறிப்பிடப்படுகின்றமை.
    - கம்பராமாயணம் :
      ''தென் தமிழ் நாட்டான்...''
      வான்மீகி முனிவரது கருத்தைத் தழுவி கூறுகின்றமை.
    - அகநானூறு (70) :
      இராமர் சேனை பாண்டி நாட்டைச் சேர்ந்த சேவ வழியாகச் சென்றமைக்கான சான்றை உறுதிப்படுத்துகின்றமை.
    - திருஞானசம்பந்தர் பதிகம் :
      தனுஷ் கோடிக்கு அருகிலுள்ள இராமேஸ்வரத்தில் சிவ பெருமானை வழிபட்டமை.

7. இக்கட்டுரையில் ஆசிரியர் எடுத்தாண்ட உத்திகள் பற்றி விளக்குக.
    - ஆற்றுப்படை என்ற தலைப்பை இட்டமை.
    - பிறர் கருத்துக்களை முதலிற் கூறிப் பின் தம் கருத்தைப் படிப்படியாகப் பதிவு செய்தல்.
    - வரலாறு, இலக்கியச் சான்றுகள், சம்பவங்கள் என்பவற்றைச் சான்று காட்டித் தம் கருத்தை வலியுறுத்துதல்.
    - இலங்கையின் மலை நாட்டின் இடங்களை ஒரு சுற்றுலா போல் சுட்டிக்காட்டி, அந்த இடங்களின் தற்காலப் பெயர்களையும் அதன் மூலப் பெயர்களையும் உதாரணம் காட்டித் தன் கருத்தை நிறுவுதல்.
    - தர்க்க ரீதியான கருத்து முன்வைப்பு.
    - பல மொழிச் சொற்களைப் பொருத்தமாகக் கையாண்டு சான்று காட்டுதல்.

# தமிழ் இலக்கிய வரலாறு

## ஐரோப்பியர் காலம்

**அறிமுகம் :**

தமிழ் இலக்கிய வரலாற்றில் 18 ஆம், 19 ஆம் நூற்றாண்டுகளை உள்ளடக்கிய காலப்பகுதியே ஐரோப்பியர் காலம் எனப்படுகின்றது. நாயக்கர் ஆட்சியின் வீழ்ச்சியைத் தொடர்ந்து 18 ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயர் தமிழ் நாட்டைத் தமது ஆளுகைக்குட்படுத்தினர். ஆங்கிலேயரின் வருகையின் பின்னரான அரசியல், சமூக, சமய, கலாசார, பொருளாதார நிலைமைகளில் பெருமாற்றங்கள் உண்டாயின. அக்காலத்தில் தோன்றிய இலக்கியங்களிலும் அம்மாற்றங்கள் தாக்கம் செலுத்தின. இதனால் தமிழிலக்கியப் போக்கிலே பல மாற்றங்கள் புலனாயின. அதனால் இக்காலப்பகுதி தமிழிலக்கிய வரலாற்றில் முக்கியம் வாய்ந்ததாகும்.

**காலப்பின்னணி**

- ஐரோப்பியர் ஆட்சியின் ஆதிக்கம்.
- ஆங்கில மொழியின் முக்கியத்துவம்.
- கிறிஸ்தவ சமய எழுச்சியும் மதமாற்றமும்.
- நிலமானியச் சமூக அமைப்பின் சிதைவு.
- முதலாளித்துவ பொருளாதார சமூக அமைப்பின் தோற்றம்.
- அச்சியந்திர அறிமுகமும் பயன்பாடும்.
- ஐரோப்பிய தமிழ் அறிஞர்களின் முயற்சிகள்.
- விஞ்ஞான - அறிவியல் முன்னேற்றம்.

**வினாவிடை**

1. ஐரோப்பியர் காலத்தில் தமிழ் உரைநடை வளர்ந்தவாற்றை விபரிக்குக.
    - உரைநடை வளர்ச்சிக்கு வாய்ப்பான சூழல் ஏற்பட்டமை.
        - ♦ அச்சியந்திரத்தின் அறிமுகம்.
        - ♦ பத்திரிகைகளின் தோற்றம் - பல்வேறுபட்ட எழுத்துக்களுக்கு அவை களம் அமைத்தல்.
        - ♦ ஐரோப்பியப் பாதிரியார் தங்கள் மதக்கருத்துக்களைச் சாதாரண மக்களிடமும் பரவச் செய்வதற்கு ஏற்ற வகையில் எளிய நடையில் வசன நூல்களை வெளியிட முயன்றமை.
        - ♦ மதப் பிரசார முயற்சிகளும் பிறமத கண்டனங்களும்.
        - ♦ மேலைத்தேய முறையிலான கல்வி முறை அறிமுகமாதல் - பாடநூல்கள் எழுதப்படல்.
        - ♦ மேலைத்தேய வசன இலக்கிய மரபு ஆங்கில வழியாக தமிழுக்கு அறிமுகமாக அதைப் பின்பற்றி தமிழிலும் அத்தகைய இலக்கியங்களைப் படைக்கும் முயற்சியில் இறங்கல்.
    - உரைநடை நூல்கள்
        - ♦ ஆத்தும நிர்ணயம்
        - ♦ கடவுள் நிர்ணயம்
        - ♦ தத்துவக் கண்ணாடி
        - ♦ யேசுநாதர் சரித்திரம்

        } தத்துவ போதக சுவாமிகள்

- வேத விளக்கம்
- வேதியரொழுக்கம்
- வாமன் கதை
- பரமார்த்த குரு கதை
- பேதகம் மறுத்தல்
- லூதர் இனத்தியல்பு

} வீரமாமுனிவர்

  - இவற்றுள் பரமார்த்த குரு கதை ஆக்க இலக்கியங்களுக்கான உணர்ச்சிகரமான உரைநடை வளர்ச்சிக்குத் தோற்றுவாயாக அமைந்தது.

- திருச்சபைப்பேதகம் - லூதர் சபை

- இலக்கண விளக்கச் சூறாவளி
- சித்தாந்த மரபுக் கண்டன கண்டனம்
- தொல்காப்பியர் சுதந்திர விருத்தி
- சிவஞானபோதப் பேருரை (திராவிட மாபாடியம்)

} சிவஞான முனிவர்

  - இவருடைய உரைகள் தர்க்கரீதியான, ஆராய்ச்சிபூர்வமான விடயங்களை எழுதுவதற்கு உரிய வகையில் அமைந்தது.

- பெரிய புரான வசனம்
- திருவிளையாடற் புராண வசனம்
- சுப்பிரபோதம்
- வச்சிர தண்டம்
- யாழ்ப்பாணச் சமயநிலை
- பாலபாடங்கள்

} ஆறுமுக நாவலர்

  - இவருடைய வசன நூல்கள் பெரும்பாலும் பொதுமக்களையும் மாணவர்களையும் மனங்கொண்டு எழுதப்பட்ட தெளிந்த எளிய நடையில் அமைந்தன. பாடநூல்களுக்கான முன்னோடி நடையில் அமைந்தன.

- பஞ்சதந்திரக் கதை - தாண்டவராய முதலியார்
- விநோதரச மஞ்சரி - வீராசாமிச் செட்டியார்
  - இவை சுவாரஸ்யமானதும் உணர்வுபூர்வமானதுமான நடை வளர்ச்சிக்குத் துனை செய்தன.

- பிரதாப முதலியார் சரித்திரம்
- சுகுண சுந்தரி

} மயூரம் வேதநாயகம் பிள்ளை

- கமலாம்பாள் சரித்திரம் - ராஜமையர்
- பத்மாவதி சரித்திரம் - அ. மாதவய்யா

- மோகனாங்கி - தி. த. சரவணமுத்துப்பிள்ளை
  - தமிழின் ஆரம்பகால நாவல்களில் கையாளப்பட்ட உரைநடை ஆக்க இலக்கியங்களுக்கான உரைநடை விருத்திக்கு முன்னோடியாக அமைந்தது.

2. ஐரோப்பியர் காலத்தில் தமிழ்மொழி இலக்கியம் கண்ட வளர்ச்சி பற்றி விளக்குக.

- மக்கள் வாழ்க்கையைப் பொருளாகக் கொண்ட இலக்கியங்களைக் கொண்ட ஆங்கில மொழியைக் கற்று அம்மொழியிலுள்ள ஆக்க இலக்கியங்களின் போக்கைப் பின்பற்றிய வசனத்தில் படைத்த இலக்கியங்களால் தமிழில் புதிய ஒரு இலக்கியப்போக்கு உருவானது.
- ஐரோப்பியர் தொடர்பினால் தமிழ்ச் சமூகத்தில் பரவத்தொடங்கிய சமத்துவம், சுதந்திரம் முதலான உணர்வுகள் இலக்கியங்கள் ஊடாக வெளிப்பட்டு தமிழிலக்கியத்தை நவீனத்துவமடையச் செய்தன.
- ஐரோப்பியப் பாதிரிமார் தங்கள் மதக்கருத்துக்களைத் தமிழ்நாட்டின் சாதாரண மக்களும் அறியத்தக்க வகையிலே எளிய வசன நடையில் எழுத முற்பட்டமையாலும் அவர்களுக்கும் தமிழ் நாட்டின் பாரம்பரிய மதங்களைச் சார்ந்தவர்களுக்குமிடையில் நிகழ்ந்த மத ரீதியான போட்டிகளால் எழுந்த கண்டனப் பிரசுரங்கள், பைபிள் மொழி பெயர்ப்பு முயற்சிகள், அச்சியந்திரத்தின் அறிமுகம் முதலானவற்றால் தமிழ் வசனநடை விருத்தி கண்டது.
- பத்திரிகைத்துறை தமிழுக்கு அறிமுகமாகி புதுவகை எழுத்துக்களுக்குக் களம் அமைத்தது.
- ஐரோப்பியர்கள் தமிழ் கற்க வேண்டிய தேவை இருந்ததால் அவர்களுக்கு ஏற்ற வகையில் அகராதி, முதலான கருவிநூல்கள் தமிழில் தோன்றின.
- ஐரோப்பியர் விளங்கிக் கொள்ளத்தக்க வகையில் உரைநடையில் இலக்கண நூல்கள் எழுதப்பட்டன.
- அவர்களுக்கு வாய்ப்பான வகையில் தமிழ் எழுத்துக்களில் சீர்த்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.
- ஐரோப்பிய மொழிகளிற் கையாளப்பட்ட நிறுத்தக் குறிகள் தமிழுக்கு அறிமுகமாகின.
- அச்சியந்திரத்தின் அறிமுகத்தால் ஏட்டுச்சுவடிகளாயிருந்த பழந்தமிழ் இலக்கியங்கள் பதிப்பிக்கப்பட்டன.
- நவீன கல்வி முறைமை அறிமுகமானது, அதற்கேற்ற வகையில் தமிழில் பாடநூல்கள் எழுதப்பட்டன.
- நவீன விஞ்ஞானம், நவீன ஆராய்ச்சி முறைமைகள் தமிழுக்கு அறிமுகமாயின.

3. ஐரோப்பியர் காலப்பகுதியில் தமிழில் எழுந்த செய்யுளிலக்கியங்களை சமய அடிப்படையில் வகைப்படுத்தி நோக்குக.

- இந்து சமயம்

| நூல் | ஆசிரியர் |
|---|---|
| ♦ தாயுமானவர் பாடல்கள் | - பராபரக்கண்ணி முதலியன. |
| ♦ அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ் | சிவஞான முனிவர் |
| ♦ காஞ்சிப்புராணம் | |
| ♦ திருத்தணிகைப் புராணம் | கச்சியப்ப முனிவர் |
| ♦ திருவானைக்கால் புராணம் | |
| ♦ கச்சியானந்த ருத்திரேசர் வண்டுவிடு தூது | |
| ♦ தலபுராணங்கள் (பதினாறு) | மீனாட்சி சுந்தரம்பிள்ளை |
| ♦ பிள்ளைத்தமிழ் பிரபந்தங்கள் (பத்து) | |
| ♦ அந்தாதிகள் (பதினொன்று) | |
| ♦ மாலை, கோவை முதலியன | |
| ♦ குசேலோபாக்கியானம் | |
| ♦ நந்தனார் சரித்திரக் கீர்த்தனை | - கோபால கிருஷ்ணபாரதியார் |

- கிறிஸ்தவ சமயம்
    - தேம்பாவணி
    - கித்தேரியம்மாள் அம்மானை
    - அடைக்கல நாயகி வெண்பா
    - அன்னையழுங்கல் அந்தாதி

    } வீரமாமுனிவர்

    - இரட்சணிய யாத்திரிகம்
    - இரட்சணிய மநோகரம்

    } கிருஷ்ணபிள்ளை

- இஸ்லாமிய சமயம்
    - சீறாப்புராணம்
    - முதுமொழிமாலை

    } உமறுப்புலவர்

    - முகையதீன் புராணம் - வண்ணக் களஞ்சியப் புலவர்
    - மிதுறுசாநா - மதாறுசாகிபு புலவர்
    - இபுனி ஆண்டான் படைப்போர் - அலியார் புலவர்
    - சீறாவண்ணம்
    - நாகையந்தாதி
    - குணங்குடிமஸ்தான் சாகிபு பாடல்கள்

4. ஐரோப்பியர் காலத்தில் தமிழ் மொழியில் ஏற்பட்ட பன்முக வளர்ச்சிகளை விளக்குக.
    - உரைநடை வளர்ச்சியடைந்தமை.
    - மேலைத்தேய மரபை உள்வாங்கிய இலக்கியப் படைப்புகள், அகராதி முயற்சிகள்.
    - சமயப் பிரசார ஊடகமாக இலக்கியம் பயன்பட்டன.
    - பத்திரிகைகளின் வளர்ச்சி.
    - கண்டனங்கள் எழுந்தமை.
    - பதிப்பு முயற்சிகள்
    - மொழி பெயர்ப்பு - தமிழ் இலக்கியம் பரவலடைதல்.
    - எழுத்தில் சீர்த்திருத்தம் செய்தமை.
    - கதை, நாவல்கள் படைக்கப்பட்டமை.

5. ஐரோப்பியர் காலத்தில் தமிழில் பத்திரிகைகள் தோன்றிவளர்ந்தவாற்றை விளக்குக.
    - கிறிஸ்தவப் பத்திரிகைகள்.
        - தற்போதகம், கிறிஸ்தவர்கள் திருச்சபைப் பத்திரிகை, சினேக போதகன்
    - இந்துமதப் பத்திரிகை.
        - பிரமதீபிகை, சித்தாந்த சங்கிரகம்
    - பெண்களுக்கான பத்திரிகைகள்.
        - அமிர்தவசனி
    - சிறுவர்களுக்கான பத்திரிகைகள்.
        - பாலதீபிகை

6. I ஐரோப்பியர் கால கிறிஸ்தவர்களின் தமிழ்ப்பணியை மதிப்பிடுக.

- மேலைத்தேசத்தவர்கள் கீழைத்தேசத்திற்கு நாடுகாண் பயணங்கள் மேற்கொண்டனர்.
- வியாபாரம், ஆட்சியமைப்பு, மதம்பரப்பல் போன்ற தேவைகளுக்காக வருகை தந்தவர்களில் தமிழைக் கற்றுணர்ந்து தமிழ்ப்பணியாற்ற முற்பட்டவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்.

1) **தத்துவ போதகர் (ரொபேட் நொமிலி) (1577 - 1656) 17 ஆம் நூற்றாண்டு**

இத்தாலி நாட்டவர், கத்தோலிக்க மதம் பரப்புவதற்காக தமிழகம் வந்தவர். தமிழ்மொழி, வடமொழி கற்றுத்தேறி தத்துவ போதகசுவாமிகள் எனச் சிறப்பிக்கப்பட்ட அந்தணர் போன்று சைவஉணவு, உடை பூணூல் பூண்டு வாழ்ந்தவர். இவரது இலக்கியப்பணிகள்.

- ஆத்தும நிர்ணயம்.
- கடவுள் நிர்ணயம்.
- தத்துவக் கண்ணாடி.
- யேசுநாதர் சரித்திரம்.

**அகராதிப்பணி**

- தமிழ் - போத்துக்கீச அகராதி
- வடமொழி கலந்த அகராதி

2) **வீரமாமுனிவர் (1680 - 1741) 18 ஆம் நூற்றாண்டு**

இத்தாலி நாட்டவர். கத்தோலிக்க மதம் பரப்புவதற்காகத் தமிழகம் வந்தவர். இயற்பெயர் - கொன்ஸ் டான்டியஸ் யோசப் பெஸ்கி - இவர் தைரியநாதர் என்று சிறப்பிக்கப்படுகின்றார். பன்மொழி வித்தகரான இவர் தமிழுக்கு ஆற்றிய பணிகள் எண்ணிலடங்கா.

- காப்பியப்பணி - யேசுவின் வளர்ப்புத்தந்தை சூசைமாமுனிவரை காப்பியத்தலைவராகக் கொண்டு 'தேம்பாவணி' என்னும் காவியம் தந்தவர்.
- சிற்றிலக்கியப்பணி
  - திருக்காவலூர்க் கலம்பகம்
  - கித்தேரியம்மாள் அம்மானை
  - அடைக்கலநாயகி
  - வெண்பா
  - அன்னை அழுங்கல் அந்தாதி
  - கருணகரப்பதிகம்.
- உரைநடைப்பணி
  - போதகம் மறுத்தல்
  - ஞானக்கண்ணாடி
  - வாமன்கதை
  - சமயக் கோட்பாடுகளை விளக்கும் நூலான வேதவிளக்கம்
  - அங்கதம் நிரம்பிய நூலான லுத்தர் இனத்தியல்பு
  - திருமறைத்தொண்டர் ஒழுகலாறுகளைக் கூறும் ஊழியர் ஒழுக்கம்

இவர் உரைநடை முன்னோடி எனப் போற்றப்படுகின்றார்.

- இலக்கணப்பணி - செந்தமிழ் இலக்கணம்
  - கொடுந்தமிழ் இலக்கணம்
  - தொன்னூல் விளக்கம்.
- ஒப்பிலக்கணப்பணி - பேச்சுத்தமிழ் வழக்காற்றைப் பின்பற்றிச் செய்யப்பட்டது. கொடுந்தமிழ் இலக்கணம். வீரமாமுனிவர் இந்நூலை இலத்தீன், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் மொழி பெயர்த்தல்.

- மொழியெர்ப்புப்பணி - திருக்குறள் - அறத்துப்பால் பொருட்பால் - இலத்தின் மொழி பெயர்ப்பாக்கம். பரமார்த்த குரு கதை - ஆங்கிலம் இலத்தின் மொழி பெயர்ப்பாக்கம்.

- அகராதிப்பணி - சதுரகராதி (சதுரம் நான்கு - பெயர், பொருள், தொகை, தொடை)

- தொகுப்புப்பணி - தமிழில் உள்ள நீதிநூல்களை எல்லாம் தொகுத்து தமிழ்ச் செய்யுள் தொகை என்ற நூல்.

- எகர குறில் நெடிகளுக்கிடையிலும் ஒகர குறில் நெடிகளுக்கிடையிலும் தெளிவான வேறுபாட்டைக் காட்டியமை.

3) **கால்டுவெல் (1814 - 1891)**

இவர் அயர்லாந்து நாட்டைச் சேர்ந்தவர். 23 ஆவது வயதில் சமயப்பணி புரியத் தமிழகம் வந்தவர்.

- உரைநடைப்பணி - நற்கருணைத் தியானமாலை
  தாமரைத்தடாகம்
  ஞானஸ்தானம்

- ஒப்பிலக்கணப்பணி - பன்மொழிகளைக் கற்றறிந்தார். தனது பன்மொழி ஞானத்தின் அடிப்படையில் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணத்தை உருவாக்கினார்.
- அகழ்வாராய்வுப்பணி - பாண்டி நாட்டின் துறைமுகங்கள் பற்றிய சான்றுகளை அகழ்வுப்பணிகள் வாயிலாகக் கண்டறிந்தார்.
  கொற்கை, காயல், தூத்துக்குடி

- இந்தியப்பணி - 23 ஆவது வயதில் இந்தியா வந்து 77 ஆவது வயதில் இந்தியாவில் கொடைக்கானலில் உயிர்நீத்தார். ''நான் இந்தியாவிலேயே உயிர்

துறப்பேன்" என்ற கூற்று அவரின் பணியைப் பறை சாற்றுகின்றது.

4) **ஜி.யூ மேப் (1814 - 1891)**

இங்கிலாந்து நாட்டவர். 19 ஆவது வயதில் தமிழகம் வந்தார். மகாவித்துவான் இராமானுஜ கவிராயரிடம் தமிழ் பயின்றார்.

- இலக்கியப்பணி
  - Poets of the Tamil Land
  - The lives of Tamil Saints
- மொழிபெயர்ப்பு
  - Elementary Tamil Grammar (மூன்று பாகங்களைக் கொண்ட தமிழ் இலக்கணம்)
  - திருக்குறள்
  - நாலடியார்
  - புறப்பொருள் வெண்பாமாலை
  - புறநானூறு
  - மணிமேகலை
  - சிவஞானபோதம்
- தொகுப்புப்பணி - தமிழ் இலக்கியச் செய்யுட்களைத் தொகுத்து தமிழ் செய்யுட் கலம்பகம் வெளியிட்டார்.
- திறனாய்வுப்பணி - Royal Asiatic Quarterly The Indion Antiquary Siddhantha Depika என்றும் ஆங்கில இதழ்களில் தமிழ் பற்றிய திறனாய்வுக் கட்டுரைகளை எழுதினார்.

## தற்காலம்

**அறிமுகம் :**

ஐரோப்பியர் காலத்தைத் தொடர்ந்து வரும் 20 ஆம் 21 ஆம் நூற்றாண்டானது அரசியல், சமூக, சமய பொருளாதார ரீதியில் பெரும் மாற்றங்களைக் கொண்ட காலப்பகுதியாகும். இதனால் மக்கள் வாழ்க்கை முறையிலும் மாற்றம் ஏற்பட்டது. தமிழ் மொழியும், இலக்கியமும் நவீனத்துவம் அடைந்த காலப்பகுதியாகவும் பல்வேறு புதிய கோட்பாடுகள் முனைப்புற்ற காலப்பகுதியாகவும் இக்காலம் அமைகின்றது. மக்கள் இலக்கியகாலமாக தற்காலம் அமையப்பெற்றுள்ளது.

**காலப்பின்னணி**

- ஆங்கிலக் கல்வி விருத்தி.
- ஜனநாயகக் கல்வி வாய்ப்பு.
- ஐரோப்பிய நாகரிகத் தொடர்பு.
- அச்சியந்திரப் பயன்பாடு.
- சுயமொழிக் கல்வி வாய்ப்பு.
- மத்தியதர வர்க்கச் சிந்தனையாளர்களின் பெருக்கம்.
- விஞ்ஞான வளர்ச்சி.
- உலகப் போர்.
- கல்வி மேம்பாடு.
- சுதந்திர உணர்வு.
- மக்களின் வாழ்க்கைமுறை மாற்றம்.

**வினாவிடை**

1. இருபதாம் நூற்றாண்டு நவீன கவிதைத் தோற்றத்திற்கான பின்னணியை விளக்குக.
    - ஐரோப்பியர் வருகையை அடுத்து அரசியல், பொருளாதார, சமூக அமைப்பில் ஏற்பட்ட மாற்றங்கள்.
    - கிழக்கிந்தியக் கம்பனியின் தோற்றமும், சென்னைக் கல்விச் சங்கத்தின் வளர்ச்சியும்.
    - ஆங்கிலக் கல்வியும், அச்சியந்திரத்தின் தோற்றமும் பத்திரிகை வளர்ச்சியும்.
    - சமயச் சமூகச் சீர்த்திருத்த இயக்கங்கள் இந்தியப் பண்பாட்டை நவீன மயப்படுத்த உதவியமை.
        - ♦ பிரம்ம சமாஜம் (1828)
        - ♦ ஆர்ய சமாஜம் (1925)
        - ♦ இராம கிருஷ்ண மிஷன் (1880)
        - ♦ இந்து இலக்கியச் சங்கம் (1820)
    - மேலைத்தேய சிந்தனை வழங்கிய அதிகார எதிர்ப்பும், விடுதலை உணர்வும் கவிதையின் போக்கில் பாரிய மாறுதல்களை உண்டுபண்ணின.

      இப்பின்னணியில் தோற்றம் பெற்ற தமிழகக் கவிதைகளும் உருவ உள்ளடக்கத்தில் புதிய மாற்றங்களை உள்வாங்கிக் கொள்ளத் தலைப்பட்டன.

2. நவீன கவிதைகளுக்கு அடிப்படையாக அமைந்த காரணிகள் எவை?
   - பாரம்பரிய மரபுசார் வாழ்க்கை முறைமை மாற்றமடைந்தமை.
     - ♦ நிலப் பிரபுத்துவ முறைமையிலிருந்து இந்தியச் சமூகம் வேகமாக மாற்றத்திற்கு உள்ளாகியமை.
   - மொழி தன்னிறுக்கத்தைத் தளர்த்தியமை.
     - ♦ கிராமங்கள் நகரமயமாகும் சூழ்நிலையிலேயே மனித வாழ்வியல் சார் இயங்கு நிலைக்கேற்ப இலக்கியத்தில் கையாளப்பட்ட மொழியும் தன்னிறுக்கத்தைத் தளர்த்தியது.
   - பேச்சு மொழியின் அவசியம் உணரப்பட்டமை.
     - ♦ செய்யுள்களில் கையாளப்பட்ட அடைமொழிகளும் அலங்கார மொழிகளும் வழக்கிழக்க புழக்கத்திலுள்ள பேச்சு மொழியின் அவசியம் உணரப்பட்டது.

3. இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க்கவிதையின் தோற்றம் பற்றி விளக்குக.
   - செய்யுள் மரபு தமிழில் மிக நீண்ட காலமாகவே இருந்து வந்தாலும், இருபதாம் நூற்றாண்டில் அம்மரபு பெருமாற்றம் கண்டு, புத்தெழுச்சி பெறுகின்றது.
   - கிராமங்கள் நகரமாகும் சூழ்நிலையிலே மனித வாழ்வியல்சார் இயங்கியலுக்கேற்ப இலக்கியத்திற் கையாளப்பட்ட மொழியும் தன்னிறுக்கத்தைத் தளர்த்தியது.
   - மரபுவழிப்பட்ட செய்யுள்களில் இடம் பெறும் அடைமொழிகளும் அலங்கார மொழிகளும் வழக்கிழக்க புழக்கத்திலுள்ள பேச்சு மொழியின் அவசியம் உணரப்பட்டது.
   - இந்த வகையில் இருபதாம் நூற்றாண்டிலே பாரதியின் எழுச்சி நவீன கவிதையின் வியாபித்த எல்லைகளை நிரப்பிக்கொள்ள உதவியது.
   - பாடுபொருள், வடிவம், சமர்ப்பிப்பு முறைமை, உத்திகள் என்பவற்றின் பெருமாற்றத்தோடு புதுக்கவிதை எழுச்சி பெற்றது.
   - தமிழ்க்கவிதை வரலாற்றின் ஒரு திருப்பு முனையாக, மகாகவி பாரதியார் திகழ்ந்ததோடு நவீன கவிதைக்கு வழிகாட்டியாகவும் விளங்கினர்.

4. தமிழ்க் கவிதை வரலாற்றில் பாரதியார் பெறும் முக்கியத்துவத்தினை மதிப்பிடுக.
   - பழமையின் இறுக்கமான பிடிக்குள் சிக்குண்ட பாரதியார் ஆங்கிலக்கல்வி, வடநாட்டு யாத்திரை, பத்திரிகைத் தொழில், உரைநடையின் எழுச்சி, சமூக விழிப்புணர்வு என நிகழ்கால இயங்கியலுக்கூடாகப் புதுமையை நோக்கி நகர்ந்தமை.
   - பாரதி தன் கவிதைகளில் வடிவ உள்ளடக்கத்தில் மாற்றங்களை ஏற்படுத்தினார்.
   - வடிவ மாற்றம் :
     - ♦ எளியபதம், எளியநடை, எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய சந்தம் பொதுமக்கள் விரும்பும் மெட்டு என்பவற்றின் அடிப்படையில் நவீன வாழ்வியலுக்கேற்ப இருபதாம் நூற்றாண்டுக் கவிதையைச் சாத்தியமாக்கினான் பாரதி.

       உதாரணம் : ‘காட்சிகள்’ எனும் தலைப்பிலான வசன கவிதை.
     - ♦ மரபுவழிநின்று நெகிழ்ச்சியற்ற செறிவான கவிதைகளைப் பாடிய பாரதி ஆசிரியப்பா, வெண்பா, விருத்தப்பா முதலான பாவகைகளைக் கையாண்டது மட்டுமன்றி கண்ணி, சிந்து, கும்மி, தெம்மாங்கு போன்ற பாவடிவங்களையும் சேர்த்துக் கையாண்டார்.
     - ♦ நாட்டுப் புற மெட்டுக்கள், ஓசை நயங்கள் என்பவற்றைத் தன் கவிதைகளில் பயன்படுத்தினார்.

       உதாரணம் : புதிய கோணங்கி

- உள்ளடக்கம் :
    - ♦ பொதுசனங்களை நோக்கி, அவர்களது பிரச்சினைகளைப் பாடுபொருளாக்கி கவிபடைத்தார்.
    - ♦ காதல், பக்தி, புகழ்ச்சி, இயற்கை வர்ணனை என்பவற்றை மட்டுமன்றி, பெண்விடுதலை, நாட்டு விடுதலை, சமூக விடுதலை என நடைமுறைப் பிரச்சினைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தார்.
    - ♦ புரட்சி என்பது பிரதான பண்பாக இருந்தது.
        - சாதியொழிப்பு
        - பெண்ணடிமையொழிப்பு
        - சமூக சமத்துவம்
        - பக்தியில் - கண்ணனைச் சேவகனாகப் பாடியமை.
    - ♦ மொழியுணர்வு, தேசிய உணர்வு என்பன கவிதையின் பாடுபொருளானது.
    - ♦ குழந்தைகளுக்கான பாடல்கள் பாடினார்.

5. நவீன கவிதையின் போக்குப் பற்றி விளக்குக.
    - பாரதியார் :
        - ♦ பாடுபொருளாகப் புதிய விடயங்கள்
        - ♦ புதிய வடிவங்கள்
        - ♦ இலகுமொழி
    - பாரதியாரைப் பின்பற்றியவர்கள் :
        - ♦ பாரதிதாசன்
        - ♦ தேசிக விநாயகம் பிள்ளை
        - ♦ சுத்தானந்த பாரதியார்
        - ♦ ச. து. சு. யோகியார்
    - பாரதிதாசனைப் பின்பற்றியோர் :
        - ♦ முடியரசன்
        - ♦ வாணிதாசன்
        - ♦ சுரதா
        - ♦ தமிழ் ஒளி
        - ♦ பெருஞ் சித்திரனார்
    - குழந்தைக் கவிதைகளை முன்னெடுத்தோர் :
        - ♦ கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை
        - ♦ அழ. வள்ளியப்பா
        - ♦ பூவண்ணன்
    - திரையிசைப் பாடல்கள் தந்தோர் :
        - ♦ பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்
        - ♦ கவியரசு கண்ணதாசன்
        - ♦ வாலி

6. புதுக்கவிதையின் தோற்றம், வளர்ச்சி பற்றி விளக்குக.

- புதுக்கவிதையின் தோற்றம் (முப்பதுகள்) :
  - ந. பிச்சமூர்த்தி
  - கு. ப. ரா
  - வல்லிக் கண்ணன்
- புதுக்கவிதையின் வளர்ச்சி :
  - தருமு சிவராமு
  - அப்துல் ரகுமான்
  - மு. மேத்தா
  - நா. காமராஜன்
  - ஈரோடு தமிழன்பன்
  - சிற்பி பாலசுப்பிரமணிம்
  - மீரா
  - இன்குலாப்
  - இமயபாரதி
  - வாலி
  - அறிவுமதி
  - வைரமுத்து
- ஹைக்கூ கவிதைகள் :
  - அப்துல் ரகுமான்
  - அமுதபாரதி

7. புதுக்கவிதை வளர்ச்சியில் பிச்சமூர்த்தி பெறும் இடத்தினை மதிப்பிடுக.

- ந. பிச்சமூர்த்தி
- தமிழ்ப் புதுக்கவிதையின் திருமூலர் எனப்படுபவர்.
- கவிதைத் தொகுப்புகள் - குயிலின் சுருதி, காட்டு வாத்து, வழித்துணை நூல்கள்
- உள்ளடக்கம்
  - சமூக விமர்சனம்
  - சமூகப் பிரச்சினைகள்
  - தத்துவம்
  - காதல்
- புதுக்கவிதையில் படிமம், குறியீட்டைப் பயன்படுத்தியவர்.

8. 1950 க்குப் பின்னரான தமிழ்க்கவிதைபற்றி விளக்குக.

- தனிமனித உணர்ச்சி வெளிப்பாடு.
  - பசுவய்யாவின் (சுந்தர ராமசாமி) யின் புதுக்கவிதைகள்
- குறியீட்டுப் பாங்கு
  - அப்துல் ரகுமானின் புதுக்கவிதைகள்

- முற்போக்குப் பார்வை
    - ♦ மீராவின் புதுக்கவிதைகள்
    - ♦ சிற்பி பாலசுப்பிரமணியத்தின் புதுக்கவிதைகள்
- ♦ இன்குலாப்பின் கவிதைகள்
- சமூக அரசியல் மாற்றங்கள்
    - ♦ பழமலையின் புதுக்கவிதைகள்
- பெண்ணியம்
    - ♦ சுகிர்தராணியின் புதுக்கவிதைகள்
    - ♦ மாலதி மைத்ரேயின் புதுக்கவிதைகள்
- திரையிசைப் பாடல்கள்
    - ♦ பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பாடல்கள்
    - ♦ கண்ணதாசன் பாடல்கள்
    - ♦ வாலியின் பாடல்கள்
- ஹைக்கூ கவிதைகள்
    - ♦ அமுதபாரதியின் புதுக்கவிதைகள்

## சிறுகதை

1. தமிழில் சிறுகதை வளர்ச்சிபற்றி விளக்குக.

- தமிழில் கதை முயற்சிகள்
    - ♦ பரமார்த்த குரு கதை - வீரமாமுனிவர்
    - ♦ கதா மஞ்சரி - தாண்டவராஜ முதலியார்
    - ♦ விநோதரசமஞ்சரி - வீரசாமிச் செட்டியார்
    - ♦ அபிநவக் கதைகள் - செல்வக் கேசவராய முதலியார்
    - ♦ நாகபுத்திர கன்னிகை, ♦ சரித்திரம், ♦ லவர்ணகுமாரி } - மகாகவி பாரதியார்
- சிறுகதையிலக்கணத்தோடு கூடிய தமிழில் முதற் சிறுகதை
    - ♦ வ.வே.சு. ஐயர் - குளத்தங்கரை அரச மரம்
- தமிழுக்குச் சிறுகதை என்ற இலக்கிய வடிவத்தை அறிமுகப்படுத்தியவர் என்ற வகையில் வ.வே.சு ஐயர் தமிழிலக்கிய வரலாற்றில் சிறப்பிடம் பெறுகின்றார்.
- வ.வே.சு. ஐயர் (1881 1925)
- பிச்சைமூர்த்தி
- கு.ப.ரா - (1901 - 1944)
- புதுமைப்பித்தன் - (1906 - 1948)
    - ♦ தமிழ்ச் சிறுகதைக்கு புதிய பரிமாணம் கொடுத்தவர். தமிழ்ச் சிறுகதையுலகின் முடிசூடா மன்னன் என்று பேசப்படுபவர்.

      உ-ம் :- பொன்னகரம், சாபவிமோசனம், அகல்யை, கபாடபுரம், காஞ்சனை
- பி.எஸ் ராமையா (1905)
- கு. அழகிரிசாமி

- அகிலன்
- மௌனி - (அழியாச் சுடர், பிரபஞ்சகானம்)
(எஸ். மணி)
- ஜெயகாந்தன்
- சுந்தரராமசாமி, அசோக மித்திரன்
- அம்பை, திலகவதி, சிவகாமி, ந. முத்துச்சாமி, பா. ஜெயப்பிரகாசம், பிரபஞ்சன், அசோக மித்திரன், நா. பார்த்தசாரதி, வண்ணதாசன், சுஜாதா, நீல. பத்மநாதன், முகம்மது மீரான்.
- இதழ்களின் பங்கு - மணிக்கொடி, கலாமோகினி, பொன்னி, சரஸ்வதி, கல்கி, கலைமகள், தாமரை, கணையாழி, காலச்சுட்டு, தாராமதி, நம்பிக்கை, கனவு, நிறப்பிரிகை

2. ஆரம்பகாலச் சிறுகதைகளின் முக்கிய பண்புகள் எவை?
   - யதார்த்தப்பண்பு, சமூக உணர்வு, பழைய புராணக்கதைகளை நவீன காலத்துக்கு ஏற்றபடி நோக்குதல்.
   - பேச்சு வழக்கினைக் கையாளல்.
   - அளவிற்சிறியதாகவும், இறுக்கமாகவும் கட்டுக்கோப்பு உடையதாகவும் முழுமையும் ஒருமைப்பாடும் கொண்டதாகவும் இருத்தல்.
   - காவியப் பண்புகளின் தன்மைகள் காணப்படல்.
     உதாரணம் : வ.வே.சு. ஐயரின் கதைகள்.
   - பாடுபொருளில் யதார்த்தம், நடைமுறை வாழ்வியல் புலப்படல்.
     - ♦ வரதட்சிணைக் கொடுமை.
     - ♦ விதவை மறுமணம்.
     - ♦ தீண்டாமை.
     - ♦ மதுவிலக்கு.
     - ♦ பேய்பிசாசு (மூட) நம்பிக்கை.
   - கலையம்சத் தன்மை குறைவானதும் கட்டுரைப் போக்கானதுமான கருத்து வீச்சுக்கள் காணப்படல்.
   - ஆரம்பகாலச் சிறுகதைகளின் பொருள்களாக பின்வருவன அமைந்திருந்தன.
     - ♦ குழந்தை மணம்
     - ♦ கைம்பெண் துயரம்
     - ♦ மறுமணம்
     - ♦ பொருந்தாமணம்
     - ♦ கலப்பு மணம்
     - ♦ சீதனப் பிரச்சினை
     - ♦ தீண்டாமையும் மது விலக்கும்.
     - ♦ புராண இதிகாச வரலாற்றுச் செய்திகள்

3. தமிழ்ச் சிறுகதை வளர்ச்சியில் மணிக்கொடிக் காலம் பெறும் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுக.
   - 1930 1940 களில் மணிக்கொடி சஞ்சிகை வெளிவந்தது.
   - இக்காலப்பகுதியில் இலக்கியத்தரம் வாய்ந்த சிறுகதைகள் தோன்றின.

- புதுமைப்பித்தன், கு.ப.ரா., மௌனி, ந. பிச்சமூர்த்தி, பி.எஸ். ராமையா முதலியோர் இவ்விதழில் எழுதியவர்களுள் முக்கியமானவர்கள்.
- தமிழில் சிறுகதை என்னும் இலக்கியவடிவத்தை முழுமைப்படுத்தியவராக புதுமைப்பித்தன் காணப்படுகின்றார்.
- கு.ப.ரா., மௌனி, ந.பிச்சமூர்த்தி போன்றோரும் இக்காலப்பகுதியில் சிறுகதை எழுதி தமிழில் சிறுகதை வேர் கொள்ளக் காரணமாயினர்.
- ல.ச.ராமாமிர்தம், ந. சிதம்பரசுப்பிரமணியம், கு. அழகிரிசாமி, தி. ஜானகிராமன், சி.சு.செல்லப்பா, க. நா. சுப்பிரமணியம், எம். வி. வெங்கட்ராமன் முதலியோரும் மணிக்கொடிகால எழுத்தாளர்களாவர்.

4. 1950 இற்குப் பின்னரான தமிழ்ச் சிறுகதை பற்றி விளக்குக.

| | | |
|---|---|---|
| • தேசிய உணர்வு | - | சி.சு. செல்லப்பா |
| • வட்டாரச் சிறுகதைகள் | - | கி. ராஜநாராயணன் |
| • முற்போக்கு சார்ந்தவை | - | ஜெயகாந்தன் (ஆரம்பகாலம்) |
| • பின் நவீனத்துவச் சிறுகதைகள் | - | பிரேம் |
| | - | ரமேஸ் |
| | - | கோணங்கி |
| • பெண்ணியம் சார்ந்தவை | - | அம்பை |
| • தலித்தியச் சிறுகதைகள் | - | இமையம் |
| • விஞ்ஞானப் புனைவுகள் | - | சுஜாதா |

## நாவல்

1. இருபதாம் நூற்றாண்டு நாவல் இலக்கிய வளர்ச்சியை மதிப்பிடுக.
   - ஐரோப்பிய நாவல் இலக்கிய முறையைப் பின்பற்றித் தமிழில் இலக்கியம் எழுதத் தொடங்கிய ஆசிரியர்களுள்ளே
     - ♦ மயூரம் வேதநாயகம் பிள்ளை
     - ♦ ராஜமையர்
     - ♦ அ. மாதவய்யா

     ஆகியோரைச் சிறப்பாகக் குறிப்பிடலாம்.
   - மாயூரம் வேதநாயகம் பிள்ளை
     - ♦ பிரதம முதலியார் சரித்திரம்
     - ♦ சுகுண சுந்தரி
   - ராஜமையர்
     - ♦ கமலாம்பாள் சரித்திரம்
   - தி.த. சரவணமுத்துப்பிள்ளை
     - ♦ மோகனாங்கி
   - மாதவையா
     - ♦ பத்மாவதி சரித்திரம்

     (கமலாம்பாள் சரித்திரத்திற்குப் பின் தோன்றிய நாவல்களுட் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது)
   - நடேச சாஸ்திரியார்
     - ♦ தீனதயாளு

- பொன்னுச்சாமிப்பிள்ளை
    - ♦ கமலாஷி
- ஆரணி குப்புசாமி, வடுவூர் துரைசாமி ஐயங்கார் - துப்பறியும் நாவல்களும் மர்ம நாவல்களும்

2. தமிழ் நாவல்களின் பண்புகள் பற்றி ஆராய்க.
    - ஆரம்பகால நாவல்களின் பண்புகள்.
        - ♦ மாயூரம் வேதநாயகம் பிள்ளை
        - ♦ ராஜமையர்
        - ♦ மாதவையா போன்றோரின் நாவல்கள்
            - நிஜ வாழ்க்கையில் இடம் பெறும், உணர்ச்சிகள், போராட்டங்கள் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டவை. உ-ம் :- கமலாம்பாள் சரித்திரம்
            - அறக்கருத்துகள், நீதிப் போதனைகள் ஆகியனவற்றை உள்ளடக்கியவை. (பிரதாப முதலியார் சரித்திரம்)
            - பொழுதுபோக்குத் தன்மை கொண்டவை.
            - இறுக்கமான செய்யுள் அமைப்புக்கு ஒப்பான மொழிநடை.
            - தமிழ்க்காவிய மரபின் செல்வாக்கு.
    - நாவல்களின் முக்கியமான பண்புகள்.
        - ♦ மக்களின் சமகால வாழ்வியற் பிரச்சினைகளை மையப்படுத்தியவை.
        - ♦ சமூக, சரித்திர, அறிவியல் எனப்பல வகைப்பாடுகளைக் கொண்டவை.
        - ♦ இயல்பான பேச்சு மொழியைக் கையாண்டு எழுதப்பட்டவை.
        - ♦ முரண்பாடுகள், விடுதலையுணர்வு சித்திரிக்கப்படல்.
        - ♦ வட்டார, பிரதேச வழக்காறுகளை அடிப்படையாகக் கொண்டவை. (வட்டார நாவல்கள்)
        - ♦ மேற்கத்தைய இலக்கியக் கோட்பாடுகளின் வளர்ச்சிக்கு இயைப பரிசோதனை முயற்சிக்கு உட்படுத்தியமை. (பின்நவீனத்துவ நாவல்கள்)

3. தமிழ் நாவல் இலக்கிய வளர்ச்சியில் பின்வரும் நாவலாசிரியர்கள் பற்றி மதிப்பிடுக.
    - மயூரம் வேதநாயகம் பிள்ளை
        - ♦ தமிழில் முதல் நாவலான பிரதாப முதலியார் சரித்திரத்தைத் தந்தவர்.
        - ♦ சுகுணசுந்தரி என்ற நாவலையும் எழுதியுள்ளார்.
        - ♦ இவரது நாவல்கள் அதிகளவான அறக்கருத்துக்களையும் நீதிப் போதனைகளையும் உள்ளடக்குவதாக அமைந்தமை.
        - ♦ பிரதாப முதலியார் சரித்திரம்
            - அன்னிய மோகம் அடிமைத்தனத்திற்கு வழிவகுக்கும் என்ற கருத்தினடிப்படையில் எழுதப்பட்டது.
        - ♦ பிரதாப முதலியார் சரித்திரம் அறிவுரைகளும், அறவுரைகளும் நிரம்பியதாகக் காணப்படுகிறதே ஒழிய நாவலுக்குரிய பண்புகள் இதில் வெளிப்படவில்லை என விமர்சிக்கப்படுகிறது.
    - ராஜமய்யர்
        - ♦ நாவலுக்குரிய பண்புகள் நிறைந்த, கலை நோக்கில் முதல் நாவல் எனத்தக்க கமலாம்பாள் சரித்திரம் என்ற நாவலை எழுதியவர்.

♦ இயல்பான பேச்சு வழக்கைக் கையாண்டு எழுதப்பட்ட வாழ்வியலையும், பழக்கவழக்கங்களையும் பிரதிபலிப்பதாக உள்ளமை சிறப்புக்குரியது.
♦ பிராமணச் சமூகத்தினரின் நடைமுறை வாழ்க்கையில் எழும் பல்வேறு சிக்கல்களை நடப்பியல் உணர்வோடு எடுத்துக்காட்டியுள்ளார்.
♦ வாசகர்கள் எளிதில் உணருமாறு கதை மாந்தர்களின் மனவுணர்வுகள் எடுத்துக்காட்டியுள்ளமை.

- மாதவையா
  ♦ பத்மாவதி சரித்திரம் (1898), முத்து மீனாட்சி, விஜயமார்த்தாண்டம் ஆகிய நாவல்களை எழுதினார்.
  ♦ தமிழ் நாவல்களின் உள்ளீடு, வடிவம் இரண்டையும் வளர்த்தவர்.
  ♦ தெளிவான பாத்திரப்படைப்பு.
  ♦ நாவல்களின் நிகழ்ச்சிகளை ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைத்துச் சொல்லிச் செல்பவை.
  ♦ தமிழ் நாவல்களின் புரட்சிகரமான சிந்தனைகளுக்கு வித்திட்டவர்.

4. 1950இற்குப் பின்னரான தமிழ் நாவல்கள் பற்றி கருத்துரைக்க.

- தேசிய உணர்வு
  ♦ கல்கி - அலையோசை
  ♦ இந்திரா பார்த்தசாரதி - சுதந்திரபூமி
- சமூக, பொருளாதார மாற்றங்களை வெளிப்படுத்தியவை.
  ♦ ராஜம் கிருஷ்ணன் - அமுதமாகி வருக
  ♦ சுந்தரராமசாமி - ஒரு புளியமரத்தின் கதை
- வட்டார நாவல்கள்
  ♦ சங்கரராம் - மண்ணாசை
  ♦ ஆர். ஷண்முகசுந்தரம் - நாகம்மாள்
- வரலாற்று நாவல்கள்
  ♦ அகிலன் - கயல்விழி
  ♦ சாண்டில்யன் - யவனராணி
  ♦ மணிவண்ணன் - மணிபல்லவம்
- முற்போக்கு நாவல்கள்
  ♦ சிதம்பரரகுநாதன் - பஞ்சமும் பசியும்
  ♦ ஜெயகாந்தன் - உன்னைப்போல் ஒருவன்
- நவீனத்துவ நாவல்கள்
  ♦ சுந்தரராமசாமி - ஜே. ஜே. சிலகுறிப்புகள்
- உளவியல் நாவல்கள்
  ♦ மணிசேகரன் - தென்னங்கீற்று
- பின் நவீனத்துவ நாவல்கள்
  ♦ தமிழவன் - ஏற்கனவே கொல்லப்பட்ட மனிதர்கள்.
- பெண்ணிய நாவல்கள்
  ♦ ராஜம் கிருஷ்ணன் - வீடு
- தலித்திய நாவல்கள்
  ♦ இமையம் - கோவேறுக் கழுதை
- விஞ்ஞானப் புனைவுகள்
  ♦ சுஜாதா - என்பெயர் இந்திரா

# ஈழத்து இலக்கிய வரலாறு

## ஆங்கிலேயர் காலம்

**அறிமுகம் :**

கி.பி. 1796 இல் இலங்கையின் கரையோரப் பகுதிகளை ஒல்லாந்தரிடமிருந்து கைப்பற்றிய கி.பி. 1796 இல் ஆங்கிலேயர் 1815 இல் கண்டியைக் கைப்பற்றியதுடன் முழு இலங்கையையும் அவர்கள் தமது ஆட்சியின் கீழ் கொண்டுவந்தனர். 1948 இல் இலங்கை சுதந்திரம் அடையும் வரை அவர்களது ஆட்சிக்காலத்தில் நாட்டின் அரசியல், சமூகம், பொருளாதாரம், கலாசாரம், சமயம் ஆகிய துறைகளில் அதிக மாற்றங்கள் நிகழ்ந்தன. இம்மாற்றங்கள் மக்கள் வாழ்விலும் தாக்கம் செலுத்தின. அத்தாக்கம் இலக்கியங்களிலும் பிரதிபலித்தது. இத்தகைய காலப்பகுதி ஈழத்துத் தமிழிலக்கிய வரலாற்றில் ஆங்கிலேயர் காலம் எனப்படுகிறது.

**காலப்பின்னணி**

- நிலமானியச் சமூக அமைப்பின் சிதைவு.
- முதலாளித்துவ பொருளாதார சமூக அமைப்பின் தோற்றம்.
- சமூக ஏற்றத்தாழ்வின் இடைவெளி அதிகரிப்பு.
- மத்தியதரவர்க்கத்தின் தோற்றம்.
- ஆங்கிலக்கல்வியின் முக்கியத்துவம்.
- ஜனநாயகக் கல்வி, கல்வி மேம்பாடு ஏற்பட்டமை.
- அச்சியந்திரத்தின் தோற்றம்.
- சமய மாற்றமும் சமயப் பிரச்சாரமும்.
- அரச தொழில் முறை நாட்டம் அதிகரித்தமை.
- மத்தியதர வர்க்கச் சிந்தனையாளர்களின் எழுச்சி.
- உரைநடை இலக்கிய வளர்ச்சி

**இலக்கியங்கள்**

- **மரபிலக்கியங்கள்**

  I மரபுவழி இலக்கியங்களை வகைப்படுத்தி நோக்குக.

  அ) சமயச் சார்பானவை :-

  ♦ சைவமதச் சார்பு - இளசைப் புராணம்
  நகுலமலைக் குறவஞ்சி
  நல்லூர் கந்தசுவாமி கிள்ளைவிடுதூது
  செல்வச் சந்நிதி பிள்ளைத் தமிழ்
  மறைசைக் கலம்பகம்

  ♦ கத்தோலிக்க மதச் சார்பு - ஞானானந்த புராணம்

- புரட்டஸ்தாந்து மதச் சார்பு- திருவாக்குப் புராணம்
- இஸ்லாமிய மதச் சார்பு - முகியித்தீன் புராணம்
  நவரத்தினத் திருப்புகழ்
  முகியித்தீனாண்டகை பேரில் ஆசிரிய விருத்தம்
  சாகுல் ஹமீது ஆண்டகையவர்கள் பேரில்
  முனாஜாத்து
  சரந்தீவு மாலை
  ஞான அகீதாக் கும்மி
  நாச்சியார் மாலை
  சந்தத் திருப்புகழ்

ஆ) தனிமனிதரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டது :-

- அருளம்பலக் கோவை

II பிரபந்த வடிவத்தில் நவீன உள்ளடக்கம் :

- தத்தைவிடு தூது
- கனகி புராணம்
- கோட்டுப் புராணம்
- தால புராணம்

- **நவீன இலக்கியங்கள்**

  I நாவல் - அசன்பே சரித்திரம் (1885)
  ஊசோன் பாலந்தை கதை (1891)
  மோகனாங்கி (1895)

2. மரபிலக்கியங்கள் தவிர்ந்த பிற முயற்சிகளை வகைப்படுத்தி நோக்குக.

- துண்டுப் பிரசுரங்கள், கண்டனங்கள்
- பதிப்புகள்
- அகராதிகள் - லெவிஸ்பால்டிங் வெளியிட்ட தமிழ் அகராதி மைரன் உவின்சிலோ பதிப்பித்த தமிழ் ஆங்கில அகராதி விசுவநாத பிள்ளையின் தமிழ் - ஆங்கில அகராதி அ. குமாரசுவாமிப் புலவரின் இலக்கிய சொல்லகராதி.
- மொழி பெயர்ப்புகள் - <u>தமிழிலிருந்து ஆங்கிலத்திற்கு</u>
  தத்துவக் கட்டளை
  சிவஞான போதம்
  சிவப்பிரகாசம்
  அரிச்சந்திர நாடகம்
  <u>ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு</u>
  பைபிள் மொழிபெயர்ப்பு
- தமிழ் இலக்கிய வரலாறு - தமிழ் புளுராக் (ஆங்கிலநூல்)
  பாவலர் சரித்திர தீபகம்
- ஆய்வு நூல்கள் - ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழர்.

- பாடநூல்கள் - வேதப்பொழிப்பு
  வேதவினாவிடை
  விவிலியத்தின் சில பகுதிகள்
  பாலபாடங்கள்
  இலக்கணச் சுருக்கம்
  இலக்கண வினாவிடை
  சைவவினாவிடை
  நித்திய கரும விதி
- அறிவியல்சார் பாடநூல்கள் - இரண வைத்தியம்
  மனுஷ அங்காதி பாதம்
  வைத்தியாகரம்
  இந்து பதார்த்த சாரம்
- நாடகம் - <u>விலாசம்</u>
  பூதத்தம்பி விலாசம்
  பதிவிரதை விலாசம்
  <u>சபா</u>
  எஸ்தாக்கியர் சபா
  ஞானசவுந்தரி நவதாஸ சபா
  சவீன கன்னி சபா
  <u>டிராமாமோடி</u>
  சங்கிலியன் டிராமா
  யோசேப்பு டிராமா

3. பத்தொன்பதாம் நூற்றாண்டு இலங்கைத் தமிழ் இலக்கியப் போக்கினை விளக்குக.
   - **மரபுசார்ந்த இலக்கியங்கள்**
     - புராணம், ஊஞ்சல், கலம்பகம், கோவை, சதகம், அகவல், அந்தாதி, குறவஞ்சி, பதிகம், கும்மி போன்ற பிரபந்த வடிவங்கள் கையாளப்பட்டன.
     - சமயம், தத்துவப் பொருள் சார்ந்து எழுதப்பட்டமை.
   - **மரபு ரீதியான இலக்கிய வடிவங்களில் புதிய கருத்துக்களைப் புகுத்தியமை.**
     - கனகிபுராணம்
     - தாலபுராணம்
     - கோட்டுப்புராணம்
     - தத்தைவிடுதூது
   - **அறிவியல் சார்ந்த இலக்கிய வளச்சி**
     - மனுஷ அங்காதி பாதம்.
     - வைத்தியாகாரம்.
     - மனுஷசுகரணம்.
     - கெமிஸ்தம்
     - இந்து பதார்த்த சாரம்
     - அறிவியல் - வான சாஸ்திரம், வைத்தியம் (ஆங்கிலம்)

- **உரைநடை வளர்ச்சி**
    - ♦ செம்மையான உரைநடை
    - ♦ கண்டன உரைநடை
    - ♦ ஆக்க இலக்கிய நடை
    - ♦ ஆங்கிலம், தமிழ், வடமொழி, விரவிவரும் நடை
    - ♦ பாடப்புத்தக நடை
    - ♦ பத்திரிகை நடை

    எனப் பலவகை உரைநடைப் பாங்குகள் கையாளப்பட்டமை.
- **அகராதி முயற்சிகள்**
    - ♦ தமிழ் - தமிழ் அகராதி
    - ♦ தமிழ் - ஆங்கில அகராதி
    - ♦ ஆங்கிலம் - தமிழ் அகராதி
- **மொழி பெயர்ப்புகள்**
    - ♦ அரிச்சந்திர நாடகம்
    - ♦ குறிஞ்சிப்பாட்டு
    - ♦ யாழ்ப்பாண வைபவமாலை
    - ♦ பொருநராற்றுப்படை

    (மேற்கண்ட நான்கும்: புறக்காட்சி)
    - ♦ வேதாகமம் - ஆங்கிலம், தமிழ்
- **பத்திரிகைத்துறை வளர்ச்சி.**
    - ♦ உதய தாரகை, சத்திய வேத பாதுகாவலன், இந்துசாதனம், உதயபானு, இலங்கை நேசன், பாலியர் நேசன், சன்மார்க்க போதினி, சைவாபிமானி, விஞ்ஞானவர்த்தினி, முஸ்லிம் நேசன், வைத்திய விசாரணி போன்ற பத்திரிகைகள் வெளிவந்துள்ளமை.
- **பாடநூல்கள் எழுந்தமை**
    - ♦ பால பாடங்கள், சைவ வினாவிடைகள், இலக்கணச் சுருக்கம், இலக்கண வினாவிடைகள், இலங்கைப் பூமி சாஸ்திரம்.
- **நாவல் இலக்கியங்கள் - புனைகதை முயற்சி ஆரம்பமாகியமை.**
    - ♦ அஸன்பே சரித்திரம்
    - ♦ மோகனாங்கி
- **ஆய்வு நூல்கள் தோன்றியமை**
    - ♦ தமிழ் புளூராக்
    - ♦ பாவலர் சரித்திர தீபகம்
    - ♦ திராவிடப் பிரகாசிகை
- **நாடக முற்சிகள்**
    - ♦ சபா நாடகங்கள்
    - ♦ இசைநாடகம்
    - ♦ விலாசம்
    - ♦ கூத்து
- **இலக்கண நூல்கள்**
    - ♦ நன்னூற் சுருக்கம்
    - ♦ தமிழ் வியாகரணம்
    - ♦ இலக்கணத்தெளிவு
    - ♦ இலக்கணச் சந்திரிகை

4. பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஈழத்தில் நிகழ்ந்த மரபிலக்கிய முயற்சிகள் பற்றித் தெளிவுபடுத்துக.

- பழைய இலக்கிய வடிவங்கள் பயன்படுத்தப்பட்டமை.
  புராணம், மாலை, அந்தாதி, பதிகம், ஊஞ்சல், தூது
- பழைய வடிவத்தில் புதிய பாடுபொருளைப் பயன்படுத்தியமை.
  கனகிபுராணம், கோட்டுப்புராணம், தால புராணம்
- சமயம் சார்ந்த, தனிநபர் சார்ந்த பாடுபொருள்
- சோதிட வினாவிடை, சோதிட மாலை சோதிட நூல்கள் எழுதும் முயற்சி
- இலக்கண, இலக்கிய உரைகள்
- பதிப்பு முயற்சி (பழைய நூல்கள்)
- மொழி பெயர்ப்பு - பழைய நூல்கள் மொழி பெயர்க்கப்படல்

5. I ஆங்கிலேயர் காலத்தில் ஈழத்தில் எழுந்த மரபுசார் இலக்கியங்களின் பண்புகள் யாவை?

- வடிவ ரீதியாகவும் பொருள் ரீதியாகவும் மரபைப் பேணும் இலக்கியங்களாக பல இலக்கியங்கள் அமைந்தன.
- இவை புராணங்கள், தூது, அம்மானை, பிள்ளைத் தமிழ், நான்மணி மாலை, மும்மணிக் கோவை, பள்ளு, குறவஞ்சி, ஊஞ்சல் முதலான வடிவங்களிலே பாடப்பட்டன.
- இவற்றில் அதிகமானவை மதம் சார்ந்தவையாக இருந்தன. கிறிஸ்தவம், சைவம், இஸ்லாம். இவற்றில் அதிகமானவை தலப்பெருமை பற்றியும் தெய்வங்களைப் பற்றியும், சைவசமய உட்பொருள் பற்றியும் அமைந்தன.
- சில மரபிலக்கிய வடிவங்கள் சில பிரபுக்கள் மீது அகத்துறை சார்ந்த பாடங்களைப் பாடுவனவாக அமைந்தன.
- மரபுரீதியான சில இலக்கிய வடிவங்களுக்கூடாக புதுமைநாட்டமும், சமகாலச் சிந்தனை உணர்வும் வெளிப்படும் இலக்கியப் போக்கொன்றும் நிலவியது.

| | | |
|---|---|---|
| தத்தைவிடுதூது | - | மரபுவழிப்பிரபந்த வடிவத்தில் அக்கால சமூகத்தில் பெண்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை, அடக்குமுறைகளை எடுத்துக் காட்டுகின்றது. |
| கனகிபுராணம் | - | தேவதாசியான கனகியின் பேரில் பாடப்பட்ட இந்நூல் தனது காலப் பிரபுக்களின் ஒழுக்கக் கேட்டை நகைச்சுவையுடன் காட்டுவது. |
| கோட்டுப்புராணம் | - | அக்காலச் சமூகத்தில் நீதிமன்றங்களில் நிகழ்ந்த அவலங்களையும் அங்கு தொழில் புரிந்த சட்டத்தரணிகளால் ஏற்பட்ட தொல்லைகளையும் காட்டுகின்றது. |

II பத்தொன்பதாம் நூற்றாண்டில் உரைநடையின் பன்முகப்பட்ட வளர்ச்சி நிலைகளைத் தெளிவுபடுத்துக.

- உரைநடைசார்ந்த நூல்கள்
  - ♦ மதப்பிரசார நூல்கள்
  - ♦ கண்டன நூல்கள்
  - ♦ பாடநூல்கள்
  - ♦ செய்யுள் இலக்கியங்களை உரைநடையில் எழுதும் முயற்சி

- பத்திரிகைத் துறை வளர்ச்சி
- மொழி பெயர்ப்பு முயற்சி
- இலக்கிய முயற்சி (புனைகதை முயற்சி)
- இலக்கிய வரலாற்றினை எழுதியமை.
- பதிப்பு முயற்சி

6. ஆங்கிலேயர்கால இலக்கியப் பண்புகள் பற்றி விளக்குக.
   - மரபுசார் இலக்கியங்களின் தொடர்ச்சி
   புராணங்கள், தூது, அம்மானை, பிள்ளைத்தமிழ், நான்மணிமாலை, மும்மணிக் கோவை, பள்ளு, குறவஞ்சி, ஊஞ்சல், முதலான வடிவங்களில் இலக்கியங்கள் அதிகம் தோன்றுதல்.
   - இவை பெரும்பாலும் கிறிஸ்தவ, சைவ, இஸ்லாமிய மதம் சார் இலக்கியங்களாக அமைந்தன.
   - மதம்சார் இலக்கிய வெளிப்பாடுகளில் கண்டனங்கள், துண்டுப்பிரசுரங்கள் என்பனவும் முக்கியம் பெறுகின்றன.
   - சில மரபுசார் இலக்கியங்கள் தனிமனிதப் போற்றுகையாக அமைந்தன.
   - மரபுசார் இலக்கியங்களில் சில பொருள் அடிப்படையில் சமூகச் செய்திகளை, சமூகச் சீரழிவுகளை வெளிப்படுத்துவனவாக அமைந்தன. தத்தை விடுதூது, கனகிபுராணம், கோட்டுப்புராணம், தால புராணம்.
   - வசனநடை வளர்ச்சி
     - ♦ பல்வேறுபட்ட துறையின் துண்டுப் பிரசுரங்களும் இலகு வசன நடையில் எழுதப்பட்டன. அவை தனித்துவ நடையைப் பேனின.
     - ♦ பத்திரிகைத்துறையின் வளர்ச்சியால் புதியதொரு வசனநடை உருவாகி வளர்ந்தது.
     - ♦ சமயக் கண்டனங்களும் துண்டுப் பிரசுரங்களும் இலகு வசன நடையில் எழுதப்பட்டன. அவை தனித்துவ வசன நடையைப் பேனின.
     - ♦ பல்துறைசார் அறிவியல் நூல்களின் வளர்ச்சியும் தமிழ் உரைநடையை மேலும் தெளிவும் செழுமையும் பெற்று வளரச் செய்தது.
     - ♦ பழந்தமிழ் நூல்களும் வசன நடையில் எழுதப்பட்டன.
   - பழைய செய்யுள் நூல்களுக்கு உரையெழுதும் மரபும் வளர்ச்சியடைந்தது.
   - அச்சியந்திரப் பயன்பாட்டின் விளைவால் பண்டைத் தமிழ் நூல்கள் பல பதிப்பிக்கப்பட்டன. இவை பதிப்பு நுட்பங்களுக்கு அமையச் செய்யப்பட்டன.
   - நவீன உரைநடை இலக்கிய வடிவமான நாவல் இக்காலத்தில் தோற்றம் பெறுகின்றது.
     - ♦ அசன்பே சரித்திரம் ஆரம்பகால நாவல்களுக்குரிய பண்புகளோடு முதல் நாவலாக வெளிவந்தது.
     - ♦ இதனையடுத்து ஊசோன் பாலந்தை கதை, மோகனாங்கி ஆகிய நாவல்கள் வெளிவந்தன.
   - பல்துறை சார்ந்த நூல்களின் வளர்ச்சி ஏற்படுகின்றது. பல்துறைசார் அறிவியல் துறைகள் வளர்ச்சியடையலாயின. வைத்தியம், இரசாயனம், வானசாஸ்திரம், பூமிசாஸ்திரம் சார்ந்த அறிவியல் நூல்கள் வெளிவந்தன.
   - இலக்கியம், இலக்கணம், பண்பாடு சார்ந்த துறைகளை ஆய்வு நோக்கில் அணுகும் முயற்சிகள் தொடங்கின. நூல்களைத் தொகுத்தல், பட்டியல் தயாரித்தல், வாய்மொழி வழக்காறுகளைத் தொகுத்தல் முதலிய ஆய்வியல் பணிகள் இடம் பெற்றன.

- இலக்கிய விமர்சனம் - இக்கால இலக்கிய உரைகாரர்கள் மூலம் இலக்கிய விமர்சன மரபொன்று உருவாகின்றது.
    - ♦ சிறப்பாக புராண படன மரபு, கம்பராமாயண விளக்க மரபில் முக்கிய இடம் பெற்றவர்களான வித்துவ சிரோன்மணி பொன்னம்பலப்பிள்ளை, உடுப்பிட்டி சிவசம்புப் புலவர், வல்வை வயித்தியலிங்கம் பிள்ளை ஆகியோர்.
    - ♦ பள்ளு, குறவஞ்சி, அம்மானை, கும்மி முதலான நாட்டார் நிலைப்பட்ட பாடல் வடிவங்கள் இக்காலத்தில் பரவலாகப் பயன்படுத்தப்பட்டன.
    - ♦ சமூகச் சீர்திருத்தம், சமயக் கண்டனம் முதலானவற்றைப் பாடக் கும்மி முதலான வடிவங்கள் பயன்பட்டன.

7. பத்தொன்பதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் அச்சியந்திரத்தின் பங்களிப்பு யாது?
    - 19ஆம் நூற்றாண்டில் கல்வி, கலை, இலக்கியம், பண்பாட்டு முயற்சிகளில் சாதனை புரிய அச்சியந்திரம் உந்துசக்தியாக இருந்தது.
        - ♦ ஈழத்தவரின் இலக்கியச் சாதனைகள் பலவற்றிற்கு அச்சியந்திர வசதி அடிப்படையாக அமைந்தது.
    - வித்தியாநுபாவன முதலான அச்சியந்திரசாலைகள் தமிழ்மொழி, இலக்கியம், இலக்கணம், இந்து சமயம் முதலான துறைகளில் ஈழம் புதுமைகள் புரிய உதவின.
    - இலக்கண, இலக்கிய, நாடக, சமய நூல்கள் குறைந்த செலவில் அதிக பிரதிகள் வெளியிடப்பட்டதால் அவற்றைக் கற்றவர்கள் வாங்கிப் படிக்கும் வழக்கம் அதிகரித்தது.
    - ஏட்டுச் சுவடிகளில் முடங்கிக் கிடந்த பழந்தமிழ் நூல்கள் அச்சுருப்படுத்தப்பட்டுப் பேணப்பட அச்சியந்திரமே காரணமாக அமைந்தது.
        - ♦ ஆறுமுக நாவலர், சி. வை. தாமோதரம் பிள்ளை முதலானோர் பலநூல்களை அச்சேற்றினர்.
    - அச்சியந்திரத்தின் வருகையால் பத்திரிகைகள் பல உருவாகி பொதுமக்களின் தொடர்பு ஊடகமாகப் பயன்பட்டன.
        - ♦ அவை இலக்கண, இலக்கிய ஆக்கங்கள், கண்டனங்கள், கட்டுரைகள் முதலானவற்றைப் பிரசுரிப்பதற்கான களங்களாக விளங்கின.
        - ♦ உரைநடை வளர்ச்சிக்கும் இப்பத்திரிகைகள் அதிக பங்காற்றின.
    - அச்சியந்திர வசதி காரணமாக மிசனரிமாரும் நாவலர் முதலானோரும் தமது பாடசாலைகளில் கற்கும் மாணவர்களுக்கென பலவிதமான பாடநூல்களையும் அச்சிட்டு வெளிப்படுத்தினர். இது கல்வி வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியது.

8. பத்தொன்பதாம் நூற்றாண்டு ஈழத்தமிழ் இலக்கிய வளர்ச்சியில் பத்திரிகைகள் பெறும் முக்கியத்துவத்தினை விளக்குக.
    - மதப்பிரசாரத்திற்காக வெளிவந்த பத்திரிகைகள் அதனையும் தாண்டிப் பல்வேறு விடயங்கள் தொடர்பாகவும் எழுதப் புகுந்தமை.
        - ♦ உதய தாரகை, கத்தோலிக்க பாதுகாவலன், இலங்காபிமானி, இலங்கைநேசன், சைவாபிமானி, சைவ உதய பானு, இந்து சாதனம், முஸ்லிம் நேசன், சைபுல் இஸ்லாம்.
    - இலக்கியம் பரந்துபட்ட மக்களைச் சென்றடைந்தமை.
    - தமிழ் இலக்கியப் பாத்திரங்களாகவும், வாசகராகவும் பொதுமக்கள் உள்வாங்கப்பட்டமை.

- இலக்கியங்கள் வெளிவருவதற்கான பிரசுரகளமாகப் பத்திரிகைகள் பயன்பட்டமை.
- ஆக்க இலக்கியங்கள் வளர்ச்சி பெற்றமை.
- கட்டுரை இலக்கியம் என்றொரு புதிய முறை உருவாகியமை.
- இலக்கியம் எளிமையும், புதுமையும் அடைந்தமை.
- உரைநடை பல்வகைப் போக்கில் வளர்ச்சி பெற்றமை.
- உலக விடயங்களைச் சாதாரண மக்களும் அறிவதற்கான வாய்ப்பு ஏற்பட்டமை.

9. ஆறுமுக நாவலரின் இலக்கியப் பங்களிப்புப் பற்றி விபரிக்குக.
    - காலத்தின் தேவையையும் மக்களின் பயன்பாட்டையும் கருத்திற்கொண்டு உரைநடையைக் கையாண்டமை.
        - ♦ அவரது உரைநடையின் தன்மைகள் :-
            - கடின சந்தி விகாரங்களைக் களைந்து, இலக்கண வழுக்களற்ற வகையில் உரைநடையைக் கையாண்டமை.
            - நிறுத்தக் குறியீடுகளைப் பயன்படுத்தியமை.
    - பல்வேறு வகை உரைநடைகளைக் கையாண்டமை.
    - நாவலரின் கண்டனப் பிரசுரங்கள்.
    - அவரது பத்திரிகைப் பணி
    - இலக்கிய, இலக்கண, சமயம் சார்பான நூல்களைப் பதிப்பித்தமை.
        - ♦ பதிப்பில் அவர் கையாண்ட நுட்பங்கள்.
    - வசன நூல்களை எழுதியமை.
    - பழைய நூல்களுக்கு உரை எழுதியமை.
    - பாடநூல்களை எழுதியமை.
    - நாவலரின் செய்யுள் நூல்கள் - மரபுரீதியான போக்கு.

10. சி. வை. தாமோதரம்பிள்ளையின் பதிப்பு முயற்சிகள் பற்றி மதிப்பிடுக.
    - பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ் நூற் பதிப்புத் துறையில் ஆறுமுக நாவலருக்கு அடுத்த ஒரு கட்டத்தை சி.வை. தாமோதரம்பிள்ளை பிரதிபலிக்கின்றார்.
        - ♦ அவர் பதிப்பித்த பழந்தமிழ் நூல்கள்:
            - குமரகுருபரரின் - நீதிநெறி விளக்கம் (1854)
            - புத்தமித்திரனாரின் - வீரசோழியம் (1881)
            - கச்சியப்பரின் - தணிகைப்புராணம் (1883)
            - இறையனார் அகப்பொருள் உரை (1883)
            - தொல்காப்பியம் பொருளதிகாரம் (1885)
            - தோலாமொழித் தேவரின் சூளாமணி (1886)
            - கலித்தொகை (1887)
            - வைத்தியநாத தேசிகரின் இலக்கண விளக்கம் (1889)
            - தொல்காப்பியம் எழுத்ததிகாரம் நச்சினாக்கினியம் (1892)
    - பதிப்புப் பணியிலே ஈடுபட்ட போது ஆய்வு நோக்கோடு செயற்பட்டமை.
    - பதிப்புகளின் போது அவர் கடைப்பிடித்த வழிமுறைகள்:
        - ♦ காலவாராய்ச்சி, சரித்திரவுணர்வு, ஒப்பியல் நோக்கு, திறனாயும் தன்மை, ஆய்வறிவு நேர்மை, முறையியல் நுட்பம்.
    - நூற்பதிப்புப் பணியில் ஈடுபட்ட பிறருக்கும் உதவி புரிந்தமை.

## தற்காலம்

**அறிமுகம் :**

இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாற்றில் இருபதாம் நூற்றாண்டிலும் அதன் தொடர்ச்சியாக அமையும் இருபத்தோராம் நூற்றாண்டிலும் தோன்றிய இலக்கியங்களை மையப்படுத்திய காலமே தற்காலம் எனப்படுகிறது. காலமாற்றமும் சமூக, அரசியல் பொருளாதார, கலாசார மாற்றங்களும் மனித வாழ்வின் மீது ஏற்படுத்தும் தாக்கத்தின் விளைவாக இலக்கியப் பொருளும் அதன் வெளிப்பாட்டு வடிவமும் மாற்றமுற்று நவீன இலக்கியமாகப் பரிமாணம் கொண்டதே தற்காலமாகும்.

**காலப்பின்னணி**

- ஈழத்திலே ஆங்கிலேயர் ஆட்சி நிலவிய சூழலில் அதன் செல்வாக்கிற்கு உட்பட்டிருந்த மக்களது வாழ்க்கை பல்வேறு காரணிகளால் மாற்றத்தை நோக்கி உந்தப்பட்டது. இந்தப் பின்புலத்திலேயே இலக்கியமும் மாற்றத்தை அடைந்தது.
- 1948 வரையான ஆங்கிலேயர் காலத்தினதும், அதன் பின்னரான சுதந்திர காலத்தினதும் செல்வாக்கே இக்கால இலக்கியத்தை நிர்ணயித்தது எனலாம்.
- குறிப்பாக ஆங்கிலக்கல்வி விருத்தி, யாவருக்கும் கல்வி, சுயமொழிக்கல்வி மேம்பாடு, அச்சியந்திர வளர்ச்சி என்பவற்றினூடாக எழுச்சி பெற்ற மத்தியதர வர்க்கத்தின் தோற்றப்பாடும் முக்கியத்துவமும் மற்றும் தொழில்வாய்ப்பு, பிரதேசரீதியான கல்வி, எழுச்சி போன்ற காரணிகளால் தற்கால இலக்கியம் விரிவு பெற்றது.

### கவிதை

1. நவீன கவிதையின் இயல்புகள் யாவை? சுருக்கமாகக் குறிப்பிடுக.
    - சமூக நோக்கு
    - பொதுமக்கள் நலன், மனிதாபிமானம்
    - ஆதிக்க எதிர்ப்பு (கடவுள், அரசு, ஆணாதிக்கம்)
    - மரபுப் புதுமை
    - தன்னனுபவ வெளிப்பாடு
    - எளிமை
    - தற்புதுமை

2. நவீன கவிதை தோற்றம் பெற்ற பின்னணி எத்தகையது? விளக்குக.
    - ஆங்கிலேயர் ஆட்சியில் ஏற்பட்ட சமூக, அரசியல், பொருளாதார மாற்றங்கள் - பரவலடைதலும்.
        - ♦ இலவசக் கல்வி முறை அறிமுகம்.
          (கிராமத்து இளைஞர்கள் கல்வி கற்கும் வாய்ப்பு)
        - ♦ கம்யூனிஸ்ற் கட்சியின் தோற்றம். (1943)
        - ♦ சோல்பரிக் குழுவினர் வரவு (1947)

- ♦ சமூக சீர்த்திருத்த நோக்கம்.
- ♦ மத்தியதர வர்க்கம் உருவாக்கம்.
- ♦ தேசிய உணர்வின் முகிழ்ப்பு.

3. ஈழத்து நவீன கவிதைப் போக்கின் ஊற்றுக்களாக அமைபவர்கள் யார்?
   - பாவலர் துரையப்பாபிள்ளை
   - அல்வையூர் மு. செல்லையா
   - நவாலியூர் சோமசுந்தரப் புலவர்
   - வித்துவான் வேந்தனார்
   - மு. நல்லதம்பி
   - சுவாமி விபுலானந்தர்
   - பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை
   - புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை
   - மீனாட்சியம்மாள் நடேசய்யர்

4. ஈழத்து நவீன கவிதைப்போக்குப் பற்றி விளக்குக. (1940 - 2000 வரை)
   - 1940 களின் பிற்பகுதி தொடக்கம் 1950 வரை
     - ♦ மறுமலர்ச்சி குழுவினர்
       - மஹாகவி
       - நாவற்குழி நடராசன்
       - அ.ந. கந்தசாமி
     - ♦ கவிதைப்பொருள்
       - காதல்
       - கிராமியம்
       - குடும்பம்
       - சமூகம், இயற்கை, 'கவிதை'
     - ♦ புதியவெளிப்பாட்டு முறை
       - பேச்சோசைப்பாங்கு
   - 1950 தொடக்கம் 1960 வரை
     - ♦ முன்னைய போக்கின் தொடர்ச்சியும் முன்னைய கவிஞர்களின் முதிர்ச்சியும்.
     - ♦ புதிய தலைமுறைக் கவிஞர்கள்
       - நீலாவணன்
       - இ.முருகையன்
       - காசி ஆனந்தன்
       - இராஜபாரதி
       - ஜீவா ஜீவரத்தினம்
       - புரட்சிக் கமால்
       - அண்ணல்
       - யுவன்
       - சில்லையூர் செல்வராஜன்

- ♦ புதிய பொருள்
  - மொழி உணர்ச்சி
  - சமூக நோக்கு
  - ஆன்மீகப் பார்வை
  - இலட்சிய நோக்கு
- 1960 தொடக்கம் 1970 வரை
  - ♦ முற்போக்குக் கவிஞர்களின் வரவு
    - பசுபதி
    - நு.ஃமான்
    - புதுவை இரத்தினதுரை, சண்முக சிவலிங்கம்
  - ♦ மலையகக் கவிஞர்கள்
    - தமிழோவியன்
    - குறிஞ்சித்தென்னவன்
  - ♦ புதுக்கவிதை வேரூன்றியமை
    - தா. இராமலிங்கம்
    - தருமு சிவராம்
    - மு. பொன்னம்பலம்

    } பிரமின்
  - ♦ புதிய வெளிப்பாட்டுமுறை
    - முன்னைய தொடர்ச்சியும்
    - செய்யுள் அடி, அமைப்பு மாற்றமும்
- 1970 தொடக்கம் 1980 வரை
  - ♦ புதுக்கவிதை வடிவம் செல்வாக்குப் பெறுதல்.
  - ♦ கவிஞர்கள்
    - வ. ஐ. ச. ஜெயபாலன்
    - சிவ சேகரம்
    - சு. வில்வரத்தினம்
    - ஷம்ஸ்
    - திக்வெல்லை கமால்
    - செந்தீரன்
    - சௌபனி சிவம்
  - ♦ தென்னிலங்கை முஸ்லிம் கவிஞர்களின் வரவு
    - ஷம்ஸ்
    - திக்வெல்லை கமால்
- 1980 தொடக்கம் 2000 வரை
  - ♦ இன முரண்பாட்டின் உச்ச விளைவுகள்
    - மரணத்துள் வாழ்வோம். (பலரது கவிதைகள் கொண்ட தொகுப்பு)
  - ♦ பெண்ணிய நோக்கு
    - சொல்லாத சேதிகள் (பலரது கவிதைகள் கொண்ட தொகுப்பு)
  - ♦ புகலிட அனுபவங்கள்
    - கி.பி. அரவிந்தன் - கனவின் மீதி
    - வ.ஐ.ச. ஜெயபாலன் - ஒரு அகதியின் பாடல்
    - இளவாலை விஜயேந்திரன்

5. 1980 தொடக்கம் இன்றுவரை ஈழத்து நவீன கவிதை வளர்ந்தவாற்றைத் தெளிவுபடுத்துக.

- இனமுரண்பாட்டு நெருக்கடியும், விளைவுகளும் ஏற்படுத்திய அனுபவங்களின் வெளிப்பாடும்.
  - ♦ சேரன் - யமன், காடாற்று
  - ♦ சோலைக்கிளி - வாத்து, அவணம்
  - ♦ றஸ்மி - ஈசேனின் பாம்புகள்
  - ♦ பா. அகிலன் - சரமகவி
  - ♦ சிவசேகரம் - முட்கம்பித்தீவு
  - ♦ சோ. பத்மநாதன் - வடக்கிருத்தல்
  - ♦ அவுரப் சிஹாப்தீன்
  - ♦ ஓட்டமாவடி அரபாத்
  - ♦ புதுவை ரத்தினதுரை - பூவரசம் வேலிகளும் புலுனிக் குஞ்சுகளும்
  - ♦ ஸ்ரீ பிரசாந்தன் - அம்புலியின் கவிதைகள்
  - ♦ மேஜர் வானதியின் கவிதைகள்
  - ♦ தமிழ்நதியின் கவிதைகள்
  - ♦ மீசான் கட்டையின் மீள எழும் பாடல்கள் (பலரது கவிதைகள் கொண்ட தொகுப்பு)
- புகலிட அனுபவங்களின் வெளிப்பாடு.
  - ♦ ஆனந்த பிரசாத் கவிதைகள்
  - ♦ கி.பி. அரவிந்தன் - கனவின் மீதி
  - ♦ திருமாவளவன் - பனிவயல் உழவு
- பெண்ணியச் சிந்தனைகளின் வெளிப்பாடு
  - ♦ அ. சங்கரி தொகுத்த சொல்லப்படாத சேதிகள்
  - ♦ சுல்பிகா
  - ♦ சிவரமணி
  - ♦ பெண்ணியா
  - ♦ உருத்திரா
  - ♦ மைதிலி
  - ♦ வாசுகி ஜெயசங்கர்
  - ♦ ஔவை
  - ♦ தம்பிலுவில் ஜெகா
  - ♦ அஷ்ரப் நூர்டீன் கவிதைகள்
- அன்றாட வாழ்வியல் நெருக்கடிகள் ∴ பிரச்சினைகள்
  - ♦ தீபச்செல்வன்
  - ♦ கருணாகரன்
  - ♦ பா. அகிலன்
- சிறுவர் பாடல்கள்
  - ♦ பராசத்திய திமிலைத்துமிலன் பாடல்கள்
  - ♦ மு. பொன்னம்பலம் பாடல்கள்

- நவீன காவியங்கள்
    - ♦ மஹாகவி - கண்மணியாள் காதை
    - ♦ இ. முருகையன் -
    - ♦ நீலாவணன் - வேளாண்மை
    - ♦ பாலமுனை பாரூக் - தோட்டுப்பாய் மூத்தம்மா
    - ♦ மு. பொன்னம்பலம் - பொதிக்குள் அகப்பட்ட தேசம்
    - ♦ நிலாந்தன் - மண்பட்டினம்
- குறும்பாவடிவங்கள்
    - ♦ மஹாகவி
    - ♦ குறிஞ்சித்தென்னவன்
    - ♦ அல் அ∴சுமத்
- ஹைக்கூ வடிவங்கள்
    - ♦ சு. முரளிதரன் - கூடைக்குள் தேசம்
- மொழி பெயர்ப்புக் கவிதைகள்
    - ♦ நு∴மான் - பாலஸ்தீனக் கவிதைகள்
    - ♦ சோ. பத்மநாதன் - தென்னிலங்கைக் கவிதைகள்

6. ஈழத்து நவீன கவிதை வளர்ச்சியிலே அறுபதுகளின் முக்கியத்துவம் குறித்து அலசுக.
    - முற்போக்குக் கவிஞர்களின் முக்கியத்துவம்.
    - மலையகக் கவிதைகள் கவனிப்புக்குள்ளாகியமை.
    - தென்னிலங்கைக் கவிதைகள் இனங்காணப்பட்டமை.
    - புதுக்கவிதை வேரூன்றத் தொடங்கியமை.

7. ஈழத்து நவீன கவிதை வளர்ச்சியில் எண்பதுகளின் முக்கியத்துவம் பற்றி விளக்குக.
    - இன முரண்பாட்டு உச்ச விளைவுகளும் அதன் பன்முகப் பரிமானங்களும்

      உதாரணம் : ♦ அன்றாட அவலங்கள்

      ♦ எதிர்ப்புக் குரல்கள்
    - புகலிட அனுபவங்களின் வெளிப்பாடுகள்.

      உதாரணம் : ♦ தாயக ஏக்கம்

      ♦ சர்வதேச அகதிநிலை

      ♦ குடும்பச் சிக்கல்கள்

      ♦ தொழில் வள அனுபவங்கள்

      ♦ பெண்கள் நிலை
    - பெண்நிலைவாத நோக்குடைய கவிதைகளின் வெளிப்பாடு
        - ♦ தமிழில் பெண்களது முதற்கவிதைத் தொகுப்பு
            - சொல்லாத சேதிகள் தொகுப்பின் வரவு (1986)

## சிறுகதை

1. ஈழத்தில் சிறுகதை தோற்றம் பெற்றமைக்கான பின்னணி பற்றி விளக்குக.
   - ஆங்கிலேயராட்சியினால் ஏற்பட்ட சமூக அரசியல், பொருளாதார மாற்றங்களின் தொடர்ச்சியும் பரம்பலும்.
   - அரசியல் சார் விழிப்புணர்ச்சி
     - ♦ டொனமூர்க் குழுவினரின் சிபாரிசுகள்.
   - தமிழ்நாட்டுத் தொடர்பு
     - ♦ காந்தியச் செல்வாக்கும் தமிழகச் சஞ்சிகைகள் பிரசுர களமானமையும்.
   - ஈழத்தில் தமிழ்ப்பத்திரிகைகளின் தோற்றம்.
   - மத்தியதர வர்க்கத்தினரின் இலக்கிய ஈடுபாடு.

2. ஈழத்துச் சிறுகதை வளர்ச்சியைக் காலகட்டப் பகுப்பின் அடிப்படையில் விளக்குக.
   - 1930 தொடக்கம் 1940 வரை
     - ♦ ஈழத்தில் சிறுகதை தோற்றம் பெற்ற காலம்.
     - ♦ ஈழத்துப் பத்திரிகைகளும் தமிழ் நாட்டுச் சஞ்சிகைகளும் பிரசுர களமாக அமைந்தமை.
     - ♦ முக்கியமான எழுத்தாளர்கள்
       - இலங்கையர் கோன்
       - சி. வைத்தியலிங்கம்
       - சம்பந்தன்
       - கோ. நடேசய்யர்
     - ♦ உள்ளடக்கம்
       - இலங்கையர் கோன் - சிகிரியா, யாழ்பாடி, அனுலா
       - சி. வைத்தியலிங்கம் - பூதத் தேவன் கோட்டை
     - ♦ இதிகாசச் சம்பவங்கள்
       - இலங்கையர் கோன் - வெள்ளிப் பாதசரம்
     - ♦ கிராமிய வாழ்க்கை
       - சி. வைத்தியலிங்கம் - பாற்கஞ்சி
     - ♦ இலட்சிய நோக்கு
       - க. தி. சம்பந்தன் கதைகள்- விதி
     - ♦ தொழிலாளர் முன்னேற்றம்
       - கோ. நடேசய்யர் - திருராமசாமி சேர்வையின் சரிதம்
     - ♦ மொழிநடை
       - காவியச் செல்வாக்கு
     - ♦ எடுத்துரைப்புமுறை
       - மனோரதியப்பாங்கு
   - 1940 தொடக்கம் 1950 வரை
     - ♦ மறுமலர்ச்சிக்காலம் (1942 - 1943)
     - ♦ சிறுகதைகள் பல வெளிவந்தமை (மறுமலர்ச்சி, பாரதி)

- ♦ நவீன இலக்கியப் பிரக்ஞை உருவாகியமை
- ♦ புதிய தலைமுறையினரின் வரவு
- ♦ முக்கியமான எழுத்தாளர்கள்
  - – அ.செ. முருகானந்தன்
  - – அ.ந. கந்தசாமி
  - – வரதர்
  - – கனக செந்திநாதன்
  - – சொக்கன்
- ♦ உள்ளடக்கம்
  - – சமகால சமூக, அரசியல் மாற்றங்கள் வெளிப்பட்டமை.
  - – ஈழத்து மக்களது அன்றாட வாழ்க்கை முதன்மை பெற்றமை.

- • 1950 தொடக்கம் 1960 வரை
  - ♦ முற்போக்கு எழுத்தாளர் சங்கச் செயற்பாடுகள்.
  - ♦ இடதுசாரிச் சிந்தனையுள்ள முற்போக்கு எழுத்தாளர் வரவு
  - ♦ முக்கியமான எழுத்தாளர்கள்
    - – டொமினிக் ஜீவா - தண்ணீரும் கண்ணீரும்
    - – டானியல் - உறவும் நிழலும்
    - – செ. கணேசலிங்கன் - வெளியில் நடந்தது, பகற்கனவு
    - – எஸ். பொன்னுத்துறை - தேர், கணை
  - ♦ உள்ளடக்கம்
    - – அடித்தட்டு மக்களது வாழ்க்கை
    - – வர்க்கப் பார்வை
    - – சாதிப்பிரச்சினை
  - ♦ சிறுகதைக்களம் விரிந்தமை

    உதாரணம் :
    - – திருகோணமலை - வ.அ. இராசரத்தினம்
    - – மட்டக்களப்பு - பித்தன், நவம்
    - – அம்பாறை - அ. ஸ. அப்துல் ஸமது
  - ♦ பெண் எழுத்தாளர் பிரவேசம்
    - – பத்மா சோமகாந்தன்

- • 1960 தொடக்கம் 1970 வரை
  - ♦ பல்கலைக்கழக மட்ட எழுத்தாளர் உருவாக்கம்.
  - ♦ முக்கியமான எழுத்தாளர்கள்
    - – செ. கதிர்காமநாதன்
    - – செ. யோகநாதன்
    - – செம்பியன் செல்வன்
    - – பவானி ஆழ்வார்ப்பிள்ளை
    - – மு. தளையசிங்கம்
    - – சண்முகம் சிவலிங்கம்
    - – நந்தி
    - – மருதூர்க் கொத்தன்.

- உள்ளடக்கம்
  - முன்னைய போக்கின் தொடர்ச்சி
  - சிறுகதை பொருள் விரிந்தமை.
- சிறுகதை களம் விரிந்தமை : மலைநாடு
  - என். எஸ். ராமையா

- 1970 தொடக்கம் 1980 வரை
  - புதிய தலைமுறை எழுத்தாளர்களாகப் பலர் இனங்காணப்பட்டமை.
  - சிறுகதைப் பொருள் விரிந்தமை.
  - முக்கியமான எழுத்தாளர்கள்
    - அ. யேசுராஜா
    - சட்டநாதன்
    - திக்வெல்லை கமால்
    - சாந்தன்
    - மண்டூர் அசோகா
    - ஷம்ஸ்
    - தி.ஞானசேகரன்
    - கோகிலா மகேந்திரன்
    - மல்லிகை குமார்
- 1980 தொடக்கம் 2000 வரை
  - இன முரண்பாட்டுச் சிக்கல்களும் அதன் பன்முகப் பரிமாணங்களும்
    - ரஞ்ச குமார் -கோசலை, காலம் உனக்கொரு பாட்டெழுதும்
  - புகலிட அனுபவங்கள்
    - இராஜேஸ்வரி பாலசுப்ரமணியம்
    - அ. முத்துலிங்கம்
    - பார்த்தீபன்
  - பெண்களது அனுபவங்கள்
    - இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்
    - கோகிலா மகேந்திரன்

2. 1980 தொடக்கம் இன்றுவரையான ஈழத்துச் சிறுகதைப் போக்குப் பற்றி விளக்குக.
   - இனமுரண்பாட்டு நெருக்கடி, விளைவுகள், அனுபவங்கள்
     - ரஞ்சகுமார் - கோசலை
     - தாமரைச்செல்வி - நினைத்தழுதல்
     - இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன்
     - கருணாகரன்
     - மலைமகள்
     - தமிழ்க்கல்வி
     - ஆதிலட்சுமி சிவகுமார்
     - யோ. கர்ணன்
     - கருணை ரவி
     - செங்கையாழியான்
     - திருக்கோவில் கவியுவன்

- அன்றாட வாழ்வியல் நெருக்கடிகள்
    - ♦ பதுளை சேனாதிராஜா
    - ♦ தெணியான்
    - ♦ தெளிவத்தை ஜோசப்
    - ♦ உமா வரதராஜன்
    - ♦ கௌரிபாலன்
    - ♦ யோகேஸ்வரி சிவப்பிரகாசம்
- புகலிட அனுபவங்களின் வெளிப்பாடு
    - ♦ இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்
    - ♦ கலாமோகன்
    - ♦ அ. முத்துலிங்கம்
    - ♦ பொ. கருணாகரமூர்த்தி
    - ♦ பார்த்தீபன்
    - ♦ சுமதிரூபன்
- பெண்ணிய அனுபவங்களின் வெளிப்பாடு
    - ♦ இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்
    - ♦ கோகிலா மகேந்திரன்
    - ♦ மண்டூர் அசோகா
    - ♦ தாட்சாயினி
    - ♦ ராணி சீதரன்
    - ♦ பவானி சிவகுமாரன்
    - ♦ வசந்தி தயாபரன்
    - ♦ ஆனந்தி
- பின் நவீனத்துவ எடுத்துரைப்பு முறை
    - ♦ திசேரா
    - ♦ மலர்ச்செல்வன்
    - ♦ இராகவன்
    - ♦ அம்ரிதா
    - ♦ இ.சு. முரளிதரன்

4. ஈழத்துச் சிறுகதை வளர்ச்சியிலே 'மறுமலர்ச்சிக் கதைகள்' பெறுகின்ற முக்கியத்துவம் குறித்துப் பரிசீலிக்குக.

- ஈழத்து மக்களது அன்றாட வாழ்வியல் முப்பதுகளில் ஓரளவே பேசப்படல்.
- சமகால, சமூக, அரசியல், பொருளாதார மாற்றங்கள் பேசப்படுகின்ற நிலை ஏற்பட்டமை.
- நவீன இலக்கியம் பிரக்ஞை ஏற்பட்ட நிலையில் கலா பூர்வமான முறையிலே மேற்குறிப்பிட்ட விடயங்கள் பேசப்படும் வாய்ப்பும்.
- இவ்விதமாக முற்போக்கு எழுத்தாளர்கள் ஐம்பதுகளிலேற்படுத்திய மாற்றங்களுக்கேற்ற சூழலை மறுமலர்ச்சிக் குழுவினர் இக்காலப்பகுதியில் உருவாகியிருந்தனர்.

5. ஐம்பதுகளிலே ஈழத்துச் சிறுகதை வளர்ச்சியிலேற்பட்ட முக்கிய மாற்றங்கள் பற்றி விளக்குக.
- முற்போக்கு எழுத்தாளர்களது சிறுகதைகள் முக்கியம் பெற்றமை.
- முன்னைய மரபுகள், பண்புகள் அழகும், அகலமும் பெற்றதாக அமைந்தமை.
- மலையக, முஸ்லிம் எழுத்தாளர்கள் பலர் இனங்காணப்படல்.
- முற்றிலும் புதிய போக்குகள் உருவானமை.

## நாவல்

1. ஈழத்தில் தமிழ் நாவல் தோற்றம் பெற்றமைக்கான பின்னணியை விளக்குக.
- ஆங்கிலேயராட்சியிலேற்பட்ட சமூக, அரசியல், பொருளாதார மாற்றங்கள்.
- ஆங்கில இலக்கிய ஈடுபாடு
- மத்தியதரவர்க்கம் உருவாகியமை
- நிலவுடைமைச் சமுதாயச் சிதைவு

2. ஈழத்துத் தமிழ் நாவல் வளர்ச்சிப் போக்கினைக் காலகட்டப்பகுப்பின் அடிப்படையில் விளக்குக.
- ஆரம்பகால நாவல்கள்
  - ♦ ஈழத்து முதல் நாவலின் வரவு
    - அசன்பே சரித்திரம் - அறிஞர் சித்திலெப்பை (1885)
  - ♦ மொழி பெயர்ப்பு / தழுவல் நாவல்கள்
    - காவலப்பன் கதை
    - ஊசோன் பாலந்தைக்கதை - எஸ். இன்னாசித் தம்பி (1895)
  - ♦ வரலாற்று நாவல்
    - மோகனாங்கி - தி.த. சரவணமுத்துப்பிள்ளை (1895)
  - ♦ துணிகரச்சம்பவங்களை அடிப்படையாகக் கொண்ட நாவல்
    - வீரசிங்கன் கதை - சி.வை. சின்னப்பப்பிள்ளை (1905)
- சமகால சமூக மாற்றங்கள். சமூகக் குறைபாடுகள் பிரதிபலிக்கப்படல்.
  - ♦ நொருங்குண்ட இருதயம் - மங்கள நாயகம் தம்பையா (1914)
  - ♦ காசிநாதன் நேசமலர் - ம.வே. திருஞானசம்பந்தப்பிள்ளை
- சாதிப்பிரச்சினை
  - ♦ நீலகண்டன் ஒரு சாதிவேளாளன்
  - ♦ சீதனப்பிரச்சினை

■ 1930 முதல் சுதந்திரம் கிடைக்கும் வரை
- மர்மச்சம்பவங்கள்
  - ♦ வரணியூர் ஏ.சி. இராமையாவின் நாவல்கள்
- குடும்பக் காதல் உறவுகள்
  - ♦ பாசம் - க. தி. சம்பந்தன்
- சாதிப்பிரச்சினை
  - ♦ தீண்டாமைக்குச் சாவுமணி
- மொழி பெயர்ப்புகள்
  - ♦ துர்க்கணேஷின் முதற்காதல் - இலங்கையர்னேசன்

■ சுதந்திரம் முதல் 1969 வரை

- பிரக்ஞை பூர்வமானவை
- ஈழத்து மக்களது வாழ்க்கையும் பிரச்சினைகளும் நாவல்களில் பேசப்படல்.
- முற்போக்கு நாவல்களின் தோற்றம்
- களம் விரிவுபடுதல்
    - ♦ முக்கியமான நாவலாசிரியர்கள்
        - வ. அ. இராசரத்தினம் - கொழுகொம்பு
        - கனக செந்திநாதன் - விதியின்கை
        - இளங்கீரன் - தென்றலும் புயலும், நீதியே நீ கேள்
        - செ. கணேசலிங்கன் - நீண்டபயணம்
        - மு. தளையசிங்கம் - ஒரு தனிவீடு

■ 1970 களில்

- மாதாந்த ரீதியில் நாவல்களை வெளியிடுதல். - வீரகேசரி பிரசுராலயம்
- புதிய எழுத்தாளர்கள் உருவாகின்றமை.
- புதிய பிரதேசங்களில் விரிவுபடுகின்றன.
    - ♦ உ-ம் :
        - அ. பாலமனோகரன் - நிலக்கினி (வன்னி)
        - தாமரைச் செல்வி - சுமைகள் (கிளிநொச்சி)
        - செங்கையாழியான் - வாடைக்காற்று (நெடுந்தீவு)

■ 1980 தொடக்கம் இன்றுவரை

- இனமுரண்பாடு கூர்மையடைதல்.
    - ♦ தாமரைச் செல்வி - வேள்வித்தீ
    - ♦ செங்கையாழியான் - மரணங்கள் மலிந்த பூமி
- புகலிட அனுபவங்கள் :
    - ♦ இ. ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் - தேம்ஸ் நதிக்கரையில்
      - உலக மெல்லாம் வியாபாரிகள்
    - ♦ க. தியாகலிங்கம் - பரதேசிகள்
- பெண்ணிய நோக்கு :
    - ♦ கோகிலா மகேந்திரன் - துயிலும் ஒருநாள் கலையும்.

3. 1980 தொடக்கம் இன்றுவரையான ஈழத்து நாவல் வளர்ச்சி பற்றி விளக்குக.

- இனமுரண்பாட்டு நெருக்கடியும் விளைவுகளும் அனுபவங்களும்.
    - ♦ செ. கணேசலிங்கன்
    - ♦ டானியல்
    - ♦ செ. யோகநாதன்
    - ♦ தாமரைச் செல்வி
    - ♦ தமிழ்க்கவி
    - ♦ தெளிவத்தை ஜோசப்
    - ♦ தேவகாந்தன்
    - ♦ வெற்றிச் செல்வி

- அன்றாட வாழ்வியல் நெருக்கடிகள் / பிரச்சினைகள்
  - ♦ தெணியான் - மரக்கொக்கு, காத்திருப்பு
  - ♦ உதயன் - வாசாப்பு
  - ♦ கீரன் நௌசாத் - நட்டுமை
  - ♦ அருளானந்தம் - துயரம் சுமப்பவர்கள்
- புகலிட அனுபவங்களின் வெளிப்பாடு
  - ♦ இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் - தேம்ஸ் நதிக்கரையில்
  - ♦ இ. தியாகலிங்கம் - அழிவின் அழைப்பிதழ்
- பெண்ணிய அனுபவங்களின் வெளிப்பாடு
  - ♦ இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் - உலகமெல்லாம் வியாபாரிகள்
  - ♦ கோகிலா மகேந்திரன் - துயிலும் ஒருநாள் கலையும்
    தூவானம் கவனம்

4. ஈழத்து நாவல்களின் முக்கியமான இயல்புகள் பற்றி விளக்குக.
   - பிற நாட்டினைக் களமாகக் கொண்டமை.
   - பெரும்பாலானவை மொழி பெயர்ப்பு நாவல்களாகவோ, தழுவல் நாவல்களாகவோ காணப்படுகின்றமை.
   - வரலாற்று நாவல் தோற்றம் பெற்றமை.
     - ♦ துணிகரச் சம்பவங்கள் இடம் பெற்றமை.
     - ♦ பிறநாடுகளைக் களமாகக் கொண்டமை.

5. ஈழத்து நாவல் வளர்ச்சியில் 1914 தொடக்கம் 1930 வரையான காலப்பகுதி பெற்றுள்ள முக்கியத்துவம் எத்தகையது அலசுக.
   - ஈழத்து மக்களது பிரச்சினைகள் முதன்முதலாகப் பேசப்படல்.

     அவை : மத மாற்றம்
     மத மாற்ற எதிர்ப்பு
     சாதிப் பிரச்சினை
     சீதனப் பிரச்சினை

6. ஈழத்து நாவல் வளர்ச்சியில் எண்பதுகள் காலப்பகுதி பெறும் முக்கியத்துவம் பற்றி விளக்குக.
   - இன முரண்பாட்டுச் சிக்கல்கள் பற்றிய நாவல்களின் வரவு
   - புகலிட நாவல்களின் வரவு
   - மேற்கூறியவற்றுள் இனமுரண்பாடு, புகலிட நாவல்கள் தமிழ் நாட்டில் உருவாகாமையால் ஈழத்தின் தனித்துவப் பொருள்களாக புதிய வகையில் நாவல்களில் பேசப்பட்டமை.

## 20 ஆம் நூற்றாண்டு

### நாடகம்

1) இருபதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் நாடக வளர்ச்சிப் போக்குகளை இனங்காண்க.

- 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலங்களில் இலங்கையில் தமிழ்நாட்டு இசைநாடகக் குழுக்களின் நாடகச் செயற்பாடுகள்.
- இலங்கையில் நாடக சபைகளின் உருவாக்கமும் இசைநாடக மரபின் தொடர்ச்சியும்.
- ஈழத்து நவீன நாடக வரலாற்றில் கலையரசு க. சொர்ணலிங்கத்தின் பங்களிப்பு.
- பேராசிரியர் க. கணபதிப்பிள்ளையின் நாடக முயற்சிகளும் அவர் ஏற்படுத்திய மாற்றங்களும்.
- 1950 களில் ஈழத்தத் தமிழ் நாடகத் துறையில் ஏற்பட்ட வளர்ச்சிகள்:
  கலைக்கழகத் தமிழ் நாடகக் குழுவின் செயற்பாடுகள் :
  - ♦ பாரம்பரிய நாடக மரபுகளை நவீனப்படுத்திப் பேணும் போக்கு.
  - ♦ நாடகக் கலைஞர்களைக் கௌரவித்தல்.
  - ♦ நாட்டுக் கூத்துப் போட்டிகளை நடத்தியமை.
  - ♦ நாடக நூல்கள் பதிப்பிக்கப்பட்டமை.
- பேராசிரியர் சு. வித்தியானந்தனின் நாடக முயற்சிகளும் அவரது நவீனப்படுத்தல் முயற்சிகளும்.
- 1960 களில் இருந்து ஈழத்துத் தமிழ் நாடகத் துறையில் ஏற்பட்ட வளர்ச்சிகள் :
  - ♦ பழைய கூத்து வடிவில் புதிய உள்ளடக்கத்தை அமைத்தல்.
    - மௌனகுருவின் சங்காரம்
  - ♦ யதார்த்த நாடகத்தில் புதிய பரிசோதனை முயற்சிகள்
- பா நாடகங்களின் வளர்ச்சி :
  - ♦ அ. தாசீசியஸால் மஹாகவியின் கோனட், புதியதொரு வீடு என்பனவும்,
  - ♦ நா. சுந்தரலிங்கத்தால் முருகையனின் ‘‘கடூழியம்’’ என்பதும்,
  - ♦ சுஹைர் ஹமிட்டால் அம்பியின் ‘‘வேதாளம் சொன்ன கதை’’யும் நெறியாள்கை செய்யப்பட்டன.
- 1970 களில் ஈழத்துத் தமிழ் நாடகத் துறையின் அரங்கில் ஏற்பட்ட வளர்ச்சியும் - பரிசோதனை முயற்சிகளும்.
  - ♦ பிறமொழி நாடகங்களை மொழி பெயர்த்தும் தழுவியும் நாடகங்களை மேடையேற்றினர்.
- நாடக அரங்கக் கல்லூரி அவைக்காற்றுக் கழகம் என்பவற்றின் நாடக முயற்சிகள்
- 1980 களில் இருந்து யுத்தச் சூழலின் மத்தியில் மக்களின் அவலங்களையும் புதிய முறையில் வெளிப்படுத்தும் நாடக முயற்சிகளும் :
  - ♦ குழந்தை ம. சண்முகலிங்கத்தினால் எழுதப்பட்டு க. சிதம்பரநாதனால் நெறிப்படுத்தப்பட்ட ‘மண்சுமந்த மேனியர்’’
- வீதி நாடகங்களின் வளர்ச்சி
- 1990 களில் க. சிதம்பரநாதனின் சமூக மாற்றத்திற்கான அரங்கச் செயற்பாடுகள்.
- சிறுவர் நாடகச் செயற்பாடுகள்
- மொழி பெயர்ப்பு, தழுவல் நாடக ஆக்கங்களும் நெறியாள்கையும்.
- இந்த வளர்ச்சிகள் இடம் பெற்று வருகின்ற அதேவேளை பாரம்பரிய கூத்து மரபைப் பேணும் முயற்சிகளும் இடம்பெற்றுவருகின்றன.

## தற்காலம்

**விமர்சனம்**

1) ''இருபதாம் நூற்றாண்டில் ஆரம்ப காலம் முதல் ஈழத்துத் தமிழ் இலக்கிய விமர்சனமானது பல்வேறு வளர்ச்சிகளைக் கண்டு வந்துள்ளது'' - விளக்குக.

- இரசனை முறைத் திறனாய்வின் தொடர்ச்சி :
  - ♦ பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை
  - ♦ பொ. கிருஷ்ணபிள்ளை
  - ♦ க. பொ. இரத்தினம்
  - ♦ கனக செந்திநாதன்
- ஈழத்தில் நவீன இலக்கிய முயற்சிகள் உருவாகத் தொடங்கி 1940 களில் இருந்து நவீன இலக்கிய விமர்சனமும் வளர்ச்சி பெறத் தொடங்குதல்.
- மறுமலர்ச்சி பாரதி, குழுவினரின் இலக்கிய விமர்சனத் தொழிற்பாடு
  - ♦ அ.செ. முருகானந்தன்
  - ♦ அ.ந. கந்தசாமி
- இலங்கைப் பல்கலைக்கழக வழிவந்த விமர்சகர்களின் விமர்சன முயற்சிகள்
  - ♦ சுவாமி விபுலானந்தர்
  - ♦ பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை
  - ♦ பேராசிரியர் வி. செல்வநாயகம்

  ஆகியோர்களின் இலக்கிய விமர்சன வளர்ச்சிக்கான பங்களிப்புகள்.
- முற்போக்கு இலக்கிய விமர்சன நெறி
  - ♦ க. கைலாசபதி
  - ♦ கா. சிவத்தம்பி
  - ♦ இ. முருகையன்
  - ♦ சி. தில்லைநாதன்

  முதலானோரின் விமர்சனப் பார்வைகளும் பங்களிப்பும்.
- 1960களில் முற்போக்கு நெறி செல்லாத விமர்சகர்களின் பணிகள் :
- 1960 களில் இருந்து ஈழத்துத் தமிழ் நாடகத் துறையில் ஏற்பட்ட வளர்ச்சிகள் :
  - ♦ மு. தளையசிங்கத்தின் பிரபஞ்சயதார்த்த வாதம்.
- இலக்கியத்தின் கலைப் பெறுமானத்தை வற்புறுத்தும் பாங்கில் முற்போக்கு விமர்சகர் மத்தியில் இருந்து எழுந்த குரல்கள் :
  - ♦ எம். ஏ. நு.ஃ.மான்
  - ♦ சண்முகம் சிவலிங்கம்
  - ♦ ஏ. ஜே. கனகரட்ணா
- முற்போக்குவாதத்தை முனைப்புடன் எதிர்த்த இலக்கிய விமர்சகர்கள் - எஸ். பொன்னுத்துரை - முற்போக்குவாதம் :

- முற்போக்குவாதத்தை விமர்சன ரீதியாக எடுத்து விளக்கிய இலக்கிய கர்த்தாக்கள்:
    - ♦ இளங்கீரனார்
    - ♦ நீர்வை பொன்னையன்
    - ♦ டொமினிக் ஜீவா
    - ♦ ரகுநாதன்
- 1960 களில் இடம்பெற்ற புனைகதை இலக்கியம் தொடர்பான சர்ச்சைகள்.
- 1970, 1980 களில் இடம் பெற்ற இலக்கியத்தின் அழகியல் தொடர்பான சர்ச்சைகள்.
- கல்விப் பயிற்சி வழியாக இலக்கிய விமர்சனத்தைத் தமது ஆய்வுத் துறையாகக் கொண்டுள்ள விமர்சன ஆய்வாளர்களின் பங்களிப்புகள்.
    - ♦ அ. சிவநேசச் செல்வன்
    - ♦ சண்முகலிங்கம்
    - ♦ சோ. கிருஷ்ணராசா
    - ♦ சபா. ஜெயராசா
    - ♦ கே. எஸ். சிவகுமாரன்
    - ♦ சித்திரலேகா மௌனகுரு
    - ♦ செ. யோகராசா

    முதலானோரின் விமர்சன முயற்சிகள்.

# இலக்கணம்

## தொடரியல்

**அறிமுகம்** :

சொற்கள் பொருள் தரக் கூடிய வகையில் தொடரும் போது அவற்றினிடையே அமைந்து வரவேண்டிய உருபுகள் மறைந்து வருவதுமுண்டு. வெளிப்பட்டு வருவதுமுண்டு. அவ்வாறு அமையும் சொற்றொடர்களை முறையே

1) தொகை நிலைத்தொடர்
2) தொகா நிலைத்தொடர்

என மரபிலக்கணக்காரர் வகைப்படுத்துவர்.

1) தொகை நிலைத்தொடர்

சொற்களுக்கிடையே உருபுகள் முதலியன தொக்கு நிற்க ஒரு சொல்தன்மைப்பட்டு அமைவதாகும்.

தொகை நிலைத்தொடர் ஆறு வகைப்படும்.

1) வேற்றுமைத்தொகை
2) வினைத்தொகை
3) பண்புத்தொகை
4) உவமைத்தொகை
5) உம்மைத்தொகை
6) அன்மொழித்தொகை

2) தொகா நிலைத்தொடர்

சொற்களுக்கிடையில் உருபுகள் முதலியன தொக்கு நிற்காது வெளிப்பட்டும் ஒரு மொழித் தனிமைப்படாமலும் சொற்கள் தொடர்ந்து வருவதாகும்.

இது ஒன்பது வகைப்படும்.

1) எழுவாய்த்தொடர்
2) விளித்தொடர்
3) வேற்றுமைத்தொடர்
4) வினைமுற்றுத்தொடர்
5) பெயரெச்சத்தொடர்
6) வினையெச்சத்தொடர்
7) இடைச்சொற்றொடர்
8) உரிச்சொற்றொடர்
9) அடுக்குத்தொடர்

**வினாவிடை**

1. கருங்குதிரை, குகைக்கோயில், முத்துப்பல் ஆகியன ஒவ்வொன்றும் என்ன தொகை எனக் குறிப்பிடுக.

| | | | |
|---|---|---|---|
| 1) | கருங்குதிரை | - | பண்புத்தொகை |
| 2) | மரக்கிளை | - | வேற்றுமைத்தொகை (6ம் வேற்றுமை) |
| 3) | முத்துப்பல் | - | உவமைத்தொகை |

2. வினைத்தொகையின் அமைப்பினை விளக்குக.

கொதிநீர் - (கொதித்த / கொதிக்கின்ற / கொதிக்கும் - நீர்)
காலம் காட்டும் இடைநிலையும் பெயரெச்ச விகுதியும் மறைந்து நிற்க வினையடியும் பெயர் சொல்லும் இணைந்து அமையும்.
உதாரணம் : கொதி + நீர் ⟶ கொதிநீர்

3. 'கபில பரணர்' என்ற தொடர் எத்தொகை என்பதை விளக்குக.

உம்மைத் தொகை

கபிலரும் பரணரும் ⟶ கபிலபரணர்

இங்கு, உம் என்னும் இடைச்சொல் மறைந்து நிற்க, இரண்டு பெயர்ச்சொற்கள் ஒரு மொழித்தனிமைப்பட்டு அமைகிறது.

4. வட்டக்கல், சுறாமீன் ஆகிய தொடர்கள் எத்தொகைகள் என்பதைக் குறிப்பிட்டு விளக்குக.

- வட்டக்கல் - பண்புத்தொகை

  பண்பை உணர்த்தும் ஆகிய என்னும் உருபு தொக்கி நிற்கப் பண்பை உணர்த்தும் ஒரு சொல்லும் பிறிதோர் சொல் இணைந்து அமைவது.

- சுறாமீன் - இரு பெயரொட்டுப் பண்புத்தொகை

  பொதுப்பெயரோடு சிறப்புப் பெயரோ, சிறப்புப் பெயரோடு பொதுப்பெயரோ இணைந்து ஆகிய என்னும் பண்புருபு மறைந்து வருவது இருபெயரொட்டுப் பண்புத்தொகையாகும்.

  சுறா + மீன் - (சிறப்புப் பெயர் + பொதுப்பெயர்)

5. அன்மொழித்தொகை என்றால் யாது? உதாரணம் தருக.

வேற்றுமை, பண்பு, வினை, உவமை, உம்மை ஆகிய ஐந்து தொகைகளையும் ஆதாரமாகக் கொண்டு அத்தொகைகளின் புறத்தே பொருள் தொக்கு நிற்கும் சொற்றொடர் அன்மொழித்தொகை ஆகும்.

| | | | |
|---|---|---|---|
| 1) | பூங்குழல் வந்தாள் | - | வேற்றுமையிடத்துப் பிறந்த அன்மொழித்தொகை. |
| 2) | செங்கண் பாடினாள் | - | பண்புத்தொகையிடத்துப் பிறந்த அன்மொழித்தொகை. |
| 3) | தாழ்குழல் ஆடினாள் | - | வினைத்தொகையிடத்துப் பிறந்த அன்மொழித்தொகை. |
| 4) | கயல்விழி சிரித்தாள் | - | உவமைத் தொகையிடத்துப் பிறந்த அன்மொழித் தொகை. |
| 5) | உயிர்மெய் படித்தான் | - | உம்மைத்தொகையிடத்துப் பிறந்த அன்மொழித் தொகை. |

6) ஏற்றத்தாழ்வு, மரகதக்கிளி, செங்கோணம் ஆகிய தொடர்கள் எத்தொகைகள் எனக் குறிப்பிடுக.

| | | |
|---|---|---|
| ஏற்றத்தாழ்வு | - | உம்மைத்தொகை |
| மரகதக்கிளி | - | உவமைத்தொகை |
| செங்கோணம் | - | பண்புத்தொகை |

7) படித்துமுடித்தான், கண்டகாட்சி ஆகியன என்ன தொடர்கள் எனக் குறிப்பிடுக.

| | | |
|---|---|---|
| படித்து முடித்தான் | - | வினையெச்சத்தொடர் |
| கண்டகாட்சி | - | பெயரெச்சத்தொடர் |

8) இடைச்சொற்றொடரின் அமைப்பை உதாரணம் தந்து விளக்குக.

உதாரணம் : மற்றொன்று ⟶ மற்று + ஒன்று

'மற்றொன்று' என்பதில் மற்று என்னும் இடைச்சொல்லைத் தொடர்ந்து பிறிதொரு சொல் வருவதால் அது இடைச்சொற்கள் எனப்படும்.

## சொல்லியல்

**இடைச்சொல்**

**அறிமுகம் :**

பெயர்ச்சொல், வினைச்சொல் போன்று தனித்து நின்று பொருள்தராமல் தொடரமைப்பில் அவற்றுடன் இணைந்து பல்வேறு இலக்கணப் பொருள் தரும் சொற்கள் இடைச்சொற்களாகும். இவை எண்ணிக்கையில் குறைவானவையாயினும் வழக்கில் பெருமளவிற்குப் பயன்பட்டு வருகின்றன. வாக்கியங்களின் பொருள் தெளிவாக அமையவும் தர்க்க ரீதியாகத் தொடரவும் இடைச்சொற்களே உதவுகின்றன.

- இடைச்சொற்களை அவை பயன்படுத்தும் சந்தர்ப்பங்களுக்கும் தேவைகளுக்குமேற்ப பின்வருமாறு வகைப்படுத்தலாம்.
  1) விகுதிகள்
  2) சாரியைகள்
  3) இடைநிலைகள்
  4) வேற்றுமை உருபுகள்
  5) உவமை உருபுகள்
  6) தத்தம் பொருள் உணர்த்துவன
  7) குறிப்புப் பொருள் உணர்த்துவன.

**வினாவிடை**

1. இடைச்சொற்களின் பிரதான பயன்பாடு யாது?
   வாக்கியங்களின் பொருள் தெளிவாக அமையவும் வாக்கியங்கள் தர்க்க ரீதியாகத் தொடரவும் இடைச்சொற்கள் பயன்படுகின்றன.

2. இடைச்சொற்களின் வகைகள் ஐந்தினை உதாரணத்துடன் தருக.
   1) வேற்றுமை உருபுகள் - ஐ, ஆல், கு, இன், அது, கண், இல் முதலியன
   2) விகுதி உருபுகள் - அன், ஆன், அள், ஆள், அர், ஆர், து, வை, கள் முதலியன
   3) சாரியை உருபுகள் - அன், இன், அத்து, அற்று, அ, உ முதலியன
   4) உவமை உருபுகள் - போல, புரைய, ஒப்ப, அன்ன, நிகர
   5) தத்தம் பொருள் உணர்த்துவன - ஏ, ஓ, உம், ஓ

3. ‘களவும் கற்றுமற’ என்ற பழமொழியில் அமைந்துள்ளன. இடைச்சொல்லைக் குறிப்பிட்டு விளக்குக.
   இடைச்சொல் - உம்

   களவு என்பது கற்கத்தகாதது என்றும் பொருளைத் தருவதால் இங்கு ‘உம்’ எதிர்மறைப் பொருளில் அமைந்துள்ளது.

4. ‘உம்’ இடைச்சொல் சிறப்புப் பொருளைத் தருமாற்றினை, உதாரணம் தந்து விளக்குக.

என இரண்டு வகையான சிறப்புப் பொருளில் அமையும்.

உயர்வு சிறப்பு :

உயர்ந்தவற்றுள் உயர்ந்ததைக் குறிப்பதால் உயர்வு சிறப்பு எனப்படும்.

உதாரணம் : மந்தியும் அறியாமலை

இழிவு சிறப்பு :

தாழ்ந்தவற்றுள் தாழ்ந்ததைக் குறிப்பதால் இழிவுச் சிறப்பு எனப்படும்.

உதாரணம் : நாயினும் கடையன்

5. ‘மழை விட்டதும் போகலாம்’ இங்கு உம் இடைச்சொல் என்ன பொருளில் வந்துள்ளது.

பொருள் - உடனடித்தன்மை

‘உம்’ இறந்தகாலத் தொழிற்பெயருடன் இணைத்து அதனை அடுத்து நிகழும் வினையாவதால் உடனடியாக நிகழ்வதை உணர்த்துகின்றது.

6. ‘எல்லோரும் கவலையோடு இருந்தனர். அவளோ மகிழ்ச்சியோடு திரிந்தாள்’ இவ்வாக்கியத்தில் இடம் பெற்றுள்ள இடைச்சொல்லைக் குறிப்பிட்டு விளக்குக.

‘ஓகார’ இடைச்சொல், பிரிநிலைப் பொருளில் வந்துள்ளது. பிறவற்றில் இருந்து ஒன்றை பிரித்துக் காட்டுவது பிரிநிலையாகும்.

7. ‘ஓகாரம்’ ஐயப்பொருள் தருவதற்கு உதாரணம் தந்து விளக்குக.

அப்பா ஊருக்குச் சென்றாரோ தெரியவில்லை. இங்கு ‘ஓ’ என்னும் இடைச்சொல் ஐயப்பொருளை உணர்த்துகின்றது.

8. தற்காலத் தமிழில் ‘ஏ’ இடைச்சொல் தேற்றப் பொருளில் வருவதற்கு உதாரணம் தருக.

உதாரணம் : நான் நேற்றே வந்துவிட்டேன்.

## உரிச்சொல்

**அறிமுகம் :**

உரிச்சொற்கள் பலவகைப் பண்புகளையும் எடுத்துரைக்கின்றனவாய் அவ்வாறு உணர்த்தும் போது ஒரு சொல் ஒரு குணத்தை உணர்த்துவனவும் பல குணத்தை உணர்த்துவனவுமாய் பெயர்ச்சொல் வினைச்சொற்களை விட்டு விலகாதனவாய் செய்யுள்களில் பயின்று வருவனவாய் அமைவன.

பெயர்ப் பகுபதங்கள், வினைப்பகுபதங்கள் பிறப்பதற்கு இடமாய் அமையும் அடிச்சொற்களாகவும் உரிச்சொற்கள் கொள்ளப்படுகின்றன.

உதாரணம் : சால்பு என்னும் பெயர்ச் சொல்லுக்கும் சான்றான் என்னும் வினைச் சொல்லுக்கும் அடிச் சொல்லாய் அமைவது 'சால்' என்ற உரிச் சொல்லாகும்.

**உரிச்சொற்களின் வகைகள்**

உரிச்சொற்கள் இரண்டு வகைப்படும்.

1) ஒரு குணம் தழுவிய உரிச்சொல்.
2) பல குணம் தழுவிய உரிச்சொல்.

- ஒரு குணம் தழுவிய உரிச்சொற்கள் :
  சால, உறு, தவ, நனி, கூர், கழி என்பன மிகுதி என்னும் ஒரு குணத்தை உணர்த்தும்.

- பல குணம் தழுவிய உரிச்சொற்கள் :
  கடி என்பது காப்பு (காவல்), கூர்மை, நாற்றம், விளக்கம், அச்சம், சிறப்பு, விரைவு, மிகுதி, புதுமை, வரைபு, மன்றல், களிப்பு என்று பல குண வகைகளை உணர்த்தும்.

**வினாவிடை**

1. உரிச்சொல்லின் வகைகளை உதாரணத்துடன் தருக.
   - ஒருகுணம் தழுவிய உரிச்சொல்
     உதாரணம் : **சாலச்** சிறந்தவன்
     **உறு**மீன்
     **தவ**ப்பயன்
     **நனி**சிறந்தது
     **கூர்**மதி
     **கழி**கண்ணோட்டம்
   இங்கு உரிச்சொற்கள் மிகுதி என்ற பொருளில் வந்துள்ளது.

- பலகுணம் தழுவிய உரிச்சொல்

| | | |
|---|---|---|
| காவல் | - | **கடி**நகர் |
| கூர்மை | - | **கடி**நுனைப்பகழி |
| நாற்றம் | - | **கடி**மாலை சூடி |
| விரைவு | - | எம்மம்பு **கடி**விடுதும் |
| ஆர்த்தல் | - | **கடி**முரசு |

இங்கு உரிச்சொல் பல பொருளில் வந்துள்ளதைக் காணலாம்.

2. பின்வரும் வாக்கியங்களில் பெயரடைகளாகவும் வினையடைகளாகவும் வந்துள்ள உரிச்சொற்களை இனங்கண்டு எழுதுக.

அ) ஓடு மீன் ஓட உறுமீன் வருமளவும் வாடியிருக்குமாம் கொக்கு.
ஆ) ஆலயம் தொழுவது சாலவும் நன்று.
இ) கடிமிளகு தின்ற கல்லா மந்தி கிளை விட்டு கிளை பாய்ந்தது.
ஈ) கூர்மதியுள்ளவர்கள் வாழ்வில் முன்னேறுவர்.
உ) பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானில் நனி சிறந்தனவே.
ஊ) தாயானவள் தன்மகனிடம் கழி கண்ணோட்டத்துடன் இருந்தாள்.

| | | | |
|---|---|---|---|
| அ) | உறு | - | பெயரடை |
| ஆ) | சால | - | வினையடை |
| இ) | கடி | - | பெயரடை |
| ஈ) | கூர் | - | பெயரடை |
| உ) | நனி | - | வினையடை |
| ஊ) | கழி | - | பெயரடை |

## புணரியல்

**அறிமுகம் :**
சொற்கள் சொல்லின் உறுப்புகள் பொருள்தரும் வகையில் ஒன்றுடன் ஒன்று இணைந்து வருவது புணர்ச்சி எனப்படும்.

**புணர்ச்சி வகைகள்**
1) அகப்புணர்ச்சி, புறப்புணர்ச்சி
2) வேற்றுமைப் புணர்ச்சி, அல்வழிப்புணர்ச்சி
3) இயல்புப் புணர்ச்சி, விகாரப் புணர்ச்சி
4) உயிரீற்றுப் புணர்ச்சி, மெய்யீற்றுப் புணர்ச்சி

**வினாவிடை**

1. அகப்புணர்ச்சி, புறப்புணர்ச்சி என்றால் என்ன என்பதை விளக்குக.
   - அகப்புணர்ச்சி - ஒரு சொல்லினுள் உள்ள உறுப்புகள் ஒன்றோடு ஒன்று புணர்வது அகப்புணர்ச்சி எனப்படும்.
     உதாரணம் : **நாம் + கள் → நாங்கள்**
   - புறப்புணர்ச்சி - இரு சொற்கள் ஒன்றுடனொன்று புணர்வது.
     உதாரணம் : **பந்து + அடித்தான் → பந்தடித்தான்**

2. இயல்புப் புணர்ச்சி என்றால் என்ன? விளக்குக.
   சொற்கள் அல்லது சொல் உறுப்புகள் புணரும் போது நிலை மொழியிலோ வருமொழியிலோ எந்த மாற்றமும் இன்றிப் புணர்வது இயல்பு புணர்ச்சியாகும்.
   உதாரணம் : **கடல் + நீர் → கடல்நீர்**
   **கடல் + அலை → கடலலை** (மெய்யும் உயிரும் இணைந்து உயிர்மெய் ஆவது இயல்பு)

3. விகாரப் புணர்ச்சி என்றால் யாது?
   சொற்கள் அல்லது சொல் உறுப்புகள் புணரும் போது நிலை மொழியிலோ வருமொழியிலோ அல்லது இரண்டிலுமோ ஏதாவது மாற்றம் ஏற்படின் அது விகாரப் புணர்ச்சி எனப்படும்.

4. வாழைக்காய், வீரவாள், கற்கள் ஆகிய சொற்கள் எவ்வகை விகாரப் புணர்ச்சி என்பதை விளக்குக.
   - வாழைக்காய் - தோன்றல் விகாரம்
     நிலைமொழியும் வருமொழியும் புணரும்போது இடையில் எழுத்துத் தோன்றும்.
     உதாரணம் : **வாழை + காய் → வாழைக்காய்**
   - வீரவாள் - கெடுதல் விகாரம்
     நிலைமொழியும் வருமொழியும் புணரும்போது அவற்றில் எழுத்துக்கள் ஒன்றோ

பலவோ இல்லாமற் போதல் (கெடுதல்) கெடுதல் விகாரப் புணர்ச்சி எனப்படும்.
உதாரணம் : **வீரம் + வாள்** → **வீரவாள்** (‘ம்’ கெட்டது)

- கற்கள் - திரிதல் விகாரம்
  நிலைமொழியும் வருமொழியும் புணரும்போது அவற்றில் உள்ள ஓர் எழுத்து வேறொரு எழுத்தாக மாறுதல் (திரிதல்) திரிதல் விகாரப் புணர்ச்சி எனப்படும்.
  உதாரணம் : **கல் + கள்** → **கற்கள்**(‘ள்’ ‘ற்’ ஆனது)

5. வேற்றுமைப்புணர்ச்சி என்றால் என்ன? விளக்குக.
வேற்றுமைத் தொடரில் வேற்றுமை வருதல் வெளிப்பட்டோ மறைந்தோ நிற்கச் சொற்கள் புணர்வது வேற்றுமைப்புணர்ச்சி எனப்படும்.
- உதாரணம் : **ஆட்டினது குட்டி**
  **குருவிக் கூடு**

6. அல்வழிப் புணர்ச்சி என்றால் என்ன? விளக்குக.
வேற்றுமைப் புணர்ச்சி தவிர்ந்த பிற புணர்ச்சி
அல்வழிப் புணர்ச்சி → அல் வழி → வேற்றுமையல்லாத வழி
- உதாரணம் : **குருவி கூடு கட்டியது.** இதில் உள்ள குருவி, கூடு என்னும் சொற்கள் வேற்றுமைப் பொருளில் அமையவில்லை.

7. உயிரீற்றுப் புணர்ச்சி என்றால் என்ன? விளக்குக.
நிலைமொழி ஈற்றெழுத்து உயிராகவும் வருமொழி முதலெழுத்து உயிராகவோ அல்லது மெய்யாகவோ அமையச் சொற்கள் புணர்வது உயிரீற்றுப் புணர்ச்சி எனப்படும்.
- உதாரணம் : **பலா + இலை** → **பலாவிலை**
  **பலா + மரம்** → **பலாமரம்**

8. உயிரீற்றுப் புணர்ச்சியின் இரு வகைகளும் யாவை?
அ. உயிர் + உயிர்
ஆ. உயிர் + மெய்

9. பின்வருவனவற்றுள் ‘வ்’கர உடம்படு மெய் தோன்றிப் புணர்ந்த சொல் எது?

| | |
|---|---|
| 1. பூமாலை | 2. நீள்வட்டம் |
| 3. மாவிலை | 4. காரவடை |

10. உடம்படு மெய்ப்புணர்ச்சியை உதாரணந்தந்து விளக்குக.
நிலைமொழி இறுதியிலும், வருமொழி முதலிலும் உயிர் வந்தால் இடையில் யகர மெய் அல்லது வகர மெய் தோன்றிப் புணரும் இவ்வாறு தோன்றும் மெய் உடம்படுமெய் எனப்படும்.
- உதாரணம் : **பூனை + ஆல்** → **பூனையால்** (ய் - உடம்படு மெய்)
  **பூ + ஆல்** → **பூவால்** (ய் - உடம்படு மெய்)

11. குற்றியலுகரம் முன் உயிர் வந்தால் எவ்வாறு புணரும்?

குற்றியலுகரம் ஈற்றுச் சொற்களின் முன் வருமொழி முதலில் உயிர் எழுத்து வந்தால் குற்றியலுகரம் கெட்டுப் புணரும்.

- உதாரணம் : **பஞ்சு + ஐ → பஞ்சை**

12. உயிர்முன் மெய் புணர்தலிற்கு உதாரணம் தந்து விளக்குக.

உயிர் + மெய்

நிலை மொழி இறுதியில் உயிரும், வருமொழி முதலில் மெய்யும் வருவது

- உதாரணம் : **அந்த + பாடல் → அந்தப்பாடல்**
  (வல்லினம் மிகுந்துள்ளது)
  **அ + ஞானம் → அஞ்ஞானம்**
  ('ஞ்' என்ற மெல்லின எழுத்து மிகுந்துள்ளது)
  **அ + வீடு → அவ்வீடு**
  (நிலைமொழியில் 'அ'கரம் வந்ததால் வகரம் மிகுந்துள்ளது)

13. மெய்ஈற்றுப் புணர்ச்சி என்றால் என்ன? விளக்குக.

நிலைமொழி ஈற்றெழுத்து மெய்யாகவும் வருமொழி முதலெழுத்து உயிராகவோ அல்லது மெய்யாகவோ அமையச் சொற்கள் புணரும் மெய் ஈற்றுப் புணர்ச்சி எனப்படும்.

இது மெய் + உயிர் எனவும்
மெய் + மெய் எனவும் இரு வகைப்படும்.

14. மெய் முன் உயிர் புணர்தலுக்கு உதாரணம் தந்து விளக்குக.

- **கல் + ஐ → கல் + ல் + ஐ → கல்லை**
- **மண் + ஆல் → மண் + ண் + ஆல் → மண்ணால்**

அகப் புணர்ச்சியில் தனிக்குற்றெழுத்தை அடுத்து சொல் இறுதியில் வரும் மெய்கள் வருமொழி முதலில் உயிர் வரின் இரட்டித்துப் புணரும்.

15. மகர ஈற்றுப் புணர்ச்சியை விளக்குக.

- உதாரணம் : **மரம் + கொப்பு → மரக்கொப்பு**
  தொகைச் சொல்லாக்கத்தில் மகர ஈற்றின் முன் வல்லினம் வந்தால் மகர ஈறு கெட்டு வல்லினம் மிகும்.

- உதாரணம் : **பனை + கிழங்கு → பனங்கிழங்கு**
  அம் சாரியையின் மகர ஈறு வல்லினம் வந்தால் அதற்கு இனமாகத் திரியும்.

- உதாரணம் : **மரம் + கள் → மரங்கள்**
  கள் எனும் பன்மை விகுதி மகர ஈற்றுப் பெயர்களுடன் புணரும் பொழுது மகரம் ஙகரமாகத் திரியும்.
  தற்காலத்தில் புறப்புணர்ச்சியில் மகரஈறு வல்லினத்துக்கு இனமாகத் திரிதல் பெருவழக்கல்ல.

16. ணகர, னகர ஈற்றுப் புணர்ச்சி பற்றி விளக்குக.

ணகர னகர ஈற்றுச் சொற்களுக்கு முன் வல்லினம் வந்தால் வேற்றுமைப்புணர்ச்சியில் அவை முறையே டகர றகரமாகத் திரியும்.

- உதாரணம் : **மண் + குடம் → மட்குடம்**
  **பொன் + சிலை → பொற்சிலை**

17. லகர ளகர ஈற்றுப் புணர்ச்சி பற்றி விளக்குக.

லகர ளகர ஈற்றுச் சொற்களின் முன் வல்லினம் வந்தால் அவை முறையே ற, ட கரமாகத் திரியும்.

- உதாரணம் : **கல் + கள் → கற்கள்**
  **கடல் + கரை → கடற்கரை**
  **சொல் + போர் → சொற்போர்**
  **நாள் + குறிப்பு → நாட்குறிப்பு**
  **வாள் + படை → வாட்படை**

தற்காலத்தில் இயல்புப் புணர்ச்சியாகப் புணரும் போக்குக் காணப்படுகிறது.

- உதாரணம் : **மக்கள் + தொகை → மக்கள்தொகை**
  **வெய்யில் + காலம் → வெய்யில்காலம்**

18. லகர ளகர ஈற்றின் முன் மெல்லினம் வந்தால் அவை முறையே னகர ணகரமாகத் திரியும்.

- உதாரணம் : **நல் + நூல் → நன்னூல்**
  **முள் + முடி → முண்முடி**
  **கல் + நெஞ்சு → கன்னெஞ்சு**
  **எள் + நெய் → எண்ணெய்**

19. யகர ஈற்றுப் புணர்ச்சி பற்றி விளக்குக.

- தொகைச் சொற்களில் யகர ஈற்றின் முன்வரும் வல்லினம் மிகும்.
  உதாரணம் : **தாய் + பால் → தாய்ப்பால்**
- தனிக்குறிலை அடுத்துவரும் யகர மெல்லினம் முன், மெல்லினம் வந்தால் அம் மெல்லினம் மிகும்.
  உதாரணம் : **நல் + நூல் → நன்னூல்**
- தற்காலத்தில் தமிழில் மெல்லினம் இவ்வாறு இரட்டிப்பதில்லை.
  உதாரணம் : **மெய் + ஞானம் → மெய்ஞானம்**

20. ரகர ஈற்றுப் புணர்ச்சி, உதாரணம் தந்து விளக்குக.

- தொகைச் சொற்களில் ரகர ஈற்றின் முன் வல்லினம் வந்தால் அவ் வல்லினம் மிகும்.
  உதாரணம் : **தேர் + சில் → தேர்ச்சில்**
  **வேர் + கடலை → வேர்க்கடலை**

21. ழகர ஈற்றின் முன் வல்லினம் புணரும் புணர்ச்சிக்கு உதாரணம் தந்து விளக்குக.

- தொகைச் சொற்களின் ழகர ஈற்றின் முன் வல்லினம் வந்தால் அவ்வல்லினம் மிகும்.
  உதாரணம் : **தமிழ் + புத்தகம் → தமிழ்ப்புத்தகம்**

## அணியியல்

**அறிமுகம் :**

சொல்லும் விடயத்தைக் கவர்ச்சியான முறையில் கூறுவதற்கு அணிகள் பயன்படுகின்றன.

செய்யுள் இலக்கியம் வசன இலக்கியம் என்பனவற்றிற்கு மாத்திரமன்றிச் சாதாரண உரையாடல்களிலும் அணிகள் பயன்படுகின்றன.

இலக்கண நூல்களின் வகைப்பாட்டின் அடிப்படையில் அணிகள் :

1) பொருளணிகள்
2) சொல்லணிகள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

**பொருளணி**

கூறுகின்ற முறை மூலம் - பொருள் மூலம் விடயத்தை அழகுபடுத்திவரும் அணிகள்.

- உவமை
- உருவகம்
- தன்மைநவிற்சி
- உயர்வு நவிற்சி
- தற்குறிப்பேற்றம் முதலியன பொருளணிகளாகும்.

**சொல்லணி**

பொருளாலன்றிச் சொற்களின் மூலம் அழகுபடுத்தும் அணிகள்.

- யமகம்
- திரிபு
- சிலேடை முதலியன சொல்லணிகளாகும்.

**வினாவிடை**

1. உவமை அணிப் பயன்பாட்டினை உதாரணந்தந்து விளக்குக.
   பயன், மெய், உரு முதலானவற்றின் அடிப்படையில் ஒரு பொருளை அதன் தன்மை கொண்ட மற்றொரு பொருளோடு ஒப்பிட்டுக் கூறுவது உவமையணியாகும். நாம் கூறும் பொருள் உவமேயம் எனப்படும். அதற்கு ஒப்புமையாகக் காட்டும் பொருள் உவமை எனப்படும். இவ்விரண்டிற்கும் இடையேயுள்ள ஒப்புமையைக் காட்டும் சொல் உவம உருபு ஆகும்.
   - வெள்ளத்து அனைய மலர் நீட்டம் மாந்தர்தம் உள்ளத்து அனைய உயர்வு
     (திருக்குறள்)

     ஊக்கத்தின் அளவே மக்களின் உயர்வு என்ற உவமேயப் பொருள் நீரின் அளவே நீர்ப்பூக்களின் தாளினது நீளங்கள் என்ற உவமைக்கு ஒப்பிடப்பட்டு எடுத்துரைக்கப்படுகின்றது.

2. உவமை அணியின் அடிப்படை உறுப்புக்களை உதாரணத்துடன் விளக்குக.

பெரியவர் கேண்மை பிறைபோல நாளும் வரிசை வரிசையா நந்தும்

(திருக்குறள்)

- | | | |
|---|---|---|
| உவமானம் | : | வானத்தில் பிறை நிலா வளர்தல் |
| உவமேயம் | : | நல்லவர்களின் நட்பு வளர்தல் |
| பொதுத்தன்மை | : | படிப்படியாக வளர்ச்சியடைதல் |
| உவமை உருபு | : | போல |

3. கருப்பு சூரியன் வந்தான் - இவ் அடியில் புலப்படும் அணியை இனங்கண்டு விளக்குக.

- அணி : இல் பொருள் உவமையணி
- உலகில் இல்லாத ஒன்றை உவமையாக எடுத்துக் கூறுவது இல்பொருள் உவமையணியாகும்.

  சூரியன் கருப்பாக அமைவதில்லை. எனவே உலகில் இல்லாத ஒன்றை ஒருவனுக்கு உவமையாகக் கூறியிருப்பதால் இது இல் பொருள் உவமையணியாகும்.

4. தன்மை நவிற்சி அணியை உதாரணந்தந்து விளக்குக.

- உள்ளதை உள்ளவாறு, இயல்பான முறையில் சுவைபட எடுத்துரைப்பது தன்மை நவிற்சியணியாகும்.

  ‘‘தீதும் நன்றும் பிறர் தர வாரா
  நோதலுந் தணிதலு மவற்றோரன்ன
  சாதலும் புதுவதன்றே வாழ்தல்
  இனிதென மகிழ்ந்தன்றும் இலமே... முனிவின்
  இன்னா தென்றலு மிலமே....’’ (புறநானூறு)

  நன்மை தீமையும் தாமே வருவதல்லால், பிறரால் வருவதில்லை. துன்பமும் அது தீர்தலும் அதே போன்று தாமே வருவன இறப்பு என்பது எமக்குப் புதிதன்று. வாழ்தல் இனிமையானது என நினைந்து மகிழ்ச்சியடையவும் மாட்டோம். வெறுப்புற்றுத் துன்பமானது என இருக்கவும் மாட்டோம். இங்கு வாழ்க்கையின் இயல்பு உள்ளது. உள்ளவாறு இயல்பாகக் கவிஞர் கூறியுள்ளார்.

6. ‘ஐயவுவமை அணி’ என்றால் யாது?

உவமையையும் பொருளையும் ஐயுற்றுக் கூறுவது ஐயவுவமை அணியாகும்.

7. உருவக அணிப் பிரயோகத்தை உதாரணந்தந்து விளக்குக.

உவமானம் வேறு உவமேயம் வேறு என்பது தோன்றாத நிலையில் உவமானத்தின் தன்மையை உவமேயத்தின் மேல் ஏற்றில் கூறுவது உருவக அணியாகும்.

- உதாரணம் : பாதமலர்

  பாதமாகிய மலர் என இரண்டும் ஒன்றென்ற கருத்தில் பொருள் சிறப்பிக்கப்படுகின்றது.

8. ‘‘பூமிக்கு மேலே மரங்கள்
ஆனந்தத்தால் தலையாட்டுகின்றனவே!
பூமிக்கு கீழே வேர்கள்!
புல்லாங்குழல் வாசிக்கின்றனவோ

(மு. மேத்தா - கவிதை - கண்ணீர்ப்பூக்கள் நூல்)

இக்கவிதையில் புலப்படும் அணியை இனங்கண்டு விளக்குக.

- அணி - தற்குறிப்பேற்ற அணி
  தன் + குறிப்பு + ஏற்றம் → தற்குறிப்பேற்றம்

  இயற்கை நிகழ்ச்சிகளின் மீது கவிஞர் தனது மனக்கருத்தை ஏற்றிக் கூறுவது தற்குறிப்பேற்ற அணியாகும்.

  இக்கவிதையில் காற்று வீசும் பொழுது மரங்கள் அசைவது இயற்கை. ஆனால் கவிஞர் பூமிக்கும் கீழே வேர்கள் புல்லாங்குழல் வாசிப்பதால் மரங்கள் அவ் இசை ஒலியைக் கேட்டு ஆனந்தத்தால் தலையசைக்கின்றன எனக் கூறியுள்ளார்.

9. ‘அமிழ்தினும் ஆற்ற இனிதே தம் மக்கள் சிறுகை அளாவிய கூள்’’ (திருக்குறள்)
இக்குறட்பாவில் புலப்படும் அணியை இனங்கண்டு விளக்குக.

- அணி - உயர்வுநவிற்சியணி
  ஒரு பொருளின் அல்லது காட்சியின் இயல்பான தன்மைகளை கவிஞர் தன் கற்பனைத் திறனால் மிகைப்படுத்தி அழகுபட எடுத்துரைப்பது உயர்வு நவிற்சியணியாகும்.

  குழந்தைகள் அளைந்த உணவு பெற்றோர்க்கு இனிமையுடையதாகவே இருக்கும் எனவே அதை மிகைப்படுத்தி அமிழ்தத்தைவிட இனிமையானது என வள்ளுவர் கூறியுள்ளார்.

10. ஒட்டணி / பிறிதுமொழிதல் / நுவலாநுவற்சி அணியை விளக்குக.
கூறவந்த விடயத்தை வெளிப்படையாகக் கூறாது அதனோடொத்த வேறொன்றைக் கூறுவதன் மூலம் கூறவந்த விடயத்தை உணர்த்துவதாய் இவ்அணி அமையும்.

- உதாரணம் : பீலிபெய் சாக்காரும் அச்சிரம் அப்பண்டம் சால மிகுத்துப் பெயின்

ஒரு அரசன் வலிமையற்றவர்கள் தானே என்று பலரைப் பகைத்துக் கொண்டால் அவர்களெல்லோரும் சேர்வதால் அழிந்துபோக நேரிடும் என்ற கருத்து வெளிப்படையாகக் கூறவில்லை. ஆனால், பாரமற்ற மயிற்பீலிதானே என்று அளவுக்கதிகமாக ஏற்றினால் பலமான வண்டியும் அதன் அச்சு முறியும் நிலை ஏற்படும் என்பதன் மூலம் அந்த உண்மை உணர்த்தப்படுகிறது.

இந்த அணியுள்ளும் உவமைத்தன்மையுண்டு.

## வாக்கியம்

**அறிமுகம் :**

சொற்கள் பொருள்படத் தொடர்ந்து வந்து கருத்து முற்றுப் பெற்று அமைவது வாக்கியமாகும்.

**வாக்கிய வகைகள்**

1) தனி வாக்கியம்
ஒரு வாக்கியத் தொடரால் அமைந்த வாக்கியம்.

2) கூட்டு வாக்கியம்
இரண்டு சமனிலைத் தொடர்களை இணைத்து ஆக்கப்படும் வாக்கியம்.

3) கலப்பு வாக்கியம்
ஒரு தலைமை வாக்கியத்தொடரும் ஒன்று அல்லது பல சார்பு நிலைத் தொடர்களும் கொண்ட வாக்கியம்.

**வினாவிடை**

1. தனி வாக்கியத்தின் அமைப்பு முறை யாது?
   - பெயர்த்தொடர் - பெயர்த்தொடர் அமைப்பு
   - வினைத்தொடர் - வினைத்தொடர் அமைப்பு

2. பெயர்ப் பயனிலை கொண்டமைந்த வாக்கியத்திற்கு உதாரணம் தருக.
   உதாரணம் : **இந்தப் பெண் எனது மனைவி**

3. பின்வருவனவற்றுள் தனிவாக்கியங்களை எடுத்துக்காட்டுக.
   - **கீதா ஊரிலிருந்து புறப்பட்டாள்.**
   - கீதா பொருள் வாங்கக் கடைக்குச் சென்றாள்.
   - **கீதா கவிதாவுடன் பாடசாலைக்குச் சென்றாள்.**
   - கீதாவும் கவிதாவும் வெளிநாடு சென்றனர்.

4. கண்ணன் ஒரு பாடகன் என்ற தனிவாக்கிய அமைப்பினை விளக்குக.
   - ஒரு வாக்கியத்தொடரால் அமைந்த தனி வாக்கியம்.
   - எழுவாயும் பயனிலையும் பெயர்த்தொடர்களாக அமைவது பெயர்ப்பயனிலை வாக்கியமாகும்.
   - கண்ணன் - எழுவாய்
   - பாடகன் - பயனிலை

5. வினை தொக்கிய வாக்கியம் என்றால் என்ன? விளக்குக.

‘தங்கைக்குப் பயம் இருக்கிறது’ என்ற வாக்கியத்தில் ‘இருக்கிறது’ என்ற பயனிலையை நீக்கிவிட்டால் ‘தங்கைக்குப் பயம்’ என அமையும். இது பெயர் + கு + பெயர் + இரு என்ற அமைப்பில் அமைந்திருந்தது. பயனிலையான இரு நீக்கப்பட்டு பொருள்தன்மை பெற்றுள்ளது. இவ்வாக்கியம் பெயர்ப்பயனிலை கொண்ட வாக்கியம் என்பதை விட வினைதொக்கிய வாக்கியமாகக் கருதப்படும்.

6. ‘கவிதா கதிரையில் இருக்கிறாள்’ என்ற வாக்கியத்தை வினை தொக்கிய வாக்கியமாகக் கருதலாமா? விளக்குக.

- இல்லை.
- இங்கு, இருக்கிறாள் என்ற பயனிலையை நீக்கிவிட்டால் கவிதா கதிரையில் என இன்னொரு வினையை அவாவி பொருள் முடிவுறாத சொற்றொடராக அமைந்துவிடும்.

7. வினா வாக்கியங்கள் எவ்வாறு உருவாக்கப்படுகின்றன.

- வினாச் சொற்கள்
- ஆகார வினா இடைச்சொல்லைக் கொண்டு ஆக்கப்படுகின்றன.

8. வினாச் சொற்கள் எவை?

யார், ஏன், என்ன, எவன், எவள், எவர்கள், எது, எவை, எந்த, எங்கு, எப்போது, எவ்வளவு, எத்தனை, எத்தனையாவது, எப்படி, எப்படிப்பட்ட.

9. ‘ஆ’ கார வினா இடைச்சொல்லைக் கொண்டு வினா வாக்கியம் உருவாக்கப்படும் முறையை விளக்குக.

ஒரு வாக்கியத்தின் பெயருக்கு அடையாக வரும் சொற்கள் தவிர்ந்த பிற எல்லாச் சொற்களுடனும் ஆகார வினா இணைந்து வந்து அவ்வாக்கியத்தை, வினாவாக்கியமாக மாற்றும். வாக்கியத்தின் இறுதியில் பயனிலையோடு வரும்போது இது வாக்கியம் முழுமையையும் வினாவாக மாற்றுகிறது. பிற சொற்களுடன் இணைந்து வரும் போது அந்தச் சொல்லை மட்டுமே வினாவாக உணர்த்துகிறது.

- உதாரணம் :
    - ♦ அப்பா நாளைக்குக் கொழும்புக்குப் போகிறாரா?
    - ♦ அப்பா நாளைக்குக் கொழும்புக்கா போகிறார்?
    - ♦ அப்பா நாளைக்குக் கொழும்புக்குப் போகிறார்?
    - ♦ அப்பாவா நாளைக்குக் கொழும்புக்குப் போகிறார்?

10. ‘அப்பா நாளைக்குப் பணம் அனுப்புவார்’ என்ற வாக்கியத்தை எப்போது, யார் என்ற வினாச் சொற்களைப் பயன்படுத்தி வினா வாக்கியங்கள் ஆக்குக.

- அப்பா எப்போது பணம் அனுப்புவார்?
- யார் நாளைக்குப் பணம் அனுப்புவார்?

11. கூட்டு வாக்கிய இணைப்பில் சமனிலையாக்கம் பற்றி விளக்குக.

இரண்டு அல்லது சமனிலை வாக்கியத் தொடர்களை இணைத்துக் கூட்டுவாக்கியம் அமைக்கப்படும் முறை சமனிலை ஆக்கம் எனப்படும்.

- உதாரணம் :
    - ♦ உம் அல்லது ஆனால், ஆகவே போன்ற இனைப்பிடைச் சொற்களாலும் செய்து, செய்ய, என்ற வினை எச்சங்களாலும் சமனிலைத் தொடர்கள் இணைக்கப்பட்டுக் கூட்டுவாக்கியங்கள் ஆக்கப்படுகின்றன.
        - நிலா பாட கவிதா ஆடினாள்

12. சாம்பவி முல்லைத்தீவிற்குச் சென்றாள்.

சாருமதி திருகோணமலைக்குச் சென்றாள். இவ்விரு வாக்கியங்களையும் 'உம்' இடைச்சொல்லைப் பயன்படுத்தி இணைத்துக்காட்டுக.

- சாம்பவி முல்லைத்தீவிற்கும் சாருமதி திருகோணமலைக்கும் சென்றனர்.

13. 'ஆ' என்னும் வினா இடைச்சொல்லைப் பயன்படுத்தி மாற்று வினா முறையை விளக்குக.

'ஆ' என்னும் வினா இடைச்சொல் வினா வாக்கியங்களை இணைத்து மாற்று வினா வாக்கியங்களை ஆக்கப் பயன்படுகிறது.

- உதாரணம் : நீ மோர் குடிக்கிறாயா?. நீ நீர் குடிக்கிறாயா?
  நீ மோரா நீரா குடிக்கிறாய்?

14. கலப்பு வாக்கிய அமைப்பினை விளக்குக.

ஒரு தலைமை வாக்கியத் தொடரும் ஒன்று அல்லது பல சார்பு தலைமை வாக்கியத் தொடரும் ஒன்று அல்லது பல சார்பு நிலைத் தொடர்களும் கொண்ட வாக்கியம் கலப்பு வாக்கியம் எனப்படும்.

- உதாரணம் : அப்பா நாளைக்கு வருவார் என்று அம்மா சொன்னாள்.
    - ♦ தலைமை வாக்கியத் தொடர் - அம்மா சொன்னாள்.
    - ♦ சார்பு தொடர் - அப்பா நாளைக்கு வருவார்.

15. கலப்பு வாக்கியத்துள் அமையும் சார்பு நிலைத் தொடர்கள் பற்றி விளக்குக.

- சார்பு நிலைத் தொடர்கள்.
    - ♦ எச்சவாக்கியத் தொடர்களாக
    - ♦ முற்று வாக்கியத் தொடர்களாக
    - ♦ பெயர்த் தொடராக்கப்பட்ட முற்று வாக்கியத் தொடர்

    - ♦ எச்சவாக்கியத் தொடர்
        - உதாரணம் : மாமா அப்பாவைப் பார்க்கக் கொழும்புக்கு வந்தார். இவ்வாக்கியத்தில் அப்பாவைப் பார்க்க என்னும் எச்சத்தொடர் வந்ததற்கான நோக்கத்தைச் சுட்டி நிற்கின்றது.

- ♦ முற்று வாக்கியத் தொடர்
  - உதாரணம் : ஆசிரியர் வருகிறார் என்று மாணவன் கூறினான்.

  ஆசிரியர் வருகிறார் என்பது முற்றுப் பெற்ற சார்புத் தொடர். என்று என்ற இடைச்சொல்லினால் தலைமைத் தொடருடன் இணைக்கப்பட்டுள்ளது.

- ♦ பெயர்த்தொடராக்கப்பட்ட முற்று வாக்கியத் தொடர்
  - உதாரணம் : எனக்கு இன்னும் இந்தப் படத்தைப் பார்க்க நேரம் கிடைக்கவில்லை.

  பார்க்க என்ற எச்சத்தொடர் நேரம் என்ற பெயருடன் இணைந்து நிற்கின்றன. எனினும் பார்க்க என்ற எச்சம் அடுத்து வந்த கிடைக்கவில்லை என்ற வினைகொண்டே முடிகின்றன.

17. சூரியன் உதிக்கத் தாமரை மலர்ந்தது. இவ்வாக்கியம் கூட்டுவாக்கியமா? கலப்பு வாக்கியமா? என்பதை இனங்கண்டு அவ்வாக்கியத்தைப் பிரித்துக்காட்டுக.

- கலப்பு வாக்கியம்
  - ♦ தலைமை வாக்கியம் - தாமரை மலர்ந்தது.
  - ♦ சார்புத் தொடர் - சூரியன் உதிக்க

    சூரியன் உதிக்க என்னும் எச்சத்தொடர் தாமரை மலர்ந்ததற்கான விளைவைச் சுட்டி நிற்கிறது. மெய் எச்சத் தொடர் மூலம் வாக்கியம் இணைக்கப்பட்டுள்ளது.

18. நிரப்பித் தொடர் பற்றி உதாரணந்தந்து விளக்குக.

- உதாரணம் : (வாழ்க்கையில் வளர்ச்சியடைவேன் என்ற) நம்பிக்கையில் நான் கடினமாக உழைக்கிறேன்.

  என்ற கலப்பு வாக்கியத்தில் நம்பிக்கையில் நான் கடினமாக உழைக்கிறேன் என்ற தன்மைத் தொடரில் எந்த நம்பிக்கை என்பது இடம் பெறவில்லை. அது நிரப்ப வேண்டிய ஒன்றாக உள்ளது. வாழ்க்கையில் வளர்சியடைவேன் என்ற நிரப்பியான சார்புத் தொடர் இவ் இடைவெளியை நிரப்புகின்றது. எனவே இது நிரப்பித்தொடர் எனக் கூறப்படுகிறது.

19. 'செய்தால்' எச்சத் தொடரைப் பயன்படுத்திக் கலப்பு வாக்கியத்தை உருவாக்கும் முறையை விளக்குக.

செய்தால் என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சம் கலப்பு வாக்கியங்களை உருவாக்கப்பயன்படுகிறது. இதனை நிபந்தனை எச்சத்தொடர் என்றும் கூறப்படுகிறது.

- உதாரணம் : நீ பாடசாலைக்கு வந்திருந்தால் போட்டியில் பங்குபற்றியிருக்க முடியும்.
  - ♦ தலைமை வாக்கியத் தொடர் - நீ போட்டியில் பங்குபற்றியிருக்க முடியும்.
  - ♦ சார்புத் தொடர் - பாடசாலைக்கு வந்திருந்தால்

    இச் சார்புத் தொடரான செய்தால் எச்சத் தொடர் நிபந்தனையாக அமைந்துள்ளது. எனவே தலைமை வாக்கியத்தொடர் கூறும் வினை நிகழ்விற்குச் செய்தால் எச்சத் தொடர் நிபந்தனையைச் சுட்டுவதால் இது செய்தால் நிபந்தனை எச்சத்தொடர் எனக் கூறப்படும்.

## இணைப்பிடைச் சொற்கள்

**அறிமுகம் :**

தனிவாக்கியங்கள் இணைக்கப்பட்டு கூட்டுவாக்கியம் ஆக்குவதற்கு இணைப்பிடைச் சொற்கள் பயன்படுகின்றன.

- இணைப்பிடைச் சொற்களாவன :
  1) உம்
  2) அல்லது, இல்லை யென்றால் , ஓ, ஆவது, ஆ
  3) ஆனால்
  4) ஆகவே

**வினாவிடை**

1. கவிதா வவுனியாவிற்குச் சென்றாள்.
   காருண்யா யாழ்ப்பாணத்திற்குச் சென்றாள்.

   இவ்விரு தனி வாக்கியங்களையும் 'உம்' இணைப்பிடைச் சொல்லைப் பயன்படுத்தி இணைக்கு.
   - கவிதா வவுனியாவிற்கும் காருண்யா யாழ்ப்பாணத்திற்கும் சென்றார்கள்.

2. தனி வாக்கியங்களில் எழுவாய்த்தொடர்கள் வெவ்வேறாகவும், ஒத்த பயனிலைகளும் இருக்கும் நிலையில் 'உம்' இடைச்சொல்லைப் பயன்படுத்தி எவ்வாறு இணைப்பது? விளக்குக.
   - உதாரணம் :

     அ) கமலன் பாடசாலைக்குச் சென்றான்.
     கண்ணன் பல்கலைக்கழகத்திற்குச் சென்றான்.
     இங்கு எழுவாய்த்தொடர்கள் வெவ்வேறாகவும் 'கு' உருபு ஏற்ற பெயர்களும் வெவ்வேறானவை. எனவே இவற்றை மாற்றவோ நீக்கவோ முடியாது. ஒத்த பயனிலைகளில் ஒன்றை நீக்கிவிடலாம். நீக்கி பயனிலை பலர்பாலில் அமையும். எழுவாய்த்தொடர் 'உம்' இணைப்பிடைச் சொல்லால் இணைக்கப்படும்.
     - ♦ கமலன் பாடசாலைக்கும் கண்ணன் பல்கலைக்கழகத்திற்கும் சென்றார்கள்.

     அ) கலா பாட்டி வீட்டுக்கு வந்தாள்.
     நீலா பாட்டி வீட்டுக்கு வந்தாள்.
     இங்கு வினைமுற்று பலர் பால் விகுதி பெற்று அமையும்.
     - ♦ கலாவும் நிலாவும் பாட்டி வீட்டுக்கு வந்தார்கள். இங்கு எழுவாய்ப் பெயர்கள், பயனிலைகள் ஒத்தவையாக உள்ளன. எனவே வெவ்வேறான எழுவாய்ப் பெயர்கள் 'உம்' இடைச்சொல் இணைக்கப்பட்டுள்ளன.

3. ‘உம்’ இணைப்பிடைச் சொல்லைப் பயன்படுத்தி வினையடைத்தொடர்கள இணைக்கப்படுமாற்றிற்கு உதாரணம் தருக.

- உதாரணம் : கமலாவிற்கு வீணை வாசிக்க விருப்பம்.
  கமலாவிற்கு பாட்டுப்பாட விருப்பம்.
  - ♦ கமலாவிற்கு வீணை வாசிக்கவும் பாட்டுப்பாடவும் விருப்பம்.

4. ‘‘அல்லது’’ இணைப்புப்பற்றிச் சுருக்கமாக விளக்குக.

அல்லது, இல்லையென்றால், இல்லாவிட்டால், ஆவது, ஓ, ஆ ஆகிய இணைப்பிடைச் சொற்களைப் பயன்படுத்தி வாக்கியம் ஆக்கும் முறைமை அல்லது இணைப்பு எனக் கருதப்படும் இதனைப் பிரதியீட்டு இணைப்பு எனவும் அழைக்கலாம். இணைக்கப்படும் வாக்கிய உறுப்புகளுக்கிடையில் அல்லது, இல்லையென்றால், இல்லாவிட்டால் ஆகிய இணைப்பிடைச் சொற்கள் இணைக்கப்படும்.

- உதாரணம் : நான் கேட்டு அல்லது வாசித்து எழுதுவேன்.
  ஆவது, ஓ, ஆ ஆகிய இணைப்பிடைச் சொற்கள் இணைக்கப்படும் உறுப்புகள் ஒவ்வொன்றின் இறுதியிலும் வரும்.
  - ♦ நான் கேட்டாவது வாசித்தாவது எழுதுவேன்.

5. நீ பாட வேண்டும்.
நீ ஆட வேண்டும்.
இத்தனிவாக்கியங்களை ‘அல்லது’ இணைப்பிடைச் சொல்லைப் பயன்படுத்தி இணைக்குக.

- நீ பாட அல்லது ஆட வேண்டும்.

6. செழியன் பந்தைத் தருவான்.
சேந்தன் பந்தைத் தருவான்.
இவ்விரு வாக்கியங்களையும் கீழ்த்தரப்படும் இணைப்பிடைச் சொற்களில் பொருத்தமானதை இனங்கண்டு இணைக்க.
ஆனால், உம், இல்லாவிட்டால்

- இல்லாவிட்டால் - செழியன் பந்தைத் தருவான் இல்லாவிட்டால் சேந்தன் பந்தைத் தருவான்.

7. ‘ஆவது’ என்ற இணைப்பிடைச்சொல் பெயர்த்தொடர்கள் இணைக்கப் பயன்படுமாற்றிற்கு உதாரணம் தருக.

- உதாரணம் : நான் நாவல் வாசிப்பேன்.
  நான் சிறுகதை வாசிப்பேன்.
  - ♦ நான் நாவலாவது சிறுகதையாவது வாசிப்பேன்.

8. ‘ஆ’ என்னும் இணைப்பிடைச் சொல் கூட்டு வாக்கிய இணைப்பில் பயன்படுமாற்றினை விளக்குக.

‘ஆ’ என்னும் இணைப்பிடைச் சொல் வினாவாக்கியங்களாக இணைத்து மாற்று வினா வாக்கியங்களை ஆக்கப் பயன்படுகிறது.

- உதாரணம் : நிலா ஆடுவாளா? நிலா பாடுவாளா?
  நிலா ஆடுவாளா, பாடுவாளா?

உடன்பாட்டு எதிர்மறை ஆகிய மாற்று வினாவை ஆக்கவும் ‘ஆ’ இணைப்பிடைச் சொல் பயன்படுகின்றது.

நீ பாடுவாயோ? நீ பாடமாட்டாயோ?

நீ பாடுவாயோ பாடமாட்டாயோ?

9. ‘ஆனால்’ இணைப்பிடைச்சொல் வாக்கிய இணைப்பில் பயன்படும் சந்தர்ப்பத்தினை விளக்குக.

ஆனால் என்னும் இணைப்பிடைச் சொல் ஒரு கருத்துக்கு முரணான இன்னொரு கருத்துடைய வாக்கியத்தை இணைக்கப்பயன்படுகின்றது.

பெயரடை, வினையடைத்தொடர்கள், முற்றுத் தொடர்கள் ஆகிய முதலியன இவ்வாறு இணைக்கப்படுகின்றன.

- உதாரணம் : கமலா அழகானவள்.
  கமலா ஆணவம்மிக்கவள்.
  கமலா அழகானவள் ஆனால் ஆணவம் மிக்கவள்.

10. ‘ஆனால்’ என்னும் இணைப்பிடைச் சொல் ‘வினையடைத்தொடரை’ இணைக்கப் பயன்படுமாற்றிற்கு உதாரணம் தருக.

- உதாரணம் : செழியன் இனிமையாகப் பாடுவான்.
  செழியன் வேகமாகப் பாடுவான்.
  ♦ செழியன் இனிமையாக ஆனாால் வேகமாகப் பாடுவான்.

11. ‘ஆகவே’ என்ற இணைப்பிடைச் சொல் வாக்கிய இணைப்பில் பயன்படுமாற்றினை விளக்குக.

ஒரு வாக்கியத்தின் கருத்தோடு தொடர்புடைய அல்லது அக்கருத்தோடு இணைபுபட்ட விளைவு என்றும் பொருள் தரும் வகையில் அமையாத வாக்கியத்தை இணைப்பதற்கு ‘ஆகவே’ இணைப்பிடைச் சொல் பயன்படுகின்றது.

ஆகையால், ஆதலால், எனவே, முதலிய இணைப்பிடைச் சொற்களும் இத்தன்மை வாய்ந்ததாகவே அமைகின்றன.

- உதாரணம் : இன்று விஞ்ஞானப் பாடம் நடக்கும்.
  இன்று விஞ்ஞானப் புத்தகம் கொண்டு செல்லல் வேண்டும்.
  ♦ இன்று விஞ்ஞான பாடம் நடக்கும் ஆகவே விஞ்ஞானப் புத்தகம் கொண்டு செல்லல் வேண்டும்.

12. சாம்பவி நன்றாகப் படிக்கிறாள்.

சாம்பவி பரீட்சையில் சித்தியெய்துவாள்.

பின்வரும் இணைப்பிடைச் சொற்களில் பொருத்தமான சொல்லை இனங்கண்டு மேலுள்ள தனிவாக்கியங்களை இணைக்கு.

ஆனால், ஆகவே, உம்

- சாம்பவி நன்றாகப் படிக்கிறாள். ஆகவே பரீட்சையில் சித்தி எய்துவாள்.

## வழு, வழாநிலை, வழுவமைதி

**அறிமுகம் :**

வாக்கியங்களில் எழுவாய், பயனிலை என்பனவற்றுக்கிடையே வாக்கிய இயைபு பேணப்படுதல் வேண்டும். திணை, பால், எண், இடம் இணைபுபட அமைதல் வேண்டும். இவ்வாறு அமைதல் வாக்கிய இயைபு ஆகும். வாக்கிய இயைபற்று இலக்கண முறைக்கு மாறாகப் பேசுவதும் எழுதுவதும் வழு எனப்படும்.

- திணை வழு
- பால் வழு
- எண் வழு
- இட வழு
- கால வழு
- வினா வழு
- விடை வழு
- மரபு வழு
- சொல் வழு

**வழாநிலை**

வழுவற்று வாக்கியங்கள் அமையும் முறை.

**வழுவமைதி**

இலக்கண அமைப்பின்றி வழுவாக வாக்கியம் அமைந்திருத்தலும், காரணம் கருதி இலக்கணமுடையது போல விதிவிலக்காக ஏற்றுக் கொண்டு பேசுவது, எழுதுவது வழுவமைதி எனப்படும்.

- திணை வழுவமைதி
- பால் வழுவமைதி
- எண் வழுவமைதி
- இடவழுவமைதி
- காலவழுவமைதி
- மரபு வழுவமைதி

**வினாவிடை**

1. திணை வழு பற்றி உதாரணந்தந்து விளக்குக.

   திணை - உயர்திணை, அஃறிணை

   எழுவாய் ஒரு திணையிலும், பயனிலை மாற்றொரு திணையிலும் அமைவது.

   - உதாரணம் : கலா வந்தது

     கலா - உயர்திணை பெயர்

     வந்தது - அஃறிணை வினை

2. பால் வழு பற்றி விளக்குக.

ஒரு பாலில் தொடங்கிய வாக்கியம் மற்றொரு பாலில் முடிவது.

- உதாரணம் : அம்மா வந்தான்.

  அம்மா - பெண்பாற் பெயர்

  வந்தான் - ஆண்பால் வினை

3. 'வேங்கை மரம் நிழல் பரப்பி நின்றன' இவ்வாக்கியத்திலுள்ள வழுவைச் சுட்டிக்காட்டி திருத்தி எழுதுக.

- வேங்கை - எழுவாய் - ஒருமை

  நின்றன - பயனிலை - பன்மை

  - ♦ வேங்கை மரம் நிழல் பரப்பி நின்றன.

4. ''தான் கடினமாக உழைப்பேன் என்றான்'' இவ்வாக்கியத்திலுள்ள வழுவைச் சுட்டிக்காட்டி திருத்தி எழுதுக.

- தான் - படர்க்கைப் பெயர்

  உழைப்பேன் - தன்மை வினை

  இட வழு

  - ♦ தான் கடினமாக உழைப்பான் என்றான்.

    தான் - படர்க்கை

    உழைப்பான் - படர்க்கை

5. 'கால வழு' பற்றி விளக்குக.

ஒரு காலத்தில் தொடங்கும் வாக்கியம் மற்றொரு காலத்தில் முடிவது.

- உதாரணம் : நாளை வந்தான்

  நாளை - எதிர்காலம்

  வந்தான் - இறந்தகாலம்

6. வினா வழு பற்றி விளக்குக.

பொருத்தமற்ற வினாவை வினவுவது

- உதாரணம் : ஒரு விரலைக்காட்டி பெரிதா? சிறிதா? என வினவுது.

  இரண்டு விரல்களையும் காட்டினாற் தான் விடையளிக்க முடியும்.

7. விடை வழுபற்றி விளக்குக.

வினாவிற்குப் பொருத்தமற்ற விடை விடை வழுவாகும்.

- உதாரணம் : உணக்கு நீ விரும்பிய பாடம் எது? என்று கேட்டால் எனக்கு விளையாட்டில்தான் அதிக விருப்பம் என விடை கூறுவது.

8. 'மயில் கத்தும்' என்பதில் காணப்படும் வழுவைச் சுட்டிக்ககாட்டி திருத்தி எழுதுக.

மயில் கத்தும் என்பது மரபன்று மயில் அகவும் என்பதே மரபு ஆகும்.

9. ‘அம்மா சமையற் பாத்திரத்தைப் பாவித்து சமைத்தாள்’ இவ்வாக்கியத்தினைத் திருத்தி எழுதுக.

பாவித்து - சொல்வழு

பயன்படுத்தி என எழுதுதல் வேண்டும்.

- உதாரணம் : அம்மா சமையற் பாத்திரத்தைப் பயன்படுத்திச் சமைத்தாள்.

10. திணை வழுவமைதி பற்றி விளக்குக.

உயர்வு, இழிவு, சிறப்பு, கோபம் ஆகியன காரணமாக ஒரு திணைச் சொல் மற்றொரு திணைச்சொல்லாக அமைவது. இவ்வாறு அமைந்தாலும் ஏற்றுக்கொள்ளப்படும் திணை வழுவமைதி ஆகும்.

- உதாரணம் : திங்களும் சான்றோரும் ஒப்பா - உயர்வு
  மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா - இழிவு
  பசுவை தொய்வமே என அழைத்தல் - உயர்வு
  குறிப்பறிய மாட்டாதவன் நள்மரம் - இழிவு

11. பால் வழுவமைதி பற்றி விளக்குக.

மகிழ்ச்சி, உயர்வு, சிறப்பு, கோபம், இழிவு காரணமாக ஒரு பாற் சொல் இன்னொரு பாற் சொல்லாக அமைவது.

- தாய் மகளை வாடா என அழைப்பது - மகிழ்ச்சி

வயது, கல்வி, பதவி காரணமாக ஒருவனை,

- அவர்கள் என அழைப்பது - உயர்வு

12. இடவழுவமைதி பற்றி விளக்குக.

சிறப்பு இடப்பெயர்கள் மாறி வருவது.

- உதாரணம் : நானோ நீயோ யார் இதைச் செய்தார்.
  தன்மை முன்னிலைப் பெயர்கள் படர்க்கைப் பயனிலை கொண்டு முடிந்தாலும் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக அமைந்துள்ளது.

13. கால வழுவமைதி பற்றி விளக்குக.

விரைவு, தெளிவு, நிச்சயம் காரணமாக ஒரு காலத்திற்குரிய சொல்லை வேறொரு காலத்திற்குரியதாக அமைந்திருத்தல்.

- உதாரணம் : உழைக்காது சோம்பலாக இருப்பவனைப் பார்த்து ‘இவன் வாழ்க்கையில் அழிந்துவிட்டான்’ எனக் கூறுதல்.

  இங்கு எதிர்காலத்தில் அமைய வேண்டிய பயனிலை நிச்சயம் காரணமாக இறந்தகாலமாக அமையப் பெற்றுள்ளது.

14. மரபு வழுவமைதிக்கு உதாரணம் தருக.

மரபு மாறி வழங்குவது மரபு வழுவமைதியாகும்.

- குயில் கத்தும் - மரபன்று
  குயில் கூவும் - மரபு
  என்றாலும் மரபாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருத்தல்.

# நிறுத்தக் குறியீடுகள்

**அறிமுகம் :**

வாசிக்கும் பொழுதும் எழுதும் பொழுதும் பொருள் மயக்கமின்றிப் பொருளறியக் கூடியதாகவும் வியப்பு, அவலம், கோபம் போன்ற உணர்வுகளை வெளிப்படுத்தவும் நிறுத்தக்குறிகள் பயன்படுகின்றன.

**நிறுத்தக்குறியீடுகள்**

1) காற்புள்ளி
2) அரைப்புள்ளி
3) முக்காற்புள்ளி
4) முற்றுப்புள்ளி
5) வினாக்குறி
6) மேற்கோட் குறி
7) விட்டிசைக் குறி
8) மெய்ப்பாட்டுக்குறி

**வினாவிடை**

1. காற்புள்ளி பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள் எவை? (காற்புள்ளி - உறுப்பிசைக்குறி)
   - ஒன்றுக்கு மேற்பட்ட சொற்கள், சொற்றொடர்கள் வரும் பொழுது பொருள் விளங்கும் வண்ணம் தனித்தனியே பிரித்துக் காட்டுவதற்கு.
   - விளிமுன்
   - முகவரியின் இறுதிவரி தவிர ஏனைய வரிகளின் இறுதியில்.
   - மேற்கோள் குறிக்கு முன்
   - பொருள் மயக்கம் தோன்றக் கூடிய இடத்தில்
   - வாக்கியத்தில் வரும் இடைப் பிறவைப்பைப் பிரித்துக்காட்டுவதற்கு
   - ஆதலால், ஆகையால், ஆகவே, ஆயினும், இனி, என்றாலும், எனவே போன்ற இணைப்பிடைச் சொற்களின் பின்.
   - ஆம், இல்லை, என்ற சொற்பொருளோடு வாக்கியம் ஆரம்பிக்கும் போது
   - தொடர் வாக்கியத்தில் உட்தொடர்கள் நீண்டிருப்பின், அவை காற்புள்ளியிட்டுப் பிரித்துக்காட்டப்படும்.
   - வினையெச்சங்களின் பின்
   - பெயரடைகளும், வினையடைகளும் ஒன்றுக்கு மேல் அடுக்கி வருமிடத்து.

2. பின்வரும் வாக்கியங்களில் பொருத்தமான இடங்களில் காற்புள்ளியிடுக.
   - சாம்பவி, ‘‘என்னை வெல்ல யாருமில்லைதானே வெற்றியடைவேன்” என்று கூறினாள்.
   - ஆகவே, கமலா இத்தகைய சூழலை மறந்துவிடு.
   - ஆழ்வார்களின் பாடல்களுக்கு உரை எழுதியவர்கள், வட சொற்களும் தமிழ்ச் சொற்களும் விரவிக் கலந்த மணிப்பிரவான நடையில் எழுதினார்கள்.

- குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகியன ஐவகை நிலங்களாகும்.
- சில, பல நோக்குக் கூட்டுறவுச்சங்கங்கள் காணப்படுகின்றன.

3. அரைப்புள்ளி இடம்பெறும் சந்தர்ப்பங்கள் எவை?
   - ஒரே எழுவாயில் பல வாக்கியங்கள் தொடருமிடம்.
   - ஒரே எழுவாய்க்குரிய உடன்பாட்டுக்கருத்தும் எதிர்க்கருத்தும் தொடர்ந்து வருமிடம்.
   - ஒன்றுக்கு மேற்பட்ட கூட்டொடர்களை இணைப்படுதற்கு.

4. பின்வரும் வாக்கியங்களின் பொருத்தமான இடங்களில் அரைப்புள்ளியிடுக. (;)
   - அனுமன், இராமன் கட்டளையைத் தலைமேற்கொண்டான்; இராவணன் இருக்குமிடத்தை அடைந்தான்.
   - ஆண்டியும் இறக்கின்றான்; அரசனும் இறக்கின்றான்.
   - செழியன் காந்தனிடம் நயமாகப் பேசுவான்; உள்ளத்தில் வஞ்சமே கொண்டிருப்பான்.

5. (அ) முக்காற்புள்ளியைக் குறிப்பிடுக. (:)

   (ஆ) பின்வரும் வாக்கியங்களில் பொருத்தமான இடங்களில் முக்காற்புள்ளி இடுக.
   - பாமரர்கள் கள்ளங்கபடமற்றவர்கள்: அவர்களது நட்புறவு போலித்தனமற்றது.
   - வினைச்சொற்களுக்கு உதாரணங்கள் வருமாறு: ஓடினான், ஆடினான், பாடினான்.

6. முற்றுப்புள்ளி இடம் பெறும் சந்தர்ப்பங்கள் எவை?
   - வினா, மெய்ப்பாடு தவிர்ந்த ஏனைய வாக்கியங்களின் இறுதியில்
   - சொற்களைச் சுருக்கி எழுதுமிடங்களில்
   - முகவரி இறுதியில்

7. சொற்களைச் சுருக்கி எழுதும் சந்தர்ப்பத்தில் முற்றுப்புள்ளி குறியீடு இடப்படுவதற்கு உதாரணம் தருக.
   - கி.பி.
   - கி.மு.
   - செ.மீ
   - உ.வே. சாமிநாதையர்

8. வினாக்குறியீடு இடம் பெறும் சந்தர்ப்பங்கள் எவை? (?)
   - வினாப் பொருளைத் தரும் வாக்கியத்தின் இறுதியில்.
   - ஐயத்துக்கிடமான யாதேனும் ஒரு கூற்றின் பின் அடைப்புக்குறிக்குள் வினாக்குறியீடு இடப்படுகிறது.

9. சந்தேகத்திற்கிடமான யாதேனும் ஒரு கூற்றின் பின் வினாக்குறியீடு இடுவதற்கு உதாரணம் தருக.
   - இன்று மழை பெய்யும். (?)

10. மேற்கோட் குறியீடு இடம்பெறும் சந்தர்ப்பங்கள் யாவை?

- ஒருவருடைய கூற்றை அப்படியே எடுத்தாளும் போது
- குறிப்பிட்டு, சிறப்பித்துக் கூறுமிடங்களில்

11. (அ) மேற்கோட் குறியீட்டைக் குறிப்பிடுக.

- (‘‘ ’’)

(ஆ) பின்வரும் வாக்கியங்களில் பொருத்தமான இடங்களை இனங்கண்டு மேற்கோட் குறியீடு இடுக.

- ‘‘வள்ளுவனை உலகிற்குத் தந்து புகழ் பெற்றுக் கொண்டது தமிழ்நாடு’’ என்று பாரதியார் பாடிப் புகழ்ந்துள்ளார்.
- எவ்வித குறைபாடு மற்ற நிறைவுடைமையால் நபிகள் நாயகம் ‘‘தூயோன்’’ எனப்பட்டார்.
- இலக்கிய விருதான ‘‘சாகித்ய இரத்தினம்’’ என்ற விருதினை கவிஞர் முருகையன் பெற்றுக் கொண்டார்.

12. விட்டிசைக் குறியீடு பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள் எவை? (-)

- சடுதியான கருத்து மாற்றத்தைக் காட்டுவதற்கு
- வெவ்வேறாகக் கூறப்பட்ட பொருள்களைத் தொகுத்துக் கூறுவதற்கு
- நேரிசை வெண்பாவின் இரணடாம் அடியின் இறுதிச் சீரும் மூன்றாம் அடியின் இறுதிச் சீரும் இக்குறியீட்டாற் பிரிக்கப்படும்.
- செய்யுளுக்குப் பதவுரை எழுதும் பொழுது.

13. பின்வரும் பந்தியில் பொருத்தமான இடங்களை இனங்கண்டு மெய்ப்பாட்டுக் குறியீடு இடுக.

குழந்தையைத் தந்தையே கொல்வதா?
அக்கிரமம் ! அநியாயம் ! ஆச்சரியம் ! நீங்கள் செய்தது என்ன? என்னை என்ன செய்தீர்கள் ? அட்டுழியர்களே ! என்னை மீண்டும் சங்கிலியாற் பிணைத்து விடுங்கள்.